# சரசுவின்

## சௌந்தர்ய லஹரி

5

கண்ணதாசன்

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற்பதிப்பு : பிப்ரவரி, 1980
இரண்டாம் பதிப்பு : செப்டம்பர், 1989

① 414350

திருநாவுக்கரசு தயாரிப்பு

24 JUN 1991
சென்
894.8113
KAN

விலை ரூ. 16-00

அச்சிட்டோர் :
ஸ்ரீ கோமதி அச்சகம்,
41, சூரப்பமுதலி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

# ஸ்வாகதம்

யாருக்கும் பூர்வ ஜென்ம நினைவு வர முடியுமா?

வடநாட்டில் ஒரு சிறுவனுக்கும், இளம்பெண்ணுக்கும் அப்படி வந்ததாக ஒரு பத்திரிகையில் படித்தேன். நமக்கும் பூர்வ ஜென்ம நினைவு வந்தால் எப்படி இருக்கும் என்று எனக்குத் தோன்றிற்று. அதைப்பற்றிக்கூட ஒரு கதை எழுதி இருக்கிறேன்.

அந்த அடிப்படையில் இந்தத் தொடர் கதையை ''தினமணிகதிர்'' பத்திரிகையில் எழுதினேன்.

ஒரு பிறவிக்கும் மறு பிறவிக்கும் இடையிலே நான் வகுத்துக் கொண்டுள்ள வித்தியாசங்கள் தத்துவ ரீதியானவை அல்ல. பகவத்கீதையின்படி இது முறையானதுமல்ல. ஆனால், தமிழ் ரசிகர்களுக்கு சுவையூட்டவே இப்படி எழுதினேன்.

ஒரு பிறவியில் எப்படி வாழ்ந்தவர்கள் மறு பிறவியில் எப்படிப் பிறக்கிறார்கள் என்பதற்கு இலக்கணம் கிடையாது என்றாலும் சில ஜாடைகள் உண்டு. அவற்றைக்கூட நான் பின்பற்றவில்லை.

நான் மேற்கொண்ட இந்தப் போக்கு சரியா தவறா என்று, இதனைப் படிப்பவர்கள்தான் எடுத்துச்சொல்ல வேண்டும்.

கதை அம்சத்தில் இது அதிகமான சம்பவக் ...ர்வைகளைக் கொண்டதல்ல.

'எந்தக் கதைக்கும் சம்பவங்கள் தேவை இல்லை,' என்றும், 'சில குணசித்திரங்களின் மோதுதலே சம்பவமாகி விடுகிறது' என்றும் பெர்னாட்ஷா சொன்னதாக ஞாபகம். அந்த உத்தியை நான் கையாண்டிருக்கிறேன். எத்தனை சதவிகிதம் வெற்றி பெற்றிருக்கிறேன் என்பதை படிப்பவர்கள்தான் சொல்ல வேண்டும்.

சரத்பாபுவின் ''சந்திரநாத்'' கதையைப் படித்ததிலிருந்து எனக்கு எந்தப் பாத்திரத்திற்குப் பெயர் வைப்பதென்றாலும் 'சரசு' என்ற பெயரே ஞாபகம் வருகிறது.

நாவல் துறையில் நான் பெற்றுவருவது வெற்றியா தோல்வியா என்பதற்கு இதுவும் ஒரு சோதனை.

இந்தநாவலின் ஒவ்வொருஅத்தியாயத்திற்கும் ஒரு ராகத்தின் பெயரை நான் கொடுத்தேன். ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடுதான் சில ராகங்களை இரண்டு அத்தியாயங்களுக்குத் தலைப்பாக்கிஇருக்கிறேன். காரணத்தைக் கண்டு பிடிப்பதில் உங்களுக்கே சோதனை வைக்கப்பட்டிருக்கிறது.

வழக்கம் போல் நான் சொல்லச் சொல்ல இதனை எழுதிய என் தம்பி இராம கண்ணப்பனுக்கும், அழகாக வெளியிட்ட வானதி திருநாவுக்கரசுக்கும் நன்றி.

சென்னை,
19-2-80

அன்பன்
கண்ண

# 1. தேவமனோஹரி

அந்தரங்கத்தில் ஆடவர்கள் எல்லோருமே அயோக்
கியர்கள். ஏதோ ஒரு ஸ்ரீராமனும், லெட்சுமணனும்
காலத்துக்கும் குடும்பத்துக்கும் பயந்து ஏகபத்தினி விரதர்
களாக இருந்திருக்கலாம். ஆனால் மனைவியைப் பக்கத்
தில் வைத்துக் கொண்டே மற்றொரு பெண்ணுக்கு ஜாடை
செய்வதே ஆடவர்கள் வழக்கம்.

இந்த ஆடவர்களை நம்பி ஒருவனுக்கு ஏன் கழுத்தை
ட்டவேண்டும்? காதல் என்ன காதல், கண்ணறாவி!
றந்து விட்டவர்கள் எல்லோருமே காதல் செய்துதான்
ரவேண்டுமா? இல்லை, பாலுணர்ச்சியை அனுபவித்துத்
ான் ஆக வேண்டுமா?

மானிட வாழ்க்கை என்பது பாலுணர்ச்சிக்கும்
ப்பாற்பட்டது. அதைத் தெய்வீகமாகவே நடத்திவிட
டியும்.

மானிட ஜாதியில் தேவதைகள் தோன்றவில்லையா?
னி தோன்றவே முடியாதா!

நான் நர வாடையடிக்காத ஒரு தேவதையாகவே
ந்துவிடப் போகிறேன்.

—என்று பதினாலாவது வயதிலேயே முடிவு
யவள் சரசு.

ாகரிக உலகத்தைக் கண்டாலே அவளுக்கு ஒரு
ருப்பு. மார்பைத் தூக்கிக் கட்டுகின்ற பெண்களைப்
தால், ''கேவலம்! சனியன்கள்'' என்று திட்டுவாள்

'தம்முடைய மூதாதையர்கள் ரவிக்கை போட்
இல்லை. ஆடம்பரச் சேலை அணிந்ததில்லை. இறு
இறுசான கொண்டைகள் போட்டதில்லை. நாமு
அப்படி ஏன் இருக்க முடியாது?' என்று எண்ணியவள் சரசு

அவள் ருதுவாகிற 'வரைதான் பள்ளிக்கூடத்திற்கு
போனாள். அதற்குப் பிறகு நாராயணீயமும், லலித
சகஸ்ரநாமமும் படித்தாளே தவிர, நாவல் படித்ததில்லை

ரவிக்கை போடுவதில்லை என்று பிடிவாதமாக இரு
தாள். முந்தானையாலேயே முழு உடம்பையும் மூடி
கொண்டிருந்தாள். கால்களிலே கண்ணாடி காலத்து
சிலம்பு போட்டிருந்தாள். விரல்களிலே வெள்ளி மெட்
அணிந்திருந்தாள். கிராமத்துத் தாய்மார்களைப் போ
கூந்தலை அள்ளிச் செருகியிருந்தாளே தவிர, பின்ன
செருகவில்லை: உள் பாவாடை கட்டமாட்டா
ஆனால் கனமான சேலை கட்டுவாள். காலையில்
பழம், தேங்காயோடு கிருஷ்ணன் கோயிலுக்குச் சென்
சில சுலோகங்களைப் பாடாமல் பச்சைத் தண்ணீர்கூட
குடிக்க மாட்டாள். ஏதாவது செய்தி கேட்டா
''கிருஷ்ணா! கிருஷ்ணா!'' என்பாள். யாராவது பெண்
அவளைத் தொட்டுவிட்டால்கூட ''கிருஷ்ணா! கிருஷ்ணா
என்று விலகிக் கொள்வாள். அவள் சினிமா பார்
இல்லை; நாடகம் பார்த்ததில்லை; கதாகாலட்சே
தவிர வேறு எதையும் கேட்டதில்லை.

அவளது படுக்கை அறையில்கூடப் பாண்டுரங்
படம்தான் மாட்டியிருக்கும்.

அவளது பெற்றோர் ' இப்படி ஒரு சந்நியாசினிய
பெற்று எடுத்தோமே'' என்று வருத்தப்படுவார்கள்.

ஆனால் அவளோ, தான் ஒரு சரியான 'யோக'
நிலைத்து நிற்பதாகப் பெருமைப்படுவாள்.

சரசுவோடு கூடப் பிறந்தவர்கள் பாமா என்ற தங்
யும், பரஞ்சோதி என்ற தம்பியும் ஆவார்கள்.



சரசுவுக்கு வயது இருபத்தைந்து. அவளுக்குத் திருமணமாகித்தான் தங்கைக்குத் திருமணம் ஆக வேண்டும்.

''நான்தான் திருமணமே வேண்டாம் என்கிறேனே? எனக்காகத் தங்கை ஏன் காத்துக் கொண்டிருக்க வேண்டும்?'' என்பது சரசுவின் கேள்வி.

சரசுவின் பெற்றோரோ பழைய பாணி. உயர்ந்த தமிழ்க் குடும்பங்களில் அவர்களும் ஒரு வகை.

கணவனுக்கு அடங்கிய மனைவி; கதவுக்குப் பின்னாலே நின்று பேசும் சுபாவம். நல்லது கெட்டது எதுவானாலும் கணவனும் மனைவியும் கலந்து கொண்டே செய்யும் பண்பு. எல்லாம் அவர்களிடம் இருந்தன.

அப்படிப்பட்ட தம்பதியினருக்கு விசித்திரமான இரண்டு பெண்கள்.

சரசு ஒரு சந்நியாசினி என்றால், பாமா குடும்ப வாழ்க்கையை ஆவலோடு எதிர்பார்ப்பவள்.

குடும்ப வாழ்க்கையை எதிர்பார்ப்பவளே தவிர, குறுக்கு வழி நாகரிகத்தில் பழக்கம் இல்லாதவள். நவீன உலகத்தில் மாறி வருகின்ற பாஷன்கள் அவளைத் தீண்டவில்லை.

ஊரிலே பெண்கள் தங்கள் கணவன்மாரோடு உல்லாசமாக இருக்கும்போது நமக்கும் இப்படி அமையாதா என்று தான் நினைப்பாள். அதைத் தவிர காதல் ஜாடைகளைக் கூட அவள் கற்றுக் கொண்டவளல்ல.

சரசு, ஒருநாள் அவளைத் தனியே அழைத்தாள். ''இந்தா! எனக்காக நீ காத்துக் கொண்டிருந்தால் எப்போதுமே உனக்குத் திருமணம் நடக்காது. நான் அப்பா அம்மாவிடம் சொல்லிவிடுகிறேன். உன் கல்யாணப் பேச்சை அவர்கள் முடித்து விடுவார்கள்'' என்றாள்.

''என்ன அக்கா இது? ஊரிலே பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்?'' என்றாள் பாமா.

''எல்லாருக்கும் இது ஒரு பேச்சம்மா. ஊரிலே பார்க் இறவர்கள்,பார்க்கிறார்கள்! நம்மைப் பார்க்கிறவர்களும், கஷ்டம் வந்தால் சோறு போடப் போகிறார்களா? நமக்கு எது சரியோ அதைச் செய்வோம். 'உன் மனதுக்குச் சரி என்று பட்டதைச் செய்துவிடு' என்றுதான் வேதங்களே கூறுகின்றன. யாரையும் கேட்டு நாம் செய்ய வேண்டிய அவசியமில்லை'' என்று சொன்ன சரசு, பெற்றோரிடமும் ...தைப் பற்றிப் பேசி விட்டாள்.

மூத்த மகளின் குணம் தெரிந்தவர்கள் அவர்கள்.

ஆயிரம் யானைகளைக் கட்டுவதற்குச் சென்னையில் ...ம் பிடித்தாலும் பிடித்து விடலாம், ஒரு பெண்ணைக் ...ட்டுவதற்கு கிராமத்தில் அவ்வளவு சுலபமல்லவே!

அவர்கள் மாப்பிள்ளையைத் தேடினார்கள். ஆமாம்; தினமும் ஆயிரக்கணக்கான ஆண் குழந்தைகள் பிறக்கின்ற பூமியில் மாப்பிள்ளையைத் தேடத்தானே வேண்டியிருக் கிறது?

பெற்றோரும் விஞ்ஞானம் படித்த மாப்பிள்ளையைத் தேடினார்கள்.

சரசு, மெய்ஞானம் கற்றவர் வரவேண்டும் என்று விரும்பினாள்.

பாமாவோ, கைக்கு அடக்கமாக இருந்து கஷ்டப்படு தாத மாப்பிள்ளையை எதிர்பார்த்தாள்.

அவர்களது சொந்த ஊர், பாண்டிய நாட்டி மூலங்குடி என்கிற கிராமம்.

கடைசியில் அவர்கள் பார்த்த மாப்பிள்ளை அ பாண்டிய நாட்டைச் சேர்ந்த வேலங்குடி என்ற கிராம தைச் சேர்ந்தவர். பொறியியல் படித்தவர். பொரி இல்லாமல் தேறியவர். ஆனால் கொஞ்சம் 'ரப்பு' பிடித்தவர் என்று ஊரிலே சொல்வார்கள். இந்த 'ரப் என்ற வார்த்தைக்கு பாண்டிய நாட்டு வழக்கி 'அகம்பாவம்' என்று அர்த்தம்.



மாப்பிள்ளையின் தகப்பனார் பெயர் சோமசுந்தரம்; தாயார் பெயர் சுந்தரவதனி.

மாப்பிள்ளையும் பெண்ணும் ஒரே ஜாதியைச் சேர்ந் தவர்கள்தான். அவர்கள் கலப்புத் திருமணத்தில் அவ்வளவு முன்னேறியவர்களல்ல.

'அக்கா இருக்கும்போது தங்கைக்குத் திருமணமாம்' என்று ஊர் பேசத்தான் செய்தது.

''ராமன் திருமணத்தை விரும்பவில்லை என்றால், லட்சுமணனுக்குத் திருமணம் ஆகாமல் போய் விடுமா?'' என்றாள் சரசு.

''அப்படி என்னடியம்மா, திருமணத்தின் மீது உனக்கு வெறுப்பு? ஊரிலே உனக்கேற்ற பிள்ளை பிறக்கவில்லை என்பது உன் எண்ணமா?'' என்றுகூட சில வயதான மூதாட்டிகள் கேலி செய்தார்கள்.

''ஒளவையாரையும் திருமணமே செய்து கொண் டிருக்க வேண்டும் என்று அன்றே நீங்கள் வற்புறுத்தி இருக்க வேண்டும்'' என்றாள் சரசு.

''அன்று நாங்கள் பிறந்திருந்தால் அப்படித்தான் சொல்லியிருப்போம்'' என்றார்கள் அவர்கள்.

''சாப்பாடும் திருமணமும் அவரவர்களுடைய விருப்பத் தைப்பொறுத்தவை. அவற்றிலே தலையிடுவது உங்களுக்கே வெட்கமாகத் தோன்றவில்லை?'' என்று முகத்திலடித்து விட்டாள் சரசு.

திருமண வீடு கலகலத்தது. மாப்பிள்ளை ராஜேந்திரன் ஒரு பேரழகன் என்பதை அன்றைக்குத்தான் மூலங்குடி கிராமம் கண்டது.

தன் கணவனின் அழகைப் பற்றித் தோழியர் வியந்து சொல்வதை உற்சாகமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள் பாமா.

''அழகென்னடி அழகு? பத்து வருஷம் போனால் கறுத்த தலை வெளுத்துப் போகப் போகிறது'' என்றாள் ஒருத்தி, அவள் வாழ்ந்து முடித்தவள்.

கிராமம் ஒரு வேடிக்கையான அரண்மனை. அதிலே அடுத்தவளுக்குக் கிடைத்துவிட்டதே என்று ஆத்திரப்பட்டவர்கள் இருப்பார்கள். தங்களுக்குக் கிடைக்கவில்லையே என்று தாகம் கொண்டவர்கள் இருப்பார்கள். 'ம்......! இது இன்னும் எத்தனை நாளைக்கு?' என்று சாபம் கொடுப்பவர்கள் இருப்பார்கள். 'நானும் இதுபோல ஆயிரம் பார்த்துவிட்டேன் போடி!' என்று அலட்சியம் கொண்டவர்கள் இருப்பார்கள்.

அவர்கள் மூலங்குடி கிராமத்தில் மட்டும் இல்லாமல் இருப்பார்களா!

மணவறையிலேயே ஓரக் கண்ணால் கணவனைப் பார்த்து வைத்துக்கொண்ட பாமா, சாந்தி முகூர்த்தத்தின் போது கொஞ்சம் நன்றாகவே பார்த்தாள்.

ராஜேந்திரனுக்குக் கவிதை எழுதவும் வரும். அது இந்தக் காலத்து மகா கவிகள் எழுதுவது போல வசன கவியாக இருக்காது; இலக்கணச் சுத்தமாகவே இருக்கும்.

பாமா கதவைத் திறந்ததையும், உள்ளே நுழைந்ததையும் ஒதுங்கி நின்றதையும் கவிதையிலேயே வருணித்தான் ராஜேந்திரன்.

பாமாவுக்குக் கவிதை எழுதத் தெரியாதே தவிர, ரசிக்கத் தெரியும்.

தன் கணவன் நல்ல ரசிகன் என்பதிலே அவளுக்குத் திருப்தி.

பக்கத்தில் உட்கார்ந்தாள். வெட்கம் வெளிப்பட்டது.

''சொர்க்கத்திற்குள் நாம் நுழையப் போகிறோம்'' என்றான் அவன்.

அவள் கன்னங்களை வருடினான். சுதகதப்பாக இருந்தது.



உதடுகளில் முத்தமிட்டான். மெதுவான ரப்பர் போலிருந்தது.

அவள் தோள்களில் அவன் கை வைத்துத் தடவிக் கொடுத்தபோது, அவள் நெஞ்சத்தில் ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது.

அப்படியே முதுகிலே கை கொடுத்து முகத்தோடு முகம் பதித்துச் சேர்த்துக் கட்டிக் கொண்டபோது பனிக்காலத்து வெயில்போல் குளிரும், லேசான கொதிப்பும் அதிலே இருந்தன.

அன்றைய இரவு, பாமாவின் மறக்க முடியாத இரவாயிற்று.

முதல் நாள் உறவுக்குப் பின்னே பெண்ணுக்கு ஒரு சுகமான தூக்கம்வரும், அந்தத் தூக்கம் பாமாவுக்கும் வந்தது.

கணவனைக் கட்டிப் பிடித்துத் தூங்குவதை முதல் நாளிலேயே பெண்கள் கற்றுக் கொள்வதில்லை.

பாமா திரும்பிப் படுப்பதைத் தடை செய்து தன் பக்கம் திருப்பிக் கொண்டான் ராஜேந்திரன்.

அவர்கள் படுத்திருந்த அறைக்குப் பக்கத்திலேதான் சரசுவின் அறை.

அன்று, சரசு விரதம். இரவு துளசி தீர்த்தம் சாப்பிட்டு விட்டுத் தூங்க முயன்றாள். தூக்கம் வரவில்லை.

ஆனால் சராசரிப் பெண்களைப்போல ஏக்கம் அவளுக்கில்லை.

இந்து மதப் புத்தகங்கள் பலவற்றைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள்; மனம் அதில் பதியவில்லை.

ஒரு புத்தகத்தில், 'இளம் பருவத்தில் ஆன்மாவை சரீரம் வென்றுவிடும்' என்றிருந்தது.

''அது எப்படி நம்மை அறியாமல் வென்றுவிடும்? நம்முடைய ஆன்மா, அது இருப்பது நம்முடைய சரீரத்துக்குள்ளே. முட்டாள்கள், லௌகிக வாழ்க்கையில் விழுந்து விழுந்து இவர்களுக்குப் புத்தியேகெட்டுவிட்டது'' என்று தான் அவன் எண்ணினான்.

ஆனால், லௌகிகத்தில் முதல் இரவை அனுபவித்த பாமாவுக்கும், ராஜேந்திரனுக்கும் எப்போது தூக்கம் வந்ததோ அப்போதுதான் அவனுக்கும் தூக்கம் வந்தது.

## 2. புன்னாகவராளி

திருமணம் முடிந்துவிட்டால் அடுத்த பிரச்னை என்ன? தேன் நிலவுதான். அது தேவைதான். அது வரையில் வாழ்க்கையை அனுபவிக்காதவர்களாக அவர்கள் இருந்தால் தனியாக ஓர் இடத்தில் போய் இருப்பது போன்ற சுகம் வேறெதுவுமில்லை.

பாமாவும் ராஜேந்திரனும் எங்காவது தேன் நிலவு போகலாமா என்று ஆலோசனை நடத்தினார்கள்.

பெங்களூரா, கொடைக்கானலா, வங்காளத்தில் டார்ஜிலிங்கா—புதுத் தம்பதியர் பரிமாறிக்கொள்வதற்குக் கேட்கவா வேண்டும்?

எங்கு போனாலும் சரசுவையும் கூட்டிக்கொண்டு போக வேண்டும் என்பது பாமாவின் ஆசை.

''உன் அக்காளைக் கூட்டிக் கொண்டு போவதானால் திருப்பதிக்கோ, திருக்கழுக்குன்றத்துக்கோ கூட்டிக் கொண்டு போகலாம். புண்ணிய ஸ்தலங்களுக்குத்தான் அவர்கள் லாயக்கு'' என்றான் ராஜேந்திரன்.

''அடடே! மாற்றிய மாலைகூட காயவில்லை; அதற்குள் மைத்துனியைப் பற்றி இவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறீர்களே?'' என்று கேலி செய்தாள் பாமா.



''என்னவோ சில பேர் பிறக்கிறார்கள். உன் அக்காள் ஓர் அவதாரம்தான். விடிந்தால் எழுந்தால் மணியோசை கணகணவென்று ஒலித்துக் கொண்டிருக்கிறது. அது எப்படி இந்த வயதில் இப்படி?'' என்று கேட்டான் ராஜேந்திரன்.

''யாருக்குத் தெரியும்? என் தாயார் என் அக்காளைக் கருவுற்றிருந்தபோது ஏதோ ஒரு சாது சந்நியாசியை வழிபட்டாளாம். கண்ணில் பார்க்கின்ற உருவத்தின் குணங்கள் தானே கர்ப்பத்திலும் பதிகின்றன'' என்றாள் பாமா.

''அடி, பாமா'' என்றொரு குரல் கீழே இருந்து வந்தது.

அக்கா சரசுதான் அழைக்கிறாள், வேறு யார்?

''என்னக்கா!'' என்று மேலேயிருந்தே குரல் கொடுத்தாள் பாமா.

''கொஞ்சம் இங்கே வா.''

பாமா கீழே இறங்கிச் சென்றாள்.

''உன் கணவரின் ஒன்றுவிட்ட தம்பி கீழே உட்கார்ந்திருக்கிறார். இவரை மேலே போகச் சொல். இல்லை, அவரைக் கீழே வரச்சொல்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள் சரசு.

நடுக்கூடத்தில் உட்கார்ந்திருந்த வாலிபருக்கு வணக்கம் தெரிவித்தாள் பாமா.

''திருமணத்தின்போது நான் உங்களைப் பார்க்கவில்லை'' என்றாள்.

''இதிலொன்றும் ஆச்சரியமில்லை. நீங்கள்தான் தலையைக் குனிந்து கொண்டிருந்தீர்களே! நான் ராஜேந்திரனின் சிற்றப்பா மகன். என் பெயர் ஜெயசந்திரன். அண்ணாவின் சிற்றப்பா மகன். அவரைவிட இரண்டு வயது அவருக்குத் தம்பிதான். நான் கொடைக்கானலில் மகாராஜா குறைந்தவன். நான் கொடைக்கானலில் மகாராஜா பாங்கில் வேலை பார்க்கிறேன். இன்று புறப்படவேண்டும்.

அண்ணாவிடம் சொல்லிக்கொண்டு போக வந்தேன்'' என்றான் அவன்.

''நல்லது. காப்பி சாப்பிடுங்கள். அவரை வரச் சொல்கிறேன்'' என்று மாடிக்கு விரைந்தாள் பாமா.

''அடே! தம்பி வந்திருக்கிறானா? நானும் அவனும் ஒன்றாகவே வளர்ந்தோம். எனக்குச் சரியாகப் படிப்பு வராது. அவன் ரொம்ப சுட்டிகை. இன்றைக்கே அவன் ஏன் போக வேண்டும்; இரண்டு நாட்கள் இருந்துவிட்டுப் போகும்படி நான் சொல்கிறேன். டேய், ஜெயசந்திரா...'' என்று மாடியிலிருந்தே குரல் கொடுத்தான் ராஜேந்திரன்.

''உஸ்...என்ன இது? கட்டில் கலைந்து கிடக்கிறது. இங்கே கூப்பிடுகிறீர்களே? நீங்களே கீழே போங்கள்'' என்று தள்ளி விட்டாள் பாமா.

''அடேயப்பா! மாற்றிய மாலைகூட இன்னும் காய வில்லை அதற்குள் அதிகாரமா?....'' என்று சிரித்தபடி கீழே சென்றான் ராஜேந்திரன்.

தம்பி ஜெயசந்திரனுக்கு லீவு கிடையாதாம். உடனே புறப்படவேண்டும் என்று அவன் ஒற்றைக்காலில் நின்றான்.

''உங்கள் மானேஜரிடம் நான் சொல்லிக் கொள் கிறேன்'' என்ற ராஜேந்திரன். ''பாமா'' என்று அழைத் தான்.

அந்த அன்னக்கொடியாள் மின்னல்போல் வந்து நின்றாள். ''அண்ணியைப் பார்த்தாயா? அழகாக இருக் கிறாளா...?'' என்று கேட்டான் ராஜேந்திரன்.

''அண்ணி நடந்து வரும்போது, சீதை மண்டபத்துக்கு வரும்போது கம்பன் வருணித்தானே, அப்படி வருணிக்க வேண்டும்போல் தோன்றிற்று அண்ணா!'' என்றான் ஜெயசந்திரன்.

''தம்பிக்கு ஒரே இலக்கிய ஈடுபாடு. எல்லாம் உன் அக்கா மாதிரிதான்'' என்றான் ராஜேந்திரன் பாமாவிடம்



அவள் அருகிலே வந்த பாமா, ''ஏன் உனக்குச் சொந்தமில்லையா? நீ கொண்டுபோய்க் கொடுக்கக் கூடாதா?'' என்று கேலி செய்தாள்.

''சரிதான்...இன்றைய ஆடவர்கள் கையைத் தொட்டுத்தான் வாங்குவார்கள். அது உனக்குத்தான் லாயக்கு'' என்று சொல்லித் தட்டை அவளிடம் கொடுத்து விட்டாள் சரசு.

ஜெயசந்திரன் இரண்டு நாள் இருந்து போகச் சம்மதித்துவிட்டான்.

மூலங்குடியில் ஒரு பழைமையான சிறு சக்தி கோவில் உண்டு. எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னால் பாண்டிய மன்னன் ஒருவனின் தளபதியால் கட்டப்பட்டது என் பார்கள்.

ராஜேந்திரனும், ஜெயசந்திரனும் மூலங்குடி கிராமத்தை வலம் வந்தார்கள்.

கிராமத்தில் பார்ப்பதற்கு என்ன இருக்கிறது என்று கேட்பார்கள். ஆனால் பார்க்க வேண்டிய இடமே கிராமம்தான் என்னும்படி சில கிராமங்கள் அமைவது உண்டு.

மூலங்குடியின் வடக்கிலும், கிழக்கிலும் இரண்டு பெரிய கண்மாய்கள். கண்மாய்க் கரைதோறும் வெள்ளாடை சந்நியாசிகளைப் போல கொக்குக் கூட்டங்கள்.

யாரும் விருந்து வைக்காமல், நாங்களே வைத்திருக்கி றோம் என்பதுபோல, அவற்றைத் தேடிவரும் மீன்கள்.

தெற்கிலும், மேற்கிலும் தென்னந்தோப்புகள். ாப்புகளுக்கு நடுவே சின்னஞ்சிறிய குடிசைகள்.

மூலங்குடி கிராமத்தில் பெண்கள் மிகவும் அழகாக ருப்பார்கள். கறுப்போ சிவப்போ கட்டான உடம் இ நக்கும். இடுப்பில் குடத்தை வைத்தால், அது சிம்மா பீ த்தில் உட்காருவதுபோல் உட்கார்ந்து கொள்ளும்.
ச

உடனே பாமா தன் கல்வித் திறமையை அவனுக்குக் காட்டத் தொடங்கினாள்.

''ஸ்ரீ ஆதிசங்கரரின் சௌந்தரிய லஹரி படித்திருக்கிறீர்களா?'' என்று கேட்டாள்.

''சௌந்தரிய லஹரியிலிருந்து எந்த சுலோகத்தில் இருந்து என்ன வேண்டும் உங்களுக்கு?'' என்று கேட்டான் ஜெயசந்திரன்.

''ஆதி சங்கரர் நூல்களில் எனக்கு சௌந்தரிய லஹரியும், கனகதாராவும் ரொம்பப் பிடிக்கும். கனகதாரா படிக்கத் தொடங்கியதிலிருந்துதான் வீட்டில் பணக் கஷ்டமே தீர்ந்தது என்று அப்பா சொல்லுவார். சௌந்தரிய லஹரி அம்பிகையைப் பற்றிய வருணனையானாலும் ஏதோ மானிட அம்பிகைகளை நம் மனதில் தோற்றுவிக்கவில்லையா?'' என்று கேட்டாள் பாமா.

''இந்தா பார் பாமா! உங்களுக்கெல்லாம் இதுதான் வேலையா? ஒரே சௌந்தரிய லஹரி, கனகதாரா, நாராயணீயம்...? வேறு ஏதாவது பேசுங்களேன்?'' என்றான் ராஜேந்திரன்.

''இந்தப் பேச்சினால் உங்களுக்கு என்ன தடங்கல் ஏற்பட்டுவிட்டது?'' என்று சொல்லிவிட்டு உதட்டைக் கடித்துக் கொண்டாள் பாமா.

''வேறு வேலை இல்லாதபோது இதைப் பற்றிப் பேசுங்கள். இப்போது அவன் சாப்பிட்டானா என்றாவது கேட்டியா?'' என்றான் ராஜேந்திரன்.

''பாமா! இதைக் கொண்டு போய்க் கொடு என்றொரு குரல் கேட்டது

கையிலே ஒரு பெரிய தட்டில் பலகாரங்களும் நடுவிலே கெட்டியான காபியும் வைத்திருந்தாள் சரசு.

துல்லியமான கதர் பட்டாடையில் அவள் ஜகஜோதியாக ஜொலித்தாள்,



லேசாகச் சாய்ந்து அவர்கள் நடந்து வருவதைப் பார்த்தால், குட்டித் தென்னை மரங்கள் இளநீர் சுமந்து நடந்து வருவதுபோல் தோன்றும்.

ஊருக்கு நடுவில் ஒருதெப்பக்குளம். தெப்பக்குளத்தின் வடகரையில் சிவன் கோயில். தென்திசையில் சக்தி கோவில்.

அந்தச் சிவன் கோவில் வீர பாண்டியன் கட்டியது.

கிழக்குக் கரையில் ஓடாத தேர் ஒன்று வெகு காலமாக மூடப்பட்டுக் கிடக்கிறது.

மேற்குக் கரை ஒரு மார்க்கெட். அங்கு கிடைக்காத பொருளே இல்லை.

சக்தி கோவிலுக்குள்ளே நுழைந்தார்கள் ராஜேந்திரனும் ஜெயசந்திரனும். ராஜேந்திரனுக்குத் தத்துவ விசாரணைகளில் அவ்வளவு உற்சாகமில்லையே தவிர, கோவிலுக்குப் போவதை அவன் வெறுப்பதில்லை. சொல்லப் போனால் அதில் விருப்பமும் உண்டு.

நம்மை மீறி ஒரு சக்தி இருக்கிறது என்பதை மரணம் நிரூபித்துக்கொண்டே இருக்கிறதே!

இரண்டு பேரும் சாமி கும்பிட்டார்கள். கைநிறையக் குங்குமமும் வாங்கிக் கொண்டார்கள்.

பாமாவுக்குக் கொஞ்சம் என்றால் சரசுவுக்கு அதிகம் வாங்கிக் கொண்டார்கள்.

''தாயே, பெரிய நாயகி! சரசுவுக்கு சீக்கிரம் விவாகம் ஆக வேண்டும்?'' என்று ராஜேந்திரன் வேண்டிக் கொண்டான்.

ஒரு குடும்பத்தில் உறவு ஏற்பட்டுவிட்டால், அந்தக் குடும்பம் முழுவதிலுமே சிலருக்குப் பந்தம் ஏற்பட்டுவிடுகிறது.

ராஜேந்திரனின் வேண்டுகோளுக்கு செவி சாய்ப்பது போல, அம்மனின் கழுத்திலிருந்த புஷ்பம் ஒன்று தீபாராதனைத் தட்டில் விழுந்தது.

''என்ன அம்பாள் வரம் கொடுத்தாளா?'' என்றபடி வீட்டிலே எதிரில் வந்தாள் பாமா.

''தம்பியின் சௌந்தரிய லஹரியில் அம்பிகை மூழ்கிப் போய் விட்டாள்'' என்று சொன்னான் ராஜேந்திரன்.

''அப்படியென்றால் நாம் தேன் நிலவுக்குக் கொடைக் கானலுக்கே போவோம். மத்தியானமெல்லாம் அவரைச் சௌந்தரிய லஹரி பாடச்சொல்லிக் கேட்போம்!'' என்றாள் பாமா.

''அதென்ன மத்தியானமெல்லாம்..?'' என்று இழுத்தான் ராஜேந்திரன்.

''ஐயோ! கருமம்! கருமம்! ஏதோ ஒரு வார்த்தை தப்பி விட்டது?'' என்று தலையைக் குனிந்துகொண்டாள் பாமா.

வேறு பக்கம் திரும்பிக் கொண்டான் ஜெயசந்திரன்.

''அண்ணா! கொடைக்கானலுக்கு வாங்கண்ணா! புதுப்பட்டி ஜமீன்தாரின் பங்களாச்சாவி என் கையில்தான் இருக்கிறது. அற்புதமான பங்களா. அருமையான தோட்டம். பத்து நாட்கள் நிம்மதியாகத் தங்கி விட்டு வரலாம்?'' என்றான் ஜெயசந்திரன்.

''சரி, புறப்படுவோம். அக்காளையும் அழைத்துச்செல்வோம்'' என்று மீண்டும் சொன்னாள் பாமா.

## 3. ரதிபதிப்ரியா

சரசுவைக் கேட்டதற்கு ''கொடைக்கானலுக்கு வந்து நானென்ன செய்யப் போகிறேன்? எனக்கு குளிர்ச்சியான இடம் எதற்கு? நீங்கள் தேன் நிலவுக்குப் போகிறீர்கள். என்னையும் ஏன் மடியில் கட்டிக்கொண்டு போகவேண்டும்? சௌக்கியமாகப் போய் வாருங்கள்'' என்று அமைதியாகச் சொல்லி விட்டாள்.



''இல்லை அக்கா, கொடைக்கானலைச் சுற்றிலும் பழங்காலக் கோவில்கள் இருக்கின்றனவாம். யார் யாரோ குறுநில மன்னர்கள் கட்டியதாம். மலை ஜாதியினர் வணங்கும் மாரியம்மன் மிகவும் சக்தி வாய்ந்ததாம். நீயும் வந்தால் உனக்கும் பொழுது நன்றாகப் போகும்'' என்றாள் பாமா.

''இல்லாவிட்டால் என்ன, காரை உங்கள் கையில் கொடுத்து விடுகிறோம். மதுரை, திண்டுக்கல் எல்லாமே பக்கம்தான். கன்னியாகுமரி வரையிலே ஒரு ரவுண்டு நீங்கள் போய் வாருங்களேன்?'' என்றான் ராஜேந்திரன்.

மூத்த மைத்துனி பேசுவாளா? முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

ஆனாலும் அவளுக்கு கொடைக்கானல் போவதில் சபலம் தட்டி விட்டது.

கோவில்களாமே? போய்ப் பார்க்காமல் இருக்கலாமா? இந்தியாவில் எத்தனை கோவில்கள் உண்டோ அத்தனையிலும் தன் காலடி பட்டாக வேண்டுமே!....

''கிருஷ்ணா!....கிருஷ்ணா! சரி நானும் உங்களோடு வருகிறேன்'' என்று சொல்லி விட்டாள் சரசு.

ராஜேந்திரனுக்கு மிகவும் மகிழ்ச்சி. அவனுக்கு எப்போதும் சுற்றம், சொந்தம் எல்லாம் பக்கத்தில் இருந்தால்தான் சந்தோஷம்.

பந்த பாசங்களைக் கூட வைத்துக் கொண்டு கலகலப்பாகப் பேசிக் கொண்டிருப்பதில் உள்ள இன்பம் வேறு எதில் இருக்கிறது?

''அண்ணியும் வருகிறார்களாம்!'' என்று ஜெயசந்திரனிடம் குஷியாகச் சொன்னான் ராஜேந்திரன்.

பாமாவும் ராஜேந்திரனும் மூட்டை முடிச்சுகளைக் கட்டும் போது, வேட்டி சேலைகளைத்தான் அதிகம் கவனித்து எடுத்தார்கள்.

ஆனால் சரசுவோ, பகவத் கீதை, கிருஷ்ண கானம் இசைத்தட்டு போன்றவற்றை எடுத்துக் கொண்டாள்.

தமிழ் நாட்டுக்குக் கிடைத்த வரப்பிரசாதம், அதன் மலைகள்-கொடைக்கானல், குற்றாலம், நீலகிரி, ஏற்காடு- இறைவன் இயற்கையை இங்கெல்லாம் விளையாட விட்டிருக்கிறான்.

மேடுகளும், சரிவுகளும், அவற்றின் மீது விளையாடும் மேகங்களும் காணக் காண மனிதன் பிறவி எடுத்ததே பெருமை என்றுதான் தோன்றும்.

ராபர்ட் பிராஸ்ட்கூட தன் கவிதையில், 'காடுகள் வளர்ந்து அழகாக இருக்கின்றன; ஆனால் அவற்றை ரசிப்பதற்கு நேரமில்லை' என்று பெருமூச்சு விட்டாரே!

நேருஜி கவலை வரும்போதெல்லாம் அமைதிக்காக மலையைத் தேடி ஓடுவாரே!

காட்டு மனிதன்கூட, மலையைக் கண்டால் கவிதை பாட மாட்டானா?

அந்தக் காற்று உடம்பிலே படும்போது உலகமே மறந்து போகிறது.

எத்தனை கோடி சொத்து இருந்தாலென்ன, வாழ்க்கையை ஒழுங்காக அனுபவிக்கத் தெரிந்தவன், வருஷத்தில் மூன்று மாதம்-ஏப்ரல், மே, ஜூன்-மலை வாசம் செய்தே ஆக வேண்டும்.

கொடைக்கானல் மலையைப் பார்த்த போது காதலர்களுக்காக இறைவன் விரித்த ரத்தினக் கம்பளம் போலத்தான் பாமாவுக்கும் ராஜேந்திரனுக்கும் தோன்றிற்று.

ஆனால் சரசுவுக்கோ, மனிதன் தனது சிருஷ்டியைப் பார்த்துத் திகைக்க வேண்டும் என்பதற்காகவே தெய்வம் மலைகளைப் ப்டைத்திருப்பதுபோலத் தோன்றிற்று. அதன் பெயரே கோடைக்கானல்.

கோடைகாலத்துக் கானலை மறப்பதற்கு அதுதானே இடம்!



அங்கே புதுப்பட்டி ஜமீன்தாரின் பங்களா, அரை ஏக்கர் நிலத்தை அடைத்துக் கொண்டிருந்தது.

வழுவழுப்பான சுவர்கள். ஆனால் தரை முழுவதும் தேக்கு மரங்களால் ஆனது. கதகதப்பாக இருக்கும் என்றே குளிர்ப்பிரதேசங்களில் தரையில் மரம் பதித்திருந்தார்கள்.

பழைய ஜமீன்தார் விளையாட்டுக்காரர். புது ஜமீன்தார் பூஜை செய்வார் போலிருக்கிறது. அங்கே ஒரு பூஜை அறையும் இருந்தது. போதுமே சரசுவுக்கு.

ஆனால் மாடி—யாரோ ஒரு ஜோடி குத்தகைக்கு எடுத்ததுபோல் தோன்றிற்று. அவர்கள் போகவும் வரவும் வெளியிலேயே படிக்கட்டு இருந்தது.

யார் இருந்தால் நமக்கென்ன என்று பாமாவும், ராஜேந்திரனும் ஓர் அறையில் தங்கிவிட்டார்கள்!

பூஜை அறைக்குப் பக்கத்திலேயே தங்கிவிட்டாள் சரசு. அங்கிருந்தபடியே அவள் பாமாவை அழைத்து அவள் காதில் ஏதோ ரகசியம் சொன்னாள். வேறொன்றுமில்லை. 'பகல் நேரத்தில் உடலுறவு கொள்வது இந்து சாஸ்திரங்களுக்கு விரோதம்' என்பதே அது.

சரசு என்ன கிழவியாகிவிட்டாளா? அனுபவித்து முடித்துவிட்டாளா? இத்தகைய உபதேசங்களைச் செய்ய அவளுக்கு எப்படித் தோன்றிற்று.

மனோபாவத்தில் எல்லாம் கடந்த நிலையை ஒருவர் எட்டிவிட்டால் அத்தனையும் அனுபவித்துவிட்டது போன்ற ஓர் உணர்வு வரும்.

சரசுவின் ஞான உதயம் எல்லாவற்றையும் கடந்த நிலைதான். அவள் கண்ணெதிரே ஒரு கணவனும் மனைவியும் நிர்வாணமாகக் கட்டிப் பிடித்து விளையாடி னால்கூட, அவளுக்குக் காம உணர்வு வராது.

அந்த பூஜை அறையில் ஏராளமான விக்கிரகங்களை அவள் பார்த்தாள். அங்கே கண்ணனையும் கண்டாள்; கந்தனையும் கண்டாள்.

சைவமும் வைணவமும் ஒன்றுக்கொன்று விரோதமான மார்க்கங்களல்ல. இந்து மதம் என்பது இரண்டு வழிப்பாதை. அதைப் புரிந்துகொள்ளாத சில வெறியர்கள், இரண்டையும் மோதவிட்டுப் பார்க்கிறார்கள்.

குமரனும் சுவாமிதான், குமாரசுவாமி. கிருஷ்ணனும் சுவாமிதான். கிருஷ்ணசுவாமி.

சரசு நிம்மதியாகப் பூஜை நடத்தினாள். பாமாவும், ராஜேந்திரனும் குளிர்காலத்தை அனுபவிக்கத் தொடங்கினார்கள்.

ஜெயச்சந்திரன் வேறு இடத்தில் தங்கி இருந்ததால் தனது நிரந்தரமான வாசஸ்தலத்துக்கு அவன் போய் விட்டான்.

மாலை ஆறு மணி சுமாருக்கு மாடி கலகலப்பாயிற்று. ஏராளமான பேர் அங்கே இருப்பதுபோல் தோன்றிற்று. நாகரிகமற்ற சொற்கள் பரிமாறிக்கொள்ளப்படுவது சரசுவுக்கும் கேட்டது.

அவள், 'கிருஷ்ணா! கிருஷ்ணா!' என்று காதுகளைப் பொத்திக் கொண்டாள்.

ராஜேந்திரனும் பாமாவும் நடு ஹாலுக்கு வந்து நின்றார்கள்.

''யார் அந்த சனியன்கள், மாடியில் இருக்கின்றன?', என்று கேட்டாள் சரசு,

''யாரோ கணவன் மனைவி மாதிரிதான் தெரிந்தது. ஆனால் ஒரே கூத்தும் கொண்டாட்டமுமாக இருக்கிறதே?'' என்றான் ராஜேந்திரன்.



''விவஸ்தை கெட்ட சனியன்கள்! 'அந்தரங்கம் புனிதமானது' என்ற நாகரிகம்கூட இல்லாமலா போயிற்று? சேச்சே! என்னென்ன வார்த்தைகள்? காலையில் நாம் வேறெங்காவது போய்விடுவோம்!'' என்றாள் சரசு.

''நாம் ஏன் போக வேண்டும்? நான் பண்ணுகிற கலாட்டாவில் அவர்களைப் போகவைக்கிறேன். கேவலமான நாய்கள். 'நடத்தையில் நாகரிகம் இல்லை என்றால் பிறப்பையே சந்தேகப்படு' என்றானே வள்ளுவன், அது சரியாகப் போய்விட்டது'' என்றான் ராஜேந்திரன்.

தங்கை கணவனின் பண்பாட்டை எண்ணிப் பூரித்தாள் சரசு.

அவர்கள் தங்கள் அறைக்குள்ளே போய்த் தாள் போட்டுக் கொண்டார்கள்.

மேலே கொண்டாட்டம் தொடர்ந்தது. ''ஏய்! ரவிக்கையை அவிழ்த்துக் கொள். ரவிக்கையைப் போட்டுக் கொண்டு என்ன நடனம்?''

''ஐயோ! எல்லோரும் பார்க்கிறார்கள்.''

''ஐயையோ! கடிக்காதீர்கள்...; கடிக்காதீர்கள்!''

—கொச்சை மொழியிலேயே கும்மாளம் தொடர்ந்தது.

சரசு மணியை ஓங்கி அடித்தபடி அம்பிகையின் சிலையின் முன்னால் உட்கார்ந்தாள்.

அழகை ஆராதிக்கலாம், வருணிக்கலாம். அந்த ஆராதனையும் வருணனையும் அம்பிகையைப் பற்றியதாக இருந்தால் எவ்வளவு சுகமாக இருக்கிறது!

சரசு, சௌந்தரிய லஹரியை எடுத்தாள். ஏதோ ஒரு பக்கத்தைப் புரட்டினாள். படிக்கத் தொடங்கினாள்.

'ஜபோ ஜல்ப: சில்பம் சகலம் அபிமுத்ரா விரசனா

கதி: ப்ராதக்ஷிண்ய க்ரமாணாம் அசனாதி ஆஹுதி

விதி:

பர்ணாமா: ஸம்வேசா:
ஸுகமகிலம் ஆத்மார்ப்பணதசா:
ஸபர்யா பர்யாயஸ் தவ பவது யன்மே விலஸிதம்'

என்னுடைய ஒவ்வொரு செயலும் உனக்குச் செய்யப்படும் பூசனை ஆகும்.

நான் வாய் திறந்து உளறுவதெல்லாம் உனக்கு மந்திர ஜப மாகும்.

என்னுடைய அங்க அசைவுகள் ஒவ்வொன்றும் உனக்குச் செய்யப்படும் வணக்கம்.

நான் நடப்பது எல்லாம் உன்னைச் சுற்றி வலம் வந்து செய்யப்படும் வழிபாடாகும்.

நான் பசி தீர்க்கப் புசிக்கும் உணவும் நீரும் உனக்களிக்கப்படும் நைவேத்தியமாக ஏற்றுக்கொள்வாயாக.

நான் உறங்கும்போதும், உறக்கத்தில் புரளும்போதும், செய்கின்ற உடல் அசைவுகள் அனைத்தும் உன் முன்னர் தண்டவிட்டுச் செய்கின்ற சர்வாங்க நமஸ்காரம் ஆகட்டும்.

நான் என்னுடைய சௌகரியத்துக்காகச் செய்கின்ற ஒவ்வொரு வேலையும் என்னை உனக்கு ஆத்மார்ப்பணமாகச் செய்யப்படும் வேலையாக ஏற்றுக்கொள் அம்மா!

சுதாம் அபி ஆஸ்வாத்ய
ப்ரதிபய ஜரா ம்ருத்யு ஹரிணீம்
விபத்யந்தே விச்வே விதிச தாமகாத்யா திவிஷத:
கராலம் யத் க்ஷ்வேலம் கபலிதவத: காலகலனா
நசம்போஸ் தன் மூலம் தவ ஜனனி தாடங்க மஹிமா

அன்னையே! அமுதம் உண்டவர்களை முதுமையும் மரணமும் அண்டாது என்று கூறப்படுகிறது. ஆனால் அத்தகைய அமுதத்தை உண்டவர்களான பிரம்மன்,



இந்திரன் போன்றவர்கள் அமரர்கள் உலகில் வாழ்ந்தாலும் கடைசியில் அழிகின்றனர்.

ஆனால் சாம்பசிவன் அமுதை உண்ணவில்லை. ஆலகால விஷத்தையே உண்டார். அப்படியிருக்க பிரளயத்தின்போது கூட அவருக்கு அழிவில்லை.

நிரந்தரமாக' எவ்விதத் தொல்லையும் இன்றி இருக்கிறார்.

அதற்குக் காரணம் சுமங்கலியான நீ உன் காதுகளில் அணிந்திருக்கும் தாடங்கத்தின் மகிமைதான்!

—சரசு படித்துக் கொண்டே இருந்தாள்.

நள்ளிரவில் பலர் விடைபெறும் சொற்களும், தடாலென்று விழும் சத்தமும் கேட்டன.

ஒருவன் தடந்தெரியாமல் உள்ளே இருக்கும் படிவழியே இறங்கி சரசுவின் அறைக்குள்ளேயே வந்து, அவளது கட்டிலிலேயே படுத்துவிட்டான்!

## 4. நாதநாமக்கிரியை

''கிருஷ்ணா! கிருஷ்ணா!'' என்று வெளியிலே ஓடி வந்தாள் சரசு.

''பாமா! பாமா!'' என்று கத்தினான்.

கலவி இன்பத்தின் களைப்பில் தூங்கிக் கொண்டிருந்த பாமாவும், ராஜேந்திரனும் ஓடி வந்தார்கள்.

உள்ளே படுத்துக் கிடந்தவனை மெதுவாகத் தூக்கினார்கள்.

''எங்கே போக வேண்டும்?'' என்று கேட்டார்கள்.

அவனால் பேச முடியவில்லை; பாட்டுப் பாடினான்.

மது சில குழப்பங்களைத் தீர்க்கலாம். கவலைகளை மறக்கடிக்கலாம். ஆனால் பல நேரங்களில் அது மனிதத் தன்மைகளை வென்றுவிடுகிறது. சில நேரங்களில் தெய்வத் தன்மைக்கும் கொண்டு போய்ச் சேர்க்கிறது.

உள்ளே வந்து விழுந்தவன் தவறானவனாகத் தோன்றவில்லை. ஆனால் ஏதோ ஒரு பெரிய இடத்துப் பிள்ளை போலக் காட்சியளித்தான்.

அவன் காட்டியபடி அவனைக் காரில் ஏற்றிவிட்டபோது, அந்தக் கார் விலையுயர்ந்ததாக இருந்தது.

பணக்காரர்களுக்குப் பொழுதை எப்படிப் போக்குவது என்பது பிரச்னை, உழைக்கும் வர்க்கத்திற்குப் பொழுது போதவில்லையே என்பது பிரச்னை.

அவனைக் காரில் ஏற்றிவிட்டு, டிரைவருக்காக ஹாரன் அடித்தபோது, ''டிரைவர் கிடையாது, கிடையாது'' என்று அவனே கத்தினான்.

''ஓகோ! சொந்தக்காரரே ஓட்டி வந்திருப்பார் போலிருக்கிறது'' என்று எண்ணிய ராஜேந்திரனுக்கு ஒன்றும் புரியவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தபோது அங்கே யாரையும் காணவுமில்லை.

ஒரே பனி மூட்டம். விர்ரென்று காற்றின் சப்தம்,

''சரி, நானே கொண்டு போய் விட்டு வருகிறேன்'' என்று ராஜேந்திரனே காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

வழி காட்டக்கூடிய நிலையில்கூட அந்தக் குடிகாரன் இல்லை.

''ஓட்டல்'' என்று மட்டும் சொன்னான்.

ஓட்டலுக்குக் காரை விட்டால் ''இங்கல்ல; அங்கே'' என்றான்.



இப்படி அலை மோதிவிட்டு கடைசியில் ஒரு பங்களாவுக்கு வழி காட்டினான் அவன்.

பங்களா வாசலில் கார் போய் நின்றபோது, ''எப்படி நீங்களே வந்து சேர்ந்தீர்கள்?'' என்று கேட்டபடி கதவைத் திறந்து கொண்டு வந்தாள் ஒரு பெண்.

அதுவரையில் அந்தப் பாவப்பட்டவள் வாசல் அறையிலேயே காத்துக் கொண்டிருந்திருப்பாள் போலிருக்கிறது.

தன் கணவர் காரை ஓட்டி வரவில்லை என்பதையும், வேறு யாரோ ஓட்டி வந்திருக்கிறார்கள் என்பதையும் கண்டு கொண்ட அவள், ராஜேந்திரனுக்கு நன்றி தெரிவித்தாள். தன் கணவனைக் கைத் தாங்கலாக உள்ளே அழைத்துச் சென்றாள்.

ராஜேந்திரனையும் உள்ளே அழைத்தாள்.

''பரவாயில்லே'' என்று சொன்ன ராஜேந்திரன் கார்ச் சாவியை அவளிடம் கொடுக்கச் சென்றபோது, ''நீங்களென்ன நடந்தா செல்வீர்கள்? காரை எடுத்துக்கொண்டு செல்லுங்கள். காலையில் தெளிந்ததும் அவரை வரச் சொல்லுகிறேன்'' என்றாள்.

வேறு வழி? அதைச் செய்யத்தானே ராஜேந்திரன் விரும்பினான்?

காலை சுமார் ஒன்பது மணிக்கு அந்தக் கணவனும் மனைவியும் புதுப்பட்டி பங்களாவுக்கு வந்தார்கள்.

அப்போது சரசு, பாமா, ராஜேந்திரன் மூவரும் காலை உணவு அருந்திக் கொண்டிருந்தார்கள்.

வந்தவர்களுக்கு வணக்கம் சொல்லிக்கொண்டு எழுந்தார்கள். இரவு நடந்த நிகழ்ச்சிகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. வழக்கம்போல் மன்னிப்புக் கோரல், 'பரவாயில்லே' என்ற பதில்.

வந்தவன் பெயர் பாஸ்கரன்: மனைவி பெயர் தாமரை.

"கொடைக்கானலில் பொழுதே போகவில்லை. எவ்வளவு நேரம் தான் ரேடியோ கேட்பது? நல்ல சிநேகிதிகள் நாலு பேர் நாளைக்குத்தான் புறப்பட்டு வருகிறார்கள். யாரோடாவது பேசிக்கொண்டிருக்க வேண்டும் போலத் தோன்றிற்று. அவர் செய்த விபத்தின் காரணமாக நீங்கள் கிடைத்தீர்கள்" என்றாள் தாமரை, சரசுவிடம்.

"வாங்கள்! பேசிக்கொண்டிருப்போம்" என்று அவளைத் தன் அறைக்கு அழைத்தாள் சரசு.

ராஜேந்திரனும், பாஸ்கரனும் ஓர் அறையில் உட்கார்ந்து விட்டார்கள். பாமாவும் சரசுவின் அறைக்கு வந்து விட்டாள்.

"எங்களுக்குக் கொடைக்கானலிலே ஒரு பெரிய எஸ்டேட் இருக்கிறது. பல வகையான பொருள்களும் அங்கே விளைகின்றன. வருஷ வருமானம் மூன்று லட்சத்திற்கு மேல்! வருஷத்தில் மூன்று மாதங்கள் இங்கே வந்து தங்கி அதைச் செலவு செய்துவிட்டுப் போவோம்" என்றாள் தாமரை.

"நாங்கள் நடுத்தரக் குடும்பம்தான். சொந்த ஊர் மூலங்குடி. தங்கைக்கு இப்போதுதான் திருமணமாயிற்று. இப்போதுதான் முதல் முதலாகக் கொடைக்கானலுக்கு வருகிறோம்" என்றாள் சரசு.

"உங்கள் கணவர் என்ன செய்கிறார்?" என்று கேட்டாள் தாமரை.

"மன்னிக்க வேண்டும், எனக்குக் கல்யாணமாகவில்லை." என்றாள் சரசு.

"நீங்கள் அதிருஷ்டக்காரர்" என்று பெருமூச்சு விட்டாள் தாமரை.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? கல்யாணம் செய்து கொள்ளாமலிருப்பது அதிருஷ்டமா?" என்று கேட்டாள் பாமா.



'பின்னென்ன? ஆனவர்கள் எல்லாம் என்ன சுகத்தைக் கண்டு விட்டார்கள்? ஒரு பெண் தாலிக்குக் கழுத்தை நீட்டுவதே தாயாவதற்கும், அழுவதற்கும்தான்? எத்தனை பெண்களுக்கு லட்சியக் கணவன்மார்கள் கிடைத்து விட்டார்கள்? கண்ணீர் விடாத காரிகை ஒருத்தி உலகில் இருந்தால் அவள் கல்லாக இருக்க வேண்டும். அல்லது அவள் கணவன் ஒரு கல்லாக இருக்க வேண்டும். கண்ணீரும், சிறையும் படாத கவலை, என்னையும் உங்களையுமா விடப் போகிறது" என்றாள் தாமரை.

"உலகமே இப்படித்தான். ஆகாதவர்கள் ஆகவில்லையே என்று அழுகிறார்கள்; ஆனவர்கள் எதற்கு மாட்டிக் கொண்டோம் என்று அழுகிறார்கள்" என்றாள் பாமா.

"பிறந்தவுடன் குழந்தை அழும் நோக்கமே அதுதான். இன்னும் பல காலம் அழப் போகிறோமே என்று அது பாடும் பல்லவிதான் முதல் அழுகை. ஆனால் ஒன்று, கல்யாணம் ஆகாதவர்கள் கண்ணீர் விடக் கூடிய சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவு!" என்றாள் சரசு.

அது பூஜை அறை என்பதை அப்போதுதான் உற்றுப் பார்த்த தாமரை, "உங்களுக்குத் தினசரி பூஜை செய்தால் தான் நிம்மதியா? தினசரி படுக்கையே பூஜை அறையில் தானோ? எனக்கும் இப்படி வாழத்தான் ஆசை. ஆனால் துரதிருஷ்டவசமாக என் கணவர் ஒரு நாஸ்திகர். அவர் ஒரு சுயமரியாதைக்காரர். வேறு ஒரு மரியாதையும் இல்லாதவர்கள் சுயமாகத்தானே மரியாதையைத் தேடிக் கொள்ள வேண்டும். நான் ஏதாவது பக்திப் பாட்டுப் பாட ஆரம்பித்தால், 'மடையர்களும் பாடுவார் கடவுட் பாட்டு' என்கிறார்" என்றாள் தாமரை.

"ஆமாம். உன் கணவரின் கருத்துப்படி மாணிக்கவாசகர் ஒரு மடையன்; திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், கம்பன், ராமலிங்க சுவாமிகள் எல்லாரும் மடையர்கள். போன தலைமுறைவரை கடவுள் பாட்டுப்

பாடாதவர்கள் யார்? ஆகவே நேற்று வரை இங்கு
வாழ்ந்தவர்கள் எல்லோருமே மடையர்கள்தான்!''
என்றாள் சரசு.

''என்னவோ இந்தத் தலைமுறை நம்முடைய பாரம்
பரியப் பண்பாடுகளையெல்லாம் மதிக்காமல் போய்
விட்டது. அது மதித்தால் என்ன, மதிக்காவிட்டாலென்ன?
அந்தக் கூட்டத்துக்குள் நம்மைப் போன்றவர்கள்
சிக்கிக்கொண்டு விடுகிறார்களே, அதுதான் அவஸ்தை!''
என்றாள் தாமரை.

ஓரளவுக்குத் தாமரையின் நிலைமை சரசுவுக்குப்
புரிந்தது. கணவன் குடிகாரன்: நாஸ்திகன். பண்பா
டில்லாதவன். மனைவியைச் சந்தோஷப்படுத்தாதவன்;
பணம் மட்டும் இருக்கிறது. இதைவிட சந்நியாசினிக்
கோலம் மேலல்லவா?

ஆண்களை வெறுக்கும் தன் முடிவுக்கு சரசு ஒரு
நியாயம் கற்பித்துக் கொண்டாள்.

அங்கே ராஜேந்திரனும், பாஸ்கரனும் ஹிட்லரி
லிருந்து இடி அமீன் வரையிலும், சாஸர் காலத்து
ஆங்கிலத்திலிருந்து சர்ச்சில் காலத்து ஆங்கிலம் வரை
லும் பேசித் தீர்த்தார்கள்.

கொடைக்கானலுக்குப் போகிறவர்கள் சிலர் சீட்டாடு
வார்கள். சிலர் கார் வலம் வருவார்கள், சிலர் பேசித் தீர்ப்
பார்கள். வேளாவேளைக்கு நிறையச் சாப்பிடுவார்கள்.

குளிர் பிரதேசத்தில் பசி எடுக்கிற மாதிரி வேறு எங்கும்
எடுக்காது.

சாப்பாட்டு வேளை வந்தது. தாமரையும் பாஸ்கர
னும் விடை பெற்றுக் கொண்டார்கள். அதுவரையில்
பாமாவும், ராஜேந்திரனும் பிரிந்திருந்தது ஆச்சரியம்!

ஜமீன் பங்களா சமையற்காரன், முழுக் கோழியையே
வறுத்து வைத்திருந்தான். அதைப் பார்த்து ''கர்மம்!
கர்மம்!'' என்றாள் சரசு.

அக்காள் மாமிசத்தைக் கண்டாலே வெறுப்பாள்.
தங்கை உயிருள்ள கோழியையே விழுங்குவாள்!



எல்லோரும் சாப்பிட்டுத்தூங்கி எழுந்த போது, ஜமீன்
பங்களா மாடி, கலகலப்பாக ஆகிவிடப் போவதைப்போல்
தோன்றிற்று ஏராளமான கூட்டங்கள் உள்ளே நுழைந்து
கொண்டிருந்தன.

''கிருஷ்ணா! இன்றைக்கு என்ன நடக்குமோ?'' என்று
கலங்கினாள் சரசு.

மாடியில் கூத்தும், கும்மாளமும் ஆரம்பமாயின.

''போலீசுக்குச் சொல்லியனுப்புவோமா?'' என்று
கேட்டான் ராஜேந்திரன்.

''என்ன பிரயோசனம்? வந்திருப்பவர்களில் சிலர்
போலீஸ்காரர்களாகவே இருக்கலாம்!'' என்றாள் சரசு.

''என்ன செய்யலாம்?'' என்று கேட்டாள் பாமா.

''நீங்கள் போய்ப் படுங்கள். நான் பூஜை செய்கிறேன்.
யாருடைய பங்களாவிலோ தங்கியிருக்கிறோம். அதில் நாம்
என்ன செய்ய முடியும்?'' என்றாள் சரசு.

பாமாவும் ராஜேந்திரனும் தங்கள் அறைக்குள் நுழைந்
தார்கள்.

பூஜை அறைக்குள் நுழைந்தாள் சரசு.

''ஹே கிருஷ்ணா! ஒவ்வொரு மனிதனுக்கும்
ஒவ்வொரு வகையான துன்பத்தைப் படைத்திருக்கிறாய்.
நிம்மதி எங்கே இருக்கிறது என்ற ஜாடையையாவது
காட்டி இருக்கிறாயா'' என்றபடி மீண்டும் சௌந்தரிய
லஹரிக்குள் அடைக்கலம் புகுந்தாள்.

''ஸ்மித ஸ்யோத்ஸ்னா ஜாலம் தவவதனசந்த்ரஸ்ய
பிபதாம்
சகோராணாம் ஆஸீததி ரஸத்ய, சஞ்சுஜடிமா
அதஸ்தே சிதாம்சோர் அம்ருத லஹரீம் அம்லருசய:
பிபந்தி ஸ்வச்சந்தம் நிசி நிசி ப்ருசம் காஞ்சி கதியா''

உன் முகம் சந்திரனையும் பழிக்கும் எழில் நிறைந்தது. அம்முகத்தில் தோன்றும் முறுவல் சந்திரனின் ஒளியைப் போல் பிரகாசிக்கின்றது. அதனை உண்டு பசியாறுகின்றன, சகோரப் பட்சிகள்.

அந்தத் தித்திப்பால் திகட்டிப் போகாமல் இருப்பதற்காக மாற்றுச்சுவை தேடி கஞ்சி எங்கே இருக்கின்றது என்று தேடுகின்றன. ஆனால் கஞ்சியும் மதி ஒளியும் ஒரே நிறம் பூண்டிருப்பதால் அந்தப் பறவைகள் மதி மயங்கி மீண்டும் மீண்டும் ஒவ்வொரு இரவும் (கஞ்சி என்று எண்ணி) நிலவின் அமுத ஒளியை உண்டு திளைக்கின்றன.

''நாகநாம் உத்தயோதைர்
நவநளினராகம் விஹலதாம்:
கராணாம் தே காந்திம் கதய கதாயாம: கதம் உமே;
கயாசித் வா ஸாம்யம் பஜது கலயா ஹந்த கமலம்
யதி க்ரீடல் லக்ஷ்மீ சரணதல லாக்ஷா ருணதலம்!''

-உமா மகேஸ்வரி! நின் கை விரல் நகங்களின் காந்தி, அன்றலர்ந்த செந்தாமரைப் பூவின் புது வண்ணத்தையும் தோற்கடிக்கக் கூடியது.

ஆகவே உன் கைவிரல்களை எப்படி வர்ணிப்பது என்றே எனக்குப் புரியவில்லை.

அருள் கூர்ந்து உரைப்பாயாக.

அந்தத் தாமரைக்கு மட்டும் எப்படி அத்தகைய சிவப்பு நிறம் வந்தது தெரியுமா?

மகாலட்சுமியின் செம்பஞ்சுக் குழம்பு தடவிய பாதங்கள் அந்தத் தாமரை மலர் மீது நடமாடுவதால், மகாலட்சுமியின் திருவடிகளிலிருந்து தாமரை தன் செந்நிறத்தைப் பெற்றிருக்கக் கூடும்.

அதனால்தான் தாமரை உன் கை விரல்களைப் போல் காந்தியுடன் பிரகாசிக்கிறது.



வழக்கம் போலவே அவள் படிப்பதை முடிக்கும்முன், ஓர் இளம் பெண் அவள் அறைக்குள் ஓடிவந்து தடாலென்று விக்கிரகங்களுக்கு நடுவே விழுந்தாள்.

அவள் கன்னங்களிலும் உதடுகளிலும் மார்பகங்களிலும் ஏராளமான பற்கள் பதிந்த காயம் இருந்தது.

சரசு திடுக்கிட்டாள்.

## 5. அமிர்த வர்ஷணி

'நேரம் தெரியாத பாவிகள் குடிப்பதற்கும் ஒரு வரைமுறை இல்லையா? சனியன் இங்கே வந்து ஏன் புகுந்தோம்? ஜமீன் பங்களாவாம், ஜமீன் பங்களா?' என்று தலையிலடித்துக்கொண்டே அவளைத் தூக்கி உட்கார வைத்தாள் சரசு.

பின்னாலேயே ஓர் ஆடவன் நல்ல போதையில் உள்ளே நுழைந்தான். அவனும் என்ன, ஏது என்று கேட்கவில்லை. சரசுவிடமும் பேசவில்லை.

அந்தப் பெண்ணின் முடியைப் பற்றி இழுத்துக் கொண்டு போனான். அவள் கத்தினாள். அவளை ஒரு காருக்குள் தள்ளி, அவனும் பின்னால் ஏறிக்கொண்டான்.

கார் புறப்பட்டு விட்டது.

அந்தச் சப்தத்தைக் கேட்டு பாமாவும் ராஜேந்திரனும் வெளியே எழுந்து வந்தார்கள். ''என்ன? என்ன?'' என்றார்கள்.

''வேறென்ன; இன்னும் ஒரு நாடகம்'' என்று அலுத்துக் கொண்டாள் சரசு.

''வேறு எங்கேயாவதுபோய்விடலாமா?'' என்று கேட்டாள் பாமா.

''காலையில் உன் மைத்துனன் வந்ததும் சொல்லி விடு. மரியாதையாக வேறு எங்காவது போய்த்தான் ஆக வேண்டும். வாழ்க்கையில் ஒரு லட்சியமுமில்லாத மிருகங்கள் என்ன ஆர்ப்பாட்டம் செய்கின்றன....?'' என்றாள் சரசு.

''இங்கே பணக்காரர்கள் தங்குகின்ற கிளப் ஒன்றிருக்கிறது. அங்கே போகலாம். ஆனால் அங்கேயும் பகலில் சீட்டாடுவார்கள். இரவில் குடிப்பார்கள்'' என்றான் ராஜேந்திரன்.

''சரிதான். கரடிக்குத் தப்பி புலியின் வாயிலா?'' என்றாள் சரசு, வேறு பக்கம் திரும்பிக் கொண்டு.

''என்ன செய்வது, இது போன்ற மலை வாசங்களுக்கு வருகிறவர்கள், வாழ்க்கையை அனுபவிக்கத்தானே வருகிறார்கள்?'' என்றான் ராஜேந்திரன், வேறு பக்கம் திரும்பிக் கொண்டு.

''இந்த நரகத்திற்குப் பெயர் அனுபவிப்பதா? நல்ல கதை!'' என்றாள் சரசு.

மறுநாள் காலையில் ஜெயச்சந்திரன் வந்தபோது, பாமா கிண்டலாக, ''கொழுந்தனார் எங்களை நல்ல இடத்தில்தான் குடியேற்றி இருக்கிறார்!'' என்றாள் சிரித்துக் கொண்டே.

நடந்தவற்றைக் கேட்டுக்கொண்டு ஜெயச்சந்திரன், ''நாகரிகத்தில் இந்த விவகாரம் தவிர்க்க முடியாததாகி விட்டது. என்ன செய்வது? நல்ல குடும்பங்கள் உள்ள வீடுகளும் ஏராளமாக இருக்கின்றன. ஏதாவதொன்று ஏற்பாடு செய்யட்டுமா?'' என்றான்.

''செய்துதானே ஆக வேண்டும். இன்றிரவு இங்கே இருக்கச் சொன்னால் அக்கா பஸ்ஸில் ஏறியாவது ஊருக்குப் போய்விடுவாள் போலிருக்கிறது'' என்றாள் பாமா.

ஒரு சிறு குன்றின் மீது இருந்த பங்களா ஒன்றை ஏற்பாடு செய்துவிட்டான் ஜெயச்சந்திரன். அவன் பாங்கிலே



வேலை பார்த்ததால், அவன் சொன்னதைக் கேட்கக்கூடியவர்கள் நிறைய அங்கே இருந்தார்கள்.

அந்த வீடு, சரசுவுக்குப் பிடித்துவிட்டது. கொஞ்சம் விக்கிரகங்கள்தான் வாங்க வேண்டியிருந்தது. சரசுவே போய் அதையும் வாங்கிக் கொண்டு வந்து விட்டாள்.

குடித்துக் கூத்தடிக்கும் இடத்தை விட்டு வந்ததில் அவளுக்கொரு நிம்மதி.

நல்ல காய்கறிகள் எல்லாம் சரசு வாங்கி வந்தாள். சமையலுக்கு வேண்டிய பாத்திரங்களெல்லாம் அங்கே இருந்தன; சமையல்காரன்தான் இல்லை.

சரசுவின் கைபட்டால் சாப்பாடு மணக்குமே!

சரசுவே சமையல் செய்தாள்.

''இரவு நீங்களும் எங்களோடு சாப்பிடவேண்டும்'' என்று ஜெயச்சந்திரனைக் கேட்டுக் கொண்டாள் பாமா.

''ஓ!'' என்றான், ஜெயச்சந்திரன்.

பாமா இப்போது ஜெயச்சந்திரனைக் கேலி செய்யவே கற்றுக்கொண்டு விட்டாள்.

மைத்துனனையோ மைத்துனியையோ கேலி செய்வதில் ஒரு விதமான மகிழ்ச்சி உண்டு. இந்துக்களுக்கு அது ஒரு பண்பாட்டுச் சங்கீதம்.

அவர்கள் என்னவென்னவோ பேசினார்கள். ஆனால் சரசு எதுவும் பேசவில்லை.

''ஏனண்ணா, அவர்கள் எதுவும் பேசவில்லை?'' என்று மெதுவாகக் கேட்டான் ஜெயச்சந்திரன்.

''சாமியார்கள் அதிகம் மௌனமாகத்தான் இருப்பார்கள்'' என்று மெதுவாகச் சொன்னான் ராஜேந்திரன்.

சாப்பிட்டுவிட்டு எல்லோரும் கணப்பு அறைக்கு அருகிலே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, சரசு மட்டும் ரெக்கார்டு பிளேயரை எடுத்துக்கொண்டு தன் அறைக்குப் போய்விட்டாள்.

அவர்கள் கொண்டுபோயிருந்த ரெக்கார்டுகளில் அவளுக்குப் பிடித்தமானது இரண்டே ரெக்கார்டு. பாக்கி அனைத்தும் சிற்றின்பத் திரைப்பாடல்கள்.

முருகன் பாட்டு ஒரு ரெக்கார்டும், நாதஸ்வரம் ஒரு ரெக்கார்டும் அவளுக்காகவே எடுத்துவரப்பட்டிருந்தது.

திரும்பத் திரும்ப அவள் அதையே போட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது, எல்லோருக்குமே அலுப்பாக இருந்தது.

ஜெயச்சந்திரன் எழுந்துபோய்விடுவான் போலிருந்தது. பாமா எழுந்து மளமளவென்று சரசுவின் அறைக்குள் நுழைந்தாள்.

''அக்கா, கோவில்களிலேகூட மூன்று காலம்தான் பூஜை. உனக்கென்ன இருபத்து நாலுமணி நேரமுமா?'' என்றாள் பாமா.

''ஏண்டி, உனக்குக்கூட நாஸ்திகம் வந்துவிட்டதா? உங்களுக்கெல்லாம் கடவுள் பக்தி என்பது வயதாகும் போதுதான் வரும். கை கால்கள் ஓய்ந்துபோன பிற்பாடு தான் கடவுள் ஞாபகம் வரும். நான் கொஞ்சம் வித்தியாச மான பிறப்பு. உங்களுக்குச் சங்கடமாக இருந்தால் நான் காலை பஸ்ஸிலேயே ஊருக்குப் போய்விடுகிறேன்'' என்றாள் சரசு.

''இதுதான் அக்கா உன்னிடம். எடுத்த எடுப்பிலேயே அறுத்துவிட்ட மாதிரி பேசுவாய்! உன் இஷ்டம்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள் பாமா.

எல்லோருடனும் பேசிக்கொண்டிருக்கலாம் என்று வந்திருந்த ஜெயச்சந்திரனுக்கு, இது கொஞ்சம் சங்கட மாகத்தான் இருந்தது.



அவன் எங்கே போய்விடுவானோ என்று பாமாவுக்கு வருத்தமாக இருந்தது.

''அக்காள் பாட்டுக்கு ரெக்கார்டு போட்டுக்கொண் டிருக்கட்டும். நாம் பேசிக் கொண்டிருப்போம்'' என்றாள் பாமா.

''பரவாயில்லை...நான் நாளை வருகிறேன்'' என்று கூறி விட்டு எழுந்தான் ஜெயச்சந்திரன்.

''உஸ்!...வேண்டாம். நீங்கள் இங்கிருந்தபடியே சௌந்தரிய லஹரி பாடுங்கள். அவள் மயங்கிப் போய் இங்கே வந்து விடுவாள்'' என்றாள் பாமா.

''ஆமாம். அதுதான் சரி!'' என்று ஆமோதித்தான் ராஜேந்திரன்.

உடனே ஜெயச்சந்திரன் சௌந்தரியலஹரியில் இருந்து இரண்டொரு சுலோகங்களைச் சப்தம் போட்டுப் பாட ஆரம்பித்தான்.

அங்கே ரெக்கார்டு நிறுத்தப்பட்டது.

மூடி இருந்த கதவு, சற்று திறந்து ஒதுக்கப்பட்டது.

ஜெயச்சந்திரனுக்கு எடுப்பான குரல். அவன் பாடப் பாட, சரசு கொஞ்சம் மெதுவாக எட்டிப் பார்த்தாள்.

''அக்கா? பாட்டுப் போதுமா, இன்னும் கொஞ்சம் பாடச் சொல்லட்டுமா?'' என்று சப்தம் போட்டுக் கேட் டாள் பாமா.

''முடிந்தவரை பாடச் சொல்வேன்!'' என்றாள் சரசு.

''விடியும்வரை வேண்டுமானாலும் பாடுகிறேன்'' என்றான் ஜெயச்சந்திரன்.

மத்யமாவதி ராகத்தில் ஒரு சுலோகத்தையும், சிந்து பைரவியில் ஒரு சுலோகத்தையும் அவன் பாடி முடித்ததும்,

''பாரதூரமான இரண்டு ராகங்களை பக்கம் பக்கமாகப் பாடலாமா...?'' என்று இருந்தபடியே கேட்டாள் சரசு.

' பாடக்கூடாது என்று சாஸ்திரம் ஒன்றுமில்லை; பாடாமலிருப்பது மரபு!'' என்றான் ஜெயச்சந்திரன்.

நள்ளிரவு வரை அவன் பாட்டைக் கேட்டுவிட்டு, அயர்ந்து தூங்கிவிட்டாள் சரசு.

நள்ளிரவுக்குப் பிறகு யாரோ அவளை எழுப்புவது போலிருந்தது. எழுந்து உட்கார்ந்தாள் சரசு, அழகான இளம் பெண்ணொருத்தி அருகிலே உட்கார்ந்திருந்தாள்.

''எம்மா, இந்தப் பூமியில் நாம் எதற்காகப் பிறந்தோம்! குடும்ப வாழ்க்கையே வாழாமல் சந்நியாசினி ஆவதற்கா? அப்படி யாரும் யாரையும் வற்புறுத்தவில்லையே? உடம்பு கொதிக்க ஆரம்பித்தால் உடம்பு எவ்வளவு நாளைக்குப் பக்குவமாக இருக்கும்? திருமண வாழ்க்கையை நம்முடைய தர்மங்கள் மறுத்ததில்லையே? அம்பிகையின் சௌந்தரிய லஹரி என்றால், நீ உயிரை விடுகிறாய். அவ்வளவு சௌந்தரியமும் உனக்கிருக்கிறதே? மானிடப் பிறவிக்குக் காதல் தேவை என்பதால்தானே இந்து தர்மத்தில் தெய்வங்களையும், குடும்பங்களாகச் சித்திரித்தார்கள்! நல்ல கற்பனையும், ரசனையும் உள்ள ஓர் இளைஞனாகப் பார்த்து நீ திருமணம் செய்து கொண்டால் அவன் உன் மீதே ஒரு சௌந்தரிய லஹரி பாடுவானே?'' என்றாள் வந்திருந்த பெண்.

அவள் பார்ப்பதற்கு அழகாக இருந்தாள். சௌந்தரிய லஹரியில் வர்ணிக்கின்ற மாதிரியே அவள் உருவம் இருந்தது. ஆனால், கழுத்திலே ஒரு காசு மாலை இருந்தது. கை நிறைய வளையல் போட்டிருந்தாள். தங்க வளையல்களுக்கு நடுவே பவளங்களாலும், முத்துக்களாலும் செய்யப்பட்ட இரண்டு வளையல்களும் இருந்தன.

''நீ யாரம்மா...?'' என்று கேட்டாள் சரசு.

''என்னைத் தெரியாதா உனக்கு?...'' என்றாள், அந்தப் பெண்.



''தெரியவில்லையே....'' என்றாள் சரசு.

'':வா! காட்டுகிறேன்!'' என்று அந்தப் பெண் வெளியே போனாள்.

பின்னாலேயே போன சரசுவின் கண்களுக்கு அவள் மறைந்து விட்டாள்.

நன்றாகக் கண்களைத் தேய்த்து விட்டுக் கொண்டு பார்த்த சரசு, தான் தன் அறையை விட்டு எழுந்து வந்து நடுஹாலில் நிற்பதை உணர்ந்தாள்.

## 6. தேவமனோஹரி

மறுநாள் காலை முழுதும் தன் உடம்பில் ஏதோ சோர்வும், அதிர்ச்சியும். அசதியும் இருப்பதுபோல உணர்ந்தாள் சரசு.

இரவிலே தான் கனவு கண்டது அவளது நினைவிலிருந்தது. நடுஹால் வரை தூக்கத்திலேயே நடந்து போனதும், திரும்ப வந்து படுத்ததும் அவளுக்குத் தெளிவாகவே தெரிந்தன. ஆனால் கண்டது கனவுதானா அல்லது உண்மையா என்பதில் அவளுக்கு ஒரு சந்தேகம் இருந்தது.

அவ்வளவு இயற்கையாக அந்த நிகழ்ச்சி அமைந்திருந்தது.

அதைப்பற்றி அவள் பாமாவிடம்கூடப் பேசவில்லை.

திருமணம் செய்து கொள்ளும்படி தன்னை வற்புறுத்த அம்பிகையே வந்திருந்தது போன்ற ஒரு பிரமை; மயக்கம்.

'அம்பிகை என்ன ஆதி பராசக்தியே நேரில் தோன்றித் தன்னைத் திருமணம் செய்து கொள்ளச் சொன்னாலும், தான் ஒப்புக் கொள்ளப் போவதில்லை' என்பதுபோல் அவள் பிடிவாதமாக இருந்தாள்.

தெய்வ ஆவேசம் வந்தவர்களுக்கும். கனவில் தெய்வத்தோடு பேசியவர்களுக்கும் காலையில் ஒருவித மயக்கம் இருக்கும் என்று கூறுவார்கள்.

நாலுபேர் சேர்ந்து உடம்பை அமுக்குவதுபோல இருக்குமாம்.

அந்த நிலைதான் சரசுவுக்கு இருந்தது. அப்போதும் அவள் கீழே விழுந்து படுக்கவில்லை.

தனக்கு வேண்டிய உணவைத் தானே அவள் சமைத்துக் கொள்வது வழக்கம். அத்தகைய உணவை அவள் தயாரித்துக் கொண்டிருந்தபோது, ''நீங்கள் இங்கேயே வந்து விட்டீர்கள்?'' என்று கேட்டபடி உள்ளே நுழைந்தாள் தாமரை.

''ஆமாம். உங்கள் வீடும் பக்கத்தில்தான் என்று சொன்னார்கள்'' என்றாள் சரசு.

''என் தோழிகளெல்லாம் வந்து விட்டார்கள். இப்பொழுது பொழுது நன்றாகப் போகிறது'' என்றாள் தாமரை.

''நல்லது, எனக்கு அம்பிகையோடும் பகவானோடும் பேசிக் கொண்டிருப்பதிலேயே பொழுது போய்விடுகிறது'' என்றாள் சரசு.

''ஆ! மறந்து விட்டேன். ஒன்று சொல்லத்தான் வந்தேன். இங்கு ஒரு தோப்புக்குள்ளே பூவாத்தம்மன் கோவில் இருக்கிறது. கோவில் மிகவும் சிறியதுதான், முப்பதுக்கு முப்பதுதான் கட்டடம் இருக்கும், ஆனால் அங்கே ஓர் அம்மையார் பூஜை செய்து கொண்டிருக்கிறாள். அவர்களைப் பார்த்து வணங்கி, விபூதி வாங்கிக் கொண்டு வந்தால் அன்று முழுவதும் மனசுக்கே ஒரு தெம்பும், தைரியமும் இருக்கின்றன. அம்மன் வழிபாட்டிலே தான் உங்களுக்கு ஆட்சேபனை இல்லையே? இன்று மாலை எல்லோரும் போய் வரலாமா?'' என்று கேட்டாள் தாமரை.



''அப்படி அதிசயமான பெரியவர்கள் சில பேர் இருக்கத்தான் செய்கிறார்கள். தெய்வீக சக்தி உடையவர்களைப் பார்ப்பது நல்லதுதானே...'' என்றாள் சரசு.

இருவரும் பாமாவைக் கேட்டார்கள்.

''ஓ! போகலாமே? இங்கேயே அடைந்து கிடப்பது எனக்கும் கஷ்டமாகத்தானிருக்கிறது. பண்ணைக்காடு போகும் வழியில் அந்த அம்மன் கோவில் இருப்பதாக அவர் கூடச் சொன்னார்'' என்றாள் பாமா.

மாலையிலே தாமரை தன் தோழிகளோடு வந்தாள்.

பாமா, அவள் கணவன், ஜெயச்சந்திரன், சரசு ஆகியோரும் சேர்ந்து கொண்டார்கள்.

பூவாத்தம்மன் கோவில் இருந்த இடம் சுற்றிலும் வாழைத் தோப்புகள். விசித்திரமான வேறு சில மரங்கள்! குறிஞ்சிப் பூக்கள் அங்கேதான் அதிகம் பூப்பதாகச் சொன்னார்கள்.

காரை, சாலை ஓரம் நிறுத்திவிட்டுத் தோப்புக்குள்ளே சுமார் முன்னூறடி தூரம் நடக்க வேண்டும்.

கோவில் சிறியதுதான் என்றாலும் யாரோ அதை அழகாகக் கட்டியிருந்தார்கள்.

கோவிலுக்கு முன்புறத்தில் சிமெண்ட் தரை போடப்பட்டு, சிவப்புச் சாயம் பூசப்பட்டிருந்தது.

கோவிலின் இரும்புக் கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. அது சிறைச்சாலைக் கதவு போன்றிருந்ததால் உள்ளே இருந்த அம்மன் சிலையைப் பார்க்க முடிந்தது.

ஆனால் சரசுவும் மற்றவர்களும் வந்தபோது பூஜை செய்கின்ற அந்த அம்மையாரைக் காண முடியவில்லை.

''ஒரு குறிப்பிட்ட நேரத்தில்தான் அந்த அம்மையார் இருப்பார்களோ?'' என்று கேட்டாள் சரசு.

''இல்லை, அவர்கள் தங்குவதே இங்கேதான். எங்காவது பக்கத்தில் போயிருப்பார்கள்'' என்றாள் தாமரை.

அப்போது ''யாரது?'' என்று கேட்டபடியே கோவிலுக்குப் பின்பக்கமிருந்து ஓர் உருவம் வந்தது.

அந்த உருவத்தின் கையில் ஒரு கட்டு அருகம் புல்லும், இலை, தழைகளும், புஷ்பங்களும் இருந்தன.

அந்த அம்மையாரின் காலில் விழுந்து வணங்கினாள் தாமரை. அதுபோலவே எல்லோரும் வணங்கினார்கள். ஆனால் சரசு மட்டும் திகைத்துப் போய் சிலையாக நின்றுவிட்டாள்.

இரவில் அவள் எந்த உருவத்தைப் பார்த்தாளோ, அதே உருவம்! அதே புடவைக் கட்டு! அதே வளையல்கள்!

அவளுக்கு உடம்பெல்லாம் வியர்த்தது.

''என்னம்மா? சௌக்கியமா? எப்பொழுது கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாய்?'' என்று கேட்டார் அந்த அம்மையார்.

சரசு பேசாமல் அப்படியே நின்றாள்.

''இந்த சாரதாம்பாளைப் புரியவில்லையா, உனக்கு? கோடைக்கானலுக்கு யார், யார் வருகிறார்கள் என்பதை இங்கே உட்கார்ந்தபடியே நான் தெரிந்து கொள்கிறேன்!'' என்று சொன்னபடி சிரித்துக்கொண்டே கோவில் கதவைத் திறந்துவிட்டார் அந்த சாரதா அம்மையார்.

கதவைத் திறந்ததுதான் தாமதம் உள்ளே இருந்து ஏதோ ஓர் ஒலி வருவதுபோல சரசுவுக்குத் தோன்றிற்று.

அம்மன் கதைப் பிரதிமைதான். கருங்கல்லாலேகூடச் செய்யப்படவில்லை. அம்மன் என்றால் ஓர் ஆவேசத் தோற்றம் இருக்குமே, அதுவும் இல்லை. கழுத்திலே பாசி மாலைகளே போடப்பட்டிருந்தன. கையில் ஒரு திரிசூலம் இருந்தது. ஒரு பக்கத்தில் நாகத்தின் சிலை. மறு பக்கம்



சிங்கத்தின் சிலை. அந்த அம்மனே புதுமையாகத் தோன்றிற்று அவளுக்கு.

சாரதா அம்மையார் அந்தச் சிமெண்ட் தரையில் அனைவரையும் உட்காரச் சொன்னார். தானும் உட்கார்ந்தார்.

உடனே பாடத் தொடங்கினார். அதுவும் சௌந்தரிய லஹரியில் இருந்தே இரண்டு சுலோகங்கள்!

சரசுவுக்கு மீண்டும் உடம்பு வியர்த்தது. அவள் அந்த திகிலில் இருந்து மீளவே முடியவில்லை.

சுலோகத்தை முடித்த அம்மையார் மேலும் சில வரிகள் பேசினார். இரவு கனவிலே என்ன பேசினாரோ, அதையே பேசினார்.

சரசுவும் ஆவேசம் வந்தவள்போல் உட்கார்ந்திருந்தாள்.

அம்மையார் மௌனமாக தியானத்தில் ஆழ்ந்தார்.

மூடிய கண்களோடு எல்லோருக்கும் விபூதிகொடுத்தார். 'இனி அவர் பேச மாட்டார்' என்பது போல் ஜாடை காட்டினாள் தாமரை.

எல்லோரும் புறப்பட்டார்கள்.

தன் கனவில் இதே சாரதா அம்மையார் வந்தது பற்றி சரசு யாரிடமும் எதுவும் கூறவில்லை.

ஆனால் அன்றைய இரவு, அவளுக்குத் தூக்கமில்லாத இரவாகிவிட்டது. அதிகாலை நான்கு மணிக்குத்தான் அவள் தூங்கத் தொடங்கினாள்.

மீண்டும் அதே கனவு! அதே அம்மையார்!

''வாழ்க்கை என்பது பருவத்தை வீணாக்குவதல்ல மகளே! நீ திருமணம் செய்து கொள்'' என்றார் அந்த அம்மையார்!

இப்போது சரசு எழுந்து நடக்கவில்லை. இந்த இரண்டு வார்த்தைகளைச் சொல்லிவிட்டு அம்மையார் போய்விட்டதாகவே அவளுக்குத் தோன்றிற்று.

'அதே பெண்மணிதான் உண்மையிலேயே வந்தாரோ....' என்று கூட யோசித்தாள்.

மறுநாள் தனியாகப் போய் அந்த அம்மையாரைத் தரிசிப்பது என்று முடிவு கட்டினாள்.

காலை பத்துமணிக்கு உத்தியோகஸ்தர்களைப்போல் சாப்பாடு சாப்பிட்டுவிட்டு பாமாவை அழைத்தாள்.

''அடி அம்மா! நேற்றுப் போன அம்மன் கோவிலுக்கு நான் போய்வரப் போகிறேன்; காரை எடுத்துக்கொண்டு போகிறேன்'' என்றாள்.

''ஏனக்கா, நாங்களும் வருகிறோமே......!'' என்றாள் பாமா.

''இல்லை! தனியாக அந்த அம்மையாரைச் சந்தித்து ஏதோ பேச வேண்டும்போல் எனக்குத் தோன்றுகிறது!'' என்று சொன்ன சரசு காரில் புறப்பட்டு, கடைக்குப் போய் தேங்காய், பழங்கள் எல்லாம் வாங்கிக்கொண்டு நேரே தோப்புக்குப் போனாள்.

வழக்கம்போலவே கோவில் பூட்டி இருந்தது. கோவிலுக்குள் எப்பொழுதும்போல விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

''அம்மா! அம்மா!'' என்று அழைத்துப் பார்த்தாள் சரசு. பதிலில்லை.

அதற்குப் பதிலாக ஒரு வேலைக்காரி ஒரு கையில் பால் சொம்பும் ஒரு கையில் பூக்கூடையுமாக சரசுவின் எதிரே தோன்றினாள்.

''என்னம்மா, யாரைத் தேடுகிறீர்கள்?'' என்று கேட்டாள் வேலைக்காரி.



''சாரதா அம்மையார் இல்லையா?'' என்று கேட்டாள் சரசு.

''அடடா! உங்களுக்கு விஷயம் தெரியாதா? நேற்று இரவுதான் அவர்கள் சமாதியாகிவிட்டார்கள்! இங்குள்ள பெரியவர்களெல்லாம் வந்திருந்தார்கள்! அவர்களது உடலை அவரது சொந்த ஊரான குருவந்தூருக்கு அனுப்பி விட்டார்கள்'' என்றாள் அவள்.

திடுக்கிட்ட சரசு, ''குருவந்தூர் எங்கிருக்கிறது?'' என்று கேட்டாள்.

''திண்டுக்கல்லுக்குப் பக்கத்தில்'' என்று சொன்ன வேலைக்காரி, ''உங்கள் பெயரென்ன?'' எனக் கேட்டாள்.

தன் பெயரைச் சொன்னாள் சரசு.

''அப்படியா? நில்லுங்கள்! அம்மா சமாதி அடைவதற்கு சில நாழிகைகளுக்கு முன்னால் என்னைக் கூப்பிட்டார்கள். என் கையில் வாழை இலையில் மடிக்கப் பட்ட ஒரு பொட்டலத்தைக் கொடுத்து, 'நாளைக்கு சரசு என்றொரு பெண் வருவாள். அவளிடம் கொடு' என்று சொன்னார்கள்'' என்றாள் வேலைக்காரி.

சரசு என்ன பொட்டலமோ என்று ஏங்கி நின்றாள். வேலைக்காரி கொடுத்ததை ஆவலோடு பிரித்துப் பார்த்தாள்.

உள்ளே மஞ்சள், குங்குமம், ஒரு மலர் மாலை, நடுவிலே ஒரு பவுன் எடையுள்ள ஒரு மாங்கல்யம்!

சரசுவுக்கு அதை என்ன செய்வதென்று தெரிய வில்லை. அதைக் கண்களில் ஒற்றிக் கொண்டு திரும்பி நடந்தபோது வேலைக்காரியின் குரல் கேட்டது.

''அந்த மாங்கல்யத்தை சீக்கிரம் பயன்படுத்தும்படி அம்மா சொன்னார்கள்'' என்றாள் அவள்.

ஒன்றும் பேசாமல் சரசு நடந்தாள்.

அவள் வீட்டுக்குள் நுழைந்தபோது, பாமா எதிரே வந்து, ''என்ன அக்கா கையிலே பொட்டலம்?'' என்றாள்.

''சாரதா அம்மையார் கொடுத்துவிட்டுப் போயிருக் கிறார்கள்!'' என்றாள் சரசு.

''போயிருக்கிறார்களா?.......எங்கே போயிருக் கிறார்கள்?''

''இறைவனிடம்!''

''அக்கா!...என்ன இது? சுய நினைவோடுதான் பே கிறாயா?''

''எனக்கு இன்னும் நினைவு தப்பாததுதா ஆச்சரியம்!''

''என்னக்கா இது! என் நெற்றியைப் பார். என்ன இருக்கிறது?''

''புது வண்ணக் குங்குமம்!''

உடனே பாமா ஓடிப் போய் ஒரு குங்குமச் சிமிழை எடுத்து வந்தாள். அது தங்கத்தால் ஆனது.

''இந்தக் குங்குமத்தை இப்பொழுதுதான் அ அம்மையார் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போனா கள்!'' என்றாள் பாமா.

சரசுவுக்கு நினைவு தப்பிவிடும் போலத்தான் தோன்றிற்று.

## 7. மாயா மாளவ கௌள

சித்து விளையாட்டுக்கள், பில்லி சூன்யங்கள் பற் யெல்லாம் கிராமத்தில் பல நிகழ்ச்சிகளைச் சரசு கேட்டிருக்கிறாள்.

ஆனால் சாரதாம்பாளின் கனவு தரிசனம் ஒரு சித்து விளையாட்டாக அவளுக்குத் தோன்றவில்லை. தன்



னுடைய தெய்வ பக்தி என்ற கேள்விக்குறிக்கு ஆழமான பதில் ஏதோ கிடைத்துக் கொண்டிருப்பதுபோல் அவளுக்குத் தோன்றிற்று.

நேரே குருவத்தூருக்குச் சென்று பார்த்துவிட வேண்டும்போல் அவளது மனத்தில் ஓர் ஆசை இருந்தது.

'சமாதி அடைந்து ஒரு நாள்தானே ஆகிறது. அதற்குள் சமாதி கட்டியிருக்க மாட்டார்கள். அங்கு போனால் அந்தப் புனித உடலையாவது தரிசனம் செய்யலாம்'' என்று அவள் எண்ணினாள்.

ஆனால், அந்த அம்மையார் இப்பொழுதுதான் வந்து குங்குமம் கொடுத்துவிட்டுப் போனார் என்று பாமா சொன்னாளே, அது என்ன வித்தை?

அவளால் எதையும் நிர்ணயிக்க முடியவில்லை.

அவள் ஒரு மூதாட்டியாக இருந்திருந்தால், கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாம் என்றாவது முடிவு கட்டியிருப்பாள்.

அவளுக்குப் பக்குவப்பட்டவளாக ஆகிவிட வேண்டும் என்று ஆசை இருந்ததே தவிர, பக்குவமற்றவள்தானே அவள்?

எதற்கும் குருவத்தூர் சென்று வரலாம். திண்டுக்கல்லுக்குப் பக்கத்திலென்றால் அதிக தூரமில்லையே? ''கொடைக்கானலிலிருந்து திண்டுக்கல் எவ்வளவு தூரம்?'' என்று கேட்டாள் பாமாவிடம்.

''மிகக் குறைந்த தூரம்தான்'' என்று உள்ளே இருந்தவாறு பதில் சொன்னான் ராஜேந்திரன்.

''நான் இப்போதே குருவத்தூருக்குப் போய் வருகிறேன்.'' என்றாள் சரசு.

''நாங்களும் வருகிறோம். எங்களுக்குத்தான் இங்கு கிடந்து போரடிக்கிறது'' என்றாள் பாமா.

''மைத்துனரையும் அழைத்துக் கொள்ளலாமா?'' என்று கேட்டான் ராஜேந்திரன்.

''அவர் இல்லாமலா?'' என்றாள் பாமா.

அவர்கள் குருவத்தூருக்கு வந்து சேர்ந்தபோது, அங்கே ஏதும் அப்படி விசேஷம் இருப்பதாகத் தெரியவில்லை.

வழியில் போகிறவர்களையெல்லாம் பார்த்து, ''ஐயா! சாரதாம்பாள் என்ற ஓர் அம்மையார், கொடைக்கானலில் சமாதியடைந்து இங்கே கொண்டு வந்திருக்கிறார்களாமே, அவர்கள் வீடு எங்கே?'' என்று கேட்டார்கள்.

''சாரதாம்பாள் என்று இங்கே யாருமில்லையே...! ராஜ ராஜேசுவரி என்ற ஒரு துறவிதான் இருக்கிறார்கள். அவர்களும் இப்போது இருப்பார்களா என்பது சந்தேகம். அதோ! அந்த ஆற்றை ஒட்டியவாறு ஓர் ஆசிரமம் இருக்கிறது. அங்கே போய் விசாரியுங்கள்'' என்றனர் சிலர்.

ஆசிரமத்தை நோக்கி அவர்கள் காரைத் திருப்பினார்கள்.

இதுதான் ஆசிரமமா?

ஒரு சிறு குடிசை; உள்ளே மங்கலான அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

தலைகுனிந்து குடிசைக்குள் நடந்து சென்றார்கள். யாரோ ஒரு பெண் அங்கே அமர்ந்திருந்தாள். அவர்களைக் கண்டதும் அந்தப் பெண் எழுந்து நின்றாள்.

அவளைப் பார்த்தவுடனேயே சரசுவுக்கு உடம்பு வியர்த்தது.

பூவாத்தம்மன் கோவிலில் எந்த வேலைக்காரியைப் பார்த்தாளோ, அவளே இவள்!

''நீங்கள் யார்?'' என்று கேட்டாள் அந்தப் பெண்.

''ஏனம்மா! என்னை உனக்குத் தெரியாது? கொடைக்கானலில் நாம் சந்திக்கவில்லையா? பூவாத்தம்மன்



கோவிலில் நீ எனக்குப் பூவும் மஞ்சளும், மாங்கல்யமும் கொடுத்து, சாரதாம்பாள் கொடுத்ததாகச் சொல்லவில்லையா....?'' என்று கேட்டாள் சரசு.

''இல்லையே! நான் கொடைக்கானலுக்கு வந்ததேயில்லையே! உங்களை எனக்குத் தெரியாதே!'' என்றாள் அந்தப் பெண்.

சரசுவுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

''அதிருக்கட்டும். சாரதாம்பாள் என்று இங்கே யாருமில்லையா?'' என்று கேட்டாள் பாமா.

''அப்படி யாருமில்லையே! ராஜராஜேசுவரி நாச்சியார் ஆசிரமம் இது! அவர்கள்கூட இப்போது இல்லை. வெளியூர் சென்றிருக்கிறார்கள்'' என்றாள் அந்தப் பெண்.

''நல்லது'' என்று சொல்லி விட்டு பாமாவும், ராஜேந்திரனும், ஜெயச்சந்திரனும் வெளியே வந்து விட்டார்கள். ஆனால் சரசுவினால் நின்ற இடத்தைவிட்டு நகரவே முடியவில்லை.

இதென்ன மாய மந்திரமா?....

''இன்னும் என்னம்மா வேண்டும்?'' என்று அமைதியாகக் கேட்டாள் அந்தப் பெண்.

' ஒன்றுமில்லை'' என்று சொல்லிவிட்டு வெளியே வந்து விட்டாள் சரசு.

திரும்பிப் புறப்படும் போது, பாமா சரசுவைக் கேலி செய்ய ஆரம்பித்தாள்.

''வர வர நீ ஏதேதோ கனவு கண்டு என்னென்னவோ செய்யத் தொடங்கிவிடுகிறாய். அந்தச் சாரதாம்பாள் கொடைக்கானலில் நம்முடைய வீட்டில் என்னை வந்து பார்த்துவிட்டுத் திரும்பிப் போய்விட்டார்கள். ஒருவேளை அவர்கள் எங்காவது புண்ணிய சேத்திரங்களுக்குப் போயிருக்கலாம். நீ ஏன் மனதைப் போட்டு இப்படிக் குழப்பிக் கொள்கிறாய்?'' என்றாள் அவள்.

''சீ! சீ! எனக்குத் தெரியாது? நான் நேரிலேயே போனேன். இதே வேலைக்காரி என்னிடம் சேதி சொன்னாள். நான் என்ன பொய் சொல்லுகிறேனா. இல்லை, எல்லாமே கனவா?'' என்றாள் சரசு.

''இருக்கலாம்! நானும் இப்படிப்பட்ட மாய மந்திரங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்றான், முன் சீட்டிலிருந்த ஜெயச்சந்திரன்.

''என்ன பிரமையோ எனக்குப் புரியவில்லை...சரி... இப்பொழுதென்ன? இவ்வளவு தூரம் கண்ணிலும் கனவிலும் வந்த சாரதாம்பாள் இன்னொருமுறை நம்மைத் தேடி வராமலா போகிறார்கள்? பார்த்துக் கொள்வோம்'' என்றான் ராஜேந்திரன்.

கொடைரோடு தாண்டி அடிவாரத்திலிருந்து மலை மீது ஏறத்தொடங்கும்போது, பலமான மழை ஆரம்பமாகி விட்டது.

''இந்த மலைவாசமே இப்படித்தான். எப்பொழுது மழை வரும் என்று சொல்லமுடியாது'' என்றான் ஜெயச்சந்திரன்.

பேச்சை மாற்ற, சரசுவின் பிரமையை மாற்ற அவன் விரும்பினான்.

''இது ஏதோ அம்பிகையின் லீலையாகத்தான் இருக்க வேண்டும். நான் கண்டது எதுவுமே பொய்யல்ல...'' என்றாள் சரசு மீண்டும்.

யார் எந்தப் பக்கம் பேச்சைத் திருப்பினாலும், அவள் அந்த இடத்திலேயே வந்து நின்றாள்.

கார் மலையின் மீது ஒரு ஐந்தாறு மைல்தான் போயிருக்கும். காரின் விளக்கு வெளிச்சத்தில் யாரோ ஒரு பெண் மழையில் நடுங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

''ஐயோ, பாவம்! யாரோ ஒரு பெண் மழையில் நனைகிறார். கொஞ்சம் நிறுத்துங்கள்'' என்றாள் பாமா



கார் கொஞ்ச தூரத்தில் வரும்போது, நிறுத்தும்படி அந்தப் பெண்ணும் கை காட்டினாள்.

414350
894.8113
KAN

கார் நின்றது.

சரசுவுக்கு அடுத்த அதிர்ச்சி!

அதே சாரதாம்பாள் அங்கே நின்றார். எல்லோரும் அவரைக் காரில் ஏறிக்கொள்ளச் சொன்னார்கள். சரசுவும் தள்ளி உட்கார்ந்து கொண்டு அந்த அம்மாளுக்கு இடம் கொடுத்தாள்.

ஆனால் அந்த அம்மையாரிடம் எதையும் விசாரிக்கக் கூடிய துணிவு சரசுவுக்கு உண்டாகவில்லை. ஆனால் அவளுக்கேற்பட்ட அதிர்ச்சி மற்றவர்களுக்கு ஏற்படவில்லை.

சரசுவின் பக்கத்தில், சரசுவை ஒட்டிக் கொண்டுதான் அந்த அம்மையார் உட்கார்ந்திருந்தார். அதில் ஏதோ ஒரு விதப் புல்லரிப்பு சரசுக்குத் தோன்றிற்று. பேச மட்டும் நா எழவில்லை.

''நீங்கள் எங்கே போக வேண்டும்?'' என்று கேட்டாள், பாமா.

''சொல்கிறேன்'' என்றார் அந்த அம்மையார்.

கார் மேலும் சில மைல் தூரம் வந்த பிற்பாடு, ஓரிடத்தைக் காட்டி அங்கே நிறுத்தச் சொன்னார் அம்மையார்.

அந்த இடமும் மலைப்பாங்காக இருந்ததே தவிர பக்கத்தில் வீடுகள் இருப்பதற்கான அடையாளங்கள் தெரியவில்லை.

''எல்லோருக்கும் வணக்கம்!'' என்று சொல்லிவிட்டு அந்த அம்மையார் இறங்கினார்.

அப்போது மழை நின்றுவிட்டது. இறங்கிய அவர் அந்த மலைச்சரிவில் நடந்து செல்வது, அந்த இருட்டிலும் சரசுவுக்குத் தெரிந்தது.

கார் புறப்பட்டு விட்டது.

24 JUL 1991

அதன் பிறகுதான் சரசுவுக்குப் பேசவே வந்தது.

''பாமா! பாமா!.... நிறுத்து! நிறுத்து! அதே சாரதாம்பாள் அம்மையார்! காரைத் திருப்புங்கள். நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்'' என்றாள்.

''உனக்கென்ன பைத்தியமா? சாரதாம்பாள் முகம் எங்களுக்கென்ன மறந்தா போய்விட்டது? அவர் யாரோ ஒரு மூதாட்டி'' என்றாள் பாமா.

சரசு எவ்வளவோ மன்றாடிப் பார்த்தாள்.

''இந்த இருட்டில் காரை நிறுத்தவும் கூடாது. நீங்கள் இறங்கவும் கூடாது'' என்று எல்லோரும்கூறி விட்டார்கள்.

கொடைக்கானல் வீட்டினருகே கார் வந்து நின்றதும். சரசு சீட்டிலே கையை வைத்து இறங்கப் போனாள்.

அவள் கையில் ஏதோ தட்டுப்பட்டது. காரின் உள் விளக்கைப் போட்டுப் பார்த்தாள். அது ஒரு துணிப்பை.

அந்தப் பைக்குள்ளே ஒரு தேங்காய், இரண்டு பழங்கள், மலர்கள், மஞ்சள், குங்குமம் ஆகியவை இருந்தன.

''பார்த்தாயா!...அந்த சாரதாம்பாள் இதை வைத்து விட்டு இறங்கி விட்டாள்!'' என்றாள் சரசு.

''சாரதாம்பாள்! சாரதாம்பாள்! நல்ல பைத்தியம் பிடித்து விட்டது உனக்கு? அவர்கள் சாரதாம்பாளாக இருந்தால் இதை ஏன் வைத்து விட்டு இறங்குகிறார்கள்? சரி, சரி, வா!'' என்றாள் பாமா, அலுப்போடு.

ஜெயச்சந்திரனும். ராஜேந்திரனும் இந்த வேடிக்கையைப் பற்றி வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

காலையில் ராஜேந்திரன் எழுந்து வெளியில் வந்த போது, அங்கே ஒரு போலீஸ் ஜீப் நின்று கொண்டிருந்தது. இரண்டு போலீஸ் அதிகாரிகள் அவர்களது கார் நம்பரைப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தார்கள்.



உள்ளே இருந்து வந்தபடியே, ''உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டான் ராஜேந்திரன்.

''இரவில் இந்தக் காரில் யாராவது ஒரு பெண்மணி ஏறிக்கொண்டு வந்தாளா?'' என்று கேட்டார் போலீஸ் அதிகாரி.

''ஆமாம், வழியில் ஏறினாள். வழியில் இறங்கி விட்டாள்!'' என்றான் ராஜேந்திரன்.

''அவள் மலைச் சரிவில் இறந்து கிடந்தாள். உடல் திண்டுக்கல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டிருக்கிறது. இந்தக் காரில் அவள் ஏறியதை யாரோ பார்த்தார்களாம். அதை விசாரித்துப் போகவே வந்தோம்'' என்றார் போலீஸ் அதிகாரி.

அனைத்தையும் கேட்டுக்கொண்டு உள்ளே இருந்து வந்தாள் சரசு.

''அந்த அம்மையார் பெயர் என்ன?'' என்றாள்.

''அவர் கையிலிருந்த மோதிரத்தில் 'ராஜராஜேசுவரி' என்றிருக்கிறது'' என்றார் போலீஸ் அதிகாரி.

அப்போது ராஜேந்திரனுக்கே மயக்கம் வந்துவிடும் போலாகி விட்டது!

## 8. கல்யாணி

**போ**லீஸ் அதிகாரிகள் அதற்கு மேல் விசாரணை செய்யவில்லை.

'இந்த வண்டியில் தான் ஏறினாள்' என்பதே போதுமானதாகக் கொண்டு போய் விட்டார்கள்.

சரசு, திக்பிரமை பிடித்தவள் போல் நின்றாள்.

எந்தப் பக்கம் திரும்பினாலும் சாரதாம்பாளும், ராஜேசுவரியும் நின்று கொண்டிருப்பது போலவே அவளுக்குத் தோன்றிற்று.

ஆகாயத்திலும் பூமியிலும் அதே வடிவங்கள் பறந்து கொண்டிருப்பதுபோல் ராஜேந்திரனுக்குத் தோன்றிற்று.

திரும்பி உள்ளே போன சரசு, வெளியே நடந்ததை பாமாவிடம் சொன்னாள்.

ராஜேந்திரனும் மர்மக் கதைபோல் அதை வர்ணித் தான்.

பாமாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. தன் கணவரும், அக்காளும் ஏதோ பயந்திருக்கிறார்கள் என்றே எண்ணி விட்டாள்.

''எதற்கு வம்பு? கொடைக்கானலில் நாம் வாழ்ந்தது போதும். பேசாமல் ஊருக்குப் போய்விடுவோம்!'' என்றாள் பாமா.

''இல்லை. இந்த சாரதாம்பாளின் தெய்வீக சக்தி என்னைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. அந்த விவரத்தை முழுக்கத் தெரிந்து கொள்ளாமல், நாம் ஊருக்குப் போய் என்ன செய்யப் போகிறோம்?'' என்றாள் சரசு.

''அக்கா. நாம் இனிமேல் இங்கே இருந்தால், உனக்குப் பைத்தியமே பிடித்து விடும். பேசாமல் போய் விடுவது தான் நல்லது!'' என்றாள் பாமா.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த ஜெயச்சந்திரன், ''ஊரிலே வெயில் 108 டிகிரி யாம்! ஜூன் மாதத்தில் கூட வெயில் இந்தப் போடு போடு கிறது. இன்னும் ஒரு வாரம் இருந்துவிட்டுப் போங்கள்!'' என்றான்.

''உன் கொழுந்தன் இனி நீ இல்லாமல் இருக்க மாட் டான் போலிருக்கிறது!'' என்று பாமாவைக் கேலி செய் தான் ராஜேந்திரன்.



''எனக்குக்கூடக் கொழுந்தன் இல்லை என்றால் என்னவோபோல்தான் இருக்கும்!'' என்றாள் பாமா

இந்தப் பேச்சில் ஈடுபட விரும்பாமல் காய்கறி நறுக்கப் போய் உட்கார்ந்தாள் சரசு.

சரசப் பேச்சு என்றால் சரசுவுக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்காது. ''சரி, என்னதான் முடிவு?'' என்று சரசு விடம் போய்க் கேட்டாள் பாமா.

''நீங்கள் போவதென்றால் போங்கள். நான் ஒரு வாரம் இருந்து தினசரி பூவாத்தம்மன் கோவிலுக்குப் போய் பூஜை செய்துவிட்டு வருகிறேன். நியாயமாக ஒரு மண்டலம் பூஜை செய்யவேண்டும். நான் சொல்வ தென்னமோ ஒரு வாரம்தான்!'' என்றாள் சரசு.

''சரி, நாங்களும் இருக்கிறோம். மூலங்குடியில் போய் வெயிலில் வெந்து கொண்டிருப்பதைவிட இங்கேயே இருந்து விடுகிறோம்'' என்றான் ராஜேந்திரன்.

''அவரை தினசரி வந்து சௌந்தரிய லஹரி பாடச் சொல்லு பாமா!'' என்றாள் சரசு.

''கொழுந்தனாருக்கு அதைவிட வேறென்ன வேலை? நாள் முழுக்கப் பாடிக் கொண்டிருப்பார்'' என்றாள் பாமா.

''அதோடு சில புதிய ரெக்கார்டுகளும் வருகின்றன'' என்று ஜெயச்சந்திரன் சொல்லி முடிக்கும் முன்னாலேயே அவனது காரில் இருந்து சுமார் ஐம்பது இசைத் தட்டுகள் கொண்டு வந்து மேஜைமீது வைக்கப்பட்டன. அவற்றில் சில கிராமியப் பாடல்கள்.

ஓர் இசைத்தட்டை ஜெயச்சந்திரன் போட்டான். சரசுவுக்கு எரிச்சலாக வந்தது.

''இந்தச் சினிமாக்காரர்கள் என்ன பாட்டெழுது கிறார்கள்? வெறும் வார்த்தை ஜாலங்களிலேயே வாழ்க்கை

நடத்துகிறார்கள். எனக்குச் சௌந்தரிய லஹரியே போதும்'' என்றாள் அவள்.

''சரி. இன்றைக்கு ஒரு சினிமாவுக்குப் போவோமா?'' என்றான் பாமா.

எல்லோருமே சரகவின் மனோபாவத்தை மாற்ற முயன்றார்கள்.

'இந்தச் சந்நியாசிக் கோலத்தைவிட்டு சம்சார வாழ்க்கையில் அவளுக்குப்பற்று வந்துவிடாதா?' என்பதே அவர்கள் நோக்கமாக இருந்தது.

''என்ன படமாம்?....'' என்று கேட்டாள் சரக.

''இளமை வேட்கை'' என்றான் ஜெயச்சந்திரன்.

''அடடா, என்ன தலைப்பு....! நீங்களே போய்ப் பாருங்கள்!'' என்றாள் சரக,

''நீயும்தான் சும்மா வந்து பாரேன்....!'' என்று இழுத்தான் பாமா.

சரகவுக்கும் படம் பார்க்கும் ஆசை வந்தது. அவள் எதிர்பார்த்தது போலவே அதுஒரு சிற்றின்பப் படம்தான்.

'சின்ன வயதுப் பெண்ணொருத்தி காதல் என்ற பெயரில் ஓர் இளைஞனோடு கிராமத்திலிருந்து நகரத்திற்கு ஓடி வருகிறாள். அங்கே அவன் அவளைக் கெடுத்துக் கைவிட்டு விடுகிறான். 'கெட்டதுதான் கெட்டாய் என்னிடமும் வா' என்று பத்துப்பேர் அழைத்துக் கொண்டு போகிறார்கள். அவள் தொழில் நடத்தத் தொடங்குகிறாள்'

புது அலை இதுதானே...?

ரவிக்கை இல்லாத உடம்போடு ஒருத்தி நடித்திருந்தாள்.

பாடல்களோ கிராமியப் பாணியில் ஒரே காமரசம்.



சரக கண்ணை மூடிக்கொண்டாள். காதைப் பொத்திக் கொண்டாள். ஆனாலும்கூட அது வேடிக்கையாய் இருப்பது போல் அவளுக்குத் தோன்றிற்று.

அதற்கு மாற்று மருந்தாக, இரவிலே ஜெயச்சந்திரனைச் சௌந்தர்ய லஹரி பாடச் சொன்னார்கள் எல்லோரும்.

இரண்டொரு சுலோகங்கள் பாடினான்.

அன்று சினிமாப் பார்த்த பிறகு இந்த 'சௌந்தரிய லஹரியை வெறும் அம்பிகை ஸ்தோத்திரமாக மட்டும் கருத சரகவினால் முடியவில்லை,

அதில் ஏதோ இளமையின் ஆதங்கமும் தொனிப்பது போல் தோன்றிற்று.

பாடுவது ஆண் குரல்; கேட்பது பெண்.

முற்றி விளைந்த நெல், லேசாக வெடித்து அரிசி தெரிவது போல், அவள் உள்ளத்துக்குள் ஏதோ எட்டிப் பார்த்தது.

வெண்ணெய் உருகும்போது அந்த வாசம் வெளி வந்து விடாமல் மூடுவதுபோல் சரக அதை மூட முயன்றாள்.

நாற்காலியில் உட்கார்ந்தபடியே தூங்கி விழுந்தார்கள் பாமாவும், ராஜேந்திரனும்.

பாட்டை முடிப்பதா வேண்டாமா என்று ஜெயச்சந்திரன் பாடிக் கொண்டிருந்தான்.

முடிக்க வேண்டாமே என்பதுபோல் அவள் கேட்டுக் கொண்டு இருந்தாள்.

வெளியே நல்ல குளிர்ந்த காற்று: உள்ளே லேசான கதகதப்பு.

சாரதாம்பாளின் வாசகங்கள். சௌந்தரிய லஹரியோடு சேர்ந்து எதிரொலித்தன.

தேங்காயின்மீது கோபம் கொண்டு அதைப் போட்டு உடைத்தவன், உள்ளே சுவையான கீற்று இருப்பதைக் கண்டு பிடித்ததைப்போல, லௌகீக வாழ்க்கையின் தாகம் லேசாக அவளைத் தாலாட்டத் தொடங்கிற்று.

'சீ! நாமா இப்படி? நமக்குள்ளா இப்படி?' என்ற எண்ணம் திடீரென்று தோன்றிற்று.

''ஓம்....நமோ நாராயணா! ஓம் நமோ நாராயணா!'' என்று ஓங்கி உச்சரித்தாள் சரசு.

அவள் உச்சரிப்பைவிட உச்ச ஸ்தாயியில் சௌந்தர்ய லஹரி பாடினான் ஜெயச்சந்திரன்.

தான் இருந்த அறையில் அப்படியே படுத்து விட்டாள் சரசு. அவளது நெஞ்சுக்குள்ளே இனம் புரியாத வேதனை. மார்பகத்தில் ஒரு கிளுகிளுப்பு. வலது கால் பெருவிரல் இடது உள்ளங்காலை வருடிக் கொண்டிருந்தது. ஏதோ உள்ளுக்குள்ளே ஓர் ஊற்றுப் பெருகுவதுபோல் அவளுக்குத் தோன்றிற்று.

அதிகாலை மணி மூன்று. சௌந்தரிய லஹரி நின்றது. வேறொரு பக்கம் போய்ப்படுத்துவிட்டான் ஜெயச்சந்திரன்.

காலையில் கண்விழித்த போது, தன் உடல் நிலையில் ஏதோ மாற்றம் இருப்பதைக் கண்டு வெட்கப்பட்டாள் சரசு.

அதிகாலையில் அந்த நடுங்கும் குளிரில் துணிந்து பச்சைத் தண்ணீரிலே குளித்துவிட்டு, பூவாத்தம்மன் கோவிலுக்குப் புறப்பட்டாள்.

அன்று பூவாத்தம்மனுக்கு நல்ல அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன.

ஆடிமாத அமாவாசையின்போது அப்படிச் செய்வது வழக்கமாம். சுற்றுமுற்றும் யாரையும் காணவில்லை.



சரசு தானே தேங்காயை உடைத்துத் தீபாராதனை காட்ட ஆரம்பித்தாள்.

''ஏன், நான் இருக்கிறேனே?'' என்றொரு குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தாள் சரசு. ஓர் அழகான இளம் பெண் நடு வகிடெடுத்துக் கொண்டை போட்டிருந்தாள். கொண்டையில் மல்லிகை மொட்டு;நெற்றியில் குங்குமப் பொட்டு.

''நீங்கள் யார்?'' என்று கேட்டாள் சரசு.

''நான் ஒரு சுமங்கலிதான். எனக்கு ஓய்விருக்கும் போதெல்லாம் இந்தக் கோவிலுக்கு வருவேன். மற்றவர்களுக்காக நானே தீபாராதனை காட்டுவேன். இப்படி ஆயிரம் தீபாராதனை காட்டுவதாக வேண்டிக் கொண்டிருக்கிறேன்'' என்று சிரித்தாள் அவள்.

சிரிப்பை உற்று நோக்கினாள் சரசு.

முல்லை மொட்டுக்களை வரிசையாக அடுக்கி வைத்தது போன்ற பற்கள். தந்தத்தால் செய்து, பாலீஷ் போட்டது போன்ற கன்னங்கள். நீலக் கருவிழிகள். மூக்கிலே பேசரி. நடுவிலே நத்துப் புல்லக்கு. கட்டியிருந்தது, காஞ்சிபுரம் பட்டு. பச்சைப் பட்டு ரவிக்கை, சரிகை போட்டது. கழுத்தில் ஒரு காசு மாலை, முத்துமாலை. சௌந்தரிய லஹரி வருணனைக்கு ஒத்து வருவதுபோல் சில தோற்றங்கள்; சிவந்த பாதங்கள்.

பாதங்களைப் பார்த்து சரசு திடுக்கிட்டாள்.

வெகுநேரம் தன்னையே பார்ப்பதைக் கண்ட அந்தப் பெண், ''ஏன் என்ன விசேஷம்?'' என்று கேட்டாள்.

''ஒன்றுமில்லை, இலக்கியங்களில் வருவதுபோலவே இருக்கிறீர்கள்!'' என்றாள் சரசு.

''திருமணமாகி மூன்று நாள் ஆகிறது. அந்த சுகத்தின் எதிரொலி இருக்காதா...'' என்று கேட்டாள் அவள்.

''எனக்கு அதைப்பற்றித் தெரியாது. காரணம் எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை'' என்றாள் சரசு.

''அடடா! கண்டிப்பாக நீங்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டும். சாயங்காலம் என் வீட்டுக்கு வாருங்கள். கொடைக்கானலில்என் வீடு மிகப் பெரிய வீடு. நிறைய விஷயங்கள் சொல்லுவேன். இதுதான் விலாசம்!'' என்று விலாசத்தைக் கொடுத்தாள் அந்தப் பெண்.

அந்த விலாசத்தை கையில் வாங்கிக் கொண்டாள் சரசு.

தீபாராதனை முடிந்தது. சரசு புறப்பட்டாள். அந்தப் பெண் வழியனுப்பினாள்.

இந்தச் செய்தியைப் பாமாவிடம் சொன்னபோது, ''என்ன இது கதை? மோகினிப் பிசாசுகள் உலாவுவதற்காகவே இந்த மலையை ஒதுக்கி இருக்கிறார்களா?'' என்றாள்.

''அது எனக்குத் தெரியாது. மாலையில் தனது மாளிகைக்கு வரச் சொன்னாள் அந்தப் பெண். நாம் எல்லோரும் போவோம்'' என்றாள் சரசு.

கொடைக்கானலில் இருந்து ஐந்து மைல் தூரத்தில் ஒரு காட்டுக்குள் இருந்தது அந்த மாளிகை.

அந்தப் பெண் கொடுத்த விலாசத்தில் அது 'எஸ்டேட்' என்று இருந்தது.

அழகான மாளிகைக்குள் அவர்கள் நுழைந்தபோது, சில பெண்களின் அழுகுரல் கேட்டது.

எல்லோரும் வேகமாக உள்ளே நுழைந்தார்கள்.

அந்தப் பெண்-ஆம்; அதே பெண்—அதே பட்டுப் புடவையும், பொட்டும் பூவுமாக இறந்து கிடந்தாள்.

அவள் கழுத்தில் ஒரு மாலை போட்டிருந்தது.



''அம்மா, சாரதா! போய்விட்டாயா?'' என்று ஒரு மூதாட்டி மேலே விழுந்து அழுதாள்.

சரசு அங்கேயே மயங்கி விழுந்தாள்.

# 9. பைரவி

'இனி கொடைக்கானலில் இருப்பது மரியாதையல்ல' என்று பாமா முடிவு கட்டினாள்.

ஏதோ ஒரு மோகினிப் பிசாசு அக்காவைச் சுற்றி வருவதாகவே அவள் முழுக்க நம்பினாள்.

ஒரு நிகழ்ச்சியைச் சொன்னால், அதுபோல் எந்தெந்த ஊரில் என்னென்ன நடந்ததென்று புதுப்புதுக் கதைகள் சொல்வது தமிழர்கள் பழக்கமல்லவா?

ராஜேந்திரன் சில கதைகளைச் சொன்னான்; ஜெயசந்திரன் சில கதைகளைச் சொன்னான்.

புதுப்பட்டி முதலியார் மகளை, இப்படித்தான் ஒரு மோகினிப் பிசாசு பல வடிவங்களில் வந்து மிரட்டியதாகவும், கரூர் கந்தசாமிக் கவுண்டர் மகளை, தலை மாட்டிலேயே உட்கார்ந்திருந்து நிறுத்தியதாகவும் எத்தனையோ கதைகள்.

போதாதா பாமாவுக்கு?...

அடுப்பங்கரைக்குப் போகவே அவளுக்குப் பயமாக இருந்தது.

இறந்துபோன இளம் பெண்ணின் வீட்டிலிருந்து மயக்கம் தெளிவித்து சரசுவைக் கொண்டு வந்ததிலிருந்து, எல்லோரும் அதே பேச்சையே பேசிக் கொண்டிருந்தார்கள்.

''அக்கா, நீ என்ன வேண்டுமானாலும் சொல்லு. இது ஏதோ ஒரு மோகினிக் கூத்துதான்! கிராமத்தில் அப்பா

அம்மாவுக்கு எப்படி இருக்கிறதோ தெரியவில்லை. நாம் மூன்று பேரைச் சந்தித்தோம்; மூன்று பேரும் இறந்து போயிருக்கிறார்கள். நீ இனி ஒரு நிமிடம்கூட இருக்கக் கூடாது. நான் சின்னவள்தான். ஆனால்; உனக்குத் திருமணமாகி விட்டால், இதெல்லாம் நின்று விடும் போல் எனக்குத் தோன்றுகிறது. நீ இந்த வேதாந்த விசாரத்தை எல்லாம் விடு. நாளையே கிராமத்திற்குப் போய் விடுவோம். அப்பா, அம்மா சொல்கிற மாதிரி நடந்து கொள். அப்புறம் உன் வாழ்க்கையே தலைகீழாக மாறி விடும்'' என்றாள் பாமா.

சரசு ஒன்றும் பதில் பேசவில்லை. அவள் உள்ளுக்குள்ளேயே ஊசலாடி ஊமையாக இருந்தாள்.

மறுநாள், ஜெயச்சந்திரனிடம் விடை பெற்றுக் கொண்டு எல்லோரும் புறப்படும்போது, ''ஒரு நிமிஷம் பூவாத்தம்மன் கோயிலுக்குப் போய்விட்டுப் போவோம்'' என்றாள் சரசு.

''பார், பார்! இன்னும் உனக்கு அந்தப் பைத்தியம் தெளியவில்லை. இனி நாம் யாரையாவது பூவாத்தம்மன் கோவிலில் சந்தித்தால் எனக்கு உயிரே போய்விடும். பேசாமல் நேரே ஊருக்குப் போய்விடுவோம்!'' என்றாள் பாமா.

''சரி, வா! தாமரையிடமாவது சொல்லிக் கொண்டு போவோம்'' என்று பாமாவையும் அழைத்துக் கொண்டு தாமரையின் வீட்டுக்குப் போனாள் சரசு.

''அடியம்மா! நீ எங்களைப் பூவாத்தம்மன் கோயிலுக்கு அழைத்துக்கொண்டு போனாலும் போனாய்! எல்லாக் கூத்தும் நடந்து விட்டது'' என்று எல்லாக் கதைகளையும் தாமரையிடம் சொன்னாள் பாமா.

''நானா! நான் ஒரு போதும் உங்களைப் பூவாத்தம்மன் கோயிலுக்கு அழைத்துக் கொண்டு போகவில்லையே?... இங்கே அப்படி ஒரு கோவில் இருப்பதே எனக்குத் தெரியாதே...?'' என்றாள் தாமரை.



இப்போது பாமாவுக்கே மயக்கம் வந்துவிடும் போலிருந்தது. சரசுவுக்குத் தலையைப் பிய்த்துக்கொண்டு விடலாம்போல் தோன்றிற்று.

'நடந்தாவது ஊருக்கு ஓடிவிட வேண்டும்' என்று இருவரும் எண்ணத் தலைப்பட்டார்கள்.

தாமரையிடம் அவர்கள் வாதாடவில்லை. தாங்கள் தொடர்ச்சியாகப் பார்த்து வரும் தேவி தாண்டவத்தில் இதுவும் ஒரு பகுதி என்றே எண்ணினார்கள்.

''சரி, நாங்கள் போய் வருகிறோம்'' என்று பயத்தோடு விடை பெற்றுக்கொண்டார்கள்.

காரில் ஏறிப் போகும்போது, ''நல்லவேளை. இவளும் சாகவில்லை!'' என்றாள் பாமா.

இனம் புரியாத கலவரத்தில் சரசு அமைதியாக உட்கார்ந்திருந்தாள்.

ஜெயச்சந்திரனுக்கு அவர்களைப் பிரிய மனமில்லை. பிரியாவிடை கொடுத்தான்.

கார் போய்க் கொண்டிருந்தபோது ராஜேந்திரன் டிரைவரைப் பார்த்து, ''இந்தா டிரைவர், வழியில் யார் கை காட்டினாலும் நிறுத்தாதே!'' என்றான்.

கார் மலையை விட்டுக் கீழே இறங்கிய பிறகுதான் எல்லோருக்கும் உயிர் வந்தது.

அதன் பிறகு பாமா சற்று கலகலப்பானாள். ஆனால் அவள் பேசியதெல்லாம் மோகினிப் பிசாசு பற்றிய பேச்சுத்தான். ராஜேந்திரனும் அதை ஆமோதித்துக் கொண்டே வந்தான்.

சரசுவுக்கோ அது மோகினிப் பிசாசு அல்லவென்றும், தனக்கு தேவி ஏதோ கட்டளையிடுகிறாள் என்றும் தோன்றிற்று.

மதுரைக்குள் அவர்கள் நுழைந்தபோது, ''சொக்கநாதர் மீனாட்சியைத் தரிசித்துவிட்டுப் போகலாமே'' என்றாள் சரசு.

''போதும், போதும்! நீயும் உன் கோயிலும்! அங்கே எவளையாவது பார்ப்பாய். நாளைக் காலையில் அவளும் செத்துக் கிடப்பாள்! இனிமேல் நீ மிருகக் காட்சி சாலை, பொருட்காட்சி என்றுதான் பார்க்கவேண்டும். கோவிலுக்குப் போகாதே!'' என்றாள் பாமா.

''சரிதான், நிறுத்தடி! எனக்கு நீயா புத்தி சொல்கிறாய்? கோயிலைப் பற்றியும் தேவியைப் பற்றியும் நீ ஏதாவது பேசினால் நான் காரில் இருந்து குதித்து விடுவேன்'' என்றாள் சரசு.

''அக்கா, நானென்ன நாஸ்திகமா பேசுகிறேன்...'' என்று பாமா ஆரம்பித்தபோது ராஜேந்திரன் குறுக்கிட்டு அவளை அடக்கினான்.

பிறகு மூலங்குடி கிராமம் வரும்வரை காருக்குள் மயான அமைதி நிலவிற்று.

பெண்கள் இருவரும் கோடைக்கானல் போய்விட்டதால், மூலங்குடி கிராமத்தில் அவர்கள் பெற்றோர் ஒரு வேளை சமைத்து மூன்று வேளை சாப்பிட்டு ஊர்ப் பேச்சுப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒருவரை ஒருவர் நன்றாகக் காதலித்த தம்பதியராதலால் ஒருவகை முதியோர் காதலையே நடத்திக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று கார் வந்து நின்றதும், தாயார் முன்தானையைத் திருத்தி விட்டுக்கொண்டு, ''அப்படியே நில்லுங்கள்'' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்று ஒரு சிவேட்டு விளக்கை ஏற்றிக் கொண்டு வந்தாள்.

அதை வாசற்படி அருகே வைத்து ஆரத்தி எடுத்த பிற்பாடு பாமாவைப் பார்த்து, ''உனக்கு முதல்ல பிறக்கப் போறது பெண்தாண்டி! அந்த அம்பாள்தான் உன் வயிற்றில் பிறக்கப் போகிறாள்'' என்றார்.



''நல்லாச் சொல்லும்மா! இன்னும் பத்துத் தடவை சொல்லு!'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே போய் விட்டாள் சரசு.

அன்று பகல் முழுவதும் சரசுவும் பாமாவும் ஒன்றும் பேசவில்லை.

இரவிலே கணவனை மாடியில் படுக்கச் சொல்லிவிட்டு தான் மட்டும் வந்து தாயாரின் அருகிலே படுத்துக் கொண்டாள் பாமா.

சரசு வழக்கம்போல் தன் அறையில் ஒரு விக்கிரகத்தின் காலடியில் படுத்துவிட்டாள்.

''அம்மா! அக்காவுக்கு கலியாணம் பண்ணியே தீரணும். அவள் வாழ்க்கையில் ஏதோ சோதனை இருக்கிறது'' என்று தொடங்கி கோடைக்கானலில் நடந்த கதை முழுவதையும் விவரித்தாள் பாமா.

அவ்வளவையும் ஆச்சரியமாகக் கேட்டுக் கொண்டிருந்த அந்த மூதாட்டி, ''நாம் என்னமோ நெனைக்கிறோம். அவ ஒத்துக்கலயேடி! வயித்திலே அவ முனுமாசமா இருக்கறப்போ நானும் ஒங்க அப்பாவும் சிருங்கேரிக்குப் போயிருந்தோம். அங்கே சாரதாம்பாளை தரிசிச்சோம். அவதான் என் வயித்துல பொண்ணா வந்து பொறந்துட்டா போலிருக்கு!'' என்றார் தாயார்.

பாமாவுக்குத் தூக்கிவாரிப்போட்டது.

சரசு வயிற்றில் இருக்கும்போது அம்மா ஏதோ சாது சந்நியாசிகளைச் சந்தித்ததாகத்தான் பாமா நினைத்திருந்தாள். சாரதாம்பாள் என்ற பெயரைக் கேட்டதும் அவள் நெற்றி வியர்த்தது. இத்தனைக்கும் கோடைக்கானலில் நடந்த கதையைக் கூறும்போது தாங்கள் சந்தித்த அம்மையாரின் பெயர் என்ன என்பதை

பாமா வெளியிடவில்லை. இயற்கையான இந்த ஒற்றுமை அவளுக்கே ஒரு பயத்தை உண்டாக்கிற்று.

"அம்மா! நாங்கள் சந்தித்த அம்மையாரின் பெயரும் சாரதாம்பாள்தான்! சாரதாம்பாள், ராஜராஜேஸ்வரி, அந்த இளம் சுமங்கலி ஆக மூன்று பேருமே அக்காவுக்கு ஒரே விஷயத்தைத்தான் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். திருமணம் செய்துகொள் என்பதே அது. சாரதாம்பாள் அக்காவுக்கு ஒரு பவுன் மாங்கல்யம்கூடக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார். நீ நாளைக்கே திருமணத்திற்கு ஏற்பாடு செய். அக்கா இனி மறுக்க மாட்டாள்!" என்றாள் பாமா.

"அததற்கு காலம் நேரம் வரவேண்டாமா? பார்ப்போம்!" என்றபடி திரும்பிப் படுத்தாள் தாயார்.

மறுநாள் பொழுது விடிந்தபோது, காலம் நேரம் வந்துவிட்டதுபோல்தான் தோன்றிற்று.

பாமாவின் தாயாருக்கு உடன் பிறந்த சகோதரி, மேலைக் குடியிருப்பு என்ற கிராமத்தில் இருந்தார்கள். அவர்களுடைய மகன் பழனி ஊரிலே யாருக்குக் கல்யாணம் பேசுவதென்றாலும் தானே முன் நின்று கமிஷன் வாங்காமல் பேசி முடிப்பான். அது ஒரு பிரார்த்தனை அவனுக்கு.

அவன் என்னவோ திடுதிப்பென்று சித்தியின் வீட்டு வாசலில் வந்து நின்றான். அவனைப் பார்த்த உடனேயே, 'இதுவும் அம்பாள் அனுப்பிய தூதுதான்' என்று கருதினாள் பாமா.

"பையன் நன்கு படித்தவனாம்; வியாபார நிர்வாகத்தில் பட்டம் வாங்கியவனாம். அவன் சரசுவைக் கனவில் கண்டானாம்...'இது என்னடா கூத்து' என்று நீங்களே நினைப்பீர்கள். அவனுக்கு தெய்வ நம்பிக்கை ரொம்ப ரொம்ப அதிகம். சரசுவும் அதே மாதிரி! வேறு பொருத்தம் என்ன வேண்டும்?" என்று கேட்டான் பழனி.



"அண்ணா சொன்னால் தப்பவே தப்பாது? முடிக்கச் சொல்லம்மா!" என்றாள் பாமா.

சரசு அப்போது சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள்.

"முதலில் அவர்கள் பெண் பார்க்கவேண்டும். வெள்ளிக்கிழமை வரச் சொல்லட்டுமா...?" என்று கேட்டான் பழனி.

"சம்பந்தி அம்மா பேரென்ன?" என்று கேட்டார்கள் தாயார்.

"ராஜராஜேஸ்வரி!" என்றான் பழனி.

## 10. ஹம்சத்வனி

"ஏன்டியம்மா, இனி உனக்குக் கல்யாணம் செய்யாது நாங்கள் அலட்சியம் காட்ட முடியாது. மலையில் நடந்ததெல்லாம் பாமா சொன்னாள். மகாலட்சுமி தனியாக இருக்கக் கூடாதென்று தேவி நினைக்கிறாள் போலிருக்கிறது. நீ என்ன சொன்னாலும் சரி. நான் திருமணம் பேசத்தான் போகிறேன்" என்றார்கள் தாயார்.

"சரி சரி, உங்களிஷ்டம்" என்று சொல்லிவிட்டுப் போனாள் சரசு.

இந்த வார்த்தையே தேவி கொடுத்த வரம் போலத்தான் தாயாருக்குத் தோன்றிற்று.

திடுதிப்பென்று மறுக்கக் கூடியவள், திருமணம் என்றால் சீறிவிழக் கூடியவள். இந்த அளவுக்கு வந்திருக்கிறாளே, போதாதா?

திருமணப் பேச்சு நடந்தது. தேவியின் அருளால் முடிந்தது.

பெண்ணை அவர்களுக்குப் பிடித்திருந்தது. பையனை இவர்களுக்குப் பிடித்திருந்தது.

பையன் நல்ல பக்தன்தான்.

இந்தக் காலத்து வாலிபனுக்கு திருநீறு, திருமண் என்றால் கேலியாகத் தெரியுமே!

பையன் பெயர் தணிகைவேலன். கட்டுக் கட்டாக விபூதி பூசியிருந்தான். நடுவிலே சந்தனப் பொட்டின்மீது சாந்துப் பொட்டு வைத்திருந்தான். எடுத்ததற்கெல்லாம் 'முருகா' என்றான்.

மணவறையில் அவனை ஓரக்கண்ணால் பார்த்தாள் சரசு. சாட்சாத் சாரதாம்பாளேதான் அவனை அனுப்பி இருப்பாள் போல் தோன்றிற்று.

ஊரிலே எல்லோரும் அதைப் பற்றியே பேசினார்கள்.

'அவளும் ஒரு சந்நியாசினி. அவனும் ஒரு சாமியார்' என்று சொல்லிக்கூட சிலர் சிரித்தார்கள்.

பையனுக்கு சொத்துக்கள் அதிகம். கூடப் பிறந்தது ஒரே ஒரு மூத்த சகோதரி. விதவைத் தாயார். தஞ்சாவூரிலே நாற்பது வேலி நிலம்; கோடைக்கானலிலே ஒரு எஸ்டேட். செட்டியார்கள் பாணியில் சொன்னால், 'இன்றையக் கணக்கில் ஐம்பதுலட்சம் தேறும்.' ஆனால் தாய் கூடப் பிறந்தவர்கள், தந்தை கூடப் பிறந்தவர்கள் ஏராளம்.

பங்காளிகள், தாயாதிகள் வம்சாவளியிலேயே நூற்று அறுபத்தைந்து உறுப்பினர்கள் இருந்தார்கள்.

கோடைக்கானல் பங்களா தாமரையின் கணவன், பையனுக்கு ஒன்றுவிட்ட சகோதரன்தான்.

சரசுவின் மனம் முற்றிலும் மாறி இருந்தது. லௌகிக வாழ்க்கையில் இருந்து தான் விடுபட முடியாது என்றே அவள் நம்பத் தொடங்கினாள். என்றைக்குமில்லாத பருவத்து மனக் கிளர்ச்சியும் அவளுக்கு வந்திருந்தது.



சுற்றுச் சார்புகள், சூழ்நிலைகள், தெய்வம் ஆகியவை கட்டளை இடும்போது அந்தக் கட்டளைக்குப் பணிவதே நியாயம். இல்லையென்றால் நாம் எதிர்பாராத தெல்லாம் நடக்கும்.

சரசு கற்றுக்கொண்ட விஷயங்கள் குறைவென்றாலும், இந்தமார்க்கத்தில் நம்பிக்கையுள்ளவளுக்கு அதுவே போதுமானதாக இருந்தது.

மூவாயிரம் புத்தகங்கள் படித்தவன் பெற முடியாத புத்தியை சிலர் பிறவியிலேயே அடைந்து விடுவ தில்லையா?...

திருமணம் முடிந்து, சரசு சாந்தி முகூர்த்தத்திற்காக அலங்கரிக்கப்பட்டாள். சாதாரணமாக இந்துக்கள் சாந்தி முகூர்த்தத்திற்கு ஏராளமான நகை போட்டு மணவறை அலங்காரம் செய்வதில்லை. இரவு நேர வசதிக்காகக் கொஞ்சம் எளிமையாகவே அனுப்புவார்கள்.

சரசுவுக்குச் செய்யப்பட்ட அலங்காரமோ ஓர் எளிமை யான குடும்பப் பெண்ணின் அழகையே பிரதிபலித்தது.

இப்போது அவள் முற்றிலும் வேறுபட்டவள். தத்துவ ஞானங்கள் மறைந்தோடிவிட்டன. சிற்றின்ப மின்சாரம் உடலெங்கும் விரவி நின்றது. குளிர்ந்த உதடுகள் கதகதப் பாக மாறின. கன்னங்களில் லேசான கொதிப்பிருந்தது.

பெரியவர்கள் உஷ்ணத்தைக் கழுத்திலேதானே தொட்டுப் பார்ப்பார்கள்.

சரசுவின் தாயாரும் தொட்டுப் பார்த்தார். மகள் நல்ல பக்குவத்தில் இருப்பது அவருக்கும் தெரிய வந்தது.

பாமாவின் முதலிரவன்று காய்ந்துபோன விறகு போன்றிருந்த சரசு, இப்போது குலை போடாத வாழை மரம்போலிருந்தாள்.

அன்றொரு நாள் இரவு கோடைக்கானலில் அவள் உடம்பில் ஏற்பட்ட மாறுதல் இன்று அதிகமாக ஏற்படத் தொடங்கிற்று.

சினிமாக்களில் வருவது போல, பாலும் பழமும் கைகளில் ஏந்தி, பள்ளியறைக்கு மணமகள் செல்வது வழக்கமில்லை. வைக்கவேண்டியவற்றை ஏற்கனவே ஒரு மூலையில் வைத்திருப்பார்கள். இரவு நேரத்தில் ஒரு மூதாட்டி ஓடி வந்து முதுகைத் தட்டி, 'அங்கே போடி' என்பார். அவ்வளவுதான். இந்தக் காலத்துப் பெண்ணாக இருந்தால் அவள் தானாகவே ஏற்பாடு செய்து கொள்வாள்.

சரசு சற்று பழைய பாணி. எல்லாம் பழைய முறையிலேயே நடந்தன.

நம்முடைய மூதாதையர்கள் சந்தித்ததுபோல் ஒரு சந்திப்பு. வழக்கமான நாணம், கூச்சம்! 'ஐயோ விளக்கு எரிகிறதே!' என்ற புறம் எல்லாம் நடந்தன.

அந்த அரவணைப்பு, அந்த சரசம்-சரசு அடிக்கடி துள்ளி விழுந்தாள். அவள் உடலுக்குள் கங்கை வெள்ளம் பிரவகித்தது.

தணிகைவேலன் நல்ல ஆண்மகன். முதல் நாள் சோதனையில் மனைவிக்கு எரிச்சல் ஏற்பட்டுவிடாமல் நடந்து கொண்டான். ஆனாலும் தாளமுடியாத உடல்வலி சரசுவுக்கு இருந்தது.

இல்லறத்தில் இந்த அனுபவமே மிகவும் புதுமையானது.

முதல் சில நாட்கள் போதை நிறைந்த சோதனைக் காலங்களாக இருக்கும், போகப் போகத்தான் தெரியும், அந்தப் பூவின் வாசமும் புரியும்.

சரசு அந்த இன்பவேதனையில் தள்ளாடினாள்.

பெண்களிலே மூன்று வகை உண்டு. சிற்றின்ப நேரத்தில் தாங்கள் இன்பமடையும்போது அந்தக் கடைசி



நேரத்தை பெருமூச்சோடு அனுபவிக்கும் பெண்கள்; 'ஐயா' என்றபடி கணவனைக் கட்டிப் பிடித்துக்கொள்ளும் பெண்கள், அடுத்த வீட்டுக்குத் தெரியும்படி சப்தமிடும் பெண்கள் — இவற்றில் முதல்வகை தெய்வதம்; இரண்டாவது மனிதத்துவம்; மூன்றாவது ராட்சசம்.

சரசுவின் சுகம், தெய்வதம்.

பொழுது போவதையே அவள் உணரவில்லை. சிட்டுக் குருவிகள் போல அவர்கள் உறவாடினார்கள். ஆனாலும் கூட அவள் வாயிலிருந்து 'கிருஷ்ணா' என்ற வார்த்தையும், அவன் வாயிலிருந்து 'முருகா' என்ற வார்த்தையும் வருவது நிற்கவில்லை.

பொழுது புலர்ந்தது. அதற்குள் எழுந்து சரசு குளித்து விட்டாள். ஆடவன் அலங்கோலமாகப் படுக்கையில் விழுந்து தூங்குவதுபோல், பெண்கள் தூங்குவதில்லை.

மீண்டும் கட்டுக்கட்டாக விபூதி, குங்குமம், பூஜை. இன்றையப் பூஜைதான் அவளுக்கு நியாயமான பூஜையாக இருந்தது.

கணவனும், மனைவியும் உடலுறவை நன்கு அனுபவித்து விட்டு மறுநாள் கடமைகளைக் கவனிக்கும் போது எல்லாக் கடமைகளுமே உற்சாகமாகக் காட்சியளிக்கும். எந்த வேலையிலும் மனம் ஈடுபாடு கொள்ளும். ரத்தத்திலுள்ள உணர்வுகள் ஒரு முறைப்பட்டு வெளியேறிய பிறகு, உடம்பில் ஒரு புதுத் தெம்பும்உற்சாகமும்இருக்கும். அப்போது அவர்கள் எதையும் செய்ய முடியும்.

சரசுவின் அன்றைய பூஜை சக்திக்கும் சிவனுக்கும் மட்டுமின்றி, ரதிக்கும் மன்மதனுக்குமே நன்றி தெரிவிக்கும் பூஜையாக இருந்தது.

சரசுவின் திருமண வாழ்வில் பெற்றோர் மகிழ்ச்சி அடைந்ததுபோல, கிராமமே மகிழ்ச்சி அடைந்தது.

''பிச்சைக்காரர்களோ, அன்னக் காவடிகளோ வந்தால் சட்டி நிறையச் சாதமும், சாம்பாரும் போடுவாளே சரசு! போகட்டும். புண்ணியவதி நல்லா வாழட்டும்'' என்றே ஊர் பேசிற்று.

இவ்வளவுக்கிடையிலும் விரோதிகள் இல்லாமலிருப்பார்களா?

திருமணத்துக்கு வந்தவர்கள் மறுநாள் விடை பெறுவதற்கு முன்னால், அந்த வீடு முழுவதுமே ரகசியக் கிடங்காக மாறிற்று.

யாரோ ஒருவன் கிளப்பிவிட்ட செய்தி, ஒவ்வொரு மூலையிலும் விஸ்வரூபம் எடுத்து நின்றது.

ஆங்காங்கு மூன்று நான்கு பெண்கள் கூடிக் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

சரசுவிடமோ, பாமாவிடமோ, பெற்றோரிடமோ யாரும் எதையும் பேசவில்லை. அவர்கள் என்னதான் பேசிக் கொள்கிறார்கள் என்பது அவர்களுக்கும் விளங்கவில்லை.

சரசுவின் தாயார் ஒரு பெண்ணைப் பார்த்து, ''என்னடி பேசுகிறீர்கள்? பேசுவதைச் சத்தம் போட்டுத்தான் வெளியிலே பேசுங்களேன்! எதையும் தாங்கிக் கொள்ள எங்களுக்குச் சக்தியுண்டு!'' என்றார்கள்.

அந்தப் பெண் தயங்கித் தயங்கி, ''சரசுவின் கணவருக்கு, ஏதோ நோய் என்கிறார்கள்'' என்றாள்.

## 11. நாத நாமக்ரியை

'நல்ல திருமணம்; நல்ல மாப்பிள்ளை; சரசுவுக்கு நல்ல வாழ்க்கை' என்றெல்லாம் எண்ணிய அன்னையின் தலையில் யாரோ சம்மட்டியால் அடிப்பது போன்றிருந்தது.



சரசுவின் காதில் விழாதா இந்தச் செய்தி?

''அதற்காக என்ன? கல்யாணம் ஆன பிறகு நோய் வந்திருந்தால் என்ன செய்யப் போகிறோம்? ஊரில் நாட்டிலே ஒவ்வொருவரும் எப்படி எப்படியோ வாழுகிறார்கள். போகட்டும். குஷ்டம் பிடித்த கணவனைக் கூடையிலே சுமந்து செல்லவில்லையோ நளாயினி?'' என்று சொல்லி விட்டாள், சரசு.

நம்முடைய பெண்களுக்கு இத்தகைய வைராக்கியத்தையே புராணக் கதைகள்தானே கொடுத்தன.

சமுதாயக் கட்டுக் கோப்பை ஒழுங்காக வைத்துக் கொள்வதிலும் குடும்ப வாழ்க்கையைச் சீராக்குவதிலும் புராண-இதிகாசக் கதைகள்தானே ஒத்துழைக்கின்றன?

''அக்கா!''...என்று இழுத்தபடி கண்ணீர் விட்டாள் பாமா.

''போடி பைத்தியக்காரி! அவரவர் தலையில் எப்படிப் போட்டிருக்கிறதோ, அப்படித்தான் முடியும். ஒரு நாட்டிலே பொழுது விடியும் போது ஒரு நாட்டிலே இருண்டு போகிறதாம். கருங்கடலின் நிறம் ஒரு மாதிரியாம், பசிபிக் கடலின் நிறம் ஒரு மாதிரியாம். பூமிக்கும் கடலுக்குமே தனித்தனி விதி இருக்கும்போது, நமக்கும் இருக்கத்தானே செய்யும்? என் கணவர், தங்கம், ரத்தினம், மாணிக்கம்! அதுபோதாது எனக்கு?'' என்று கூறிவிட்டாள் சரசு.

''இல்லை அக்கா, சௌந்தர்ய லஹரி பாடுகின்ற உனக்கா இப்படி?'' என்று இழுத்தாள் பாமா.

''அடி புத்தி கெட்டவளே! கம்பராமாயணம் படிப்பவனுக்கெல்லாம் சீதை வாய்த்து விடுகிறாளா? இல்லை, சிலப்பதிகாரம் படிப்பவனுக்கெல்லாம் கண்ணகி கிடைத்து விடுகிறாளா? ஏன் மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்கிறாய்? அன்னை சாரதாம்பாள் ஏதோ காரணம் கருதித்தான் அந்தச் சம்பந்தத்தை முடித்திருக்கிறாள்'' என்று

சொன்னபடியே வேறு வேலையைக் கவனிக்கத் தொடங்கி விட்டாள், சரசு.

கிராமத்தில் வீட்டுத் திண்ணைகளே அச்சுக் கூடங்கள். பெண்களின் வாய்களே தினசரிப் பத்திரிகைகள். செய்தி ஊரெங்கும் பேசப்பட்டது.

சரசுவோ தன் கணவனைக் கூட்டிக்கொண்டு கோவிலுக்கே போய் வந்தாள். நடந்தே போனார்கள். நடந்தே திரும்பினார்கள். அவர்களைக் கிராமம் வேடிக்கை பார்த்தது.

''சரசு! என்னைப்பற்றி யாராவது ஏதாவது சொன்னார்களா?'' என்று கூட்டமில்லாத இடத்துக்கு வந்த போது கேட்டான், தணிகைவேலன்.

சரசு பொய் சொல்வாளா?

''ஆம். சொன்னார்கள்! அதற்காக என்ன? ஊரிலிருக்கும் வெட்டிக் கழுதைகள் ஆயிரம் பேசும். அதைப் பற்றி நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள். நான்தான் உங்களுக்கு, நீங்கள்தான் எனக்கு'' என்று தீர்மானமாகப் பதில் சொன்னாள்.

''அவர்கள் சொல்வது உண்மைதான் சரசு. எனக்கு உடம்பெங்கும் ஏதோ தேமல் மாதிரி இருக்கிறது. என் அப்பாவும் யார் யாரோ வைத்தியரிடமெல்லாம் காட்டினார். அதிலெல்லாம் பலனில்லை. கோவில் குளங்களுக்குச் சென்று வந்ததிலேதான் கொஞ்சம் நன்மை உண்டாயிற்று. இப்போது ஒன்றும் அதிகமில்லை'' என்று அவளுக்கு ஆறுதல் சொல்வது போலப் பேசினான் தணிகைவேலன்.

''இருந்தால்தான் என்ன, நான் வருத்தப்படப் போகிறனோ...? பாண்டு மகாராஜாவை மணந்த குந்தி தேவி பாரதத்தின் தலைநாயகியாகவில்லையா? நோய், கல்யாணத்துக்கு முன்பும் வரலாம்; பின்பும் வரலாம். வீணாக மனதைப் போட்டு அலட்டிக் கொள்ளாதீர்கள்'' என்றாள் சரசு.



தனக்குக் கிடைத்த பத்தினியின் பெருமையை எண்ணிய போது தணிகைவேலன் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

அதற்கு மேல் சரசு அந்த ஊரில் வாழ விரும்பவில்லை.

பாமா தன் கணவனையும் தன்னோடு வைத்துக் கொண்டதுபோல அவளும் வைத்துக் கொள்ள விரும்பவில்லை.

'மாப்பிள்ளையைக் கூட்டி மாமியார் வீட்டோடு வைத்துக் கொண்டுவிட்டாள்' என்ற கெட்ட பெயரை தன் தாயாருக்கு உண்டாக்க விரும்பவில்லை.

' வழக்கம்போல் பெண்ணழைக்கச் சொன்னாள்.

ஆரத்தி எடுத்து குங்குமமிட்டு அம்மா அப்பா வழியனுப்ப, பாமா கண் கலங்க, விநாயகர் கோவிலில் ஒருமுறை விழுந்து எழுந்து மேலைக்குடியிருப்புக்குப் புறப் பட்டாள் சரசு.

மூத்த மகள் என்றால் தாய்ப்பாசம் பீரிட்டுக் கொண்டு வருமே! ''அம்மா! வாரம் ஒருமுறை வந்து விட்டுப்போ'' என்று கண் கலங்கினாள் தாயார்.

''எப்படியம்மா? முக்கியமான அலுவல்களுக்கெல்லாம் வந்து விடுகிறேன்'' என்று கூறி விடைபெற்றுக் கொண்டாள் சரசு.

மேலைக்குடியிருப்பு சிறிய கிராமம்தான். ஆனால் எப்போதும் கலகலப்பாக இருக்கும்.

பிரெஞ்சுக்காரர்கள் திட்டமிட்டு உருவாக்கிய புதுச்சேரியைப் போல தெருக்களெல்லாம் நூல் பிடித்த மாதிரி ஒழுங்காக அமைந்திருக்கும்.

கடைத் தெருவிலுள்ள அத்தனை கடைகளும் பணக்கார நிலப்பிரபுக்கள் கட்டி விட்ட கடைகளாதலால் பட்டணத்துக் கடைகள் போலிருக்கும்.

சுற்றிலும் புஞ்சைக் காடுகள்தான். கிணற்றுப் பாசனம் தான்! ஆனால் மோட்டார் பம்பு செட்டுகளால் அவை முப்போகம் தந்து கொண்டிருந்தன.

வேர்க்கடலைப் பயிர் அதிகமாதலால் பணப் புழக்கமும் அதிகம்.

அரசாங்கத்தின் தயவால் ஆறாவது மைலில் ஒரு சர்க்கரை ஆலை வந்ததிலிருந்து, ஓரளவு இருந்த நஞ்சைகளிலெல்லாம் கரும்பு பயிரிடப்பட்டு நல்ல மகசூலைத் தந்து கொண்டிருந்தது.

சரகவின் மாமனாருக்கு அங்கேயும் நிலபுலன்கள் இருந்தன.

தமிழ்நாட்டில் சில வழக்குச் சொற்கள் உண்டு.

யாரும் யாரையாவது கேட்கும்போது, ''நிலம் பலம் உண்டா! நகை பகை போடுவார்களா?'' என்று கேட்பார்கள்.

நிலம், பலமாம்; நகை, பகையாம்!

அப்படி ஒரு நிலம் ஊரை ஒட்டி.

அது சரகவின் கணவன் தணிகைவேலன் பேரிலிருந்தது.

பாரதி கற்பனை செய்தானே காணி நிலம்; அதற்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல அது.

அங்கே பாட்டுக் கலந்திட அந்தப் பத்தினிப் பெண் விரும்பினாள்.

தங்கள் கூட்டுக் களிப்பினிலே கவிதைகள் கொண்டு தர தணிகைவேலன் விரும்பினான்.

சரகவின் மாமியார் உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டார்.



சின்னஞ்சிறுசுகள், தன்னந் தனிமையை விரும்புகின்றன; போகட்டுமே!

''ஒரு விஷயம் சரக, அந்த வீட்டிலே நீண்ட காலமாக ஒரு அம்மையார் குடி இருக்கிறார். பாவம்! அவருக்கு வாய் பேசவராது. அதையொட்டியுள்ள சிறிய வீட்டுக்கு அவர்களை மாற்றிவிடுகிறேன். உங்களுக்கு அவர் ரொம்ப ஒத்தாசையாக இருப்பார்'' என்றார் மாமியார்.

''ஏன்? எங்களுடனேயே இருக்கட்டுமே'' என்றாள் சரக.

''இல்லை, அவர்கள் தனியாகவே இருக்கட்டும்'' என்றான் தணிகைவேலன்.

கணவனின் காதல் வேகம், சரகவின் மனதில் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்திற்று.

அந்த வீட்டிலிருந்த கேழ்வரகு மூட்டைகளும் மணிலாக் கொட்டை மூட்டைகளும் இடம் மாற்றப் பட்டன. வீடு சுத்தப்படுத்தப்பட்டது. தேவையான சோபாக்கள், தட்டுமுட்டுச் சாமான்கள் கொண்டு வரப்பட்டன.

அந்த ஒரு வாரம் மட்டும் மாமியாரோடு தங்கியிருந்தார்கள் தணிகைவேலனும், சரகவும்.

மூலக்குடி மக்களைவிட, மேலைக்குடிஇருப்பு மக்கள் நல்லவர்கள் போலிருக்கிறது.

சரக பிள்ளையார் கோவிலுக்குப் போகும் போதெல்லாம் ஒவ்வொருவரும் கையெடுத்துக் கும்பிட்டார்கள்.

அவளுக்கும் மேலைக்குடிஇருப்பு மிகவும் பிடித்து விட்டது.

மொட்டை மாடியில் ஜிலுஜிலுவென்று சிறந்த காற்று வீசும். சரகவும் தணிகைவேலனும் அங்கேதான் பள்ளி கொள்வார்கள்.

பக்கத்தில் அதிகம் வீடுகள் இல்லை.

தணிகைவேலன் தனது இரண்டாவது இரவில் சரசுவை மெல்ல அருகணைத்து, ஒரு டார்ச் லைட்டைப் போட்டு தன் வலது தொடையைக் காட்டினான். அதில் லேசான வெள்ளைத் திறல்கள் இருந்தன.

"தூ! இவ்வளவுதானா? இது அழகுத் தேமல்!" என்று கூறிவிட்டாள் சரசு.

'ஊரிலே எந்த டாக்டரும் அப்படிச்சொல்லவில்லையே! மனைவி, மனைவிதான்' என்று மயங்கினான் தணிகைவேலன்.

மெதுவாக, நீண்ட நாளைய கிராமபோன் ஒன்றை அவன் போட்டான்.

'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்று ஒரு பாட்டு.

"அது மட்டும்தானா! கணவன் அமைவதெல்லாம் கடவுள் கொடுத்த வரம்" என்றான் தணிகைவேலன்.

"எனக்குக் கடவுள் நல்ல வரம்தான் கொடுத்திருக்கிறார். ஆனால் குழந்தை அமைவதெல்லாம் குமரன் கொடுத்த வரம்" என்றாள் சரசு.

"நமக்குக் குழந்தை வேண்டுமா சரசு?" என்று கேட்டான் தணிகைவேலன்.

"ஏனப்படிக் கேட்கிறீர்கள்?" என்று கேட்டாள் சரசு.

"இந்த மாதிரி நோயுள்ளவர்களுக்கு குழந்தை பிறந்தால்..." என்று அவன் இழுத்தபோது, அவன் வாயை மூடி, "எந்த நோயுமே வாரிசு பரம்பரையாக வருவதில்லை" என்று முடித்தாள், சரசு.

பள்ளியில் கொஞ்சம்கூட அருவருப்பில்லாமல் அவள் தன்னோடு கலந்து கொண்டதை எண்ணி எண்ணி ஒரு பக்திப் பரவசமே அவனுள் எழுந்து விட்டது.

புதிய வாழ்க்கையை ஆனந்தமாக மேற்கொண்ட சரசு, தனிக்குடித்தனம் போய் கணவனுக்குச் சமைத்துப் போடும் நாளையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.



அந்த ஏழு நாட்களில் அவள் சமைத்த சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டு, தானே ஒரு சுற்றுப் பெருத்துவிட்டதாகவும், மகனுக்குக் கொஞ்சம் அளந்து போடும்படியும் மாமியார் கூறினார்.

"காய்கறிச் சாப்பாட்டில் உடம்பில் சதை போட்டாலும், அது ஊளைச் சதையாக இருக்காது அத்தை! மாமிசம் சாப்பிடுகிறவர்கள்தான் மூச்சு வாங்க நடக்கிறார்கள். மாமிசம் சாப்பிடும் பிராணிகளுக்குத்தான் நாக்கு வெளியே தொங்குகிறது. நான் அவரைச் சுத்த சைவமாகவே வைத்திருக்கப்போகிறேன்!" என்று சொல்லிக் காரில் ஏறினாள் சரசு.

"காட்டேஜ் வரையிலே நானும் கொண்டுவந்து விட்டுவிடுகிறேன்" என்று கூடவே சென்றார் மாமியார்.

காய்த்துக் குலுங்கும் தென்னை மரங்களுக்கு நடுவிலே கார் சென்றதிலேயே பரவசமானாள் சரசு.

காட்டேஜுக்குள்ளே நுழைந்ததும், "ராஜேஸ்வரி!" என்று மாமியார் குரல் கொடுத்தார்.

கையிலே பூக்கூடையோடு எதிரே வந்து நின்ற அம்மையாரைப் பார்த்ததும், சரசு மறுபடியும் மூர்ச்சையடைந்தாள்.

## 12. கரஹரப்ரியா

"ஐயோ! இது என்ன மயக்கம்" என்றபடி சரசுவைத் தூக்க முயன்றார் மாமியார்.

"அவளை அப்படியே விட்டுவிடுங்கள். தானாகத் தெளிந்துவிடும்" என்றான், தணிகைவேலன்.

அவன் ஏன் அப்படிச் சொன்னான் என்று அவனுக்கே தெரியவில்லை.

சரசுவின் தலையைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டார் மாமியார்.

தணிகைவேலன் சொன்னதுபோலவே சரசு மயக்கம் தெளிந்து எழுந்தாள்.

அவள் கண்களுக்கெதிரே ஒரு நாகப்பாம்பு படம் எடுத்து ஆடுவது போலவும், சில சிங்கங்கள் உலாவுவது போன்றும் அவளுக்குத் தோன்றியது.

வாய் பேசாத அந்த அம்மையார், அசல் சாரதாம்பளாகவே காட்சியளித்தார்.

தான் போகுமிடமெங்கும் இப்படி ஒரு பிரமை சுற்றி சுற்றி வருவது குறித்து சரசுவுக்கே பயம் வந்துவிட்டது.

இதுவரையில் ஏதோ அர்த்தம் இருக்கவேண்டும் என்றெண்ணிய சரசு, ஏதோ அனர்த்தம் விளைவதற்குத்தான் இப்படி நடைபெறுகிறது என்று எண்ணத்தலைப்பட்டாள்.

அவளால் எதையும் நம்ப முடியவில்லை.

அது வரையில் பக்திக்குரியவளாக இருந்த சாரதாம்பாள், இப்போது பயத்துக்குரியவளாக அவள் கண்களுக்குத் தோன்றினாள்.

''வேண்டாம் அத்தை. நாம் அந்த வீட்டுக்கே போய்விடலாம்'' என்றாள் சரசு.

மாமியாருக்கும் அப்படித்தான் தோன்றிற்று.

''சரி, போகலாம்!'' என்று சொல்லி, வீடு வந்து சேர்ந்தார்கள்.

அன்றிரவு சரசு சற்று சித்தப்பிரமை பிடித்தவள் போலவே காணப்பட்டாள்.

எங்கேயோ ஒரு குழந்தை அழுவதுபோன்று ஒரு சப்தம் அவள் காதில் கேட்டுக்கொண்டே இருந்தது.



காலையில் எழுந்த சரசு பைத்தியக்காரியைப் போல விழித்தாள். யாரைக் கண்டாலும் பயந்தாள்; சிறிய சப்தம் கூட அவள் காதுக்குப் பெரிய சப்தமாகக் கேட்டது. யாராவது பக்கத்தில் வந்து பேசினால் நடுங்கினாள்

கணவன் அருகில் வரும்போது மட்டும் அமைதியாக இருந்தாள்.

'முதல் நாள் அவள் மூர்ச்சை அடைந்ததற்கும் இதற்கும் ஏதோ சம்பந்தம் இருக்க வேண்டும்' என்று மாமியார் நினைத்தார்.

ஆனால் இரண்டொரு நாட்கள் தொடர்ச்சியாக சரசு சித்தப்பிரமை பிடித்தவள் போல் இருக்கவே தணிகைவேலனுக்கும்அவன் தாயாருக்கும் சந்தேகம் வந்துவிட்டது.

''அவளை டாக்டரிடம் காட்டுவதுதான் தேவலை'' என்றான் தணிகைவேலன்.

கிராமங்களில் டாக்டர்கள் சாதாரணமாகத் தொழில் பண்ணுவதில்லையே! அவர்கள் நகரத்தைத்தானே நம்புகிறார்கள்? ஏதோ ஒரு சில டாக்டர்கள் பெரிய மனம் வைத்து கிராமங்களில் தொழில் நடத்துகிறார்கள். அவர்களிலும் சிலர் கைராசி இல்லாதவர்களாகவோ, திறமையில்லாதவர்களாகவோ இருக்கிறார்கள்.

ஆனால் மேலைக்குடியிருப்பில் இருந்த டாக்டர் ஜகன்னாதன் கைராசிக்காரர், திறமைசாலி, மனோதத்துவ நிபுணரும் கூட. நகரத்தில் தொழில் நடத்தினால் லட்சக் கணக்கில் சம்பாதிக்கலாம். ஆனால், பெரியவர்கள் கேட்டுக் கொண்டார்கள் என்பதற்காக வருமானத்தை தியாகம் செய்து கிராமத்திற்கு வந்திருந்தார்.

அவர் எவ்வளவோ முயன்றும் கூட, சரசுவின் நோய் என்ன என்பது தெரியவில்லை.

அது உண்மையில் நோயாக இருந்தால்தானே மருத்துவர்கள் கண்டுபிடிக்க?

''இது ஒருவகை அதிர்ச்சி'' என்று மட்டும் சொன்னார் டாக்டர்.

''என்ன அதிர்ச்சியாக இருக்க முடியும்?''

டாக்டரிடம் மெதுவாகக் கோபித்துக் கொண்டார், சரசுவின் மாமியார்.

''நான் உங்களிடம் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுவிட்டேன் டாக்டர். தணிகைவேலனுக்கும் அந்த நோயை உங்களால் குணப்படுத்த முடியவில்லை. அதுதான் அவனுக்கு அதிர்ச்சியாக இருக்கும்!'' என்றார்.

''அம்மா! உங்கள் மகனுக்கு ரத்தமே கெட்டிருக்கிறது. அந்த நோயைக் குணப்படுத்துவது மிகவும் கடினம். அது மட்டுமல்ல. இந்த ரத்தத்தில் குழந்தை பிறந்தால், அது அங்கவீனமாகவும் இருக்கும். நீங்கள்தான் அவசரப்பட்டு விட்டீர்கள்'' என்று ரகசியமாகச் சொன்னார், டாக்டர்.

''ஏதோ அதது விதி எப்படி இருக்கிறதோ பார்ப்போம்!'' என்று கூறிவிட்டார் மாமியார்.

நமது அலோபதி டாக்டர்களில் பெரும்பாலோர் நோய் நாடி நோயின் முதல் நாடி சிகிச்சை செய்வதில்லை. அவர்களே ஒரு விதி வைத்திருக்கிறார்கள், 'வாந்தி வந்தால் இந்த மாத்திரை; பேதி ஆனால் இந்த மாத்திரை' என்று எத்தகைய வாந்தி, எத்தகைய பேதி என்றுகூடச் சிந்திப்பதில்லை. தங்களால் ஒரு நோயைத் தீர்க்க முடியவில்லை என்றால், யாராலும் முடியாது என்றே முடிவு கட்டி விடுவார்கள்.

''வேடத்தூருக்குக் கொண்டு போய் வேப்பிலை ரெங்கம்மாவிடம் காட்டுங்களேன்!'' என்றாள் பக்கத்து வீட்டுக் கோமளவல்லி.



''அதுவும் சரிதான். அவள் மத்து பிடித்துக் குறி சொன்னால், என்ன நோய் என்பதாவது தெரிந்துவிடும்'' என்று ஒப்புக் கொண்டார் மாமியார்.

வேடத்தூர் ரெங்கம்மா ஒரு 'கைநாட்டுத்'தான். ஆனாலும், ஏதோ வரம் பெற்றவளாம்.

தயிர் கடையும் மத்தை இடது உள்ளங்கையில் நிற்க வைத்துக் கொண்டு பாட்டுப் பாடுவாளாம். மத்து சுற்றிக் கொண்டே இருக்குமாம்!

அந்தப் பாட்டிலேதான் எதிரே இருப்பவரின் விஷயம் முழுக்க வந்துவிடுமாம்!

சரசு பிரக்ஞை இல்லாமலேயே மாமியார் இழுத்த இழுப்புக்குச் சென்றாள்.

வேடத்தூர் ரெங்கம்மா வேப்பிலை, அடித்துப் பாட்டுப் பாடினாள். அவள் சொன்ன விஷயங்களெல்லாம் தணிகை வேலனுக்கும், அவன் தாயாருக்கும் அதிசயங்களாகவே இருந்தன.

சரசுவுக்கு இது ஏழாவது பிறவியாம். முதல் ஆறு பிறப்பிலும் அவள் எங்கெங்கே பிறந்தாள் என்பதை இன்னும் கொஞ்ச நாளில் அவளே சொல்வாளாம்!

அந்தத் தோற்றம் அவள் மனத்துக்கு வந்ததும் அவள் கணீரென்று பேசத் தொடங்குவாளாம்!

அவள் தன்னை அழைத்துப் போகச் சொல்லும் ஊருக்கெல்லாம் அழைத்துப் போகவேண்டுமாம்!

'ஏதோ அவள் கதையளக்கிறாள்' என்று எண்ணிய படி, சரசுவை அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார்கள் தணிகைவேலனும் தாயாரும்.

வேப்பிலை ரெங்கம்மாள் நாக்கு அம்மன் நாக்காயிற்றே! சொன்னது தப்புமா?

நான்கு நாட்கள் பிரக்ஞையற்ற நிலையில் இருந்த சரசு, ஐந்தாவது நாள் திடீரென்று அதிகாலையில் எழுந்தாள்; குளித்தாள்; புதுப் பட்டுச் சேலை கட்டிக் கொண்டாள். பொட்டு வைத்துக்கொண்டாள். 'அத்தை! அத்தை!' என்று மாமியாரைத் தேடி அடுப்பங்கரைக்கு வந்துவிட்டாள்.

''என்னம்மா?'' என்று பரிவோடு கேட்டார், மாமியார்.

''நாம் எல்லோரும் சமயபுரம் போக வேண்டும் அத்தை'' என்றாள் சரசு.

உடனே மாமியாருக்கு வேப்பிலை ரெங்கம்மா ஞாபகம்தான் வந்தது.

அன்றைக்கே அவள் சொன்னாளே, 'பல ஊர்களுக்குப் போக சரசு விரும்புவாள்' என்று.

வாடகைக்கு ஒரு கார் எடுத்துக்கொண்டு, சமயபுரம் நோக்கிப் புறப்பட்டார்கள்.

வழியில் சரசு மிகவும் கலகலப்பாக இருந்தாள். இப்படி அவளிருந்து ஐந்தாறு நாட்களுக்கு மேல் ஆகி விட்டதே!

''அத்தை! உங்களுக்குத் தெரியாதே! முன்பு சமயபுரத்துக்கு காவிரித் தண்ணீர் செங்கற்கட்டுக் கால்வாய் மூலமாக கோவில் மூலஸ்தானம் வரை வரும். அதை எடுத்தெடுத்துத்தான் தேவிக்குப் பூஜை செய்வார்கள். கோவில் வாசலில் 'மகமாயி அடிமை' என்று ஒருத்தி இருந்தாள். பரட்டைத் தலை, பெரிய பற்கள். ஒரு வராகனெடை குங்குமத்தை நெற்றி முழுவதிலும் பூசிக் கொள்வாள். கையில் ஒரு மூங்கில் குழாய் வைத்திருப்பாள். பெண்களின் இடது கையைப் பிடித்துக் குறி சொன்னால் தப்பவே தப்பாது'' என்றாள் சரசு.

''இதெல்லாம் எப்போது....?'' என்று பயத்தோடு கேட்டார், மாமியார்.

''மூந்தி, ரொம்ப மூந்தி!'' என்றாள் சரசு.



கோவிலுக்கு அருகே போனதும், ''பாருங்களேன். எவ்வளவு பக்தி சிரத்தையோடு இதைக் கட்டினார்கள்? இந்தப் பைத்தியக்காரர்கள் சரியாகப் பாதுகாக்காமல் செங்கலெல்லாம் வெளியே தெரிகிறதே....?'' என்றாள்.

தாயாரும், தணிகை வேலனும் ஏதோ ஒரு புராதனக் கலைக்கூட வழிகாட்டியிடம் விளக்கம் கேட்பதுபோல் கேட்டுக் கொண்டு மரியாதையாக அவளைப் பின் தொடர்ந்தார்கள்.

''அடடே! மூலஸ்தானத்தை ரொம்ப மாற்றிவிட்டார்களே!'' என்று வருத்தப்பட்டுக் கொண்டாள், சரசு.

''ஐயையோ...வேப்பிலை இல்லாமல் வந்து விட்டோமே'' என்று அத்தையைப் பார்த்தாள்.

அவள் பேச்சையும், நடையுடை பாவனையையும் பார்க்கப் பார்க்க, ஏதோ ஒரு பைத்தியக்காரியைப் பின் தொடர்ந்து வந்துவிட்டோமோ என்றுகூட மாமியாருக்கும் தணிகைவேலனுக்கும் தோன்றிற்று.

கோவிலில் சில பெண்களைப் பார்த்த சரசு, பல கேள்விகள் கேட்கத் தொடங்கிவிட்டாள்.

''என்னடி, சௌக்கியமா உன் புருஷன் வடதேசம் போயிருந்தானே; வந்திட்டானா!'' என்றாள் ஒருத்தியிடம்.

அவளோ, ''சீச்சீ! யார் நீ?'' என்று சொல்லிக் கொண்டே போய்விட்டாள்.

''என்னடி முப்பது வயசுவரை ருதுவாகாமல் இருந்தியே ருதுவாகிவிட்டியா...?'' என்று கேட்டாள், இன்னொரு பெண்ணிடம்.

''சீ! பைத்தியம்! எனக்கு வயதே இருபத்தைந்துதான் ஆகிறது!'' என்று சொல்லிக் கொண்டே போய்விட்டாள், அந்தப் பெண்.

ஒவ்வொருவரிடமும் அவள் நடந்துகொண்ட பாவனையில் எல்லோருமே அவளைப் பைத்தியம் என்று கல்லால் அடிப்பார்களோ என்று பயந்துவிட்டார் மாமியார்.

''சரி பரவாயில்லே அத்தை, வாருங்கள் எல்லோரும் நம்ம வீட்டுக்குச் சாப்பிடப் போவோம்'' என்றாள், சரசு.

''நம்ம வீடா..? அது எங்கே இருக்கிறது?'' என்று கேட்டார் மாமியார்.

''தெரியாதா உங்களுக்கு? ஸ்ரீரங்கத்தில்'' என்றாள், சரசு.

## 13. ரஞ்சனி

கார் ஸ்ரீரங்கத்திற்குத் திருப்பி விடப்பட்டது. வேப்பிலை ரெங்கம்மாவின் வார்த்தைகள் காதிலே ஒலித்ததால் சரசு இழுத்த இழுப்பிற்கெல்லாம் அவர்கள் செல்ல வேண்டியவர்களானார்கள்.

சமயபுரத்திலிருந்து ஸ்ரீரங்கம் போகும் வரை, சரசு எதை எதையோ பேசிக் கொண்டு வந்தாள்.

நவீன உலகத்துக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களை அவள் பேசிக்கொண்டு வருவதையே மாமியாரும், தணிகைவேலனும் கவனித்தார்கள்.

திருச்சி எல்லையோரத்தில் முச்சந்தியில் ஒரு நடன மேடை இருந்ததாம். அதை இப்போது காணோமாம். காவிரியில் குளிப்பவர்களின் வசதிக்காக கரையோரத்தில் ஒரு மண்டபத்தை அப்போதுதான் கட்டினார்களாம்.

காவிரியில் வெள்ளம் வரும்போது, மூங்கில் பாலத்தில் நடந்து செல்வதே குஷியாக இருக்குமாம்.

அவள் சொல்வதை யெல்லாம் பிரக்ஞையற்றவர்கள் உபதேசம் கேட்பது போல் கேட்டுக்கொண்டு சென்றார்கள் மாமியாரும், தணிகைவேலனும்.



கார் ஸ்ரீரங்கத்திற்குள் புகுந்தது. அவளே காருக்கு வழி சொன்னாள். ஆனால் ஊரின் வடக்குப் புறத்தில் காவிரியை ஒட்டிய ஒரு வாழைத் தோட்டத்தையே அவள் சுட்டிக் காட்டினாள்.

அது குடியிருப்புப் பகுதியாக அவர்களுக்குத் தோன்றவில்லை. ஏராளமான வாழை மரங்கள். ஒரு பக்கம் கரும்பு. நடுவிலே, திட்டுப் போன்ற ஒரு பகுதி. அங்கே தென்னை மரங்கள். மரங்களுக்கு நடுவிலே ஒரு பாழடைந்த வீடு.

அந்த வீட்டில் ஜன்னல் இருந்ததற்கு அடையாளமிருந்ததே தவிர ஜன்னல் இல்லை. கதவுகளும் பெயர்க்கப்பட்டிருந்தன. முன்புறத்து மாட்டுக் கொட்டகையில் மட்டும் நான்கைந்து மாடுகள் கட்டப்பட்டிருந்தன. யாரோ ஒரு வேலையாள் அவற்றிற்கு வைக்கோல் போட்டுக் கொண்டிருந்தானே தவிர வேறு ஆள் நடமாட்டமில்லை.

பிரதானச் சாலையில் இருந்து தோப்புக்குள் போவதற்கு ஒரு வண்டிப்பாதை மட்டும் இருந்தது.

காரின் கீழ்ப்பகுதி இடிக்கும் என்று சொல்லி, டிரைவர் மெயின் ரோட்டிலேயே காரை நிறுத்தி விட்டார்.

சரசு மிகப் பழக்கமானவள் போல் கீழே இறங்கி மாமியாரையும், தணிகைவேலனையும் அழைத்துக்கொண்டு உரிமையோடு தோப்புக்குள் நடந்து வீட்டையடைந்தாள்.

வேலைக்காரன், ''யார் நீங்கள்?'' என்று கேட்டான்.

''என்னையா கேட்கிறாய்....?'' என்று கேட்டபடி வீட்டிற்குள் நுழைந்தாள் சரசு.

பாழடைந்த நிலையில், சுவரின் காரை உதிர்ந்து விட்ட நிலையில், மூலைக்கு மூலை சிலந்திகள் வலை பின்னிய நிலையில் அந்த வீட்டைப் பார்த்ததும், சரசுவுக்கு அழுகை வந்து விட்டது.

ஆனால் மாமியாருக்கும், தணிகைவேலனுக்கும் சிரிப்புத்தான் வந்து கொண்டிருந்தது.

யார ரகசியங்களில் சம்பந்தப்பட்டவர்களோ, அவர்கள்தானே அழுவார்கள். மற்றவர்கள் சிரிக்கத்தானே செய்வார்கள்?

சரசு பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு முந்திப் போய் விட்டாள்.

உறையூரைத் தலைநகராகக் கொண்டு சோழர்கள் ஆண்ட காலம், சரசுவின் கண் முன்னால் வந்தது.

அந்த நாளில்—

ஸ்ரீரங்கத்தில் ஒரு தேவதாசி குடும்பம். அதிலே பிரபல மான நர்த்தகி சிங்காரவடிவு. அரண்மனை நர்த்தகியே அவள்தான்.

சோழ நாடு முழுவதிலேயும் பேரழகி எனப் புகழப் பட்டவள், சிங்கார வடிவு. அந்த அழகைக் கொண்டு அவள் ஸ்ரீரங்கத்திலும், உறையூரிலும் வாங்கியிருந்தது முப்பது வேலி நிலமும், இரண்டு மாளிகைகளும்.

ஸ்ரீரங்கத்தில் இருந்த பத்து வேலி நிலத்தில் ஒரு கட்டிடம் எழுப்பி இருந்தாள் சிங்காரவடிவு.

பெரும் தனக்காரர்கள் வண்டி கட்டிக்கொண்டு அங்கேதான் அவளைச் சந்திக்க வருவார்கள்.

போட்டி போட்டுக்கொண்டு வண்டிகள் காத்திருக்கும்.

சிங்கார வடிவு பேரம் பேசிப் பழக்கப்பட்டவளல்ல.

அவளோடு அவளது இரண்டு சகோதரிகளும் இருந்ததால், வருகிற பெரும் தனக்காரர்கள் எல்லோரையும் உட்கார வைத்து பெரிய திருமண விருந்தே சமைத்து விடுவாள்.

இரண்டு சமையல்காரர்கள், மூன்று வேலைக்காரிகள். ஆறு வேலைக்காரர்கள் அவள் வீட்டிலிருந்தார்கள்.



வேலைக்காரர்கள் அடிமைகள் போல் நடக்கும் காலமானதால், சிங்கார வடிவின் முன்னால் விவசாயிகளும் கூடக் கைகட்டி நின்றார்கள். கிட்டத்தட்ட ஒரு மகாராணியாகவே அவள் வாழ்ந்தாள்.

கவிவாணர்கள், கலைச் செல்வர்கள் பலர் அங்கே வருவார்கள். ஆள் பார்த்து, இனம் பார்த்து அவள் நடந்து கொள்வாள்.

அவளது அண்ணன்தான் சோழநாட்டில் நாதஸ்வரத்தில் நல்ல கலைஞர் என்று பெயர் வாங்கியவர்.

ஆடம்பரமாகவும் அதே நேரத்தில் அடக்கத்தோடும் வாழ்ந்த சிங்கார வடிவு தனக்கு ஒரு பெண் குழந்தை வேண்டும் என்று பிரார்த்தித்தாள்.

தேவதாசிகளின் பழக்கப்படி ஒரு குறிப்பிட்ட நாளில் வேறு யாருக்கும் இணங்காமல், தான் விரும்புகின்ற அழகான ஒருவரை வரவழைத்து உடலுறவு கொள்ள அவள் விரும்பினாள்.

தஞ்சையைச் சேர்ந்த தனிநாயகம் அவன் மனதைக் கவர்ந்தவன்.

தாசியை விரும்புகிறவர்கள் ஆயிரம் பேர் இருந்தாலும் அவள் நேசிக்கின்ற காதலன் ஒருவன் இருப்பான். அந்தக் காதலனே தனிநாயகம்.

அந்தத் தனிநாயகத்துக்கு அவள் செய்தி அனுப்பி அன்றையப் பொழுதை அவள் ஆனந்தமாகக் கழித்தாள்.

திட்டமிட்டுக் கர்ப்பமடையும் திறமை தேவதாசிகளுக்கு உண்டு. அது ஒரு பரம்பரைப் பயிற்சி. எந்த நாளில் கூடினால் கர்ப்பமடையும் என்று அவர்களுக்குத் தெரியும். சில விவரம் தெரியாத தாசிகளைத் தவிர மற்ற எல்லோருமே குழந்தை அழகாகப் பிறப்பதற்கு என்ன

செய்ய வேண்டும், எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை நன்கு கற்று வைத்திருந்தார்கள்.

சிங்கார வடிவு அந்தக் கலையில் கைதேர்ந்தவள். அது பற்றி மற்றவர்களுக்கு உபதேசிப்பதற்கேகூடப் போதுமான அறிவு அவளுக்கிருந்தது.

அவள் விரும்பியது போலவே கருவுற்றாள். கருவுற்ற காலத்திலிருந்து பிரசவ காலம் வரையிலே தனிநாயகத்தைத் தவிர வேறு ஒருவரோடும் அவள் உறவு வைத்துக் கொள்ளவில்லை.

அதன் விளைவாக அவள் ஈன்றெடுத்த செல்வம்தான் அபரஞ்சி.

'தாசி வீட்டில் பெண்பிள்ளை பிறந்தால் திருவிழாக் கொண்டாட்டம்; ஆண்பிள்ளை பிறந்தால் துக்கம்' என்பார்கள். அதை நிரூபிப்பது போல் அபரஞ்சியின் பிறப்பைப் பெரிதாகவே கொண்டாடினாள் சிங்காரவடிவு.

தங்களுக்கே ஒரு குழந்தை பிறந்திருப்பதுபோல், ஏராளமான பெருந்தனக்காரர்கள் அந்த வைபோகத்திற்கு வந்திருந்தார்கள்.

மன்னவர் அரண்மனையில் இருந்து பட்டாடைகளும், முத்து மாலைகளும் அனுப்பி இருந்தார்.

ஐம்பெரும் குழுவும் எண்பேராயமும் தங்கள் மகிழ்ச்சியைக் குறிக்க மரியாதைகள் அனுப்பி இருந்தார்கள்.

சோழ நாட்டில் தேவதாசி முறை மிக அதிகமாக இருந்த காலம். ஆகவே நூற்றுக்கணக்கான தேவதாசிகள் அந்த வைபோகத்திற்கு வந்தார்கள். அவர்களிலே நல்ல ஜோடியாகத் தேர்ந்தெடுக்கலாம் என்று ஏராளமான பேர் வந்திருந்தார்கள்.

அரண்மனை விழாவுக்கு அடுத்தபடி இதுதான் விழா என்று சொல்லும்படி அந்த வைபோகம் அமைந்திருந்தது.



அபரஞ்சி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் என்பார்களே, அப்படி வளர்ந்தாள்.

தாசிக்குக் கல்வியே நாட்டியம்தானே! பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும் பழக்கம் இல்லையே?

அவள் ஐந்து வயதிலிருந்தே நாட்டியம் கற்றுக் கொள்ளத்தொடங்கினாளே தவிர, அந்நாளைய வழக்கம் போல் பள்ளிக்குச் செல்லவில்லை.

'ஆளாக வளரும்போது மகள் அழகாக வருவாள். ஆயிரக்கணக்கான வாலிபர்களை வட்டமிட வைப்பாள். சோழநாட்டுப் பொன்னும் பொருளும் தன் வீட்டிலே குவியும்' என்று ஆசையோடு அபரஞ்சியை வளர்த்தாள் சிங்காரவடிவு.

சொத்து ஏராளமாகச் சேர்ந்துவிட்டதால், அபரஞ்சிக்குப் பிறகு இன்னொரு குழந்தை வேண்டும் என்று தனிநாயகத்தோடு உறவு கொண்டு மற்றும் ஒரு பெண் குழந்தையை ஈன்றெடுத்தாள் சிங்காரவடிவு.

அவளுக்கு மல்லிகை என்று பெயரிட்டு வளர்த்தாள்.

காலங்கள் ஓடின. அபரஞ்சி பருவமகளானாள்.

சிங்கார வடிவுக்காக ஏங்கியவர்களெல்லாம் இப்போது அபரஞ்சிக்காக ஏங்கினார்கள்.

ஸ்ரீரங்கம் சந்நிதியில் அபரஞ்சியின் அரங்கேற்றம்.

சோழ நாட்டிலேயே முதன் முதலாக நாதஸ்வரத்தில் ராகம் வாசித்து அதற்கு நாட்டியம் ஆடியவள் அபரஞ்சி தான்.

தேவதாசி முறை இருந்த காலத்தில் ஒரு பழக்கம் உண்டு. ஒருத்தி ருதுவானதும் அவளைச் சாந்தி முகூர்த்தம் செய்வதற்குப் பல பேர் போட்டியிடுவார்கள். ஆயிரம்

வராகன், இரண்டாயிரம் வராகன் என்று அதற்கான தொகை உயர்ந்துகொண்டே போகும்.

ஸ்ரீரங்கம் கோவிலிலேயே அந்த பேரம் ஆரம்பமாகி விட்டது.

பல்லாயிரம் வராகன் கொடுப்பதற்கே பல பேர் தயாராக இருந்தார்கள்.

தாங்களே கட்டில் வாங்கிப் போடவும், திருமணத் திற்குத் தருவது போல் சீர்வரிசை தரவும் பலபேர் தயாராக இருந்தார்கள்.

ஒருமாத காலம் கூடவே இருப்பதற்குச் சில பேர் குத் தகை பேசினார்கள்.

பொன்னிலும் பொருளிலும் மிதந்த சிங்காரவடிவுக்கு எல்லாமே சாதாரணமாகத் தோன்றிற்று.

ஒவ்வொருவரையாகத் தட்டிக் கழித்துக் கடைசியில் உறையூரைச் சேர்ந்த ஒரு பெரும் வணிகருக்கு ஒப்புக் கொண்டாள் சிங்கார வடிவு.

''பௌர்ணமி அன்று சாந்தி முகூர்த்தம்'' என்று முடிவு செய்யப்பட்டது. அந்தப் பௌர்ணமியும் வந்தது.

## 14. சுபபந்துவராளி

உறையூர் வணிகன் நவகோடி ஒரு நவமணி வணிகன்.

அவன் தேர்ந்தெடுக்கும் முத்துக்கள் அற்புதமாக இருக்கும் என்பது உறையூர் மக்களின் பொதுக் கருத்து.

முத்துக்களைத் தேர்ந்தெடுப்பவனுக்கு மோகனப் புன்னகையைத் தேர்ந்தெடுக்கத் தெரியாதா?



நூற்றுக்கணக்கான பெருந்தனக்காரர்களுக்கிடையே அபரஞ்சி அவனுக்குக் கிடைத்ததே அவனது நிறமைக்குச் சான்று.

அத்தனை பேரிலும் அவன் கிடைத்தது, அபரஞ்சியின் அதிர்ஷ்டத்துக்குச் சான்று.

ஆம்! நவகோடி பேரழகன்.

கட்டான அவனது மேனி, காண்போரை மயங்க வைக்கும்.

ஒரு போர்வீரனின் உடற்கட்டும், ஒரு கலைஞனின் நளினமும் அவனிடம் குடிகொண்டிருந்தன.

ஆறுயிரம் வராகனை அளந்து வைத்துவிட்டுத்தான் அவனும் சிங்காரவடிவின் படிக்கட்டை மிதிக்க வேண்டி யிருந்தது.

அருமை மருமகனை ஆரத்தி எடுத்து வரவேற்றாள் சிங்கார வடிவு.

புது மணப்பெண் போல் அலங்கரித்து, பள்ளி அறை யில் காத்திருந்தாள், அபரஞ்சி.

எதுவுமே சம்பிரதாயத்தை மீறவில்லை.

அந்நாளில், தாசி வீட்டுக்குப் போவது, ஒருவனது வசதியைக் குறிக்கும் என்று மரியாதை செலுத்துவார் கள்.

தாசிகளும் அத்தகைய மரியாதையுடனேயே வரவேற் பார்கள்.

அனைத்துக்கும் முத்திரை வைத்ததுபோல், கட்டின மனைவியின் கடமைகளையே தாசிகள் காட்டிக் கொள் வார்கள்.

அபரஞ்சிக்கு அவ்வளவு உபதேசித்து அல்லவா, சிங்கார வடிவு அனுப்பி இருந்தாள்?

நவகோடி உள்ளே நுழைந்ததும், அவனது பாதங் களைத் தொட்டு வணங்கினாள் அபரஞ்சி.

அந்த மரியாதையைக் காதல் கலந்த மரியாதையாக எடுத்துக்கொண்டு, அவளைக் கைத்தாங்கலாகத் தூக்கி நிறுத்தினான் நவகோடி.

அவள் கண்களில் இருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் வழிந்தது.

—அது ஒரு தாசியின் சாகஸமல்ல; அவளது உள்ளக் கிடக்கை.

வெளியே சொல்ல முடியாத வேதனை.

சூதுவான காலத்திலிருந்தே அபரஞ்சி ஒருவனோடு வாழும் உன்னத வாழ்க்கையைச் சிந்தித்திருந்தாள்.

பரம்பரை தாசிகளின் குணங்கள் அவளை அண்ட வில்லை; தன் தாயைப் போல வாழ அவள் விரும்ப வில்லை.

ஒரு குலமகளாக, குங்குமமும், பூவுமாக வாழ அவள் விரும்பினாள்.

—அது தாயிடம் வாதாடி நடக்கின்ற காரியமா?

தன்னிடம் வரும் முதல் ஆடவனை அதற்குப் பக்குவப் படுத்திவிட முடியாதா?

அடிக்கடி அவனையே வரும்படி செய்துவிட்டால், இந்த அவதி மறைந்து விடாதா?

பக்குவமான யோசனையை அந்தப் பருவப்பெண் செய்து வைத்திருந்தாள்.

முதல் முதலாக ஒரு ஆடவன் அவளைத் தொடு கிறான்.

அவளிடம் நாடகக் கணிகையின் நடிப்பு இல்லை. இயற்கையான உணர்ச்சிக் கூத்து இருந்தது.



நாலுவகைக் குணமும் நிறைந்திருந்தது.

பாதத்திலிருந்து முழங்கால் வரையிலும் அவன் தடவிக் கொடுத்த போது, அவளது ரோமக் கால்கள் சிலிர்த்து நின்றன.

அந்த ஆனந்த லாகிரிக்கிடையே குடும்ப வாழ்க்கை பற்றிப் பேரம் பேச அவள் தயங்கினாள்.

அவன் முத்தமிடும்போது, தானும் உணர்ச்சிப் பெருக் கைப் பரிமாறிக் கொண்டாள்.

எவ்வளவோ தாய் போதித்திருந்தும் அந்த சாகஸங் களை எல்லாம் அவள் காட்டிக் கொள்ளவில்லை.

எந்த அம்பிகையின் சக்தியோ, ஒரு குடும்பப் பெண்ணின் உணர்வுகளே அவள் உள்ளத்தில் மேலோங்கி நின்றன.

நவகோடி அதை ரசித்தான்.

மூதற்சாந்தி நிறைவேறியது. அபரஞ்சி, ஆடையை ஒழுங்குபடுத்திக்கொண்டு, தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டு திரும்பினாள்.

திரும்பி வந்து அவள் கட்டிலில் அமர்ந்ததும், அவன் அவளது அழகை வியந்து பேச ஆரம்பித்தான்,

இலக்கியத்தில் 'கலவி நயத்தல்' என்று ஒன்று வரும். அது ஆடவனது திறமையைத் தாசி புகழ்வதாகவே இருக்கும்.

ஆனால், இங்கே நிலைமை தலைகீழாகவே இருந்தது. எல்லாப் புகழ்ச்சியும் முடிந்த பிறகு, அபரஞ்சி மெது வாக ஆரம்பித்தாள்.

பெரும் பொருள் சேர்ப்பதில் தனக்கு விருப்பமில்லை என்பதை, முதலில் தெளிவுபடுத்தினாள்.

முடிந்தால் தான் ஒரு மாதவியாகவோ, வெறுப்புற்றால் மணிமேகலையாகவோ வாழ விரும்பியதாகவும், மாதவி வாழ்க்கைக்கே சந்தர்ப்பம் வாய்த்திருப்பதாகவும் அவள் கூறியது அவனுக்கும் புரிந்தது.

மாதவியின் காதலைப் பெற்ற, கோவலனும் ஒரு வணிகன் தானே?

முற்ற முழுக்க அவளையே தனது மனைவியாக ஏற்றுக் கொள்வதில், தனக்கு இருக்கும் பெரும் விருப்பத்தையும் அவன் தெளிவுபடுத்தினான்.

''பளிங்கு போன்ற இந்த உடம்பும், பால் போன்ற இந்த மனமும், எனக்குக் கிடைக்குமானால், நான் பல ஜென்மங்களில் அனுபவிக்க வேண்டிய சுகத்தை, இந்த ஒரு ஜென்மத்திலேயே அனுபவித்து விடுவேன்'' என்றான்.

''இந்த ஒரு ஜென்மத்தை நான் ஒழுங்காக ஈடேற்றி விட்டால், அடுத்த ஜென்மத்தில் உத்தமப் பெண்ணாகவே பிறப்பேன்'' என்றாள் அவள்.

அப்போதே உரிமை உணர்ச்சி வளரத் தொடங்கிற்று.

அவளை இறுகக் கட்டிப்பிடித்து, ஆரத் தழுவி, உச்சி முகந்தான் நவகோடி.

ஒரு மனைவியின் முனகலோடு ஈடுகொடுத்தாள், அவள்.

இருவரும் கூந்தலைக் கோதிவிட்டுக்கொண்ட சுகம், நீண்ட நாள் நேசித்த காதலர்கள் ஒன்று சேர்ந்தது போல் தோன்றிற்று.

அந்த இரவில் அவனுக்கு மீண்டும் மீண்டும் தாகம் எடுத்தது; அவளும் பால் பழம் கொடுத்தாள்.

உடம்பில் வலியும் அசதியும் ஏற்பட்டதைக்கூட அவள் பொருட்படுத்தவில்லை.

காலையில் அவனைக் குளிக்க வைத்தாள், தானும் குளித்தாள்,



இடைவெளியில்லாமல் அவன் வந்து போகவேண்டுமென்று, இருவருக்குள்ளும் முடிவாயிற்று.

சிங்காரவடிவுக்குத் தேவை பொன்னும் பொருளும் தானே? அதை ஒருவனே கொடுத்தால் என்ன; பலபேர் கொடுத்தாலென்ன?

அவன் பொன்னைக் கொடுத்தான்; அவள் பெண்ணைக் கொடுத்தாள்.

வணிகன் தொழிலைக் கவனிக்காமல் தாசி வீட்டிலேயே இருந்தால் வாணிபம் என்னவாகும்?

அங்காடியில் எல்லாக் கடைகளையும் விடத் தலை தூக்கி நின்ற நவகோடியின் கடை தேய ஆரம்பித்தது.

'அவனைப் பார்க்க முடியாது' என்போரும், 'வரவர அவனிடம் முத்துக்கள் சரியாக இல்லை' என்போரும் பெருகத் தலைப்பட்டார்கள்.

அவனிடம் வாங்கிக்கொண்டு போய் விற்போர்கூட வரவில்லை. அவனும் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

'ஒன்பது மணிகளையும் ஒன்றாக வைத்துப்பார்ப்பதை விட, அபரஞ்சியை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தால் போதும்' என்ற முடிவுக்கு அவன் வந்து விட்டான்.

அபரஞ்சியோ, 'அவன் வருவது எப்போது?' என்று எதிர்பார்த்தாளே தவிர, 'கொடுப்பது எவ்வளவு?' என்று கணக்குக் கேட்கவில்லை.

ஆனால், மகள் கேட்காமல் இருந்தாலும் தாய் கேட்காமல் இருப்பாளா?

''என்ன தம்பி! வரவர நீங்கள் தாம்பூலம் கொடுக்க ஆரம்பித்து விட்டீர்கள்?'' என்று ஒருநாள் கேட்டேவிட்டாள், சிங்கார வடிவு.

கள்ளங் கபடமற்ற நவகோடி கல்யாணமாகாதவன்.

''எனக்கு வேறு யார் இருக்கிறார்கள் அத்தை? வரவு வருமானம் குறைந்து விட்டது. அது தான்...'' என்று இழுத்தான்.

சிங்கார வடிவுக்குப் பரம்பரை தாசிகளின் குணம் வந்து விட்டது.

'எவ்வளவோ பெருந்தனக்காரர்கள் காத்துக் கிடக்கும் போது இன்னும் இந்த சனியனோடு மாரடிப்பானேன்?' என்று எண்ண ஆரம்பித்தாள்.

அது பற்றி அபரஞ்சியிடம் கூறவில்லை. நவகோடியிடமும் கூறவில்லை.

அது மார்கழி மாதம்.

மறுநாள் பகலில் சூரியன் உச்சியில் இருந்த போது, சந்தர்வ கோட்டை நிலக்கிழார் ஆளப்பிறந்தார் வண்டி கட்டிக்கொண்டு வந்திருந்தார். அவருக்குக் காவலாக இரண்டு குதிரை வீரர்கள் கூடப் பக்கம் வந்து கொண்டிருந்தார்கள்.

வருகின்ற ஆடவனின் வயதை எந்த தாசி கவனித்தாள்?

இரண்டாயிரம் வராகனை கையில் வாங்கிக்கொண்டு மாடத்துக்கு வழிகாட்டினாள் சிங்காரவடிவு.

அவரும் மாடத்திலே ஏறி அங்கிருந்த கூடத்திற்குள் நுழைந்து மஞ்சத்திலே அமர்ந்து பஞ்சவர்ணக்கிளியை எதிர்பார்த்தார்.

''வாருங்கள் தாத்தா! எப்போது வந்தீர்கள்?'' என்றபடி சிரித்துக்கொண்டே உள்ளே வந்தாள் அபரஞ்சி.

வேடிக்கை பேசினாள். வெற்றிலை கொடுத்தாள். ''இந்த இரண்டாயிரம் வராகனுக்கு எவ்வளவோ நிலம் வாங்கலாமே?'' என்றாள்.

''நிலம் என்னிடம் இருக்கிறது'' என்றார் பெரியவர்.



''அப்படியென்றால் மாடு வாங்கலாமே?'' என்றாள்.

கிழவர் சும்மாயிருப்பாரா! ''அது வாங்கத்தான் இங்கே வந்தேன்'' என்றார்.

''இதோ என் சின்னம்மா இருக்கிறாள். நல்ல கனமாக இருப்பாள். அழைத்து வரட்டுமா?'' என்றாள் அபரஞ்சி.

''சீ! சீ! பேசாமல் வா இங்கே'' என்று அவளது கையைப் பிடித்தார் நிலக்கிழார்.

''அது நடக்காது. அந்தச் சிதம்பரத்து நாயகனே வந்தாலும்கூட என் கணவரைத் தவிர வேறொருவர் என்னைத் தொட முடியாது'' என்று கூறிவிட்டாள் அபரஞ்சி.

ஆத்திரத்தோடு கீழே இறங்கினார் நிலக்கிழார்.

அள்ளி அள்ளி வைத்துப் பெட்டகத்தைப் பூட்டுவதில் ஈடுபட்டிருந்தாள் சிங்கார வடிவு.

பெரியவரைக் கண்டதும், ''என்ன அதற்குள் வந்து விட்டீர்கள்? எல்லாம் திருப்திதானே?'' என்றாள்.

''மரியாதையாக வராகனைக் கொடு. பெண்ணையா பெற்றிருக்கிறாய். பேய் அது. அவளுக்கு, யாரோ கணவன் இருக்கிறானாம். அவன்தான் தொடுவானாம். என்னை ஏமாற்றுவதற்கா வரச் சொன்னாய்?'' என்று சீறினார் பெரியவர்.

சிங்காரவடிவுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

நவகோடிக்கும், அபரஞ்சிக்கும் ஒரு இணைப்பு ஏற்பட்டிருந்தது அப்போதுதான் அவளுக்குப் புரிந்தது.

அபரஞ்சி நவகோடியைப் பற்றிப் பேசியதெல்லாம் 'கெட்டிக்காரத்தனமான சாகஸம்' என்றே கருதிய சிங்காரவடிவு இது காதல் என்று கேட்டதும் குதித்தாள்.

''அப்படியா சொன்னாள்? நான் பார்த்து விடுகிறேன்'' என்று மாடத்துக்குப் போக முயன்றாள் சிங்கார வடிவு.

''அம்மையும் மகளும் ஏதோ பேசிக் கொள்ளுங்கள். முதலில், என் வராகனைக் கொடுங்கள்'' என்று கையை நீட்டினார் நிலக்கிழார்.

பொன் முடிப்பைத் தூக்கி அவர் கையில் 'டக்'கென்று கொடுத்துவிட்டு, மாடத்துக்குச் சென்றாள் சிங்காரவடிவு.

அங்கே நவகோடியின் ஓவியத்தைப் பார்த்தாள் அபரஞ்சி.

தாய் சித்ராவதியானாள்; மகள் மாதவியாகவே ஆகி விட்டாள்.

கடுமையான வாக்கு வாதத்திலும் அபரஞ்சி சளைக்க வில்லை.

''இது ஒருவனுக்குப் போட்ட முந்தானை'' என்று முந்தானையைக் காட்டினாள்.

'இன்னொருவனுக்குப் போட வைக்கிறேன்' என்று சபதம் செய்தாள் சிங்காரவடிவு.

அரண்மனையிலிருந்து ஆள் வந்து கீழே நிற்பதாகச் செய்தி வந்தது. இறங்கிச் சென்றாள் சிங்காரவடிவு.

காவிரிக் கரையில் சோழமன்னர் தனியாக இருக்கிறா ராம். அபரஞ்சியை அழைத்து வரும்படி ஆள் அனுப்பி யிருக்கிறார்.

24 [illegible] 1991

## 15. மத்யமாவதி

''[illegible]வும் நல்லது. நான் நினைத்தது பலித்தது'' என்று துள்ளிக் குதித்தாள், சிங்காரவடிவு.

''போடி, போ! மன்னவரே அழைக்கிறார். இந்த வக்கு வகை இல்லாத வணிகனுக்காக ஏங்குகிறாயே? நீயும் ஒரு தாசி மகளா? கொட்டிக் கொடுக்கக் கோடி நாயகர்கள் இருக்கும்போது, கட்டிக் கிடக்க இந்தக் கழுதைதான் வாய்த்ததா? வேறு யார் கிடைத்தாலும் நீ ஏமாற்றி விடுவாய்? நான் வணங்கிய தெய்வத்தின் வரம். மன்னர் பெருமானே அழைத்திருக்கிறார். ராஜகோபத் திற்கு ஆளாகாதே! பேசாமல் அலங்காரம் செய்து கொண்டு புறப்படு!'' என்று உத்தரவிட்டுவிட்டுக் கீழே இறங்கிப் போய்விட்டாள் சிங்காரவடிவு.



வழியறியாத பேதையர் வழக்கம்போல், கட்டிலில் படுத்துக்கொண்டு அழுதாள் அபரஞ்சி.

கையே தலையணையாய்க் கண்ணீரைச் சிந்தினாள். கண்ணீர் முத்துக்கள் கை வளையலை நனைத்தன.

உணர்ச்சிமிக்க உள்ளத்திலிருந்து கசிந்த ஈரம், கற்புள்ளவர்கள் எந்த ஜாதியிலும் பிறப்பார்கள் என்பதைக் காட்டிற்று.

கீழே சென்ற சிங்காரவடிவு சோழ மன்னரின் சேவகர் களைப் பார்த்து, ''நவகோடி என்ற வணிகன் வருவான். அவனை உள்ளே அனுமதிக்காதீர்கள். இனி அவள் அரசரின் சொத்து'' என்று கூறிவிட்டாள்.

சேவகர்களும் வழியை அடைத்துக்கொண்டு நின்றார்கள்.

மாடத்தில் நாயகனை எதிர்பார்த்த அபரஞ்சி— கூடத் தில் அவன் இனி வருவானா என்று கருதிய அன்னை— வாசலில் காவல் காக்க அரசாங்கச் சேவகர்கள்.

சொக்குப் பொடி என்பார்களே அதில் சிக்கிக் கொண்டவன்போல், ஒரு நாளைக்கு நான்குமுறை வரும் நவகோடி, அந்த நேரமும் வந்து சேர்ந்தான்.

''இதோ பார். இனி நீ இங்கே வரவேண்டாம். இன்று முதல் அபரஞ்சி அரசரின் உடைமை. உயிரின் மீது ஆசை இருந்தால் உடனேயே போய்விடு'' என்றான் ஒரு சேவகன்.

''எனக்கு இப்போதெல்லாம் உயிரின்மீது ஆசை இல்லை; அபரஞ்சியின் மீதுதான்'' என்று உறுதியாகச் சொன்னான் நவகோடி.

''அபரஞ்சியும் கிடைக்கமாட்டாள்; நீயும் இருக்க மாட்டாய்!'' என்று, வேல் கம்பை பூமியில் தட்டியபடி சிரித்தான் ஒரு சேவகன்.

உள்ளிருந்தபடி சாளரத்தின் வழியாக இதை ரசித்தாள் சிங்காரவடிவு.

''இவனோடு வாதிடுவதில் பயனில்லை. அந்தக் குதிரையிலேயே கட்டி அவனது இல்லத்தில் விட்டு வா!'' என்று ஒரு சேவகன் இன்னொரு சேவகனுக்குக் கட்டளை இட்டான்.

அவன் நவகோடியை அப்படியே ஒரு குண்டுக் கட்டாகக் கட்டி குதிரையின் மீது ஏற்றியபோது மாடத்துச் சாளரம் வழியாக கவனித்த அபரஞ்சி, மயங்கிய நிலையில் கூச்சலிட்டாள்.

யார் அவளது சத்தத்தை மதித்தார்கள்?

கொக்கு கொத்தும் போது மீன் சத்தம் போடுகிறதா? அப்படிச் சத்தம் போட்டாலும் தாய் மீன் வந்து காப்பாற்றப் போகிறதா?

பெண்மை பிறருக்குப் பயன்படும் பொருளாகவே கருதப்பட்ட காலத்தில், பெண்ணின் அபிப்பிராயங்களுக்கு மதிப்பேது?

மகளை தாயே விலை பேசும்போது நல்ல விலை கிடைத்தால் மகள் கட்டுப்பட்டுத்தானே ஆகவேண்டும்?

அபரஞ்சியின் சின்னம்மையும், மற்றும் மூன்று தோழியரும் அவளைத் தூக்கி நிறுத்திக் குளிப்பாட்டினார்கள்.

ஜீவனற்ற சடலம் போல் சம்மதித்தாள் அபரஞ்சி.



அவர்களே சேலை கட்டிவிட்டார்கள். கச்சு கட்டிவிட்டார்கள். அலங்காரமும் செய்து வைத்தார்கள்.

ஒரு சவத்துக்கான கடைசிச் சடங்கு போலவேதான் அந்தக் காட்சி தோன்றிற்று.

இவ்வளவுக் கிடையிலும் உள்ளத்துக்குள்ளேயே ஒரு சபதம் ஏற்றாள் அபரஞ்சி.

என்ன ஆயினும் சரி, அரசருக்கும் சம்மதிப்பதில்லை என்பதே அது.

ரதம் வந்திருந்தது. கூடவே ஒரு பல்லக்கும் வந்திருந்தது. 'எதில் வர ஆசையோ அதிலேயே வரலாம்' என்றாராம் மன்னவர்.

''பல்லக்குத்தான் நல்லது. ஏனென்றால் கடைசிப் பயணம் அதில்தானே நடைபெறப் போகிறது'' என்று சிரித்தாள் அபரஞ்சி.

''தெரியுமடி உன் வேதாந்தம்! புறப்படு'' என்று அதட்டினாள் தாய்.

''வராகனை வரவு வைக்க நீயும் வரவில்லையா அம்மா?'' என்று தாயைப் பார்த்து கேலி செய்தாள் மகள்.

''வரவேண்டியது வீடு வந்து சேரும். அது பற்றி உனக்கென்ன கவலை?'' என்றாள் தாய்.

''ஆமாம் வரவு வைப்பது உன் கணக்கில் தானே?'' என்றபடி பல்லக்கில் ஏறினாள் அபரஞ்சி.

சின்னம்மையும் தோழிகளும் ரதத்தில் ஏறிக் கொண்டார்கள்.

ரதம் சோலையைக் கடந்தபோது எங்கிருந்தோ ஒரு குருட்டுப் பிச்சைக்காரன் பாடினான்.

''நதி அழுவதின் பெயர்தான் தண்ணீர். அந்தத் தண்ணீரும் அழ விரும்பினால் என்ன செய்வது? எந்த வடிவத்தில் கண்ணீர் விடுவது?

இறைவன் கண்ணை மூடிக்கொள்ளும்போது உனது தருமங்கள் செல்லுபடியாகாமல் போகலாம்; நீ அழுகின்ற ஓசை அவன் காதில் விழுந்தால்தானே அவன் கண்ணை விழிப்பதற்கு?

ஒரே ஊருக்கு இரண்டு பாதைகள் இருந்தாலும் வழி காட்டுகிறவன் அழைத்துச் செல்லும் பாதையில்தானே நீ போக வேண்டி இருக்கிறது?

இறைவன் பல்லக்கை விட்டு இறங்கும் போதுதான் நீ பல்லக்கில் ஏறுகிறாய் என்பதை மறந்து விடாதே?''

—இந்தப் பாடல் அபரஞ்சிக்குப் பாடலாகத் தோன்றவில்லை. அவள் பக்கத்தில் நின்று யாரோ அவளைப் பற்றியே பாடுவதாகத் தோன்றிற்று.

நாலு பேர் சுமந்துவர அபரஞ்சியின் பல்லக்கு ஆடி அசைந்து போய்க் கொண்டிருந்தது.

மாலை மயங்கிய நேரம். காவிரி ஆற்றுக்கு நிலவு மெருகு போட்டுக் கொண்டிருந்தது.

கரை ஓரத்தில் ஏராளமான தீப்பந்தங்கள் தெரிந்தன.

இரவு நேரத்திலும் அங்கே குளித்துக் கொண்டிருந்தார்கள் சிலர்.

சரஸமாடிக் கொண்டிருந்த கணவன் மனைவியரையும் கண்டாள் அபரஞ்சி.

'உலகத்தில் தன்னைவிட எல்லோருமே அதிருஷ்டக்காரர்கள்' என்பதுபோல் அவளுக்குத் தோன்றிற்று.

மனிதர்கள் கண்ணாடி பார்க்கும்போது மற்றவர்கள் முகம்தானே சிரித்த முகமாகத் தெரிகிறது!



காவிரியின் வட கரையில் பல்லக்குப் போயிற்று.

குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது.

தூரத்தில் அரசர் இறங்கி இருக்கும் இடம் அவள் கண்களுக்கு நன்றாகவே தெரிந்தது. ஒரே இடத்தில் குவியலாகத் தீப்பந்தங்கள் தெரிந்தன. சுற்றிலும் கண்ணாடி போடப்பட்ட அகல் விளக்குகளும் தெரிந்தன.

அதுவே தனது பலிபீடம் என்பதை உணர்ந்தவள் போலவே அவள் போய்க் கொண்டிருந்தாள்.

'அரசரை எப்படிச் சமாளிப்பது? முடியவில்லை என்றால் என்ன செய்வது?' இவையே அவள் முன்பிருந்த கேள்விகள்.

'அரசர் எப்போதும் வாளோடுதானே இருப்பார். தன்னைத் தீண்டினால் ஒரு குத்தீட்டியினால் தன்னை மாய்த்துக் கொள்வது' என்று முடிவு கட்டினாள் அபரஞ்சி.

புதிய வேகம் எப்போதும் அசுரவேகமாகத்தான் இருக்கும். தளர்ச்சியுறும் போதுதான் தத்துவ ஞானம் பிறக்கும். நன்றாகச் சிந்தித்து முடிந்த பிறகு ஒரு நிர்மலமான மனோபாவம் தோன்றும்.

அந்த மனோபாவம் இப்பொழுது அவளை ஆட்கொண்டது.

கூடாரத்தை நெருங்க நெருங்க அவள் தன் அலங்காரத்தைக் கலைத்துவிட்டுக் கொண்டாள். நெற்றியில் இருந்த சாந்துப் பொட்டை அழித்தாள். ஒரு விதவையைப் போல தன்னை உருமாற்றிக் கொண்டாள்.

பல்லக்கு இறக்கப்பட்டது.

ஓவியங்கள் வரையப் பெற்ற ஒரு கூடாரத்திற்குள் அவள் அழைத்துச் செல்லப்பட்டாள். ஒரு ஆசனத்தில் அவள் உட்கார வைக்கப்பட்டாள்.

தனது முடிவு காலம் நெருங்கிவிட்டதாகவே எண்ணத் தலைப்பட்டாள்.

நவகோடியோடு வாழ்ந்த காலங்களை நினைவு படுத்திக் கொண்டாள்.

சமயபுரம் கோவிலுக்குச் சென்றது. அங்கே திரு அரங்கத்தில் நடனமாடியது, உறந்தையில் இருந்த துர்க்கை கோவிலில் ஒரு நூறு தேங்காய்கள் உடைத்தது. காலா காலங்களுக்குத் தங்களை கணவன் மனைவியராக வைத்திருக்கும்படி வேண்டியது; நவகோடியோடு அனுபவித்த அந்த இரவுகள்—அந்த உறவுகள்—

—அவள் சிந்தனையைக் கலைத்தது. திரையை விலக்கிக்கொண்டு வந்த இளவரசனின் வருகை.

அழைத்தாகச் சொல்லப்பட்டதோ மன்னவர் பெயர். அங்கிருந்ததோ இளவரசர். அதிலும் நிதானமற்ற நிலை·

நவகோடியை ஒரு நாளும் அவள் அந்த வடிவத்தில் கண்டதில்லையே?

இளவரசன் நிதானமற்றவனாக இருந்தாலும், முரட்டுத் தனம் அவனிடம் இல்லை. நாக்குத் தடுமாறியதே தவிர, மரியாதையாகத்தான் இருந்தது.

''ஏதோ சோழ நாட்டிலேயே நீ தான் பேரழகி என்கிறார்கள். பார்க்கலாமே என்றுதான் அழைத்தேன். இல்லையென்றால் ஒரு தாசிப் பெண்ணை சேவகர்கள் அறியும்படி கூடாரத்திற்குள் அழைத்திருக்கமாட்டேன். அரண்மனையில் ஆயிரம் அடைக்கலப் பெண்கள் இருக்கிறார்கள். இதென்ன அபூர்வ அழகு என்று பார்க்கவே அழைத்தேன். நீ நன்றாகத்தான் இருக்கிறாய்! என்னைச் சந்தித்ததில், உனக்குத்தான் நல்லகாலம்! என்னைத் தொடுவது அந்தக் காளத்திநாதனைத் தொடுவதுபோல!'' என்று தள்ளாடினான் இளவரசன்.



''இளவரசே! உயிர்களுக்கெல்லாம் தந்தையே! இந்த உங்கள் மகளாகவே நான் வந்திருக்கிறேன். மனைவியா அல்ல. குலம் காக்கும் சோழ வம்சத்தில் தோன்றிய நீங்கள் எனது குணம் காப்பீர்கள் என்ற நம்பிக்கையில் தான் கூப்பிட்டதும் வந்து விட்டேன், நான் தாசி மகள் தான். ஆனால் நேசித்தவனைத் தவிர வேறு ஒருவனை நினைத்தும் பார்க்காதவள். யாசித்தோ விரட்டியோ யாரும் என் காதலைப் பெறமுடியவில்லையே என்பதை, உறந்தை நகர் நன்றாக அறியும். கோழியூர் காக்கும் கோவே! தங்களை நான் மறுத்தேனில்லை, வெறுத்தேனில்லை, என் வாழ்க்கையின் நோக்கங்களையே கூறினேன். என்னை வாழ்த்தி வழியனுப்புங்கள்'' என்றாள் அபரஞ்சி.

இளவரசன் ஓங்கிச் சிரித்துவிட்டான்.

''நான் உன்னை விரும்புவது விரும்பாதது இருக்கட்டும். ஆனால் ஒரு தாசிப் பெண் எவ்வளவு அழகாகப் பேசக் கற்றுக் கொண்டிருக்கிறாய்? பேசி மயக்குவதில் தாசி குடும்பங்களில் உள்ள சக்தியை இப்போதுதான் பார்க்கிறேன். அப்படித்தான் நீ யாரை நேசிக்கிறாய்..?'' என்று கேட்டான் இளவரசன்.

நம்பிக்கை வரப் பெற்றவளாக முழு விவரங்களையும் சொல்லிவிட்டாள் அபரஞ்சி.

''ஓகோ! அவனா....! அந்த நவகோடி என்னைவிட அழகன் என்று இன்னொரு பெண்கூட என்னிடம் சொல்லிவிட்டாள். அவனது அழகையும் நான் பார்த்தாக வேண்டும். சோழ நாட்டில் என்னைவிட ஒரு அறிவாளியோ அழகனோ இருந்தால் அவனை நான் சந்திக்காமல் இருக்கலாமா?...'' என்று கை தட்டிக் காவலரை அழைத்தான், இளவரசன்.

''நவமணி வணிகன் நவகோடியை உரிய மரியாதையோடு அழைத்து வாருங்கள்'' என்று கட்டளையிட்டான்.

'உரிய மரியாதை' என்பதற்கு அவனிடம் வேறொரு அர்த்தம் உண்டு.

# 16. பூர்வ கல்யாணி

காவலர்கள் நவகோடியை அழைத்துவரப் புறப்பட்டார்கள்.

அபரஞ்சியின் அழகை ரசித்தபடி கையிலே நறவுக் கோப்பையோடு நின்றான் சோழ இளவரசன்.

நீண்ட கூந்தல், அது தவழ்ந்து விளையாடிய அழகு, அந்தக் கூடாரத்தின் பட்டுத்திரைச் சேலைகளுக்குக்கூடக் கிடையாது.

அளவான கழுத்து; அதிலே மின்னிக் கொண்டிருந்த வைர அட்டிகை, தன் தோல்வியை ஒப்புக்கொண்டிருந்தது.

காதுகளிலே தொங்கிய குண்டலம், வானவில் தங்களிடம் பிச்சை எடுத்துப் போனதாகப் பறை சாற்றிக் கொண்டிருந்தன.

மூக்கிலிருந்த மூக்குத்தி, அவள் சிரிக்க மாட்டாளா என்று ஏங்கிக் கொண்டிருந்தது.

வானத்து நட்சத்திரங்கள் கூடாரத்தைக் கிழித்துக் கொண்டு உள்ளேயே இறங்கிவிட்டதாகவே அவனுக்குத் தோன்றிற்று.

கச்சுக்கும் சேலைக்கும் இடையே தோன்றிய ஆலிலை வயிறும், அதன் அடிப்பாகமும், கார்காலம் போனபிறகு காவிரியாற்றில் வண்டல் மண் போட்ட ஓவியம் போல் காட்சியளித்தன.

சற்றே பருத்திருந்த பின்னழகு, அவள் நடந்தால்தான் உலகத்தை விலை பேசலாமே என்பதுபோல் காத்திருந்தது.

'இத்தகைய தேவதை அரண்மனையில் இல்லைதான்' என்று இளவரசனின் வாய் முணுமுணுத்தது.



அவனுடைய அடக்கத்தைப் போதை அழித்தது. ''அபரஞ்சி!'' என்று முணுமுணுத்தபடி அருகில் நெருங்கினான்.

''தயவு செய்து நெருங்காதீர்கள்'' என்று கெஞ்சினாள் அவள்.

''என்னால் தாங்க முடியவில்லை அபரஞ்சி!'' என்று கூறியபடியே அவளை இறுகத் தழுவினான், இளவரசன்.

பயந்து நின்ற அபரஞ்சி நினைத்திருந்த ஆவேச எண்ணங்களெல்லாம் தன் பலவீனத்தில் மறையக் கண்டாள். அப்படியே மூர்ச்சையுற்றாள்.

'தான் அழைக்காமல் யாரும் உள்ளே நுழையவேண்டாம்' என்று காவலர்களுக்கு உத்தரவிட்டான் இளவரசன்.

அபரஞ்சியின் சேலையைக் களைந்தான். கச்சை அவிழ்த்தான். அந்த அழகில் அவனுக்கு மூர்ச்சையாகாமல் இருந்தது அதிசயம்!

அப்படியே அவளை ஆரத் தழுவினான். முத்தமிட்டான். தன் ஆசைகள் அனைத்தையும் கொட்டித் தீர்த்தான்.

''இது போன்ற இன்ப லயத்தை வேறு எந்தப் பெண்ணிடமும் கண்டதில்லை'' என்றபடி, அதே சேலையால் அவள் உடம்பை கழுத்துவரை மூடினான்.

வெளியிலே நவகோடி வந்திருக்கலாம் என்ற ஐயம் அவனுக்கு ஏற்பட்டது. திரையை விலக்கி எட்டிப் பார்த்தான்.

அங்கே கன்னங்களில் காயங்களோடு இரண்டு வீரர்களுக்கு நடுவில் நின்று கொண்டிருந்தான் நவகோடி.

''ஊம்...! அவனும் அழகன் தான்'' என்று முணுமுணுத்த இளவரசன் அவனை உள்ளே அழைத்துவரச் செய்தான்.

''இந்தத் தங்கச்சிலைக்குச் சொந்தக்காரன் நீதானா? மிகவும் சுகமான உடம்பு. இவனோடு கலந்திருந்தால், பொழுது போவதே தெரியாது. தேவைப்படும்போது மீண்டும் அழைத்துக் கொள்கிறேன். இப்போது தூக்கிக் கொண்டுபோ'' என்றான்.

அரசன் ஆணையை மறுத்தறியாத வணிகன், கண்களில் நீர்மல்க அப்படியே கைத்தாங்கலாக அவளை அள்ளி எடுத்தான். அவள் நிர்வாணமாயிருப்பதை அப்போது தான் அவன் உணர்ந்தான். கூடாரத்தை விட்டு வெளியேறினான்.

காவிரிக்கரையில் நடக்காமல், ஆற்றுப்படுக்கையில் மெதுவாக நடந்தான்.

சேவகர்களும், கூடாரமும் கண்ணுக்கு மறைந்ததும், அவளை அப்படியே ஆற்றுமணலில் படுக்க வைத்து இரண்டு கைகளிலும் தண்ணீரை அள்ளி அவள் முகத்தில் தெளித்தான்.

சந்திரவில் பனி விழுந்தது போல் அந்த நீர் முத்துக்கள் முகத்தில் நின்றன.

அவள் கண்ணை விழித்துப் பார்த்தாள்.

உடலின் கொதிப்பினால் கண்கள் சிவந்திருந்தன.

''ஐயா. பெருமானே...'' என்று மட்டும் அவள் முணுமுணுத்தாள்.

அவளைக் கைத்தாங்கலாக உட்கார வைத்து, ஆடைகளை அணிவித்தான்.

சற்று நிதானத்துக்கு வந்த அபரஞ்சி, ''மானம் போய் உயிர் காவலா...?'' என்றாள்.

''பெரிய இடத்தில் இருப்பவர்கள் தவறு செய்தால் கடவுள்கூடக் கண்ணை மூடிக் கொள்கிறானே,



அபரஞ்சி! தருமத்திற்குப் பெயர் பெற்ற சோழ நாட்டில், சண்டாளர்களையும் பிறக்கவைத்து வேடிக்கை பார்க்கிறானே அவன்! உன் உடம்பு கறைபட்டாலும், உள்ளம் கறைபடாதது என்பது எனக்குத் தெரியும். அந்த அற்புதமான உள்ளத்துக்கு நானே சொந்தக்காரன்!'' என்றான் நவகோடி.

''நாம் துர்க்கையை தரிசிப்போமா? இந்தப் பாபம் தீர அதுதான் வழி!'' என்றாள், அபரஞ்சி.

''இந்த நேரத்தில் தேவி தரிசனமா...? எதற்காக...'' என்று கேட்டான், நவகோடி.

''எந்த தேவி நம்மைக் கவனிக்காமல் விட்டாளோ, அவளை நாமாவது கவனிப்போம், வாருங்கள்!'' என்று அவனைக் கையோடு அழைத்துக்கொண்டு, கொங்கு நாடு செல்லும் சாலைக்கு விரைந்தாள் அபரஞ்சி.

அங்கேதான் அடர்ந்த மரங்களுக்கு நடுவே துர்க்கையின் கோயில் இருந்தது. அதில் கம்பீரமாக நின்றாள், துர்க்காதேவி.

குங்குமம் இடுவதாயினும், குங்குமத்தை அழிப்பதாயினும் அந்த துர்க்கையின் கோவிலுக்குத்தான் இளம் பெண்கள் வருவார்கள்.

அது ஒரு சுதைக் கட்டிடம். மேலே சரிவான மண்டபம். முன்னாலே இரும்புக் கதவு. நடுவிலே நிறுத்தி வைக்கப்பட்ட சூலாயுதம்.

வருகின்ற பெண்கள் கற்சட்டியில் இருக்கும் குங்குமத்தை எடுத்து, சூலாயுதத்திற்கு முதலில் இட்டுவிட்டு, பிறகு தங்கள் நெற்றியில் அணிந்து கொள்வார்கள்.

குங்குமம் அழிப்பவர்களை அங்கே உட்கார வைத்து காவிரித் தண்ணீரால் நன்னீராட்டி அதிலேயே குங்குமம்

கரைந்து போகும்படி செய்வார்கள். குங்குமம் கரைந்த தண்ணீர் தேவியின் பாதங்கள் வழியாக ஓடும்.

தொட்டியம் போகும் வழியில், கொங்கு நாட்டுச் சாலையில் இருந்த அந்த துர்க்கை கோவிலுக்கு பூர்ண சந்திரன் சரியத் தொடங்கும் நேரத்தில் வந்து சேர்ந்தார்கள் அபரஞ்சியும், நவகோடியும்.

அகல் விளக்குகள் மினுக் மினுக்கென்று எரிந்துகொண்டிருந்தன.

தண்ணீர்த் தொட்டி காவிரித் தண்ணீரால் நிரப்பப்பட்டிருந்தது.

துர்க்கையின் சக்தியில் இருந்த நம்பிக்கையால் அந்தக் கோவில் பூட்டப்படுவதில்லை.

பாஞ்சாலியைப்போல் அவிழ்ந்த கூந்தலுடனும், ஆனால் ஆவேசமில்லாமல் அமைதியாகவும் கோவிலுக்குள் நுழைந்து சுற்கடவுள் மீது அமர்ந்துகொண்டு, ''என் நெற்றியில் குங்குமம் இல்லாவிட்டாலும் உங்கள் கையால் என் தலைக்குத் தண்ணீர் ஊற்றுங்கள்'' என்று வேண்டினாள், அபரஞ்சி.

நவகோடி, பயந்து போய், ''ஐயோ, அபரஞ்சி! என்ன இது....?'' என்று அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

''அருள் கூர்ந்து தங்கள் கையால் எனக்குத் தண்ணீர் ஊற்றுங்கள்'' என்றாள் அபரஞ்சி.

காட்டு மரங்கள் ஒரு தடவை குலுங்கி நின்றன. சரசர வென்று ஓடும் பாம்புகளின் ஓசையும் கேட்டுக்கொண்டிருந்தது. உப்பு வண்டிகள் தூரத்தில் சென்று கொண்டிருந்தன.

நவகோடி அவள் தலையில் தண்ணீரை அள்ளி ஊற்றினான்.

துர்க்கையின் முன்னால் எழுந்து நின்றாள் அபரஞ்சி. பிறகு உள்ளே ஓடிப்போய் துர்க்கையைக் கட்டிப்



பிடித்துக் கொண்டாள். துர்க்கையின் ஒரு கையில் இருந்த ஆயுதத்தைப் பிடுங்கினாள்.

''அபரஞ்சி...'' என்று நவகோடி கத்திய சப்தம் காதில் விழும் முன்பே, துர்க்கையின் ஆயுதம் அவள் மார்பைத் துளைத்து முதுகுப்புறமாக வெளியே வந்தது.

நவகோடி அவளைக் கட்டிப் பிடித்துத் தூக்கி அழுதான்.

அந்த ரத்த வெள்ளத்தில் முகத்தைப் புதைத்துக் குமுறினான்.

பிறகு அவளை அப்படியே தூக்கிக்கொண்டு பின்புறமிருந்த பாதாளக் கிணற்றுக்குச் சென்றான்.

நல்ல இருளில் அவன் காலில் ஒரு கருநாகம் சுற்றிக் கொண்டது...நவகோடி காலை உதறவில்லை. அதை வரவேற்றான்.

அவன் கையிலிருந்த அபரஞ்சியின் சடலம் நழுவி விழுந்தது. அதன் மீது அவன் விழுந்தான்.

—பூர்வஜென்ம ஞாபகம் முடிந்து சரசு சுற்றுகவே முற்றும் பார்த்தாள். தனக்குத் தெரியாத சில விஷயங்களை கூட நினைவுக்கு வருவதை, உணர்ந்தாள்.

''என் மரணத்திற்குப் பிறகு பல முறை புதுப்பிக்கப் பட்டும், இந்த வீடு பாழ் வீடாகவே ஆகிவிட்டது'' என்று கூவினாள்.

''சரசு...சரசு..'' என்று அவளை உலுக்கினார் மாமியார்.

''இவ்வளவு நேரம் பைத்தியக்காரியைப் போல் நின்று விட்டு இப்போது கூச்சலிடுகிறாயே...'' என்றார்.

''நானா பைத்தியக்காரி? இங்கே தொட்டியம் போகும் வழியில் 'அபரஞ்சி மேடு' என்று ஒரு மேடிருக்கிறது. அங்கே போய்ப் பார்க்கலாம் வாருங்கள்!'' என்றாள் அபரஞ்சி.

# 17. மாயவ மாளவ கௌளை

'குறி சொல்பவள் சொல்லிவிட்டாளே, சரசு கூப்பிட்ட இடத்திற்கெல்லாம் போகும்படி? போகாமல் முடியுமா? அபரஞ்சி மேடாமே, அபரஞ்சி மேடு? அதையும் பார்த்து விடலாம்' என்றுதான் நினைத்தார் மாமியார்.

''அம்மா! பசிக்கிறது'' என்றான் மகன்.

''ஓ! சாப்பிடலாமே! தொட்டியம் சாலையில் ஒரு சத்திரம் இருக்கிறது. அங்கு அவ்வப்பொழுது சமைத்துப் போடுகிறார்கள்'' என்றாள், சரசு.

சிங்காரவேலனுக்குத் தலைவலியே வந்துவிட்டது. ஒரு [illegible]ந்தியத்தின் பின்னால்தான் நாம் சுற்றிக் கொண்டிருக்[illegible]ம் என்றே அவன் முடிவு கட்டிவிட்டான்.

''இதோ பார் சரசு! நாங்கள் காரைக் கொடுத்துவி[illegible] [illegible]றாம். நீ எங்கே வேண்டுமானாலும் போய் வா! எங்[கள]ுக்குத் தலைவலி, கால்வலி, உடம்பு வலி எல்லாம் வந்து விட்டது!'' என்று கொஞ்சம் கண்டிப்பாகவே சொல்லி விட்டான், சிங்காரவேலன்.

அவனை சரசு பார்த்த பார்வை ஒரு மகாகாளி தேவியாகப் பார்ப்பது போலிருந்தது.

''இந்தா தம்பி! சும்மா வா! சரசு, அவன் கிடக்கிறான்; நீ வாம்மா! நீ எங்கெல்லாம் போக விரும்புகிறாயோ, அங்கெல்லாம் போகலாம்!'' என்று கொஞ்சலாகச் சொன்னார் மாமியார்.

''வழியில் சாப்பிட்டுவிட்டே போகலாம்'' என்று நிதானமாகவே சொன்னாள், சரசு.

அப்போது அவள் ஒரு சராசரிப் பெண்ணாகக் காட்சியளித்தாள்.



வழியில் ஒரு உணவு விடுதியில் இறங்கி மூவரும் சாப்பிட்டார்கள்.

நவீன உணவு வகைகளை சரசு தொட்டுக்கூடப் பார்க்கவில்லை. வெறும் மோரும் சோறும், ஊறுகாயுமாக முடித்துக்கொண்டாள்.

தொட்டியம் சாலையை நோக்கிக் கார் சென்றது.

சிங்காரவேலனுக்கும், அவன் தாயாருக்கும் சரசுவின் நடவடிக்கை வேடிக்கையாக இருந்ததே தவிர, காரை ஓட்டும் டிரைவருக்கு அப்படி இல்லை. அவன் ஆழ்ந்த தெய்வ பக்தியுடையவன். கட்டுக் கட்டாக விபூதி பூசி, நடுவிலே சந்தனப் பொட்டு வைத்து, அதன் மீது குங்குமம் வைத்திருந்தான். ஜாதகம் ஜோசியத்தில் நம்பிக்கையுள்ளவன்.

காரை எடுக்கும்போது பின்புறமாகப் போக வேண்டியிருந்தால், ஒரு அடி முன்னால் போய் விட்டுத்தான் பின்னால் போவான். தப்பான சகுனத்தை எதிரே கண்டால்காரை நிறுத்திவிடுவான். மிகவும் நிதானமாகவே ஓட்டுவான்.

எல்லோரும் ஐந்து மணி நேரத்தில் போக வேண்டிய ஊருக்கு, அவன் ஏழு மணி நேரத்தில் போவான். நல்ல குடும்பத்தில் பிறந்தவன். பெயர் செல்லையா சேர்வை.

இவ்வளவு அடக்கமிருந்தாலும் அகம்படியருக்கே உரித்தான ஆண்மையும், வீரமும் அவனிடம் உண்டு. சரசுவை ஒரு தேவதையாகவே அவன் மதித்தான்.

சோறு தண்ணீர் இல்லாமல் சரசு சொல்லுகின்ற இடங்களுக்கெல்லாம் போக வேண்டும்போல் அவனுக்குத் தோன்றிற்று.

தொட்டியம் சாலையில் சிறிது தூரம் கார் வந்ததும் ஓரிடத்தில் வலது பக்கமாக ஒரு வண்டிப் பாதை பிரிந்தது. இடது பக்கத்தில் ஒரு மைல் கல் ஊன்றி இருந்தது. அதில்

ஒரு அம்பு போட்டு, 'அபரஞ்சி மேடு போகும் வழி' என்று எழுதி இருந்தது.

காரை அதில் திருப்பச் சொன்னாள் சரசு.

சாலையோ, கார் போகக்கூடியதாக அவனுக்குத் தோன்றவில்லை. வண்டிப்பாதையின் நடுவில் பெரிய பெரிய மேடுகள் இருந்தன. காரின் நடுப்பகுதி எங்கே அதில் இடித்து விடுமோ என்று அவன் அஞ்சினான். ஆனாலும் தைரியமாக நடுப்பகுதியின் மீது சக்கரத்தை ஏற்றியபடி காரைச் செலுத்தினான்.

ஒரு சிறு கிராமம். ஊர் என்று சொல்வதற்கு அடையாளமாக இரண்டே இரண்டு கடைகள். இரண்டும் கூரைக் கட்டிடங்கள். ஒன்று டீக் கடை. இன்னொன்று பலசரக்குக் கடை. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில வீடுகள். பத்துப் பதினைந்து கூரை வீடுகளைத் தவிர, மற்றவையெல்லாம், குடிசைகளே. சில வீடுகளுக்கு முன்னால் கள்ளிச் செடியினால் வேலி போடப்பட்டிருந்தது.

ஊருக்குள்ளே கார் போகக் கூடிய தடமே கிடையாது. ஆங்காங்கே ஆடுமாடுகள் கட்டப்படுவதற்கான குத்துக்கற்கள் வேறு ஊன்றப் பெற்றிருந்தன.

குடிசை பிரிக்கப்பட்ட குட்டிச் சுவர்கள் ஏராளமாக இருந்தன.

தங்கள் ஊருக்கும் ஒரு கார் வருகிறதே என்று எல்லா கிராம ஜனங்களும் அங்கே கூடிவிட்டார்கள்.

'இங்கே திருப்பு' 'அங்கே திருப்பு' என்று, சரசு உத்தரவிட்டுக் கொண்டே போனாள்.

பரிதாபத்திற்குரிய டிரைவர் காடுமேடுகளில் எல்லாம் காரைச் செலுத்தினான்.

கடைசியில் சரசு குறிப்பிட்டது போலவே ஒரு சிறிய கோவில் வந்தது.



அது இப்பொழுது கூரைக்கட்டிடமாக இல்லை; கற்கட்டிடமாகவே இருந்தது.

அங்கே எல்லோரையும் இறங்கச் சொன்னாள் சரசு. ''யாரோ இதைப் புதுப்பித்திருக்கிறார்கள்'' என்றாள்.

''அடே, சூலாயுதத்தைக்கூட மாற்றி இருக்கிறார்களே...'' என்று ஆச்சரியப்பட்டாள்.

அம்மனுக்குப் பட்டுச் சாத்தியிருந்தது. அந்தச் சிலையின் கண்களிலும், நெற்றியிலும் வெள்ளித் தகடுகள் பதிக்கப் பெற்றிருந்தன.

''இங்கே குடியேறியவர்கள் இதையெல்லாம் செய்திருக்கிறார்கள்'' என்றாள், சரசு.

அவள் வார்த்தைகளுக்கு மாமியாரும் சிங்கார வேலனும் எப்படிப் பதில் சொல்வார்கள்? ஏற்கனவே அது எப்படி இருந்தது என்று தெரிந்திருந்தாலல்லவா பதில் சொல்ல!

சரசு, துர்க்கையின் முன் விழுந்து வணங்கினாள். அவள் கணவனும் மாமியாரும் விழுந்து வணங்கினார்கள். அதற்குள் ஊர் மக்கள் அங்கே கூடிவிட்டார்கள்.

அங்கே புல் முளைத்த ஒரு மேடு தெரிந்தது. அதன்மீது விழுந்து திடீரென்று அழுதாள்.

கூடியிருந்த ஜனங்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

யாரோ ஒரு மூதாட்டி அந்த மேட்டு மண்ணைத் தொட்டு அவள் நெற்றியிலே பூசினாள்.

''இந்த ஊர்லே கன்னிப்பெண்களுக்கு ஒடம்புக்குச் சொகமில்லேன்னா, இந்த மேட்டில் இருந்து மண்ணெடுத்துத் தான் கரைச்சுக் குடுப்போம். நீ ஏம்மா இதிலே விழுந்து அழுவுறே?'' என்று கேட்டாள், அந்த மூதாட்டி.

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாத சரசு, ''இந்த இடத்தைத் தோண்டுங்கள், தோண்டுங்கள்'' என்று கெஞ்சினாள்.

''ஐயையோ, தோண்டக்கூடாதம்மா. முன்னே தோண்டுனவங்களெல்லாம் ரத்த வாந்தி எடுத்துச் செத்துப் போயிட்டாங்க. இந்த ஊருக்கு வந்த வாத்தியார் ஒருத்தரு துணிச்சலா தோண்டினாரு; அவரும் செத்துப் போயிட்டாரு. ஆனா அவரு தோண்டுனதிலெ ரெண்டு தங்க வளையலும், ஒரு கருகமணியும் கெடைச்சுது. அதைச் சாமி வீட்டிலே வெச்சுப் படைச்சுக்கிட்டிருக்கோம்'' என்றாள் அந்த மூதாட்டி.

''பரவாயில்லை. மண்வெட்டி கொடுங்கள். நான் தோண்டுகிறேன். எனக்கு என்ன நேர்ந்தாலும் கவலை இல்லை'' என்று கெஞ்சினாள் சரசு.

''பெரிய எடத்துப் பொண்ணு கேட்குது. கொடுத்துத் தான் பாருங்களேன்'' என்றார் ஒரு கிராமவாசி.

கிராமத்தில் மண்வெட்டிக்கா பஞ்சம்?

சரசு ஆவேசம் வந்தவளைப் போல தோண்டினாள். பொழுது அஸ்தமிக்கும் வரை தோண்டினாள்.

பத்துப் பதினைந்து ஹரிக்கேன் விளக்குகள் அதற்குள் அங்கே வந்து சேர்ந்துவிட்டன.

முதன் முதலில் அவள் கைக்குக் கிடைத்தது ஒரு கால் கொலுசு.

மண்ணிலே மக்கிப் போய்க் கிடந்த அந்தக் கொலுசை எடுத்ததும், ''அத்தை'' என்று கத்தினாள், சரசு.

''என்னம்மா? இதோ இங்கு தான் நிற்கிறேன்'' என்று பயத்தோடு சொன்னாள், மாமியார்.



''இதோ! அபரஞ்சியின் கால் கொலுசு'' என்று அதைக் காட்டிக் கண்களில் ஒற்றிக்கொண்டாள் சரசு.

மேலும் தோண்டினாள். வைர அட்டிகை கிடைத்தது. அப்படியே பெரும்பாலான நகைகளை எடுத்துவிட்டாள் சரசு.

பக்கத்தில் கிடந்த எலும்புகளிலிருந்து இரண்டு மண்டை ஓடுகளை அவள் எடுத்தாள்.

அதுவரை ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்த ஊர் ஜனங்கள், ''இது ஏதோ பேய் பிசாசு'' என்று பயந்து விட்டார்கள்.

அந்த இரண்டு மண்டை ஓடுகளையும் கண்களில் ஒற்றிக் கொண்டு மீண்டும் பள்ளத்திலேயே போட்டாள் சரசு.

குழியிலிருந்து எடுத்த நகைகளோடு, அவள் களைப்புற்ற நிலையில் காரில் ஏறி உட்கார்ந்தாள்.

''அம்மா! இந்த நகைகளை நீ கொண்டுபோனால் உனக்கும் கெடுதல், ஊருக்கும் கெடுதல்'' என்று வழிமறித்தார் ஒரு முதியவர்.

அந்தக் கிராமத்து ஜனங்களைச் சமாதானப்படுத்தி, துர்க்கை கோவிலுக்கென்று ஐநூறு ரூபாய் கொடுத்துவிட்டு எல்லோரும் புறப்பட்டார்கள்.

நகைகளை மார்பில் அணைத்தபடி மயங்கியே கிடந்தாள் சரசு.

இப்போது எங்கே போகவேண்டும் என்றெல்லாம் அவள் சொல்லவில்லை. அதுவே சிங்காரவேலனுக்கும் அவன் தாயாருக்கும் போதுமானதாக இருந்தது.

கார் மூலங்குடியை நோக்கிப் பறந்து மூலங்குடி வீட்டுக்குள் நுழைந்து சரசுவைக் கட்டிலில் படுக்கவைத்து, நகை,

களுக்கு மெருகு போடத் தொடங்கினார்கள் சிங்கார வேலனும், அவன் தாயாரும்.

அப்போதுதான் அந்த வைர அட்டிகையை நன்றாகக் கவனித்தார், மாமியார்.

''எல்லாமே வேடிக்கையா இருக்கப்பா. அவள் ஒரு தெய்வப்பெண்தான்! இதெல்லாம் இந்தக் காலத்து நகையில்லே. என்ன அதிசயமோ ஒன்னும் புரியலே. எல்லா நகையையும் பூஜை அறையிலே வச்சுப் பூட்டி வை. நாளைக்கு அவளிடம்தான் வெவரம் கேக்கணும்'' என்றார் சரசுவின் மாமியார்.

''நாம இன்னும் கொஞ்ச நாளைக்குக் கதைதான் கேட்போம் போலிருக்கு'' என்றான் சிங்காரவேலன்.

''அடுத்த ஊர் எதுவோ, அடுத்த கதை என்னவோ?'' என்றார் மாமியார்.

## 18. தெம்மாங்கு

சிங்காரவேலன் நினைத்ததிலும் தவறில்லை. ஸ்ரீரங்கத்திற்கும் அபரஞ்சிமேட்டிற்கும் போய் வந்ததிலிருந்து, சரித்திர காலத்துப் பெண்ணாகவே காட்சியளித்தாள், சரசு. அவளது நடை உடை பாவனை அனைத்திலும் மாறுதல்கள் தென்பட்டன.

அபரஞ்சி மேட்டில் கிடைத்த அட்டிகையைக் கழுத்தில் அணிந்துகொண்டாள். புத்தக அலமாரியிலிருந்து சரித்திரப் புத்தகங்களையே எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள். கட்டிக் கொள்வதும் பட்டுச் சேலையாகவே இருந்தது.

தனக்குத்தானே ஏதோ பேசிக்கொண்டாள். அவள் செவிகளில் ஏதோ சலங்கைச் சப்தம் கேட்டபடியே இருந்தது.



பூர்வ ஞாபகம் என்பது மனிதர்களுக்குத் தோன்றுவதில்லை. அப்படித் தோன்ற ஆரம்பித்தால் மனதில் நிம்மதி இருக்காது என்றே ஆண்டவன் அதை மறைத்து விடுவது வழக்கம். ஆனால் அபூர்வமாக அது தோன்ற ஆரம்பித்துவிட்டால், நவீன உலகத்து நடைமுறைகளின் மீது வெறுப்பு வந்துவிடும்.

நல்லவேளையாக சரசுவுக்கு அந்த வெறுப்பு வரவில்லை.

அன்று இரவு அவள் அபரஞ்சியாகவே பழகினாள். பள்ளி அறையில் கணவனின் காலடியில் அமர்ந்து கால்களை முத்தமிட்டாள். என்றைக்கும் இல்லாத அளவுக்குக் காதல் களியாட்டத்தில் பங்குகொண்டாள். கணவனுக்கு ஒரு சிறுநோய் இருப்பதையே அவள் மறந்துவிட்டாள்.

இது பூர்வ ஜென்மத்தில் விட்டகுறை தொட்டகுறை என்றேதான் சிங்காரவேலன் நினைத்தான்.

அவள் பிறந்த குடும்பத்தை நினைவுபடுத்தினால் அவளுக்கு நினைவு வரவில்லை.

கூடப் பிறந்த பாமா, பாமாவின் கணவன், யாரைப் பற்றியுமே அவளுக்கு நினைவில்லை.

மீண்டும் குறிகாரியையே சரணடைந்தார் மாமியார்.

குறிகாரி கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள். ''இதோ பாரம்மா, நானும் இவ்வளவு காலமாகச் சொல்லி வருகிறேன். எதுவும் தப்பியதில்லை. சரசுவுக்கு பூர்வ ஞாபகங்களை ஊட்டுவதற்காகவே ஊட்டியில் சில சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. முக்கியமான சில ஞாபகங்கள் வந்து போன பிறகு, அவள் மிகவும் பயபக்தியுள்ள மருமகளாக இருப்பாள். அதுவரை அவள் விரும்புவதைத்தான் நீங்கள் செய்தாக வேண்டும்'' என்றாள்.

மாமியாருக்கும் அப்படித்தான் தோன்றிற்று.

ஏதோ ஒரு கிராமத்தில் ஒரு இடத்தைச் சுட்டிக் காட்டி அங்கே தோண்டச் சொல்லி நகைகளை எடுக்கிறாள் என்றால், அவள் ஒன்றும் புரியாதவளாகவோ பைத்தியமாகவோ இருக்க முடியாது. தெய்வம் எப்படி விளையாடுகிறதோ பார்க்கலாம் என்று முடிவு கட்டினார் மாமியார்.

மறுநாள் அதிகாலையில், ''அத்தை அத்தை'' என்று அலறினாள் சரசு.

ஏதோ மற்றொரு அதிசயம் காத்திருக்கிறதென்றே அத்தையும் அருகில் வந்தாள்.

''நாமெல்லாம் கோபிச்செட்டி பாளையத்துக்குப் போக வேண்டும்'' என்றாள் சரசு.

''அங்கே என்ன அதிசயம்' என்று அத்தை கேட்க வில்லை. ஏதும் இல்லாமலா மருமகள் கூப்பிடுவாள்?

தெய்வம், குழந்தை, சரசு மூவரும் சொன்னால் சொன்னதுதானே?

கார் புறப்பட்டது கோபிச்செட்டிப் பாளையத்தை நோக்கி. அங்கேயும் ஊருக்குள்ளே காரை விடச் சொல்ல வில்லை; ஊரைத் தாண்டி ஒரு மலைப் பிரதேசத்தில் காரை நிறுத்தச் சொன்னாள்.

ஒரு பெரிய ஏரியின் கரையில் கார் நின்றது. அந்த ஏரி தண்ணீரைக் கண்டு எவ்வளவு நாள் ஆகியிருக்குமோ!

ஏரிக்கு நடுவிலே கருவேல மரங்கள் முளைத்திருந்தன. ஆனால் சரசுவின் கண்களுக்கு அந்த ஏரி நிரம்பி வழிவது போலவே தோன்றிற்று. ஏராளமான வாத்துக்கள் நீந்துவது போல் தோன்றிற்று. ஏரி முழுவதிலும் பாம்புகள் நெளிவதுபோல் அலை நெளிந்து நெளிந்து செல்லும் காட்சி தென்பட்டது.

அதோ, அந்த ஏரிக்கரையிலே பஞ்சாயத்துப் பார்த்திபன் மகள் தங்கம் தண்ணீர்க் குடத்தோடு போய்க் கொண்டிருக்கிறாள்.



அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னால் சரசுவின் சிந்தனை பறந்தது. அந்த ஏரியின் கரையையொட்டி பன்னாரி மேட்டுப்பட்டி என்றொரு ஊர் அப்போது இருந்தது. கொங்கு நாட்டைப் பல்வேறு மன்னர்கள் மாறி மாறி ஆண்ட சமயம்.

அந்த மேட்டுப்பட்டியில் ஒரு பஞ்சாயத்துச் சபை உண்டு. அந்தச் சபையில் ஐந்து பேர் உறுப்பினர்கள் உண்டு. அவர்களுக்குத் தலைவர் பார்த்திபனார்.

பார்த்திபனுக்கு இரண்டு தாரங்கள். மூத்த தாரத் துக்கு ஐந்து பெண்கள்; ஒரு பையன். இரண்டாம் தாரத் துக்கு மூன்று பெண்கள்: ஒரு பையன்.

மூத்த தாரத்தின் முதல் பெண்தான் தங்கம். அவள் கொஞ்சம் கருப்புத்தான். ஆனால் சிலை வடித்தது போன்று அழகாக இருப்பாள்.

பார்த்திபனார் முதல் தாரத்தை அதிகம் கவனிக்காத தால், அந்த வீட்டில் வேலைக்காரர்கள் இல்லை- வீட்டு வேலைகளைப் பெண் குழந்தைகளே செய்ய வேண்டி யிருந்தது.

தண்ணீர் எடுப்பதிலிருந்து சமையல் செய்வதுவரை தங்கம்தான் செய்வாள்.

முன்னூறு வீடுகள் கொண்ட அந்தக் கிராமத்தில் தங்கத்தின் திறமை யாருக்கும் வராது என்பார்கள். 'கருப்பில் அழகியடா' என்று குறவஞ்சியில் வருவதுபோல கருப்பிலே மினு மினுக்கும் அழகைக் கொண்டிருக்கும் தங்கம், ஊர் மக்களின் கவனத்தைக் கவர்ந்திருந்தாள்.

குனிந்த தலை நிமிரமாட்டாள்; சப்தம் போட்டுப் பேச மாட்டாள். பூமி அதிர நடக்க மாட்டாள்; அடி மேல் அடி எடுத்து வைப்பாள். இவையெல்லாம் அவளுக்கான இலக்கணங்கள்.

ஊரிலே எவனாவது கவிஞன் இருந்தால், அவளைப் பற்றி ஒரு காவியமே பாடி இருப்பான்.

கற்பிலே கண்ணகி என்றும், வனப்பிலே சீதை என்றும் ஊரார் பேசிக் கொள்வார்கள். இவ்வளவிருந்தும் அவளைக் கட்டிக்கொள்ள யாரும் முன்வரவில்லை.

'வயது இருபத்தெட்டு ஆகிவிட்டதே. மகளுக்குத் திருமணமாகவில்லையே' என்ற கவலை அவளது தாய் அன்னபூரணியை வாட்டி எடுத்தது.

கணவர் இரண்டாம் தாரம் செய்து கொண்டதி லிருந்து அவரது முகத்தையே பாராதிருந்தாள் அன்னபூரணி. அவரோ வசதியாக இருந்தும்கூட மகளுக்குத் திருமணம் செய்வதை இரண்டாம் தாரமான மகேஸ்வரி அனுமதிக்கவில்லை.

தந்தை மகளைச் சந்திப்பதே அந்த ஏரிக்கு அவள் தண்ணீர் எடுக்க வரும் போதுதான்.

மகளைப் பார்த்தால் கண் கலங்குவார் : ஆனால் மனைவிக்குப் பயந்த மழுங்கலாகக் காட்சியளித்தார்.

''பரவாயில்லே அப்பா! திருமணம் ஆகாவிட்டால் என்ன? என் தாய் ஒரு தெய்வம். அந்தத் தெய்வத்தின் திரு முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாலே, எனக்குப் போதும். நாளைக்கே திருமணமாகிப் புருஷன் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற துடிப்பு ஒன்றும் எனக்கில்லை. கால நேரம் வந்து எல்லோர்க்கும் கருணையும் வந்தால் ஆகட்டும். இல்லையென்றால் மாரியம்மன் விட்ட வழி!'' என்றே ஒரு தடவை தந்தையிடம் சொல்லி விட்டாள் தங்கம்.

தங்கத்துக்கு இனிமையான குரல் உண்டு. ஏரியிலே குடத்தை மிதக்க வைத்துவிட்டுக் கொஞ்ச நேரம் பாடிக் கொண்டிருப்பாள். ஆயர்குலச் சிறுவர்களின் புல்லாங் குழலை ரசிப்பாள். அக்கம்பக்கம் பார்த்துவிட்டு ஒரு பழைய சேலையைக் கட்டிக்கொண்டு குளிப்பாள். பிறகு முன்பு கட்டியிருந்த சேலையையே திரும்பக் கட்டிக் கொண்டு கூந்தலை விரித்துப் போட்டபடி குடத்தை



இடுப்பிலே வைத்துக் கொண்டு நடப்பாள்.

மஞ்சள் பூசிய திருக்கோலத்தில் அவள் வருவதைப் பார்த்தால், மாரியம்மனே வருவது போலிருக்கும்.

ஒவ்வொரு நாளும் அவளை எண்ணியே கவலைப்பட்ட அன்னபூரணி, தான் மிதிக்காத சக்களத்தியின் வாசற் படியை மகளுக்காக மிதிக்க முடிவு கட்டினாள்.

''வேண்டாம் ஆத்தா. அங்கே போய் நீ அவமானப் பட வேண்டாம். அதைவிட நான் உன்னுடனேயே இருந்து விடுகிறேன்'' என்று கெஞ்சினாள் தங்கம்.

வரிசையாக ஐந்து பெண்கள் முதல் வீட்டிலே காத்துக் கொண்டிருக்கும்போது, பதினாறு வயதுகூட நிரம்பாத இரண்டாவது தாரத்தின் மகள் பொற்கொடிக்கு மணம் பேசத் தலைப்பட்டார் தந்தை.

பொற்கொல்லர்கள் தனியாகவே ஒரு அறையை எடுத் துக்கொண்டு நகை செய்யத் தலைப்பட்டார்கள். வீடு முழுக்கப் பட்டுக் கண்டாங்கிகள் வந்து இறங்கின.

மாப்பிள்ளை கடலோடும் வணிகனாம். சோழநாட்டுத் துறைமுகத்திலிருந்து ஆறு திங்களுக்கு ஒரு முறை அவனது இரண்டு கப்பல்கள் கடாரத்திற்குச் செல்லுமாம்.

மகேஸ்வரி இதைப் பற்றியே பேசினாள்.

ஊராருக்குத் தெரிந்தால் மட்டும் போதுமா? மூத் தாளின் காது கேட்கவும் பேசினாள்.

எதையுமே பேசி அறியாத அன்னபூரணி அதையும் கேட்டுக் கொண்டாளே தவிர, யாரிடமும் பேசவில்லை.

அந்த வீட்டில் அவ்வளவு ரகளைகள் நடந்தும், தங்கம் கண்கலங்கவில்லை. தாய் கலங்காமலிருந்தால் போதும் என்பதே அவள் கொள்கையாக இருந்தது.

தை மாதம் பதினேழாம் தேதி திருமணமாம்!

''அன்றைக்கு நாம் ஏன் அந்த ஊரிலே தங்கவேண்டும்? இரண்டு நாட்களுக்கு முன்னாலேயே எங்கேயாவது போய் விடலாம்'' என்றாள் அன்னபூரணி.

தாயாரைச் சுற்றி அமர்ந்திருந்த பெண்களும், பையனும் கண்களைத் துடைத்தவாறே, 'சரி' என்றார்கள்.

மூத்தவளிருக்க இளையவளுக்குத் திருமணம் செய்ய முயன்ற மகேஸ்வரி, மேலும் அன்னபூரணியைக் குத்த விரும்பி 'பாக்கு' வைக்க வந்தாள்.

சொந்த வீட்டிலேயே பாக்கு வைக்கும் அதிசயத்தை அன்றுதான் கண்ட அன்னபூரணி, பாயெடுத்துப் போட்டு அவளை உட்கார வைத்தாள். 'கல்யாணத்துக்கு அவசியம் வந்து விடுவதாக'வும் கூறினாள்.

கெட்ட காரியம் நடந்த வீட்டில் கெட்டி மேளம் கொட்டிவிட்டுத் திரும்புவதுபோல் மகேஸ்வரி திரும்பினாள்.

அன்னபூரணியும், குழந்தைகளும் அன்றிரவு தூங்கவே இல்லை.

தாயாருக்கு ஏதும் ஆகிவிடக் கூடாதே என்று அகல் விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டு, கண்விழித்தபடி இருந்தாள் தங்கம்.

மறுநாள் பொழுது புலர்ந்தபோது தாயாரை ஆறுதல் செய்ய வேண்டி, ''ஆத்தா! இன்று நாம் வெளியூருக்குச் சென்றுவிடுவோம். ராய கவுண்டன் பட்டியில் உள்ள சித்தி வீட்டுக்குப் போய் விடுவோம்'' என்றாள், தங்கம்.

''அதைத்தான் ஆத்தா நானும் நினைத்துக் கொண்டிருந்தேன். சித்தி கூட உனக்கு எங்கோ மாப்பிள்ளை பார்த்தானாம். பத்து நாட்கள் அங்கே தங்கிவிட்டு வரலாம்.



அவளுக்கும் தோட்டம் நன்றாக விளைந்திருக்கிறதாம்'' என்றாள், அன்னபூரணி.

எல்லோரும் ஒரு பெரிய மாட்டு வண்டி ஒன்றை அமர்த்திக்கொண்டு ராயகவுண்டன் பட்டிக்குப் புறப்பட்டார்கள்.

அந்த ஊர் போய்ச் சேருகிறவரை அதுதான் பொற்கொடிக்குப் பார்த்த மாப்பிள்ளையின் ஊர் என்பது அவர்களுக்குத் தெரியாது.

வண்டியின் முன்பக்கம் அன்னபூரணியும், பின் பக்கம் தங்கமும் உட்கார்ந்திருந்தார்கள். நடுவில் மற்றவர்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

ஊருக்குள் வண்டி வந்தபோது குதிரையில் வந்த ஓர் ஆணழகன், தங்கத்தைப் பார்த்துக் கண்களை எடுக்க முடியாதவனானான்.

## 19. தெம்மாங்கு-II

கூலவாணிபத் தெரு வழியாகவும், சில்லறைக் கடைகள் உள்ள நாளங்காடி வழியாகவும் வண்டி வந்தபோது, அதைப் பின் தொடர்ந்தே வந்து கொண்டிருந்தான் புரவியில் வந்த வாலிபன்.

ஏராளமான புரவிகள் நடமாடும் இடத்தில் அவன் மட்டும் ஆச்சரியமாகக் காணப்பட்டான்.

சாதாரணமாக அவன் புரவியில் அங்காடி வழியாக வருவதில்லையாம். ஊரிலுள்ள பெரும் வணிகனாதலால் சில்லறை வணிகர்களெல்லாம் அவனைச் சிரம் தாழ்த்தி வணங்கினார்கள்.

அவனுக்கு கூலவாணிகமும் உண்டு. பிறவகையான இறக்குமதி வாணிபமும் உண்டு.

வெளி தேசங்களிலிருந்து விலையுயர்ந்த புரவிகளை வரவழைத்து விற்பனை செய்வதில் வல்லவன்.

ஆகவே அங்காடியில் எல்லோருமே அவனுக்கு மரியாதை செய்தார்கள்.

எல்லோராலும் மதிக்கப் பெறுகின்ற ஒருவன் தன்னையே பார்த்துக்கொண்டு வருவது தங்கத்துக்கு வியப்பாகவும் அதே நேரத்தில் உள்ளுக்குள் சந்தோஷமாகவும் இருந்தது.

சித்தி தெய்வநாயகியின் வீட்டருகே வண்டி வந்து நின்றபோது அந்த வீட்டை நன்றாகக் கவனித்துக் கொண்டு வாலிபன் போய்விட்டான்.

அப்போது வாசலில் நின்ற தெய்வநாயகி, அவனைப் பார்த்து மரியாதையோடு வணக்கம் தெரிவித்ததையும் தங்கம் கவனித்தாள்.

தங்கத்தை, எல்லோரும் வீட்டிலே செல்லமாக 'தங்கம்' என்றழைத்தாலும், சித்தி தெய்வநாயகி 'மாணிக்கவல்லி' என்றுதான் அழைப்பாள். அப்படியும் ஒரு பெயர் தங்கத்துக்கு உண்டு.

ஒவ்வொருவருக்கும் இரண்டு பெயர் வைப்பது அந்நாளைய வழக்கம். அதனை 'இட்ட பெயர்' என்றும், 'அழைக்கும் பெயர்' என்றும் உரைப்பார்கள்.

''அடி, மாணிக்கவல்லி! எனக்கு இடது கண் துடித்ததடி, காலையிலேயே காகம் கரைந்தது. அவரும் வாணிபத்துக்குப் போய்விடுகிறார். நான் தனியாகவே கிடக்கிறேனே, இந்த வீட்டில் நீங்கள் எல்லோருமே என்னோடு தங்கிவிடக் கூடாதா?'' என்று ஆதங்கத்தோடு கேட்டாள் தெய்வநாயகி.



''தங்கலாம் என்று தான் வந்தோம். கிராமத்தில் சக்களத்தியின் கொண்டாட்டம்; அதிகமாகி விட்டது. இத்தனை வயதாகியும் இவளுக்குத் திருமணமாகவில்லை. சக்களத்தி மகளுக்கு நாளை மறுநாள் திருமணம். ஊர் மக்கள் முகத்தில் விழிக்க முடியாமல் புறப்பட்டு வந்து விட்டோம்'' என்றாள் அன்னபூரணி.

''ஆமாம். ஆமாம். இப்போது உங்கள் பின்னாலேயே புரவியில் வந்தானே, அரச நாராயணன், அவன் தான் மணமகன். நாளை இங்கிருந்து நூற்றுப்பத்து வண்டிகள் புறப்படுகின்றன. ஏறக்குறைய ஊரிலே பாதிப்பேர் போவார்கள் போலிருக்கிறது. எங்களையும் கூட வந்து அழைத்தார்கள். அக்கா! உன் சக்களத்தி வீட்டிக்கு நான் எப்படிப் போவது? அதையே சொல்லிவிட்டேன்!'' என்றாள் தெய்வநாயகி.

தங்கத்துக்கு உள்ளூறப் பயம் வந்து விட்டது. 'அந்தப் பாவி நம்மையே பார்த்துக் கொண்டு வந்தானே. ஒருவேளை பெண் வேட்டைக்காரனாக இருப்பானோ?பாவம் தங்கை' என்று மனத்திற்குள்ளேயே எண்ணிக் கொண்டாள்.

''சரி, நேரமாகிவிட்டது. வழியெல்லாம் உங்களுக்கு என்ன கிடைத்திருக்கப் போகிறது?வழிப்போக்கர் சத்திரங்களிலெல்லாம் இறங்கி இரண்டு நாழிகைக்குப் பிறகுதான் சாப்பாடாகும். உங்களைப் பார்த்தாலே வாட்டமாகத் தெரிகிறது. நான் சமைக்கிறேன்'' என்று எழுந்தாள் தெய்வநாயகி.

''நான் சமைக்கிறேன்!'' என்று இடுப்புச் சேலையை வரிந்து கட்டினாள் தங்கம்.

ஒரு பெண் பாத்திரம் கழுவ ஒரு பெண் காய்கறி நறுக்க எல்லோருக்கும் ஒரு புது நிம்மதியும் மகிழ்ச்சியுமே ஏற்பட்டது.

எப்படியோ திருமணத்தன்று அங்கிருந்து செத்துச் செத்துப் பிழைக்காமல், நல்ல நேரத்தில் தப்பி ஓடி வந்து விட்டது போலவே தோன்றிற்று.

''அந்த மங்கல வாத்தியங்களின் ஓசை மட்டும் தங்கத்தின் காதுகளில் விழுந்திருக்குமானால் அவள் மடிந்து போவாளே' என்று அன்னபூரணி கலங்கினாள்.

'திருமணத்தன்று அங்கிருந்திருந்தால் தாய் இறந்து போவாளே' என்று தங்கம் நினைத்தாள்.

கடலில் விழுந்தவர்கள் கரையேறி விட்டது போன்ற ஒரு நிம்மதி.

சோறு தளதளவென்று கொதித்துக் கொண்டிருந்தது. குழம்பு வெந்து கொண்டிருந்த சட்டி மேலே மூடியிருந்த மூடியைத் தூக்கித் தூக்கிப் போட்டது.

பேச்சும் பரபரப்புமாக வீடு கலகலவென்றிருந்தது.

அப்போது வெளியே பறையறிவிக்கும் சப்தம் கேட்டது.

சின்னப் பெண் செவ்வல்லி வெளியே வந்து கேட்டாள். பறை அறிவிப்பவன் பின்வருமாறு சொன்னான். ''வணிகப் பெருமகனார் அரசநாராயணன் திருமணம் தள்ளி வைக்கப் பட்டுள்ளது. நாளை யாரும் புறப்பட வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொள்கிறார்.''

—இவ்வளவுதான் அறிவிப்பு.

'வேறொரு நாள் எது?' என்பதை அறிவிப்பாளன் சொல்லவில்லை.

''அக்கா அக்கா! இங்கே வா வா'' என்றழைத்தாள் செவ்வல்லி.

தங்கம், அன்னபூரணி, தெய்வநாயகி எல்லோருமே வெளியிலே வந்து அறிவிப்பைக் கேட்டார்கள்.

திரும்ப உள்ளே வரும்போது, தெய்வநாயகி சொன்னாள். ''அப்பனுக்குப் புத்தி இல்லாவிட்டாலும் தெய்வம் ஒன்று இல்லாமலா போகிறது?''



அன்னபூரணி கேட்டாள். ''ஏன் திருமணம் நின்று போய்விட்டது?''

''என்னவோ தெரியவில்லை, அரச நாராயணனின் தாயார் எனக்கு மிகவும் வேண்டியவர்கள். அவர்களிடம் கேட்டுப் பார்க்கிறேன்!'' என்றாள் தெய்வநாயகி.

தங்கத்தைத் தவிர பாக்கி தங்கைகளெல்லாம் இதை ஒரு வெற்றி விழாவாகத்தான் கொண்டாடினார்கள். 'அக்காளை அழ வைத்த அப்பாவும், அவளும் அழுது சாகட்டும்' என்று கறுவிக் கொண்டார்கள். அன்னபூரணிக்குக்கூட உள்ளூற அவளுடைய பண்பாட்டையும் கடந்து ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டது.

அன்றையச் சாப்பாடு, அவர்களுக்கே ஒரு கல்யாணச் சாப்பாடு போன்றிருந்தது.

அரச நாராயணனின் தாயாரைச் சந்திக்க மாலையில் தெய்வநாயகி அங்கே போவதாக இருந்தது. ஆனால் அதற்கு வேலையே இல்லாமல் அவர்கள் வீட்டு வாசலில் ஒரு அழகான ரதம் வந்து நின்றது. அந்த ரதத்திலிருந்து அரச நாராயணனின் அன்னையே இறங்கினார்.

பின்னால் வந்த வண்டிகளில் வெள்ளிப்பாத்திரங்கள். தட்டுகளில் பழவகைகள், பரிவர்த்தனைகள் வந்திறங்கின.

## 20. தெம்மாங்கு-III

அவர்கள் வந்து இறங்குவதைப் பார்த்து, வாசலில் ஒரு சிறு கூட்டமே கூடிவிட்டது;

தெய்வநாயகி திகைத்துப் போய் வாசலுக்கு வந்தே அரச நாராயணனின் அன்னையை வரவேற்றாள். ''அடடா! நானல்லவா அங்கே வருவதாக இருந்தேன்.

இந்தத் தள்ளாத காலத்தில் தங்களுக்கு ஏன் தொல்லை!'' என்று கைத்தாங்கலாக உள்ளே அழைத்துச் சென்றாள்.

வந்திருக்கும் சீர் வரிசைகளைப் பார்த்து அன்னபூரணி திகைத்தாள். தங்கமோ ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

ஏதோ ஒரு அடையாளத்தைக் கொண்டு யாரோ ஒரு பெண்ணைத் தேடுவது போல் ஓடிய அந்த அம்மையார், கடைசியில் தங்கத்தைப் பார்த்து, ''வண்டி வரும்போது பின்னால் உட்கார்ந்திருந்தது நீதானா?'' என்று கேட்டார்.

நாணத்தோடு, ''ஆமாம்'' என்றாள் தங்கம்.

''பையன் பெண்ணைப் பார்க்கும் போது கழுத்தையும் நன்றாகக் கவனித்திருக்கிறான்! அடி, தெய்வநாயகி, அவர்கள் உனக்கு எப்படி முறை?'' என்று கேட்டார், அரச நாராயணனின் தாயார். அவர் பெயர் மங்கையர்க்கரசி.

தன் உடன் பிறந்த அக்காள் என்பதைத் தெளிவு படுத்தினாள், தெய்வநாயகி.

''என் மகன் இந்தப் பெண்ணைப் பார்த்ததிலிருந்து தான் திருமணத்தையே நிறுத்தச் சொல்லிவிட்டான். மணந்தால் இவளைத்தான் மணப்பேன் என்று பிடிவாதமாக இருக்கிறான். எங்களுக்கு இருக்கிற சொத்து சுகம் உனக்குத் தெரியும். இதில் அது இது என்று விளக்கங்கள் சொல்லிக் கொண்டிராமல் உடனடியாக அவர்கள் ஒப்புதல் தரவேண்டும். நாளை மறு நாள் அதே முகூர்த்த நேரத்தில், இங்கேயே திருமணத்தை நடத்திவிடுவோம். அவர்கள் ஒன்றும் சீர்வரிசைகள் செய்ய வேண்டியதில்லை. எல்லாம் எங்கள் பொறுப்பு'' என்றார், மங்கையர்க்கரசி.

தெய்வநாயகி குறுக்கிட்டாள்.

''பெருமாட்டி! என்னை மன்னிக்க வேண்டும். தங்கள் மகனுக்குத் திருமணம் செய்வதாக இருந்தது. என்



அக்காளது சக்களத்தியின் மகள்தான். மூத்தவள் இருக்க இளையவளுக்குத் திருமணம் நடக்கிறதே என்ற கவலையில் தான் அவர்கள் இங்கே புறப்பட்டு வந்தார்கள். வரும் போது இந்த ஊர் தான் மணமகளின் சொந்த ஊர் என்பது தெரியாது. அந்த திருமணத்தை நிறுத்திவிட்டு, எங்கள் குழந்தையைக் கொடுப்பது எப்படி?'' என்று கேட்டாள், தெய்வநாயகி.

அதையே கேட்க நினைத்தவள் போல் தலையாட்டினாள் அன்னபூரணி.

விஷயம் இப்படி என்றறிந்ததும் வேறு பக்கம் போய் மறைந்து கொண்டாள், தங்கம்.

''இதில் சம்பிரதாயங்களுக்கென்ன வேலை? நீயே சொல்லுகிறாய் மூத்தாளிருக்க இளையாளுக்குத் திருமணமாக இருந்ததென்று! இப்போது நியாயம் அரங்கேறப் போகிறது. அவ்வளவு தானே?'' என்றார், மங்கையர்க்கரசி.

தெய்வநாயகி கைகளைப் பிசைந்தாள். ஆசை ஒருபுறம், அச்சம் ஒருபுறமாக அவள் தவித்தாள்.

'கணவனோடு இன்னும் ஜென்மப் பகை வந்து சேருமே?' என்று கலங்கினாள், அன்னபூரணி.

ஆனால் எல்லோருக்குமே கோடிக் கதிபதி வீட்டில் பெண் கேட்கிறார்களே என்ற பெருமிதம் இருந்தது.

கடைசியில் தெய்வநாயகிக்கு ஒரு துணிச்சல் வந்தது.

'நம் அக்காளை இவ்வளவு அவமானப் படுத்தியவர்களுக்காக நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? தங்கம் ஓர் அந்தஸ்தில் போய் அமர்ந்துகொண்டால், எல்லோரும் போய் அவள் கால்களில் சரணடைய மாட்டார்களா?' இப்படி ஒரு வஞ்சகமும் எழுந்தது.

அக்காளை தனியே அழைத்துக் கொண்டு பேசி பேசிக் கரைத்தாள்.

தங்கையின் வார்த்தைக்கு மறுவார்த்தை சொல்ல முடியாதவளாக, அக்காள் ஆனாள்.

சம்மதத்தைத் தெரிவித்து விட்டாள், தெய்வநாயகி.

தங்கத்துக்கோ மகிழ்ச்சியைவிடப் பயமே அதிகமாக இருந்தது? அப்பாவுக்கும் ஆத்தானுக்கும் இடையே என்ன ஆகுமோ என்பதே கவலையாக இருந்தது.

அவளையும் தேற்றினாள், தெய்வநாயகி.

ஐநூறு வராகன் பெறக்கூடிய வெள்ளிப் பாத்திரங்களை அங்கே வைத்துவிட்டு, மருமகளுக்குக் குங்குமச் சாந்து அணிவித்துவிட்டுப் புறப்பட்டாள் மங்கையர்க்கரசி.

மறுநாள் நகரமெங்கும் பறையறிவிப்பு: மூன்றாவது நாள் திருமணம். பளிங்கு மேடையில் மாக்கோலமிட்டு எண்பது வகை மலர்களாலே அதை அலங்கரித்து, மணமக்களை அமர்த்தினார்கள்.

அந்த நீலப் பட்டாடையில் 'தங்கம்' என்ற மாணிக்க வல்லி ஜொலித்தாள்.

ஆனால் திருமணம் நின்று போய்விட்ட செய்தி கிடைத்ததும் ஊரிலே தலை காட்ட முடியாமல் மறுநாளே மனைவியை அழைத்துக் கொண்டு புறப்பட்ட தங்கத்தின் தந்தை, சரியாக மாங்கல்யம் சூட்டும் நேரத்தில் பந்தலுக்குள் நுழைந்தார்.

அங்கே ஒரு திருமணம் நடப்பதையும், அமர்ந்திருப்பது தன் மகளே என்பதையும் கண்ட அவர் ஒன்றும் புரியாமல் திகைத்தார்.

கூட்டத்தோடு கூட்டமாக நின்ற அவரையும் அவரது இளையாளையும் யாரும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை.

தங்கத்தின் அலங்காரத்தையும் அன்னபூரணியின் ஆனந்தத்தையும் கண்டு கொதித்தாள் மகேஸ்வரி.



ஆத்திரம் தாங்க முடியாமல் பார்த்திபனார் மணவறையை நோக்கி விரைந்தார். ''தங்கம்! எழுந்திரு!'' என்று கத்தினார்.

திடீரென்று தந்தையைக் கண்ட தங்கம், நெருப்பை மிதித்தவள் போலானாள். ''அப்பா!'' என்றாள். அன்னபூரணி நடுங்கினாள்.

அப்பொழுதே புரிந்து விட்டது, அரச நாராயணனுக்கு.

ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்தார் பார்த்திபனார். சபை, சலசலத்தது.

ஒன்று என்றால் பத்துப் பேசும் கிராமமாயிற்றே!

எழுந்து நின்ற ஊர் மக்கள் ஒவ்வொரு மூலையிலும் ஒவ்வொன்றைப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''பஞ்சாயத்தைக் கூட்டுவேன்'' என்று கத்தினார் பார்த்திபனார்.

அன்னபூரணி மூர்ச்சையுற்று விழுந்தாள்.

என்ன செய்வது? மாங்கல்யம் சூட்டப்பட்டு விட்டது.

செல்வாக்குப் படைத்த அரச நாராயணன் அவரைக் கொன்றிருப்பான். ஆனால் ஊர் மக்கள் மத்தியில் காரியம் நடந்துவிட்டதனால், செயலற்றவனானான்.

தகப்பனுக்குத் தெரியாமல் மகளைக் கூட்டி வந்த குற்றம் பற்றி விசாரிக்க, பஞ்சாயத்து அன்றிரவே கூடிற்று.

பஞ்சாயத்தார் முன்னிலையில் சாட்சி சொல்ல வேண்டியவள் அன்னபூரணி.

தன்னைக் கணவன் ஒதுக்கி வைத்ததையும், தான் பிரிந்து வாழ்வதையும், தன் மகள் வயது வந்தவள் என்பதையும் அவள் வாயால் சொல்லி விட்டால், பார்த்திபனார் தலை குனிந்து போக வேண்டியிருக்கும்.

பஞ்சாயத்துச் சவுக்கையின் முன்னால் அன்னபூரணி எப்படித் தோன்றுவாள்? கணவனே தெய்வம் என்று வாழ்ந்த கண்ணகி ஆயிற்றே அவள்.

மகள் தங்கத்தை அழைத்தாள். ''ஆத்தா! சபையின் முன்னால் நான் வரக் கூடாது. சபையின் முன்னால் நீயே சென்று, நீ வயது வந்தவள் என்பதையும், உன் இஷ்டப் படி ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமை உண்டு என்பதையும் சொல்லிவிட்டால் உன் வாழ்வும், என் மானமும் காப்பாற்றப்பட்டுவிடும். நீ என் மகளல்ல; என் தாய். இந்த நேரத்தில் எனக்கிந்த உதவியைச் செய்ய மாட்டாயா?'' என்று கெஞ்சினாள்.

தாயின் கண்ணீரைக் கண்ட மகள், தைரியம்மிக்கவளா னாள். தெய்வநாயகியும் துணிச்சலை ஊட்டினாள்.

துணிந்து சபைக்குச் சென்றாள் தங்கம்.

சபையின் முன்பு எண்ணெய் விளக்குகள் நூற்றுக் கணக்கில் எரிந்து கொண்டிருந்தன. பெரும் கூட்டம் கூடி யிருந்தது.

''உன் தாய் வரவில்லையா?''

''ஏன், நான் வந்தால் போதாதா?''

''இவர் உன் தந்தைதானே?''

''சிறு வயதில் பார்த்திருக்கிறேன்!''

''தந்தைக்குத் தெரியாமல் ஓடிவந்ததேன்?''

''எனக்கு வயது இருபத்தியாறு!'' —சபையில் முணு முணுப்பு: பரபரப்பு.

''வயதாகி விட்டால் ஓடி வரலாமோ?''

''தந்தை மகளைப் பற்றிச் சிந்திக்காமலும் இருக்க லாமோ?''



—மீண்டும் சபை முணு முணுப்பு.

பழக்கத்துக்கும், அவளது பண்பாட்டுக்கும் விரோத மாக தங்கம் சரமாரியாகப் பொழிந்து தள்ளிவிட்டாள்.

''திருமணம் தவறில்லை'' என்று தீர்ப்பாகி விட்டது.

பார்த்திபனார் கொதித்தார். எங்கே அன்னபூரணி என்று ஓடினார். தெய்வநாயகியின் வீடு அவருக்குத் தெரியும்; அங்கே அவர் ஓடினார்.

அங்கே மரண தருவாயில் இருந்தாள் அன்னபூரணி.

அவளைக் கடுமையாகப் பேசுவதற்கு வந்த பார்த்திப னார் வாயடைத்துப் போனார். ஆனால், அந்த கல்மனத் தவரின் கண்களில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வெளி வரவில்லை.

''சாகட்டும்'' என்று சொல்லிவிட்டு அவர் வெளி யேறும்போது, ''ஆத்தா!'' என்று ஓடி வந்து தங்கம் அவள் மீது விழுந்தாள்.

அவள் தலையைத் தொட்டு ஆசிர்வதித்த அன்ன பூரணியின் ஆவி பிரிந்தது.

இறுதிக் காரியங்களுக்குப் பார்த்திபனும் இல்லை. அவனது துணையாளுமில்லை.

ஆனால் ராஜமரியாதையோடு அந்தச் சடலத்தை அடக்கம் செய்தான், அரச நாராயணன்.

அப்பாவிப் பிள்ளையாக வளர்ந்துவிட்ட அன்னபூரணி யின் ஒரே மகன் கொள்ளிவைத்தான்.

தாயைப் பிரிந்த பெண்ணையும், பையனையும், தன்னுடனேயே வைத்துக் கொண்டான் அரச நாராயணன்.

பிறகு தங்கம் என்ற மாணிக்க வல்லியின் மன நிம்மதிக் காக, இரட்டைக் குதிரைகள் பூட்டிய எட்டு ரதங்களில்

பொருள்களையும் வேலையாட்களையும், தங்கத்தையும், அவளது சகோதரிகளையும் ஏற்றிக்கொண்டு தீர்த்த யாத்திரை புறப்பட்டான்.

ராயகவுண்டன் பட்டியில் அவனுக்கிருந்த அளவு செல்வாக்கு, பன்னாரி மேட்டுப்பட்டியில் பார்த்திபனாருக்கும் இருந்தது.

இவர்களது நடவடிக்கைகளைக் கவனிக்க, சில கையாட்களையே அவர் அங்கே நியமித்திருந்தார்.

அவர்களும், அரச நாராயணனுக்கு தெரியாமல் பின் தொடர்ந்தார்கள்.

பல்வேறு திருத்தலங்களுக்குச் சென்ற பிறகு, வடுகர் நாட்டில் அவர்கள் சாரதாம்பாள் ஆலயத்திற்கு வந்து சேர்ந்தார்கள்,

## 21. பாகேஸ்வரி

வடுகர் நாட்டில் இந்து சமயம் தழைத்தோங்கிய காலம் அது. சேர, சோழ, பாண்டிய நாடுகளில் பௌத்தமும், ஜைனமும் இந்து மதத்துக்கு இணையாக வளர்ந்திருந்த நேரத்தில், வடுகர் நாட்டில் மட்டும் இந்து மதமே மேலோங்கி நின்றது.

காஞ்சி காமகோடி பீடத்தின் முயற்சியால் தமிழகத்தில் இந்து மதம் வளர்ந்தது போல, சிருங்கேரி சாரதா பீடத்தின் முயற்சியால் வடுகர் நாட்டிலும் இந்து மதம் வளர்ந்தது.

அரச நாராயணனும், தங்கமும் குடும்பத்தினரும் நேரே சாரதா பீடத்திற்குச் சென்றனர்.

நன்கு குளித்து முழுகி பரிசுத்தமாக வந்திருந்த அவர்களுக்கு, சுவாமிஜி காட்சி தந்தார்.



சங்கரமடத்து அதிபதிகளில் யாரும் அதிகமான வாக்கு கொடுப்பதில்லை. வலது கையைத் தூக்கி ஆசீர்வாதம் செய்வார்கள். அவ்வளவுதான்,

ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் அவர்களை ஆசீர்வதித்தார். தங்கம் கீழே விழுந்து வணங்கியபோது, அவள் கழுத்தில் தொங்கிய மாங்கல்யம் தரையைத் தொட்டது.

ஆச்சாரிய சுவாமிகள் ஏனோ அரச நாராயணனை அனுதாபத்தோடு கவனித்தார்.

ஒரு வெற்றிலையில் கொஞ்சம் குங்குமமும், தங்கத்தாலான சாரதாம்பாள் முத்திரைக் காசும் அவர் அவர்களுக்குக் கொடுத்தார்.

பக்தியோடு அவர்கள் நேரே சாரதாம்பாள் கோவிலுக்குச் சென்றார்கள். கோவிலைப் பிரகாரம் வந்து கொண்டிருக்கும்போதுதான், ''முத்திரைக் காசை எங்கே வைத்தாய்?'' என்று தங்கத்தைக் கேட்டான் அரச நாராயணன்.

அவள் மடியிலும், மார்புக் கச்சிலும் தேடிப்பார்த்தாள்; காசைக் காணவில்லை. அவளுக்கும் அதை எங்கே போட்டோம் என்று தெரியவில்லை.

''ஐயோ, அதுஇருந்தால் சாரதாம்பாளின் முன்னிலையில் அதை மாங்கல்யத்தில் சேர்த்துப் போட்டுக்கொள்ளலாமே?'' என்றான் அரசநாராயணன்.

அந்த நேரத்தில் பார்த்திபனார் அனுப்பிய ஆட்கள், வடுக தேசத்து ஆட்களைப் போல மாறுவேடமணிந்து கோவிலுக்குள் பிரகாரம் வந்து கொண்டிருந்தார்கள்.

சாரதாம்பாளுக்கு தீபாராதனைகாட்டப்பட்டபோது, எதிரெதிரே இரண்டு வரிசையாக அவர்கள் நின்றார்கள். ஒரு வரிசையில் அரச நாராயணனும், தங்கமும், அவளது சகோதரியும், சகோதரனும் நின்றார்கள்.

அ தீபாராதனை வெளிச்சத்தைத் தவிர, வேறு எந்த வெளிச்சமும் மூலஸ்தானத்தில் இல்லை.

திடீரென்று பார்த்திபனாரின் ஆட்களில் ஒருவன் இடுப்பில் இருந்த கத்தியை உருவி அரசநாராயணனின் அடிவயிற்றில் ஓங்கிக் குத்தினான்.

''ஐயோ! தங்கம்'' என்று அலறினான் அரசநாராயணன். கூட்டம் பயந்து கலைந்து ஓடிற்று.

''ஐயோ சாரதாம்பாள்'' என்று அலறியபடி கணவனைத் தாங்கிக் கொண்டாள் தங்கம்.

''அக்கா! அக்கா;'' என்று சகோதரியும், சகோதரனும் கதறினார்கள்.

கோவிலிலிருந்து யார் கைக்கும் பிடிபடாமல், கொலைகாரர்கள் தப்பிவிட்டார்கள்.

கோயிலுக்குள்ளேயே இருந்த சித்த மருத்துவர், உடனடியாக அவனுக்குச் சிகிச்சையளித்து, பச்சிலை வைத்துக் கட்டி ரத்தம் வராமல் நிறுத்தினார்.

அதோடு அதிர்ச்சியும் ஆனந்தமும் அளிக்க ஒரு செய்தியையும் சொன்னார்.

''நிச்சயமாக உயிருக்கு ஆபத்தில்லை'' என்று சொன்னது அவளுக்கு ஆனந்தத்தையளித்தது. 'ஆனாலும் இனி அவர் ஓர் ஆண் மகனாக இயங்கமுடியாது'' என்று அவர் கூறியது அவளுக்கு லேசான கவலையைத் தந்தது

ஆண்மை என்ற இயக்கம் இல்லாவிடினும் கணவன் உயிரோடிருப்பார் என்பதிலேயே அவள் பெரிதும் மகிழ்ச்சியுற்றாள்.

தீர்த்தயாத்திரையை முடித்துக்கொண்டு, கணவனோடு ஊர் திரும்புவது என்று தங்கம் முடிவு கட்டினாள்.



வழிநெடுக மாற்றிக் கட்டுவதற்கு, மருத்துவர் நிறைய மூலிகைகளைக் கொடுத்தார்.

வழியில் மீண்டும் கொலைகாரர்கள் வந்துவிடக் கூடாதே என்று பயந்து தங்களுடன் இருந்தவர்களோடு மேலும் பத்துக் கிராமவாசிகளை வடுகர் நாட்டிலிருந்து அழைத்துக் கொண்டு கணவனோடு தங்கம் ஊருக்குப் புறப்பட்டாள்.

ரதத்தில் தன்மடியிலேயே அவனைச் சாத்திக் கொண்டு, குழந்தை போல் அவனைக் கொஞ்சினாள்.

''எனக்கு வந்த கோபத்தில் சாரதாவின் சிலையையே நான் உடைத்திருப்பேன்'? என்றான் அரசநாராயணன்.

''ஐயோ, அப்படிச் சொல்லாதீர்கள்! அம்பிகை எப்போதும் தலைமாட்டில் நிற்பவள். நம்முடைய தலையெழுத்து இப்படி இருக்கும்போது அவள் என்ன செய்வாள்?'' என்றாள், தங்கம்.

வைத்தியர் சொன்னது போல, ராயகவுண்டன்பட்டி வருகின்றவரை அரசநாராயணனுக்கு எந்தவித ஆபத்தும் நேரவில்லை.

ஊரில் வந்து அவர்கள் இறங்கியதும், தங்கள் எஜமானனைப் பார்த்துப் பதறிப்போன ஊழியர்கள், எடுத்துக்கொண்ட முதற்சபதம் 'பார்த்திபனார் குடும்பத்தைக்கருவறுப்பது' என்பதே. அரசநாராயணனும் அதைத் தடுக்கவில்லை.

ஆனால் தந்தைக்கு ஏதும் நேர்ந்துவிடக்கூடாதே என்பதில் தங்கம் கொஞ்சம் அக்கறை உள்ளவளாக இருந்தாள்.

''உன் தந்தை என்னைக் கொலைசெய்ய முயற்சிக்கலாம். என்னுடைய ஆட்கள் அவரை மட்டும் கொல்லக் கூடாதோ....?'' என்று ஆத்திரமாகவே கேட்டுவிட்டான் அரசநாராயணன்.

''ஐயோ சாரதாம்பாள் மீது ஆணை! நீங்கள்தான் எனக்கு முக்கியம். ஏதோ ரத்தம் பேசி விட்டது. மன்னித்துக் கொள்ளுங்கள்!'' என்று அவன் கால்களைத் தொட்டுக் கும்பிட்டாள், தங்கம்.

அரசநாராயணனின் ஆட்கள் வைத்த குறி தப்ப வில்லை. சரியாகப் பன்னிரண்டாவது நாள், பார்த்திபனாருடைய சடலம், தங்கம் தண்ணீரெடுக்கும் ஏரிக்கரையில் கிடந்தது. அவருடைய தலை மட்டும் ஒரு 'பாலா' விலே சொருகப்பட்டு, மாமரத்தடியில் ஊன்றப்பட்டிருந்தது.

தந்தை இறந்ததற்கு தங்கம் உள்ளுக்குள்ளேயேதான் அழவேண்டியிருந்தது. அதைக் கூட அரசநாராயணனுக்குத் தெரியாமல்தான் செய்யவேண்டி இருந்தது.

ஆனால் அவளுடைய தங்கை, தம்பிகள் இரண்டு சொட்டுக் கண்ணீரோடு துக்கத்தைமுடித்துக் கொண்டார்கள்.

கோலாகலமாகத் திருமணம் நடத்த வேண்டிய மகேஸ்வரி, குமுறியழுது வெள்ளைப் புடவை கட்டிக் கொண்டாள்.

மகேஸ்வரியின் தம்பி வஞ்சம் தீர்க்க முனைந்தான்.

''என் உயிர் போனாலும் கவலை இல்லை'' என்று சபதமெடுத்து, ஐம்பது ஆட்களோடு மாறுவேஷத்தில் ராயக்கவுண்டன் பட்டிக்கு வந்தான்.

இப்படியெல்லாம் நடக்கக்கூடும் என்று எதிர்பார்த்து அரசநாராயணனுடைய மாளிகைக்கு அவனுடைய ஆட்கள் பெரும் காவல் போட்டிருந்தார்கள்.

அன்று இரவு அரசநாராயணனோடு சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தாள் தங்கம். படையெடுப்பு நடத்துவது போல், ஐம்பது பேர் வாளும் கையுமாக வந்து, காவலர்களைக் கொன்று குவித்துவிட்டு உள்ளே நுழைந்தார்கள்.



அரச நாராயணனைக் கட்டிப்போட்டுவிட்டு, மகேஸ்வரியின் சகோதரன் சித்திரன் அவன் கண்ணெதிரே தங்கத்தை நிர்வாணமாக்கிக் கற்பழித்தான்.

தங்கத்தின் கால்களையும் கைகளையும் தோழர்கள் பிடித்துக்கொள்ள சித்திரன் கற்பழித்து முடித்துவிட்டு கத்தியால் குத்தினான்.

அவளுக்கு அவ்வளவுதான் ஞாபகமிருந்தது.

—இப்போது கோபிசெட்டிப்பாளையத்துப் பன்னாரி மேட்டுப்பட்டி ஏரிக்கரையில் நின்ற சரக வில் என்று கத்தினாள்.

பக்கத்தில் நெருங்கிய கணவனைப் பார்த்து, 'சீ! போ என்னை நெருங்காதே!''' என்று ஆத்திரமாகப் பேசினாள்.

காரில் ஏறும்போது அவன் பக்கத்தில் உட்காரக் கூடாது என்று கண்டிப்பாக மறுத்துவிட்டாள். மாமியாருக்கு எல்லாமே ஆச்சரியமாக இருந்தது.

''ஏன்? என்ன விஷயம்?'' என்று, கெஞ்சும் பாவனையில் மருமகளைக் கேட்டாள்.

''அதை நான் சொல்ல மாட்டேன். போன ஜென்மத்தில் நான் மரணமடைந்ததற்கு அவர்தான் காரணம். இனி அவரை என் கணவராக ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன்!'' என்றாள் சரக.

''என்ன இது பிரமை! வெறும் அர்த்தமில்லாத பேச்சு? உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதால், எல்லோருக்கும் பிடிக்கவேண்டுமா? போன ஜென்மம், இந்த ஜென்மம், வெறும் பினாத்தல்!'' என்று முதன் முறையாகக் கடிந்து கொண்டார் மாமியார்.

''உங்களுக்கு எப்படித் தெரியும் என் கதை? எனக்குத் தெரியும்! அவர் இனி என்னை தொடவே முடியாது!

போன ஜென்மத்தில் செய்த பாவத்திற்குத்தான் இவருக்கு இந்த வியாதி வந்திருக்கிறது! நன்றாக அனுபவிக்கட்டும். எனக்கு எங்கோ போக வேண்டும் போல் தோன்றுகிறது! நான் போகிறேன்!'' என்று வெளியே ஓடினாள் சரசு.

அவளைத் தடுக்கப்போன தன் தாயாரைத் தடுத்து நிறுத்தினான் சிங்காரவேலன்.

தலைவிரிகோலமாக ஓடிய சரசு, ஒரு பஸ்ஸிலே ஏறிக் கொண்டாள், நேரே தனது கிராமத்துக்குப்புறப் பட்டாள்.

கிராமத்தில் அவளை எதிர்பாராத அவளது தாயார், ''என்ன அம்மா, கணவன் துணையில்லாமல் தனியாக வருகிறாய்?'' என்று கேட்டாள்,

''கணவனா அவன்? பேய், காமுகன், சண்டாளன். நீ எதையும் என்னிடம் கேட்காதே! பாமா எங்கே?'' என்று கேட்டாள்.

''அவள் கணவனோடு கொடைக்கானலுக்குப் போயிருக்கிறாள். எப்பொழுது பார்த்தாலும் அவளுக்குக் கொடைக்காவல்தான்?'' என்றார் தாயார்.

கோடைக்கானல் என்ற வார்த்தையைக் கேட்டதும் திடீரென்று சரசுவுக்கு நெற்றி வியர்த்தது. தன் போன ஜென்மக் கணவன் அரச நாராயணன் அங்கே இருப்பது போல அவளுக்குத் தோன்றிற்று.

## 22. தேவகாந்தாரி

பைத்தியக்காரர்கள் அனைவருமே உண்மையில் பைத்தியக்காரர்களல்ல. உலக நடைமுறைக்கு மாறான, அவர்களுக்கு மட்டுமே உதயமாகின்ற சில விஷயங்களைத் தனியாகச் சிந்திப்பவர்களும் பைத்தியக்காரர்கள் போலக் காட்சியளிக்கிறார்கள். மிக ஆழமாக அந்தச் சிந்தனை



அவர்களுக்குள் வேரூன்றிவிட்டால், அவர்கள் பைத்தியக்காரர்கள் என்றே பட்டம் சூட்டப் பெற்று விடுகிறார்கள்.

உண்மையில் சரசுவுக்குத் தோன்றிய விஷயங்கள், மற்றவர்களுக்குத் தோன்ற நியாயமில்லை. கோடியில் ஒருவருக்குத்தான் பூர்வ ஜன்மங்களைப் பற்றி ஞாபகம் வரும்.

எப்படியாவது தான் கோடைக்கானலுக்குப் போய், தன் போன ஜன்மத்துக் கணவனைச் சந்தித்துவிட வேண்டும்' என்று சரசு ஆசைப்பட்டாள். அதை அப்படியே தாயாரிடமும் சொன்னாள்.

அப்போதுதான் அவள் தாயாருக்கும் அவள் பைத்தியமோ என்ற சந்தேகம் பிறந்தது.

''நன்றாய் இருக்கிறது! என்ன பேசுகிறோம் என்ற பிரக்ஞையோடுதான் பேசுகிறாயா? கட்டிய கணவனை விட்டுவிட்டு வந்து, போன ஜன்மக் கணவனைத் தேடப் போகிறேன் என்கிறாயே, உனக்குப் புத்தி புரண்டு விட்டதா? விரும்பினால் பத்து நாட்கள் போய் பாமாவோடு இரு. ஆனால் என்னிடம் பேசிய மாதிரி வேறு யாரிடமும் பேசாதே! சரசு என்றால் தெய்வம் என்று ஊர் நினைக்கிறது. இப்படிப் பேசினால் பிசாசு என்பார்கள்!'' என்று கண்டித்தார், தாயார்.

தாயாருக்கு சரசு எந்தப் பதிலும் சொல்லவில்லை. பதில் சொல்லி விளங்கவைக்கக் கூடிய விஷயமா இது? ஒரு ஊமையின் கனவை அவள் மட்டும்தான் உணரமுடியும்.

சரசுவைப் பொறுத்தவரையில் விஷயம் அவளுக்குத் திட்டவட்டமாகத் தெரிந்தது.

இரண்டாவது ஜன்மத்தில் தன்னைக் கற்பழித்த மகேஸ்வரியின் தம்பிதான், இந்த ஜன்மத்தில் தனக்குக் கணவனாக வாய்த்திருக்கிறான். முதல் ஜன்மத்தில் தன்னைக் காதலித்தவனும் இரண்டாவது ஜன்மத்தில் பாமாவை மணந்து கொண்டவரும் ஒருவரே. இந்த

ஜன்மத்தில் அவர் கோடைக்கானலில்தான் இருக்கிறார்; இதில் அவளுக்குச் சந்தேகமே இல்லை.

''சும்மா எதற்காக வீண் பேச்சு? என் மனதில் சில படங்கள் விழுந்திருக்கின்றன. அவற்றை நான் நம்புகிறேன். புருஷன் வீட்டுக்கு போகும்படி என்னைத் தொல்லை செய்யாதே!'' என்றாள் சரசு.

''நான் அப்படிச் சொல்லவே இல்லையே. நீயாக ஏன் கற்பனை செய்துகொள்கிறாய்? கொடைக்கானலுக்குப் போய் பாமாவோடு இரு என்றுதான் சொன்னேன்!'' என்றார் தாயார்.

''நான் போகவேண்டும்; அதுவும் தனியாகப் போக வேண்டும்!'' என்றாள் சரசு.

''வேண்டாம். சின்னத் தம்பியின் காரில் கொண்டு போய்விட்டு வரச்சொல்கிறேன்'' என்ற தாயார், அதற்கு ஏற்பாடு செய்தார்.

சில மக்களுக்குத்தான் தாய்மார்கள் அமைகிறார்கள். சில தாய்மார்களுக்குத்தான் மக்கள் அமைகிறார்கள்.

கார் கோடைக்கானல் போய்ச் சேரும்வரை சரசு மனத்துக்குள்ளேயே ஒரு பெரிய சினிமாப் படத்தையே ஓட்டிக் கொண்டிருந்தாள்.

சில்லென்ற குளிர்ந்த காற்று அவள் சிந்தனைக்குச் சுகம் கொடுத்துக் கொண்டிருந்தது.

அவள் மனதுக்குள் கோடைக்கானல் தோன்றியதே தவிர, பூர்வஜன்மக் கணவனின் முழு வடிவமும் தோன்றவில்லை. 'யாராக இருக்கும்' என்று அவள் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டாள். எதிலும் முழு உருவம் விழவில்லை.

அவள் பாமா வீட்டுக்குள் நுழைந்தபோது, கர்ப்பிணியான பாமா அவளை ஆச்சரியத்தோடு பார்த்தாள்.



''என்னக்கா திடுதிப்பென்று? ஒரு கடிதம் கூடப் போடவில்லையே?'' என்றாள் பாமா.

''என்னவோ தோன்றிற்று. புறப்பட்டு வந்து விட்டேன். நான் இருப்பதில் உனக்கு விருப்பமில்லை என்றால் போய்விடுகிறேன்'' என்றாள் சரசு.

'' இதுதான் உன்னோடு! நான் ஏதாவது சொன்னால் நீ ஏதாவது பேசுவாய். அத்தான்கூட சரசு இருந்தால் பொழுது நன்றாகப் போகும் என்று சொல்லிக் கொண்டிருந்தார் நீ இல்லாமல் சௌந்தர்ய லஹரி புத்தகத்தை நாங்க தலைக்குத்தான் வைத்துக்கொண்டு தூங்குகிறோம். எங்களுக்கும் திருமணமாகி தொண்ணூறு நாட்களுக்கு மேலாகிவிட்டது. இனி தனிமை என்ன தனிமை; இனி நீயும் இருப்பதுதான் எங்களுக்கு இனிமை; என் மைத்துனர்கூட அடிக்கடி சொல்வார். 'உன் அக்காள் இருந்தாலாவது சௌந்தர்ய லஹரி பாடச்சொல்லிக் கேட்டுக் கொண்டிருப்பார்கள்; உங்களுக்கு ரசனையே இல்லை' என்பார். வா வா! வெந்நீர் நன்றாகக் கொதித்திருக்கிறது. குளித்து முழுகி விட்டுக் கோவிலுக்குப் போய்விட்டு வருவோம்'' என்றாள் பாமா.

'கோவிலுக்குப் போனால் ஏதாவது தடயங்கள் தட்டுப் படலாம்'' என்று சரசுவுக்கும் தோன்றியது.

அவள் குளித்துவிட்டு வெளியே வருவதற்கும், ஜெயசந்திரன் உள்ளே நுழைவதற்கும் சரியாக இருந்தது.

''அடடே! சௌந்தர்ய லஹரி எப்போது வந்தது...?'' என்று ஆச்சரியத்தோடும், உற்சாகமாகவும் வினவினான், ஜெயசந்திரன்.

''இதோ சேலை மாற்றிக் கொண்டு வந்து சொல்லுகிறேன்!'' என்று உள்ளே போனாள் சரசு.

பூர்வ ஜன்ம ஞாபகம் வந்ததிலிருந்து அவள் புதிய பெண்ணாகவே மாறிவிட்டாள்.

மாடியிலிருந்து இறங்கி வந்த பாமா, மைத்துனருக்கு விஷயங்களைச் சொன்னாள்.

"அப்பாடா! இனிமேல் வீடு களையாக இருக்கும்!" என்றான் ஜெயசந்திரன்.

அறைக்குள் சென்று சேலை மாற்றும்போது சரசுவுக்கு மீண்டும் ஒரு விசித்திரமான அனுபவம் ஏற்பட்டது. அந்த அறை அரசநாராயணனின் வீட்டு அறைபோலக் காட்சியளித்தது. தான் குளிப்பதை ஒரு நாள் எட்டிப் பார்த்தது ஞாபகம் வந்தது.

மயக்கம் கலந்த ஓர் உணர்வு, அங்கங்களில் ஏதோ ஒரு இறுப்பு! அரச நாராயணனோடு அனுபவித்த சுகத்தின் பிரதிபலிப்பு! எங்கே நிற்கிறோம் என்று தெரியாமலேயே அவள் நின்றாள். பிறகு விலையுயர்ந்த பட்டுச்சேலையை எடுத்துக் கட்டிக் கொண்டாள். தலைவாரிப் பூ முடித்துப் பொட்டிட்டாள்.

இப்போது அவள் யார்?

அபரஞ்சியா, தங்கமா, சரசுவா?

நிச்சயமாக அவள் சரசு அல்ல.

ஏதோ ஒரு ஜன்மத்தின் மறுபதிப்பு.

இனம் தெரியாத சுகத்தோடு சௌந்தர்ய லஹரியைக் கையில் எடுத்தாள்; இனிமையான குரலில் பாடினாள்; பாடிக்கொண்டே கதவைத் திறந்து முன் ஹாலுக்கு வந்தாள்.

கைதட்டும் சப்தம் கேட்டது. "அற்புதம்! அபாரம்!" என்றான் ஜெயசந்திரன்,

அதை அடக்கத்தோடு ஆமோதித்தான் அங்கே நின்ற ராஜேந்திரன்.

பக்கத்தில் நின்ற பாமா சிரித்தாள்.



ராஜேந்திரனையும், ஜெயசந்திரனையும்கண்டபோது, சரசுவின் கண்கள் மயங்கின.

யார் நம்முடைய கணவன் என்றபொழுது பிரமையிலிருந்து இப்போது இரண்டு கேள்விக் குறிகளுக்குள் சிக்கிக் கொண்டாள், சரசு.

ஒன்று ராஜேந்திரன்; மற்றொன்று ஜெயசந்திரன்!

மீண்டும் அவள் சுய உணர்வு பெற்று, "சரி கோவிலுக்குப் போகலாம்" என்றாள்.

நால்வரும், முன்பு சென்ற அதே அம்மன் கோவிலுக்குச் சென்றார்கள்.

இப்போது அவர்கள் சாரதாம்பாளைச் சந்திக்கவில்லை. யாரோ ஒரு பூசாரிதான் பூஜை செய்து கொண்டிருந்தான்.

தீபாராதனை நடக்கும்போது அவளுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. அங்கு இருந்த ஒரு சிவப்புப் பூவையும், வெள்ளைப் பூவையும் கையிலெடுத்துக் கொண்டாள்.

'சிவப்புப் பூவை யார் எடுக்கிறாரோ, அவரே நம்முடைய கணவனாக இருந்திருக்கவேண்டும்' என்று மனதில் எண்ணிக்கொண்டு பூவை அவர்களிடம் நீட்டினாள்.

அவள் கையிலிருந்து பூவை எடுக்க ஜெயசந்திரனும், ராஜேந்திரனும் தயங்கியபோது, திடீரென்று சிவப்புப் பூவைக் கையில் எடுத்துக் கொண்டாள் பாமா.

பூசாரியின் மணியோசை அம்மன் சிரிப்பது போல் ஒலித்தது!

## 23. நாட்டக் குறிஞ்சி

முக்கியமான நேரத்தில் பாமா குறுக்கிட்டு விட்டதாகத்தான், அப்போது சரசு நினைத்தாள். ஆனால் ஒரு

பெரிய இக்கட்டில் இருந்தல்லவா அவனைப் பாமா காப்பாற்றி இருக்கிறாள்?

சரசுவின் கேள்விக்கு எந்த பதில் வந்தாலும் அது மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக இருக்காது.

சரசு தலைக்குத் தானே போட்டுக் கொண்ட விலங்கிலே இன்னொரு நபரும் மாட்டிக்கொள்ள வேண்டியிருக்கும்.

அது ஜெயசந்திரனாக இருந்தால் வம்பு குறைவுதான். ஆனால் அதுவே ராஜேந்திரனாக இருந்து விட்டால்?

சரசுவுக்குள்ளே இப்படியொரு கேள்விக்குறி எழுந்து நிற்பது யாருக்கும் தெரியாது.

பாமா தற்செயலாகத்தான் சிவப்புப் பூவை எடுத்துக் கொண்டாள். ஆனால் அவர்கள் கோவிலிலிருந்து வீடு வந்து சேர்ந்த போது பாமாவின் பெயருக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. அவர்களுடைய தாயார்தான் எழுதியிருந்தார்.

சரசுவின் மாமியார் வந்திருந்ததாகவும், சரசுவைப் பற்றிய விவரங்களை எல்லாம் சொன்னதாகவும், அவர்கள் சொன்னதிலிருந்து சரசு ஏதோ ஒரு மனோவியாதியால் தாக்கப்பட்டிருப்பதாக தோன்றுவதாகவும், ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ளும் படியும் குறிப்பிட்டிருந்தது.

அப்படித்தான் ஏதாவது இருக்கவேண்டும் என்று பாமாவுக்கும் தோன்றிற்று. இல்லையென்றால் அவள் திடுதிப்பென்று கோடைக்கானலுக்கு ஓடி வந்திருக்க மாட்டாளே?

இரவு நேரம் தான் அக்காளுடன் நிம்மதியாகப் பேசுகிற நேரம் என்று அதுவரை பொறுத்திருந்தாள் பாமா.

இரவு வந்தது. நடு ஹாலில் ஜமக்காளத்தை விரித்து, ''வாருங்கள் வாருங்கள், எல்லோரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்போம்'' என்றாள் பாமா.

சரசு இப்போது மயக்கவில்லை. அழகாக அலங்கரித்துக் கொண்டு வந்து உட்கார்ந்தாள். அது மட்டுமல்ல, இரண்டு



தலையணைகளை இடது புறமாக வைத்து அதில் சாய்ந்து கொண்டாள்.

ஜெயசந்திரன் மிக பயபக்தியோடு வந்து உட்கார்ந்தான். அவனது காரில் இருந்து கோடைக்கானலுக்கே உரிய சில பழவகைகளை எடுத்துக்கொண்டு வந்து வைத்தான் டிரைவர்.

இப்போது சரசுவுக்கு அபரஞ்சியின் ஞாபகம் வந்தது. வணிகன் தலைகோடி தனக்குப் பழங்களை உரித்துக் கொடுத்ததை அவள் நினைத்துக் கொண்டாள்.

தன் அறையிலிருந்து வெளியே வந்த ராஜேந்திரன் பாமாவிடம், ''காணாமற்போன நவமணி மோதிரம் கிடைத்து விட்டது'' என்றான்.

அப்போது அரசநாராயணன் தனக்கு வைரமோதிரம் அணிவித்ததை சரசு ஞாபகப்படுத்திக் கொண்டாள்.

அந்தச் சிலந்தி தான் பின்னிய வலைக்குள்ளே நின்று தடுமாறியபோது, பாமா பேச்சைத் துவக்கினாள்.

''என்னக்கா! நீ சமயபுரம், ஸ்ரீரங்கம், கோபிச் செட்டிப் பாளையம் எல்லாம் போனாயாமே? என்ன இப்படிச் சம்பந்தமில்லாத ஊர்கள்?...'' என்று மெதுவாகக் கேட்டாள், பாமா.

''உங்களுக்குச் சம்பந்தம் இருக்கிறதோ இல்லையோ, எனக்கிருக்கிறது,'' என்ற சரசு, தன் இரண்டு ஜென்மத்துக் கதைகளையும் சொல்லிவிட்டால், சில விஷயங்கள் புரிந்து விடும் என்று கருதினாள்.

இரண்டு மணி நேரம் தன் வரலாற்றை வருணனைகளோடு விவரித்தாள். ஆனால் அவர்கள் யாரும் அதை வரலாறு என்று கருதிக் கேட்கவில்லை. யாரோ எழுதிய சரித்திர நாவல் என்றே கருதினார்கள்.

''என்னக்கா, அதையெல்லாமா நம்பிக்கொண்டு அவஸ்தைப்படுகிறாய்?'' என்று கேட்டாள் பாமா.

''நான் அவஸ்தைப் படவில்லை. என் பூர்வ ஜென்மம் எனக்கு நன்றாகத் தெரிகிறது. சில அதிருஷ்டக்காரர் களுக்குத் தான் அது வாய்க்கும்'' என்றாள் சரசு.

''உன் இரண்டாவது ஜென்மத்தில் உன்னைக் கற்பழித்தவர்தான் இப்போது உனக்குக் கணவராக வாய்த் திருக்கிறார் என்பது வெறும் பிரமை'' என்றாள் பாமா.

''இல்லை, உண்மை அதுதான். அவருக்கு வந்துள்ள நோயிலிருந்தே அது புரிகிறது'' என்றாள் சரசு.

''சரி, இப்போது என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று கேட்டாள் பாமா.

''எனது பூர்வ ஜென்மக் கணவர் இந்தக் கோடைக் கானலில்தான் இருக்க வேண்டும். அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது. அவரைக் கண்டுபிடிக்கும் வரை நான் இங்கேயே இருந்துவிடப் போகிறேன்'' என்று உறுதியாகச் சொன்னாள் சரசு.

''தாராளமாக இருக்கலாம்; நான் காப்பாற்றுகி றேன்'' என்று அமைதியாகச் சொன்னான் ஜெயசந்திரன்.

''நீங்கள் எவ்வளவு காலம் இருக்கிறீர்களோ, அவ் வளவு காலம் நாங்களும் இருக்கிறோம்'' என்றான் ராஜேந்திரன்.

''ஏன், அக்கா கதை சொல்வதற்கு முன்னால், சிருங் கேரிக்குப் போகவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந் தீர்கள். கதையில் சிருங்கேரி வந்தவுடன் அதை மறந்து விட்டீர்களா?'' என்றாள் பாமா.

'ராஜேந்திரன் சிருங்கேரிக்குப் போவதாகச் சொன் னால் சந்தேகமே இல்லை. அரச நாராயணனாக ராஜேந்திரன் தான் இருந்திருக்க வேண்டும்' என்று கருதி னாள் சரசு.

''பேசாமல் சமயபுரத்திற்குப் போய் மகமாயியைத் தரிசனம் செய்து கொண்டு, திரும்ப கோடைக்கானலுக்கே வந்துவிடுவோம்'' என்றான் ஜெயசந்திரன்.



சரசுவுக்குத் தலை சுற்றிற்று.

''சரி, நான் போய் படுக்கிறேன்'' என்று சொல்லி விட்டுத் தன் அறைக்கு வந்துவிட்டாள்.

தூக்கம் பிடிக்காமல் புரண்டவள், காலை மூன்று மணிக்குத்தான் தூங்கத் தொடங்கினாள்.

ஒரு கனவு! அதில் ஒரு சுமங்கலி வருகிறாள். அவள் தோற்றத்தில் சாரதாம்பாளைப் போலவே இருக்கிறாள். பழுப்பு நிறப்புடவையில் சிவப்பு நிறக்கரை போட்டு, அதில் மாங்காய் வடிவத்தில் சரிகை போடப் பட்டிருக்கிறது. தலை நிறைய சம்பங்கிப் பூவும் மருக்கொழுந்தும் வைத் திருக்கிறாள். நெற்றியில் அழகான குங்குமப் பொட்டு.

''அடி பைத்தியக்காரி! உனக்கு இன்னுமா புரிய வில்லை? உன் முதல் ஜென்மத்துக் காதலன்தான் ஜெயசந்திரன். இரண்டாவது ஜென்மத்துக் கணவன்தான் ராஜேந்திரன். இதை நீ தெரிந்துகொள்ளலாமே தவிர, வேறு என்ன செய்ய முடியும்?'' என்று கேட்கிறாள் அந்தச் சுமங்கலி.

''இது போதுமே எனக்கு! எல்லா விவரங்களும் தெரிந்து விட்ட பிறகு, இது தெரியவில்லை என்றுதானே கலங்கிக் கொண்டிருந்தேன். இப்போது என் ஆத்மாவுக்கு சாந்தி ஏற்பட்டு விட்டது. சரி, நல்லது. அம்மா நீங்கள் யார்?'' என்று கேட்டாள் சரசு.

''சிருங்கேரியில் நீ பார்த்தாயே, அவள்தான் நான்'' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே சாரதாம்பாளின் உருவம் மறைந்து, ராயகவுண்டன்பட்டி செத்தி வீட்டில் உட்கார்ந்திருப்பது போன்ற பிரமை சரசுவுக்கு எழுந்தது.

''ஐயா, உங்களை அழைத்து வரச்சொன்னார்'' என்று ஒருவன் கைகட்டி நிற்கிறான்.

''சரி செத்தி! அவர் தானில்லாமல் தூங்கமாட்டார், நான் போய் வருகிறேன்'' என்று புறப்படுகிறாள் சரசு.

தன் மாளிகைக்குச் சென்று அரச நாராயணன் அருகிலே அமர்ந்து தூங்கிக்கொண்டிருக்கும் அவனை ஆரத்தழுவியபடி பக்கத்தில் படுக்கிறாள்.

அப்போது அவள் சரசுவாக அல்ல, தங்கமாகத்தான் இருக்கிறாள்.

திடீரென்று, ''என்ன இது?'' என்றொரு குரல் கேட்கிறது. சரசு கண்ணை விழிக்கிறாள். அப்போது தான் நடு ஹாலில் தான் ராஜேந்திரனைக் கட்டிப் பிடித்திருப்பது தெரிய வருகிறது.

இன்னொரு பக்கம் படுத்திருந்த பாமா நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தாள்.

சரசு, ''கிருஷ்ண கிருஷ்ண'' என்றபடி எழுந்து தன் அறைக்கு ஓடினாள். பந்தயக் குதிரைக்கு மூச்சு வாங்குவது போல் அவளுக்கு மூச்சு வாங்கிற்று. அப்படியே பாயில் சாய்ந்தாள். இப்போது அவள் சரசுவாகி விட்டாள்.

''பொழுது விடிந்ததும் எப்படி மற்றவர்கள் முகத்தில் விழிப்பது?'' என்பது அவளுக்குப் பிரச்சனையாகி விட்டது.

## 24. ரதிபதி ப்ரியா

உலகம் பதில் சொல்லக்கூடிய கேள்விக்குறியையா சரசு போட்டுக் கொண்டாள்? அவளைப் படைத்த தெய்வம் அவளது அறிவை வேறுவிதமாகத் திறந்து விட்டது.

நமக்குத் தேவைதானா என்று சில விஷயங்களைச் சிந்தித்துப் பார்த்தால் நமக்கே கஷ்டமாக இருக்கும். அப்படிச் சில சம்பவங்களும் விஷயங்களும்கூட மனித வாழ்க்கையில் உண்டு.

இந்தத் தத்துவங்களெல்லாம் சரசுவுக்குத் தெரிந்தவை தான். ஆனால் அவளைப் பொறுத்தவரை, அவளது பூர்வ ஜென்மம் என்பது மிகத் தெளிவான ஒன்றாகவே அவள்



கண்களுக்குத் தெரிந்துகொண்டிருந்தது. அதிலிருந்து வெளியேற அவளால் முடியவில்லை.

கணவனிடத்தில் ஈடுபாடும் ஐக்கியமும் கொண்ட ஒருத்தி எப்படி இருந்தாலும், 'கணவன் கணவனே' என்று எண்ணக் கூடிய ஒருத்தி, ஏதாவது ஒரு தெளிவும் முடிவும் இல்லாமல் இப்படியெல்லாம் நடந்து கொள்வாளா?

அவளது நெஞ்சில் தெளிவிருந்தது. முடிவிருந்தது. ஆனால், அவள் ஒருத்தியாக அல்ல. இரண்டு பெண்ணாக விளங்கினாள். ஒரு சரசு பூர்வஜென்மப் பைத்தியமாகவும், ஒரு சரசு இந்த ஜென்மத்துப் பெண்ணுமாக அவளுக்குள்ளே காட்சியளித்தார்கள்.

காலையில் அவள் கண்விழித்தபோது பாத்ரூமுக்குச் செல்லவே வெட்கப்பட்டாள். மெதுவாக ஹாலை எட்டிப் பார்த்து, அங்கு ராஜேந்திரன் இல்லாத நேரமாக ஒன்று கிடைக்காதா என்று ஏங்கி, அந்த நேரத்தில் வெளியே போகத் தலைப்பட்டாள்.

அக்காள் பயப்படுவதும், பதுங்குவதும் மத்தியானத்துக்குள் பாமாவுக்குத் தெரிந்துவிட்டது.

''ஏனிப்படி நடந்து கொள்கிறாள்?'' என்று ராஜேந்திரனைக் கேட்டாள்.

''யாருக்குத் தெரியும்?'' என்றுதான் அவனாலும் பதில் சொல்ல முடிந்தது.

உள்ளம் என்னதான் தெளிவாக இருந்தாலும், பல நேரங்களில் அது ஊமையாகத்தான் இருக்கவேண்டி இருக்கிறது. அப்படிப்பட்ட உள்ளம், குழப்பமான நேரத்தில் என்ன கதியாகும்? இந்த ஊமைத்தனம் எவ்வளவு காலம் நீடிக்க முடியும்? குடிப்பவனாக இருந்தால் இரண்டு கிளாஸில் உளறி விடுவான். அல்லாதவர்கள் ஏதாவது ஒரு சம்பவத்தின்போது உளறி விடுவார்கள்.

மறுநாள் இரவே ராஜேந்திரன் பாமாவிடம் உளறிவிட்டான். பாமா திகைத்துப் போனாள்.

'அக்காவா இப்படி? அதுதான் இரண்டு நாட்களாக நம் கண்முன்னால் வரவே பயப்படுகிறாள். அக்காளுக்கென்ன சித்தப் பிரமையா? யாராவது மனநோய் மருத்துவரிடம் காட்டலாமா?' என்றெல்லாம் அவள் சிந்தித்தாள்.

கொஞ்ச வந்த பாமாவிடம் வேடிக்கையாகச் சொல்லி விட்ட ராஜேந்திரன், அதற்காக வெகுநேரம் வேதனைப் படத்தான் வேண்டியிருந்தது.

பாமா அவள் படுக்கையில் பக்கத்தில் படுத்திருந்தாளே தவிர, காதல் களியாட்டங்களில் ஈடுபாடு கொள்ள வில்லை. எதை எதையோ சிந்தித்து மனதைப் போட்டு வாட்டிக் கொண்டாள்.

சந்தேகத்திற்குத் தீர்வு காண்பது இடியாப்பத்துக்குத் தலைப்புக் கண்டுபிடிப்பதுபோல.

''அக்காள் வேண்டுமென்றே செய்திருப்பாளா? இல்லை, இருவருக்குமிடையே முன்பே உறவிருக்குமா? இல்லை, ஜெயசந்திரனைக் காதலித்து-தடம் தெரியாமல் தன் கணவன் பக்கம் வந்து படுத்திருப்பாளா?''

ஆம், சந்தேகம் என்ற ஆயிரம் கால் பூச்சி, தன் அத்தனை கால்களையும் நீட்டிற்று.

சொல்ல முடியாத ரகசியம்தான் துன்பங்களிலே, மிகப் பெரிய துன்பம்.

'இதைப் போய் அக்காளிடம் எப்படிக் கேட்பது? இல்லை இதற்கொரு முடிவுகாணும்வரை அக்காளுடன் சகஜமாகப் பேச எப்படி முடியும்?'

தர்ம சங்கடம் என்பது இதுதான். அவள் இரவெல்லாம் தூங்கவில்லை. அதிகாலையில் அவள்செய்த முடிவு, 'இது



தெரிந்த மாதிரிக் காட்டிக்கொள்ளாமல் இருப்பதுதான் நாகரிகம்' என்பதே.

ஒன்றும் அறியாதவளைப் போல் அக்காளின் அறைக்குள் சென்றாள். ''என்னக்கா, இரண்டு நாட்களா நீ எதுவுமே சரியாகச் சாப்பிடவில்லை. முகமும் வாடிப் போய் இருக்கிறது. மனதில் ஏதாவதிருந்தால் என்னிடம் சொல்லக் கூடாதா? நான் எதற்காக இங்கே இருக்கிறேன். அக்காள் தங்கை என்றுகூடப் பிறப்பதே அனுசரணைக்குத் தானே? உனக்கு மனக்கஷ்டம் ஏதாவதிருந்தால், அதில் நான் பங்கு கொள்ள முடியாதா?'' என்றாள் பாமா.

ஒருக்களித்துப் படுத்து விக்கி விக்கி அழுதாள் சரசு வால் முடிந்ததே தவிர, எதுவும் சொல்லக் கூடியதாக இல்லை.

''ஏனக்கா, நான் உன்னைப் புண்படுத்திவிட்டேனா?'' என்று கேட்டாள் பாமா.

''சிச்சீ! அதெல்லாம் ஒன்றுமில்லை. என் தலையெழுத்தை எண்ணி நான் அழுகிறேன். ஒரு ஜென்மத்திலுமே எனக்கு நிம்மதி இல்லையே இப்படியொரு சிருஷ்டியா...? தேவி ஏன் என்னை இப்படிச் சோதிக்கிறாள்?'' என்றாள் சரசு விம்மலுக்கிடையே.

''எனக்கு ஒன்றுமே புரியவில்லை அக்கா?'' என்றாள் பாமா.

''பரவாயில்லை பாமா. நான் ஏதாவது ஒரு ஹோட்டலில் தனியாகப் போய் இருந்துவிடுகிறேன். அதுதான் எனக்கு நிம்மதி. நான் இங்கு இருந்து கொண்டு உங்களையும் கஷ்டப்படுத்தி, நானும் கஷ்டப்பட வேண்டாம்'' என்றாள் சரசு.

''எங்களுக்கொன்றும் கஷ்டமில்லை. நீ போக வேண்டும் என்று விரும்பினால் நான் தடை சொல்லவில்லை. ஆனால் நீ ஒருத்திகூட இருப்பதில் எங்களுக்குத்

தொல்லை என்ன வந்தது?'' என்றாள் பாமா.

வேறு அவளைச் சமாதானப்படுத்த அங்கு யார் இருக்கிறார்கள்! முன்பெல்லாம் ராஜேந்திரன் இரண்டொரு வார்த்தைகள் சொல்வான். இப்போது அவனும் பேச முடியவில்லை.

பாமா மிகுந்த ஜாக்கிரதையாகவும், கெட்டிக்காரத்தனமாகவும் ஜெயசந்திரனை வரச் சொல்லி அவனுடனேயே அக்காளை ஒரு ஹோட்டலுக்கு அனுப்பி வைத்தாள். அதன் மூலம் அக்காளின் மனோ நிலையையும், நடத்தையையும் கவனிக்க அவள் விரும்பினாள்.

ஹோட்டலுக்குப் போய்ச் சேர்ந்ததும் சரசுவுக்கு ஒரு நிம்மதி வந்தது போலிருந்தது. அந்த இட மாற்றத்தில் ஒரு பெரிய சுமை இறங்கிவிட்டது போல் தோன்றிற்று.

சரசுவைக் கொண்டு போய்விட்ட ஜெயசந்திரன், ''மறு நாள் வருவதாக'' விடை பெற்றுக் கொண்டான்.

அன்று இரவெல்லாம் சரசு சிந்தித்தாள். 'ஒன்று, தன் புதிய ஜென்மம் வெற்றி பெறவேண்டும்; இல்லையேல் தற்கொலை செய்து கொள்ள வேண்டும், என்பதே அவள் சிந்தனையாக இருந்தது.

சரசு தனியாக வந்ததில் இருந்து ஜெயசந்திரனும் நிம்மதியாக இல்லை. அவனுக்குள்ளேயே ஏதோ ஒரு உணர்வும், உறுத்தலும் எழுந்துகொண்டே இருந்தன. அது ஏன் என்று அவனுக்கும் புரியவில்லை. ஹோட்டலில் சரசு தனியாகத் தூங்குவதே அவனுக்குக் கஷ்டமாக இருந்தது.

காலை எட்டு மணிக்கெல்லாம் அவன் சரசுவைத் தேடி வந்து விட்டான். அது வேண்டுமா, இது வேண்டுமா என்றெல்லாம் விசாரித்தான்.



''என்ன அதிசயம் பாருங்கள், இரவில் என் கனவில் ஒரு அம்மையார், பட்டுச் சேலை கட்டியிருந்தார்கள். தலை நிறைய சம்பங்கிப் பூவும், மருக்கொழுந்தும் வைத்திருந்தார்கள். சரசுவை நீ அங்கே தனியாகத் தூங்க வைத்து விட்டு காவலுக்கில்லாமல் வந்துவிட்டாயே? என்று கோபித்துக் கொண்டார்கள். எனக்கே மிகவும் கஷ்டமாகப் போய்விட்டது. அதனால்தான் இவ்வளவு சீக்கிரம் எழுந்து ஓடி வந்தேன்!'' என்றான் ஜெயசந்திரன்.

''நான் தனியாகத் தூங்குவேன். எனக்கொன்றும் பயமில்லை ஆனால் நீங்களும் இருந்திருந்தால் கொஞ்ச நேரம் சௌந்தர்யலஹரி படித்திருக்கலாம்'' என்றாள் சரசு.

ஏதோ பதில் சொல்லவேண்டும் என்பதற்காக அவள் சொன்னாளே தவிர, ஜெயசந்திரன் கண்ட கனவு பற்றி அவள் அதிர்ச்சியுற்றிருந்தாள்.

தன் கனவில் வந்த அதே அம்மையார் ஜெயசந்திரன் கனவிலும் வந்திருக்கிறார்களே? ஒரு வேளை இனி பூர்வ ஜென்ம நினைவு அவனுக்கும் தோன்றுமோ? அன்று கோவிலில் சிவப்புப் பூவை பாமா எடுத்துக் கொண்டாளே, அது என் கணவரை மட்டும் விட்டுவிடு என்பதற்கு அடையாளமாக இருக்குமோ?'

சரசு சிந்தனையில் ஆழ்ந்ததும், ''என்ன யோசிக்கிறீர்கள்?'' என்று கேட்டான் ஜெயசந்திரன்.

''ஒன்றுமில்லை'' என்று சொன்ன சரசு, மெதுவாக உள்ளே போய் கண்ணாடி பார்த்துவிட்டுத் திரும்பினாள்.

'தான் சரசுவல்ல, அபரஞ்சி' என்பதை ஒரு முறை கண்ணாடியில் பார்த்துக் கொள்ள அவள் விரும்பினாள்.

அவள் எப்படி ஊசலாடினாளோ அப்படியே ஜெயசந்திரனும் ஊசலாடினான். அவள் எப்படி விஷயங்களைச் சொல்வதற்கு வெட்கப்பட்டாளோ, அப்படியே தன்

கனவில் வந்த அம்மையார் சொன்ன விஷயங்களைச் சொல்வதற்கு அவனும் வெட்கப்பட்டான்.

இரண்டு பேருக்குள்ளும் பரிமாறிக் கொள்ளவேண்டிய விஷயங்கள் ஒரே மாதிரியாகத்தான் இருந்தன. ஆனால் யார் பரிமாறுவது என்பதிலேதான் அந்தச் சமையற்காரர்கள் திண்டாடினார்கள்.

அந்த அறைக்குள் அவர்கள் உட்கார்ந்திருந்தது, ஊடல் கொண்ட கணவனும் மனைவியும் உட்கார்ந்திருப்பது போலவே இருந்ததே தவிர, வேற்று நபர்கள் இருப்பதைப் போல் தோன்றவில்லை.

நேரங்களைப் பொறுத்துச் சில நியாயங்கள் உண்டு. மாலை நேரத்தில் சிந்திக்கின்ற சிந்தனை இரவிலே மாறும். இரவிலே நினைத்ததை காலையில் எண்ணிப் பார்த்தால் வெட்கமாக இருக்கும்.

அவர்கள் சந்தித்த நேரமும், சிந்தித்த நேரமும் காலை நேரம் ஆகவே நியாயமான பயத்தில் அவர்கள் ஊசலாடிக் கொண்டிருந்தார்கள். அதுவே போதை ஏற்றும் மாலை நேரமாக இருந்திருந்தால், யாராவது ஒருவர் உளறி இருப்பார்கள்.

சரசுவின் சுபாவத்தை நன்றாக அறிந்தவன் ஜெயசந்திரன். ஆகவே அவன் பயப்படுவதற்கு நியாயம் இருந்தது. நடத்தையிலும், பக்தியிலும் கண்ணகிக்கு ஈடான சரசு இப்போது மாறியிருப்பதும் ஜெயசந்திரனுக்குப் புரிந்தது.

கனவில் வந்த அம்மையார் தனக்குச் சொன்ன விஷயங்களுக்கும், இரண்டு நாட்களுக்கு முன் சரசு சொன்ன பூர்வ ஜென்மக் கதைக்கும் ஓர் ஒற்றுமை இருப்பதை அவன் உணர்ந்தான். ஆகவே மத்தியானமும் அங்கேயே சாப்பிட்டு விட்டு இருந்தான்.

மாலையில் மனதைத் திறந்து பேச ஆரம்பித்தான்.

# 25. தன்யாசி

"என் கனவில் வந்த அந்த அம்மையார் என் பூர்வ ஜென்மத்தைப் பற்றி நீங்கள் அன்று சொன்ன விஷயத்தையே சொன்னார்கள். இது என்ன அதிசயம் என்று எனக்குப் புரியவில்லை. இத்தகைய அதீதமான விஷயங்களில் எல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது. நான் பத்திரிகைகளில் வரும் ராசி பலனைக் கூடப் படித்தவனல்ல. நேற்று என்ன நடந்தது; நாளை என்ன நடக்கும் என்பதைப் பற்றியெல்லாம் நான் கவலைப்படுவதில்லை. அன்றாட நடப்பு ஆண்டவன் செயல் என்று போய்க் கொண்டிருப்பது என் வழக்கம்" என்றான் ஜெயசந்திரன்.

தான் எதையோ சொல்ல வந்து விழுங்குவது போலவே அவனுக்குத் தோன்றிற்று.

எதையுமே மனம் திறந்து பேசுகிறவர்கள் கூட சில ரகசியங்களுக்குக் கட்டுப்பட்டே ஆக வேண்டி இருக்கிறது. மூடப்பட்ட சட்டியில்தான் குழம்பு சீக்கிரம் கொதிக்கிறது. மூடி வைக்கப்படும் விஷயம்தானே உணர்ச்சியை அதிகம் தூண்டுகின்றன!

உள்ளுக்குள்ளே உணர்வுகள் பொங்க வார்த்தைகளில் தெளிவில்லாமல் தடுமாறினான் ஜெயசந்திரன்.

வார்த்தைகளே இல்லாமல் முழு உணர்ச்சியில் தடுமாறினாள் சரசு.

இப்படியெல்லாம் ,கனவில் வந்து' என்று அவன் சொல்லும்போது 'அப்படியா' என்று கேட்டுக்கொள்வதைத் தவிர, அவள் செய்யக் கூடியது என்ன இருக்கிறது?

'என் பூர்வ ஜென்மக் கணவர் நீங்கள்தான்' என்று நேரடியாகச் சொல்லக்கூடிய துணிவு அவளுக்கு வரவில்லை. ஒரு புதிய காதலியைப் போலவே அவள் நாண

மடைந்தாள். இடது கையை மெத்தையில் ஊன்றி உயரமில்லாத கட்டிலின் தலை குனிந்து உட்கார்ந்திருந்த அவள், வலது கையால், அந்த மெத்தையிலேயே ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். அதுவே நின்று கொண்டிருக்கும் நிலையாக இருந்தால் கால் பெருவிரலால் நிலம் கீறுவார்கள் பெண்கள்.

ஹோட்டல் பையன் கதவைத் தட்டி, ''காபி வேண்டுமா?'' என்று கேட்டான்.

''அவருக்குக் கொண்டு வா!'' என்றாள் சரசு.

அந்த வார்த்தைகளில் இருந்த உரிமையைக் கவனித்தான் ஜெயசந்திரன். ''ஏன் நீங்கள்...?'' என்று கேட்டான்.

''ம்... எனக்கும் கொண்டு வா!'' என்று பையனை அனுப்பினாள் சரசு.

அந்த இரண்டு பக்கமும் வெள்ளம் நிரம்பி நின்றது. எந்த அணை உடைந்தாலும் இரண்டும் கலந்துவிடக் கூடிய நிலைதான்.

எது உடையும்? யார் உடைப்பார்கள்? இதிலே பெண் மிகவும் சக்தியுடையவள். அதற்குத் துணிய மாட்டாள். ஆடவனே பலஹீனமானவன்.

ஜெயசந்திரன் எழுந்து முன்னும் பின்னும் நடந்தான். உட்கார்ந்தபடியே அவனை ஓரக் கண்ணால் ரசிக்கத் தொடங்கினாள் சரசு.

'கல்யாணமே வேண்டாம் என்று எண்ணிய சரசு எங்கே? இப்போது நாம் எங்கே?' என்று எண்ணிய போது அவளுக்கு அவமானமாக இல்லை. சிரிப்புத்தான் வந்தது.

எந்தப் பெண்ணும் உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டே தீருகிறாள். கால நேரம்தான் வித்தியாசப்படுகிறது.

சரசுவின் பெருமூச்சு அவளது அழகிய மார்பகங்களைத் தாலாட்டியது.



நடந்து கொண்டே இருந்த ஜெயசந்திரன், ஒரு கட்டத்தில் சரசுவுக்குப் பக்கத்தில் போடப்பட்டிருந்த மேஜையின் மீது சாய்ந்தான்.

''ஒரு உண்மையை நான் சொல்லுகிறேன். தப்பாக நினைக்காதீர்கள். போன ஜென்மத்தில் நீங்கள் தான் என் மனைவி என்று அந்த அம்மையார் சொன்னார்கள்!'' என்று எப்படியோ துணிந்து சொல்லி விட்டான்.

சரசுவின் நெஞ்சம் திக்கிற்று. விக்கிற்று. அந்த விக்கலோடு ஒரு பெரிய பெருமூச்சு வந்தது.

கொஞ்சம் துணிச்சலோடு அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அந்தப் பார்வையில் அவன் சரணமடைந்தான். மனோ உணர்ச்சி உடலுணர்ச்சியாக மாறிற்று.

''சரசு!'' என்றான் அவன்.

''ம்...'' என்றாள் அவள்.

அவன் அவள் எதிரிலேயே அமர்ந்து விட்டான்.

''நான் கொஞ்சம் கூட எதிர்பார்த்ததில்லை. இந்தக் கனவு உண்மையாக இருக்குமானால் நாம் எப்படி நடந்து கொள்வது?'' என்று கேட்டான் ஜெயசந்திரன்.

சரசு திடீரென்று விக்கி விக்கி அழுதாள்.

'கொஞ்ச காலத்துக்கு முன்பே அது தெரிந்திருந்தால் நான் உனக்கே மாலையிட்டிருப்பேன்' என்ற ஆதங்கம் அந்த அழுகையில் தொனித்தது.

அவன் அவள் கண்ணீரைத் துடைத்தான். அந்தத் தீண்டுதலில் ஒரு இன்பத்தைக் கண்டவள் போல் அவள் அவனைப் பார்த்தபடியே கண்ணீரை நிறுத்தினாள். தாங்க முடியாத நிலையில், ''சரசு!'' என்று அவளை மார்போடு அணைத்துக் கொண்டான், ஜெயசந்திரன். அவள் அதை மறுக்கவில்லை.

ஆனால் சாரதாம்பாளே வந்து கதவைத் தட்டுவது போல ஹோட்டல் பையன் வந்து கதவைத் தட்டினான். திடுக்கிட்டு இருவரும் விலகினார்கள்.

காபியை உள்ளே வைத்து விட்டு என்னமோ ஏதோ என்றெண்ணியபடி பையன் வெளியேறினான்.

கதவைத் தாழிட்ட ஜெயசந்திரன் ஒரு காபியை எடுத்து அவள் கையில் கொடுத்தான். தான் கொஞ்சம் குடித்து விட்டு வைத்து விட்டான்.

''பாலும் செல்லவில்லை; படுக்கை கொள்ளவில்லை'' என்ற நிலையல்லவா, அது?

சரசுவின் வேலி உடைந்தது. தாலி சிரித்தது. அது தெய்வ நியாயம் என்று முடிவு கட்டியவளைப்போல, அவனது அணைப்புக்குள் அவள் அடங்கி விட்டாள்.

மெய்மறந்த நிலை. திடீரென்று மறுபடியும் கதவு தட்டும் சத்தம். சரசு ஆடையைத் திருத்திக் கொண்டாள். ஜெயசந்திரன் ஓடிப்போய்க் கதவைத் திறந்தான். அங்கே பாமா நின்றாள்.

''ஓ! மைத்துனரா...?'' என்றபடி உள்ளே வந்தாள்.

ஏற்கெனவே அவளுக்கிருந்த சந்தேகம் இப்போது பூர்த்தியாகி விட்டது. தனியாக அந்த இருவரைப் பார்த்ததும் அவளுக்கு எதுவும் கேட்கத் தோன்றவில்லை.

''என்னக்கா, இங்கேயாவது நிம்மதியாக இருக்கிறாயா...?'' என்று கேட்டாள், பாமா.

பாமாவை எதிர்பாராத சரசு ஓரளவு அதிர்ச்சியுற்றாலும் அவளுக்கிருந்த ஆனந்த லயத்தில், ''நிம்மதியாக இருக்கிறேன்'' என்று பதில் சொன்னாள்.

அக்காளும் தங்கையும் பரிமாறிக் கொள்ளட்டும் என்று கருதி, ''இதோ நான் ஆபீஸ் வரை போய் அரை



மணி நேரத்தில் வந்து விடுகிறேன்'' என்று வெளியேறினான் ஜெயசந்திரன்.

அவன் போனதும் கதவைத் தாழிட்டாள் பாமா.

''அக்கா! நான் ஒன்று சொல்லுகிறேன். பயமில்லாமல் கேட்டுக் கொள். நீ எப்படி வாழ்ந்தாலும் சரி. நிம்மதியாக வாழவேண்டும். உன்னைவிட நான் அறிவாளியல்ல. உனக்கு உபதேசம் செய்யக்கூடிய யோக்கியதையும் எனக்குக் கிடையாது. ஆனால் மனதைப் போட்டு வாட்டிக் கொள்ளாதே! நீ எந்த வழியில் போனாலும் அது உன் மனதைப் பொறுத்தவரை அநியாயமாகவே இருக்கும் என்று எனக்குத் தெரியும். அம்மா வேண்டுமானால் அப்படி இப்படிப் பேசலாமே தவிர, எந்தக் காரணம் கொண்டும் நான் உன்னைக் குற்றம் சொல்ல மாட்டேன். நீ வாழ்ந்தால் போதும். பெண்ணுக்கு வாழ்க்கையென்பது வெறும் ஆடையும் சாப்பாடும் மட்டுமல்ல. அவள் நெஞ்சுக்கும் உடம்புக்கும் நிம்மதி வேண்டும். காலையிலிருந்து நீ தனியாக இருக்கிறாயே என்று கவலைப் பட்டுத்தான் நான் இங்கே ஓடி வந்தேன். நல்லவேளை; மைத்துனர் கூட இருந்தார். நிம்மதி;'' என்றாள் பாமா.

அவள் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் பேசினாள். தான் சொல்லவந்த விஷயத்தைத் தெளிவாகவும் அக்காளிடம் சொல்ல முடியவில்லை.

ஆனால் அவள் என்ன சொல்கிறாள் என்பதைப் புரிந்து கொள்ளக்கூடிய அறிவு, சரசுவுக்கு இருந்தது.

''பாதி வாழ்க்கையோடு மடிந்து போன என் பூர்வ ஜென்மக் கணவர், ஜெயசந்திரன்தான் என்று சொல்லி விட்டால் என்ன?'' என்று கூட சரசுவுக்குத் தோன்றிற்று.

இருந்தாலும், பேசுபவள் தங்கையல்லவா, அந்த அச்சம் குறுக்கிட்டது.

''திரும்பவும் சொல்கிறேன் அக்கா, எதுவாக இருந்தாலும் தைரியமாக நீ என்னிடம் சொல். நான் கட்டுப்பெட்டியுமல்ல; தற்குறியுமல்ல. உன் அளவுக்கு இல்லாவிட்டாலும் ஓரளவுக்கு உலகம் புரிந்தவள்தான். அவர் வருவதற்குள் மனத்திலுள்ளதைச் சொல்லிவிடு'' என்றாள் பாமா!

''அன்றிரவு உன்னிடம் என் பூர்வ ஜென்மக் கதைகளைச் சொன்னேன் இல்லையா, அதன் விட்டகுறை தொட்ட குறை தான் கோடைக்கானல், பத்தினியாக வாழ்ந்த சரசு கெட்டுப் போகவேண்டும் என்றே அவளுக்கு இந்த பூர்வ ஜென்ம ஞாபகத்தை தேவி கொடுத்தாளோ என்னமோ தெரியவில்லை. அந்த ஞாபகம் வந்ததிலிருந்து என் மனம் ஒரு நிலையில் இல்லை; நான் அபரஞ்சியாக பிறந்தபோது, என் ஆவியாக வந்து சேர்ந்தது யார் தெரியுமா? உன் மைத்துனர் தான்!'' என்று ஒரே மூச்சில் சொல்லி விட்டாள் சரசு.

''எனக்கு அப்போதே சந்தேகம் இருந்தது அக்கா! நாம் கேட்டுக் கொள்ள வேண்டாம் என்று விட்டு விட்டேன். இப்படி நீ வாழ்க்கையை மாற்றிக்கொள்வதானால் எனக்குப் பரிபூரண சம்மதம். உலகத்தில் எதெதெல்லாமோ எப்படி எப்படியோ வாழுகிறது. நீயோ ஒரு நம்பிக்கையின் பேரில் கட்டிய கணவனைப் பிரிந்து ஒரு முடிவுக்கு வருகிறாய். பத்துப் பேர் இது பற்றிப் பேசினாலும் கூட, நமக்கு நிம்மதி என்றால் நிம்மதி தானே!'' என்றாள் பாமா. ''பாமாவா இப்படிப் பேசுகிறாள்'' என்று அதிசயித்தாள், சரசு.

நியாயமாக இது மாதிரி யோசனைகளை எல்லாம் மற்றவர்கள் தான் சரசுவிடம் கேட்பார்களே தவிர, சரசு யாரிடமும் கேட்டுக் கொண்டதில்லை.

தங்கை சொன்ன யோசனை அவளுக்கு சுகமளிக்கக் கூடியதாக இருந்ததால், பாமாவை ஒருமதி மந்திரியாகவே கருதத் தலைப்பட்டாள், சரசு. அவளது ஆசைக்கோர் துணிச்சல் வந்தது.



''இதோ பார், பாமா! நான் இவரோடு வாழ்வதென்று முடிவு செய்தால், அதில் ஒன்றும் பாவமில்லையே....?'' என்று கேட்டாள் சரசு.

''இந்தப் பாவ புண்ணியத்தைப் பற்றி இன்னுமா நினைக்கிறாய்? நம் மனதுக்கு எது நியாயமோ, அதுதான் புண்ணியம்!'' என்றாள் பாமா.

அப்போது மீண்டும் கதவு தட்டும் சப்தம் கேட்டது.

''பார்த்தாயா, உன் வீட்டுக்காரர் வந்து விட்டார்!'' என்று உரிமையோடும், வேடிக்கையாகவும் சொல்லிவிட்டு, கதவைத் திறந்த பாமா, ''வாருங்கள் மைத்துனரே!'' என்று, கொஞ்சலாக அழைத்தாள்,

கையில் எதையோ மறைத்துக் கொண்டிருந்தான் ஜெயசந்திரன்.

''என்ன அது?'' என்று கேட்டாள் பாமா.

''ஒன்றுமில்லை...வழியில் வந்து கொண்டே இருந்தேன்....எதிரே மல்லிகைப் பூ வந்தது....அவர்களுக்கு மல்லிகை பிடிக்கும் என்றார்கள்...!'' என்று இழுத்தான், ஜெயசந்திரன்.

''அவர்கள் என்ன அவர்கள்? அவள் என்றே சொல்லலாம் முறைப் பெண்தானே! என்னை மட்டும் நீ நான் என்கிறீர்கள்? அங்கென்ன மரியாதை? சரிசரி, அக்காளோடு பேசிக் கொண்டிருங்கள். நானும் அவரும் ஒரு சினிமாவுக்குப் போகப் போகிறோம்!'' என்றாள், பாமா.

''என்ன சினிமா?'' என்று கேட்டான், ஜெயசந்திரன்.

''ஏழு ஜென்மங்கள்'' என்றாள், பாமா.

''சரி, போதும், போதும்!'' என்று அவள் வாயை அடக்கினாள் சரசு.

பாமா சிரித்துக்கொண்டே வெளியேறினாள்.

அவள் போனதும், ''ஐயையோ! எல்லாம் அவளிடம் சொல்லிவிட்டாயா!'' என்று கேட்டான் ஜெயசந்திரன்.

''தங்கைக்குத் தெரியாத ரகசியமா? அவளுக்குப் பரிபூரணச் சம்மதம்! சரி, நாம் அம்மன் கோவிலுக்குப் போய் வந்து விடுவோம்'' என்றாள் சரசு.

''ஓ!'' என்றான் ஜெயசந்திரன்.

''இருங்கள், சேலை மாற்றிக் கொண்டு வந்து விடுகிறேன்'' என்று உள்ளே போய், அலங்கார தேவதையாகத் திரும்பி வந்தாள் சரசு.

அவர்கள் அம்மன் கோவிலுக்குப் போன போது இரவு மணி ஏழு. அங்கே ஒரு அகல் விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. ஆனால் வெளியில் இருந்த பனிங்குத் தரைக்கு மேல் சில விளக்குகள் போட்டிருந்தார்கள்.

தேங்காய் உடைத்தாள் சரசு. அது சரியான வடிவத்தில் உடைந்தது. அவளே அந்தத் தேங்காயின் மீது சூடத்தை வைத்து தீபாராதனை காட்டினாள்.

கோவில் முன்புறத்தில் தொங்கிக் கொண்டிருந்த மாலை ஒன்று அவள் கையில் விழுந்தது.

'இது என்ன சகுனம்?' என்று அவள் வியந்து கொண்டிருந்த போது. ''என்னம்மா, சௌக்கியமா?'' என்ற குரல் கேட்டது.

அவர்கள் இருவருமே திடுக்கிட்டார்கள்.

## 26. சரஸாங்கி

அங்கே பழைய சாரதாம்பாளே நின்றாள்.

இந்த சாரதாம்பாள் விஷயம் ஜெயசந்திரனுக்கு ஓரளவே தெரியும். ஆனால் அவரை அடிக்கடி சந்தித்தவனும், அவரைப் பற்றி ஆயிரம் முறை சிந்தித்தவளும் சரசு மட்டுமே.



தனக்குப் பூர்வ ஜென்ம எண்ணங்கள் தோன்றுவதற்கு சாரதாம்பாள்தான் காரணம் என்பதால், சரசு வியப்போடு அந்த அம்மையாரைப் பார்த்தாள். எதிர் பாராத ஆனால் தேவையான நேரத்தில் அவர் வந்திருப்பதாகவே சரசுவுக்குத் தோன்றிற்று.

தேவியை வணங்கிக் கொண்டிருந்த சரசு அப்படியே போய் சாரதாம்பாளின் கால்களில் விழுந்தாள்.

சாரதாம்பாள் கால்களை மடக்கிக்கொண்டு பனிங்குத் தரையில் உட்கார்ந்தார். ஆனால் முன்பு போல் அவர் மௌனமாக இல்லை. ''மகளே, உன்னுடைய ஆசையும், ஆதங்கமும் எனக்குப் புரிகின்றன. ஒவ்வொருவருக்கும் சாட்சியங்களிலெல்லாம் பெரிய சாட்சி மனச்சாட்சி. அது என்ன சொல்கிறதோ, அதன்படியே நட. ஆனால் இப்போது நீ எடுத்திருக்கிற முடிவு சரியானதாக எனக்குத் தோன்றவில்லை!'' என்றார் சாரதாம்பாள்.

அதற்கு மேல் சரசு அவரை ஆயிரம் கேள்விகள் கேட்டாள். எதற்கும் அந்த அம்மையார் பதில் சொல்லாதது மட்டுமல்ல, எழுந்து மெதுவாக வெளியே போய் விட்டார்.

'இதென்ன விசித்திரமான குறுக்கீடு! பலமுறை இந்த அம்மையார் இறந்து போயிருக்கிறார்கள்! மீண்டும் மீண்டும் தோன்றுகிறார்கள்!' என்று குழப்பமடைந்த சரசு, அவரிடமே இது பற்றி விசாரித்து விடலாம் என்று கருதினாள். பின்னாலேயே ஓடினாள். ஆனால் எங்கு தேடியும் அந்த அம்மையாரைக் காண முடியவில்லை!

ஜெயசந்திரனுக்கு இது ஆச்சர்யமாகத்தான் இருந்தது.

முக்கியமான கட்டங்களிலெல்லாம் எந்த ஊரிலும், எந்த நேரத்திலும் இந்த உருவம் எப்படித் தோன்றுகிறது என்பது அவனுக்கு வியப்பாக இருந்தது.

இருவரும் ஹோட்டலுக்கு வந்து சேரும் வரை இதைப் பற்றியே பேசிக் கொண்டு வந்தார்கள்.

'தனது புதிய முடிவு சரியில்லை' என்று சாரதாம்பாள் சொன்னது சரசுவுக்கு அச்சமாகவே இருந்தது. 'தன்னை இப்படி திசை மாற்றித் திருப்பி விட்டுவிட்டு நன்கு மயங்கிக் கிடக்கும் நேரத்தில், பழையபடியும் தெய்வம் நம்மைச் சோதிக்கிறதே' என்று அவள் கலங்கினாள்.

போகும் போது சாவியை ஹோட்டலிலேயே கொடுத்து விட்டுப் போயிருந்ததால் திரும்பிவந்த போது படுக்கை நன்றாகத் தட்டி அழகாகப் போடப்பட்டிருந்தது. மேஜையின் மீது இட்லியும் சட்டினியும் ஒரு தட்டில் வைத்து மூடப்பட்டிருந்தன.

"சரி, பார்த்துக் கொள்ளலாம். முதலில் இதைச் சாப்பிடு" என்றான் ஜெயசந்திரன்.

இக்கட்டான சிந்தனைகள் தோன்றிவிட்டால் சாப்பாடு செல்லாது. அதிலும் பெண்களின் உடம்பு இதிலே மென்மையானது.

"எனக்குப் பசி இல்லே" என்று சொன்ன சரசுவைப் பலவந்தப்படுத்தி ஒரு தட்டில் மூன்று இட்லிகளை வைத்துக் கொடுத்தான் ஜெயசந்திரன்.

வேகமாகச் சாப்பிட்டாள் சரசு. ஏனோ அது வேப்பங் காயை விட அதிகக் கசப்பாக இருந்தது. அப்படியே துப்பி விட்டுக் கை கழுவப் பாத்ரூமிற்குள் போனாள். வாஷ் பேஸினில் கை கழுவி வாய் கொப்பளித்துவிட்டு அவள் நிமிர்ந்து கண்ணாடியைப் பார்த்தபோது அவளுக்குப் பின் புறம் ஒரு கறுப்பான உருவம் தெரிந்தது. ஒரு காட்டு



மிராண்டி உருவம் போல அது இருந்தது. பற்கள் வெளியே நீட்டிக் கொண்டிருந்தன. கழுத்திலே சங்கு மாலை போட்டிருந்தது. மேலாடை இல்லாத அரக்கப் பெண்ணாக அது தோன்றிற்று.

சரசுவின் கை கால்கள் வெடவெடவென நடுங்கின. சத்தம் போட முயன்றாள்; முடியவில்லை. கால்களை எடுத்து வைக்கவும் இயலவில்லை.

எப்படியோ சிரமப்பட்டுக் கதவைத் திறந்து வெளியே வந்தவள், ஓடிப் போய் படாரென்று கட்டிலில் சாய்ந்தாள்.

"என்ன...என்ன...?" என்று கேட்டான் ஜெயசந்திரன்.

"ஏதோ பூதம்...ஏதோ பூ......த......ம்" என்று நடுங்கினாள் அவள்.

"அதெல்லாம் ஒன்றுமிருக்காது" என்று சொன்ன அவன் பாத்ரூமைத் திறந்து பார்த்தான். உள்ளே யாரும் இல்லை.

"என்ன இது பிரமை? உள்ளே யாரும் இல்லையே...?" என்றான் அவன்.

"சத்தியமாக நான் பார்த்தேன்" என்று நடுங்கினாள், அவள்.

அவளுக்கு நல்ல காய்ச்சல் அடித்தது.

"குளிரடிக்கிறது" என்றாள் அவள்.

ஜெயசந்திரன் ஒரு கம்பளியை இழுத்துப் போர்த்தி விட்டான். அப்படியே பக்கத்தில் உட்கார்ந்து பொழுது விடியும்வரை அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் நன்றாகத் தூங்கி விட்டாள்.

இரண்டு மூன்று நாட்கள் சரசுவுக்குக் காய்ச்சல் தணியவில்லை. பகலிலும் இரவிலும் அவளுக்குக் கெட்ட கனவுகள் மாறிமாறித் தோன்றின.

பாமா செய்தியறிந்து வந்து, அவள் பக்கத்திலேயே இருந்தாள்.

'ஒரு வேளை மைத்துனர் கொஞ்சம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டிருப்பாரோ?' என்றுதான் அவளுக்குத் தோன்றிற்று.

அந்தச் சூழ்நிலையில் யாருக்கும் அதுதானே தோன்றும்.

''அடி பாமா! எனக்குத் தூக்கமும் வருகிறது; தூங்கினால் கெட்ட கனவும் வருகிறது. கழுத்தை ஒரு பாம்பு சுற்றிக் கொண்டிப்பது போலவும், அதை எடுக்கவும் முடியாமல் தூரத்தவும் முடியாமல் நான் தவிப்பது போலவும் ஒரு கனவு கண்டேன். இது என்ன கனவோ எனக்குப் புரியவில்லை தேவி ஏதாவது ஒந வழியை எனக்குக் காட்டமாட்டாளா? இப்போது நான் மேற்கொண்டிருக்கும் முடிவு தனக்குப் பிடிக்கவில்லை என்று கோவிலில் சாரதாம்பாள் கூறினார். அப்படியென்றால் நான் சாவதைத் தவிர வேறு வழியில்லை. என்னால் இனி அந்தக் கணவரோடு போய் வாழ முடியாது. ஏன் இப்படி அந்த அம்மையார் பின்னி எடுக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை!'' என்று புலம்பினாள் சரசு.

''இது என்ன குழப்பம்? நீ எடுத்த முடிவின்படியே வாழ்ந்து பார்த்துவிடு!'' என்று தைரியமூட்டினாள் பாமா.

''என்ன வரும்? இறுதியில் சாவுதானே வரும்!'' என்று துணிந்தாள். சரசு.

ஆனால் அவள் அப்போது மிகவும் பலவீனமாக இருந்தாள்.

டாக்டரைக் கூட்டி வருவது, மருந்து கொடுப்பது ஆகிய அனைத்தையும் அக்கறையோடு ஜெயசந்திரன் கவனித்தான்.



அவளால் அவனை மறக்க முடியவில்லை.

சற்று உடல் நலம் தேறி அவள் எழுந்தபோது, நாளையோ மறுநாளோ அவனோடு உறவு வைத்துக் கொள்வது என்று முடிவு கட்டினாள்.

மறுநாள் அவள் உடம்பு நன்றாகவே தேறிவிட்டது.

அன்று அவள் தலை முழுகினாள். பூசுத்திற்குப் பயந்து பாத்ரூமைத் திறந்து வைத்து மறைவாக ஜெயசந்திரனை இருக்கச் சொல்லி அவள் குளித்து முடித்தாள்.

புதிய சேலை கட்டி, பொட்டு வைத்து அவள் நின்ற அழகைக் கவனித்தபோது ஜெயசந்திரனுக்கு அவளை அப்படியே கட்டி முத்தமிட வேண்டும் போலிருந்தது. அதற்காக அவன் நெருங்கியபோது கதவு தட்டும் சத்தம் கேட்டது.

கதவைத் திறந்தாள் சரசு. அங்கே அவளது கணவன் தணிகைவேலன் நின்றான். எதிரிலே ஒரு காரும் நின்றது.

அவன் முன்பு அவள் பார்த்த தணிகைவேலனாக இல்லை. சினம் கொண்டு சீறும் வேங்கையாக நின்றான். எடுத்த எடுப்பிலேயே, ''என்ன தட்டுவாணித்தனம் ஹோட்டலிலே நடக்கிறதா?'' என்றான்.

உள்ளே நுழைந்து கதவைச் சாத்திய தணிகைவேலனை அடையாளம் கண்டுகொண்டான் ஜெயசந்திரன். தான் குறுக்கிட முடியாத நிகழ்ச்சி நடைபெறப் போகிறது என்பது அவனுக்குத் தோன்றிவிட்டது.

''மரியாதையாகப் புறப்படு!'' என்று மிரட்டினான் தணிகைவேலன்.

சரசு படித்தவளல்லவா? அவளும் சளைத்தவளாக இல்லை.

"சீ! உன்னைப் போன்ற குஷ்டரோகியோடு யார் வாழ்வது? இனி எந்த ஜென்மத்திலும் உனக்கும் எனக்கும் பந்தம் கிடையாது!" என்றாள் அவள்.

"ஏன், புதுக் கணவனைப் பிடித்து விட்டாயா? இதற்குத் தானேடி பூர்வ ஜன்ம வேஷம் போட்டாய்? உன்னிடம் பேச்சு என்ன பேச்சு?" என்று சொன்ன தணிகைவேலன், அவள் முடியைப் பிடித்து இழுத்துக் காரில் ஏற்றினான்.

## 27. வாசஸ்பதி

கணவனுக்கு மனைவியின் மீது பிரியமில்லா விட்டாலும் ஆதிக்கம் இருப்பது அடிக்கடி நினைவுக்கு வருகிறது.

தாலி கட்டிவிட்ட ஒரு காரணத்தினாலேயே சகல காரியங்களிலும் அவள் கணவனோடு ஐக்கியமாகிவிட வேண்டும் என்பது ஹிந்து தர்மத்திலுள்ள கட்டுப்பாடு.

கணவனை விட்டு விலகிச் செல்வோர், கணவன் இருக்கையிலேயே கள்ளத்தனம் புரிவோர், கணவனைப் பிடிக்கவில்லை என்று பகிரங்கமாகத் தவறு செய்வோர், எத்தனையோ ரகங்கள் இங்கேயும் உண்டு.

சரசு இயற்கையிலேயே தவறு செய்வதில் சுகத்தைக் கண்டவளல்ல. பூர்வஜன்ம ஞாபகம் என்று ஒன்று வந்து அதில் கற்பழித்ததே கணவனாகத் தோன்றியதால்தான், அசல் கணவனை அவள் தேடினாள். இது அதிசயமான நிலை தான்.

சரசுவின் காரியங்களுக்கு இதுதான் காரணம் என்பதை யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அதிலும் தணிகைவேலன் கண்டிப்பாக ஒப்புக்கொள்ளமாட்டான். அவன் அவளை நடத்தை கெட்டவளாகவே கருதினான்.



ஊரார் தன்னையும் பார்த்துச் சிரித்தாலும் சரி, அவளை அவமானப்படுத்த வேண்டும் என்ற வஞ்சமே அவனுள் எழுந்து விட்டது.

காரிலே அவள் திமிறினாள்; கதறினாள். புதிய காதல் பிணைப்பு ஏற்பட்டு விட்டதால், கணவன் மீது வெறுப்பு அதிகமாகவே இருந்தது.

வழியிலே அந்தக் காரைப் பார்த்தவர்கள்கூட யாரோ ஒருவன் ஒரு பெண்ணைக் கடத்திக் கொண்டு போவதாகத் தான் கருதினார்கள்.

சிறிது நேரத்தில் சரசு சோர்வுற்றுவிட்டாள். மேலும் சிறிது நேரத்தில் மூர்ச்சையடைந்து விட்டாள்.

கார் கிராமத்திற்குள் நுழைந்து, தணிகைவேலன் வீட்டருகே சென்றபோது, சரசுவை நாலு பேர் தூக்கிக் கொண்டு போய்த்தான் உள்ளே சேர்க்க வேண்டியிருந்தது.

சரசுவின் மாமியாருக்கு இது பிடிக்கவில்லை.

"சனியன், போனால் போய்த் தொலையட்டுமே! ஏன் இந்தக் கூத்தெல்லாம்" என்றுதான் அவள் கருதினாள்.

தணிகைவேலன் அவளை இழுத்து வந்ததோடு நின்றுவிடவில்லை. ஒரு லேடி டாக்டரை அழைத்து வந்து, அவள் கெட்டுப்போயிருக்கிறாளா என்றும் சோதித்து வைத்தான். மேலும் அவள் தூங்குவதற்காக ஊசி போடச் செய்தான்.

அதற்குள் கோடைக்கானலில் ஜெயசந்திரன் ஓடிப் போய் பாமாவிடம் விஷயத்தைச் சொல்ல, பாமாவும், ராஜேந்திரனும், ஜெயசந்திரனைக் கூட்டிக் கொண்டு மற்றொரு காரில் விரைந்தார்கள்.

தணிகைவேலன் சரசுவை இழுத்துக்கொண்டு கிராமத்திற்கு வந்து சேர்ந்த பன்னிரண்டு மணி நேரத்தில், ஜெயசந்திரன் கோஷ்டியும் வந்துவிட்டது.

வந்ததும் வராததுமாக பாமா உள்ளே ஓடிப்போய் சரகவைப் பார்த்தாள். சரக அலங்கோலமான நிலையில் படுத்துக் கிடந்தாள்.

ஆம் அலங்கோலமான நிலையில் தான் இருந்தாள். பாமா விஷயத்தைப் புரிந்து கொண்டாள்.

"சரக சொன்னாளே, போன ஜன்மத்தில் கற்பழித்தவன் இவன்தான் என்று அந்த சுபாவம் இந்த ஜன்மத்திலும் விடவில்லை போலிருக்கிறது" என்று எண்ணியபடி, "மிருகங்கள் எந்த ஜன்மத்திலும் மிருகங்களே" என்றாள்.

இதில் ராஜேந்திரனோ, ஜெயசந்திரனோ தலையிட என்ன இருக்கிறது? அவர்கள் அமைதியாகவே இருந்தார்கள்.

"நான் அக்காளைக் கூட்டிக்கொண்டு கோடைக்கானலுக்குப் போகப் போகிறேன்" என்று சரகவின் மாமியாரிடத்தில் பாமா சொன்னாள்.

அதுவரை நாற்காலியில் முழங்காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்த தணிகைவேலனுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது.

"அவள் இந்த இடத்தை விட்டு ஓர் அடி நகரட்டும், அவளை வெட்டிப் புதைத்து விடுகிறேன்" என்றான் தணிகைவேலன்.

அந்த வார்த்தையைக் கேட்டதும் ராஜேந்திரனுக்கே கோபம் வந்துவிட்டது.

"இந்த மாதிரிப் பேசக்கூடாது. அவள், அவர்களின் தங்கை, அக்காளைக் கூட்டிக்கொண்டு போக தங்கைக்கு உரிமை இல்லையா...?" என்று கேட்டான் ராஜேந்திரன்.

"இது கணவன் மனைவி விவகாரம், இதில் நீங்கள் தலையிடக் கூடாது" என்றான் தணிகைவேலன்.



"அந்த விவகாரத்தைக் கோர்ட்டிலே பார்த்துக் கொள்ளுங்கள். நாங்கள் கூட்டிக்கொண்டுதான் போகப் போகிறோம்" என்று முடிவாகச் சொன்னாள் பாமா.

இப்போது மாமியார் குறுக்கிட்டாள்.

"இந்தா, கூட்டிக்கொண்டு போனால் போகட்டுமே! நீ ஆண்பிள்ளை. ராஜா மாதிரி எத்தனை முறை வேண்டுமானாலும் கல்யாணம் செய்து கொள்ளலாம். இது என்ன அபூர்வப் பொருள்? போகட்டும் போகட்டும்; விடு விடு;" என்றார்கள்.

கணவனுக்கு மனைவியிடம் உள்ள வெறி, இந்த வார்த்தைகளால் தீர்ந்துவிடுமா?

"போவதைப் பார்க்கிறேன்" என்று கறுவினான் தணிகைவேலன்.

அவனது சுபாவமும் மாறி இருப்பதை, அப்போது தான் கவனித்தாள் அவனது தாயார்.

ஜெயசந்திரன் ஒன்றும் சொல்லாமல் வெளியேறினான். நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் ஒரு புகார் எழுதிக் கொடுத்தான்.

இது குடும்ப விவகாரம் என்றும் இதில் நாங்கள் தலையிட முடியாதென்றும் போலீசார் மறுத்து விட்டார்கள்.

திரும்பி வந்த ஜெயசந்திரன் ராஜேந்திரனிடம் ஏதோ ரகசியமாகச் சொன்னான்.

சரக கண் விழிக்கட்டும் என்று இரவு எல்லோரும் காத்திருந்தார்கள். யாரும் அந்த வீட்டில் தண்ணீர்கூடச் சாப்பிட மறுத்து விட்டார்கள். மீண்டும் ஊசி போட ந்த டாக்டரைத் தடுத்து விட்டார்கள்.

அதிகாலை நான்கு மணிக்கு சரக கண் விழித்தாள்.

ஏதோ நிறையக் குடித்துவிட்டவள் போதையிலிருப்பது போல், அவளிருந்தாள். ஆனாலும் தங்கையை அடையாளம் கண்டு கொண்டாள். ஏதோ சொல்ல வந்து உளறினாள்.

''நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். நாம் மீண்டும் கோடைக்கானலுக்கே போகிறோம்'' என்று, அவளை எழ வைத்துத் தாங்கலாக நடக்க வைத்தாள் தங்கை பாமா.

தணிகைவேலன் உண்மையிலேயே அரிவாளைத் தூக்கி வந்து விட்டான்.

அப்போதுதான் ராஜேந்திரன் தான் யார் என்பதைக் காட்டினான். முஷ்டியால் ஓங்கி ஒரு குத்துக் குத்திவிட்டு அரிவாளைப் பறித்துக் கொண்டான் ராஜேந்திரன்.

ஜெயசந்திரன் சினிமாவில் வரும் வில்லனைப்போல அவனை ஓர் அறைக்குள் போட்டுப் பூட்டினான்.

''உங்களுக்கே இது நியாயமாக இருக்கிறதா...?'' என்று கேட்டாள் மாமியார்.

நியாயத்தை கோர்ட்டிலே கேளுங்கள் என்று சொன்னபடி சரசுவைக் காரில் ஏற்றிக் கொண்டு அவர்கள் புறப்பட்டுவிட்டார்கள்.

அறைக் கதவைத் திறந்துவிட்டு மகனை வெளியே வரச் சொன்ன தாயார், ''ஏண்டா, மானங்கெட்டவனே; அதுதான் ஊர்சுற்றி நாய் என்பதை அப்போதே பார்த்தோமே? அதில் உனக்கேன் இன்னும் சபலம்? பேசாமல் விடு. ஆறு மாதம் கழித்துக் கோர்ட்டிலே போட்டு, இதை வெட்டி விட்டு, நம்ம கோவிலார்ப்பட்டி ராஜமாணிக்கம் மகளை உனக்குக் கட்டி வைத்துவிடுகிறேன்'' என்றாள் அவள்.

தணிகைவேலனுக்கு எதுவும் காதிலேறவில்லை. அவன் விழுந்து படுத்து அழுதான்.

பாமாவும் பிறரும் சென்ற கார் கோடைக்கானலை நோக்கிப் பறந்தது.



கோடைக்கானலின் குளிர்ந்த காற்றுப் படப்பட சரசுக்கும் ஓரளவுக்குப் பிரக்ஞை வந்தது.

தன்னைச் சுற்றிலும் பாமா, ஜெயசந்திரன், ராஜேந்திரன் இருப்பதைப் பார்த்ததும் அவள் முகம் மலர்ந்தது.

''அந்த மிருகத்திடமிருந்து நான் காப்பாற்றப் பட்டேன்'' என்றாள் சரசு.

''ஆமாம் ஒரு ஜன்மத்துக்குணம் மறு ஜன்மத்திலும் தொடர்ச்சியாக வருமா?'' என்று கேட்டாள், பாமா.

''ஒரு ஜன்மத்துத் தவறுக்குப் பரிகாரம் தான் மறு ஜன்மம். ஆனால் இவரென்னவோ அதிசயமாக இருக்கிறார்!'' என்று அரைகுறைப் பிரக்ஞையில் சொன்னாள் சரசு.

''யார் என்ன சொன்னாலும் சரி. நீயும், மைத்துனரும் தனி வீடு பிடித்தே வாழ்ந்துவிடுங்கள்!'' என்றாள் பாமா.

## 28. கரகரப்ரியா

சில காரியங்களில் சில மனிதர்களுக்கு ஐயம் தோன்றும். ஆனாலும் அதைச் செய்தே தீருவதென்று ஒரு நாள் மாலை முடிவு கட்டிக் கொள்வார்கள். மறுநாள் காலையில் மீண்டும் ஒரு அச்சம் தோன்றும். வேண்டாம் என்று முடிவு கட்டுவார்கள். ஒவ்வொரு கணத்திலும் அவர்கள் புத்தி மாறிக்கொண்டே போகும். அதுபோலவே அவர்கள் செய்ய விரும்பும் காரியமும் தள்ளிக் கொண்டே போகும்.

சரசு, இந்த நிலையில்தான் இருந்தாள். திடீர் முடிவுகள் அவளை மாறி மாறி அலைக்கழித்தன.

'என்னதான் நீயும் அவரும் சேர்ந்து வாழலாம் என்று பாமா சொன்னாலும், அவள் நெஞ்சிலே மீண்டும் ஒரு பயம் தோன்றிற்று. கட்டிய கணவன் மீண்டும் ஒருமுறை அவளைத் தொட்டுவிட்டதால் தோன்றிய பயம், அது.

இந்த விஷயத்தில் பாமாதான் இப்போது பெரிய ராட்சசியாக விளங்கினாள். ராஜேந்திரன் எதிலும் குறுக்கிடவில்லை. ஜெயசந்திரன் எதுவும் பேசவுமில்லை.

மளமளவென்று கோடைக்கானலுக்குச் சென்றதும், தாங்கள் இருந்த வீட்டில் ஒரு பகுதியையே ஒதுக்கிக் கொடுத்துவிட்டாள் பாமா.

பழைய மெத்தையில் புதிய விரிப்புகள். ஜன்னலுக்கும் புதிய திரைச் சீலைகள் எல்லாம் போட்டு முடித்தபோது, பாமாவுக்குத்தான் திருப்தியாக இருந்தது. சரசுவுக்கு உடம்பு ஏதோ செய்வது போல் தோன்றிற்று.

திடீரென்று அவள் வாந்தி எடுத்தாள். அவள் வாந்திக்கு என்ன அர்த்தம் என்று அவளுக்குத் தெரியும்!

தாய் அறியாத கர்ப்பமா?

சாந்தி முகூர்த்தம் நடந்து ஐந்து மாதங்களாகி விட்டன. சரசு தான் கருவுற்றிருப்பதைத் தெய்வம் இவ்வளவு தாமதமாக உணர்த்திற்று.

அக்காளின் தலையைப் பிடித்துவிட்டாள், பாமா. தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். வாந்திக்குக் காரணம் எதுவானால் என்ன? இருவரையும் வாழவைத்து விடுவது என்றுதான் அப்போதும் முடிவு கட்டினாள்.

ஆனால் மசக்கை நிலையில் ஒருவருக்குத் தரித்த குழந்தையோடு, இன்னொருவரிடம் உடலுறவு கொள்வதை அவள் மனச்சாட்சி ஒப்புக் கொள்ளவில்லை.

தனது விதி மிகவும் கடுமையாக இருப்பது போல் அவளுக்குத் தோன்றியது.

கல்யாணம் முடித்து கணவனோடு நன்றாகவே வாழத் தொடங்கிய அவளுக்கு, இந்தப் பூர்வ ஜன்ம ஞாபகம் ஏன் வர வேண்டும்? அதுவேறு பாதையில் அவளை



ஏன் தள்ளவேண்டும்? தள்ளிவிட்ட இடத்திலும் தவறி விடாமல் ஏன் காப்பாற்ற வேண்டும்?

சில விதிக்கோடுகள் நான்கு திசைகளையும் நோக்கிப் பயணம் செய்கின்றன. மனிதர்களின் புத்தியை அவை மயங்க அடிக்கின்றன. சரசு ஒரு கேள்விக் குறியில் ஆழ்ந்தாள்.

அந்தக் கேள்விக்குறி வேறு யார் மீதும் விழவில்லை.

ஒருவனிடமிருந்து இன்னொருவனிடம் போய் வாழ்வது என்று முடிவு கட்டிவிட்ட பிறகு, அதிலே வயிற்றிலிருக்கும் குழந்தையை யார் கவனிக்கிறார்கள்? அந்தக் குழந்தையின் மீது கறைபடுமே என்று யார் கவலைப்படுகிறார்கள்?

ஆனால், சரசு கவலைப்பட்டாள். 'தனக்கு இரண்டு பக்கமுமே வாழ்வில்லை' என்று முடிவு கட்டிக் கொண்டாள்.

இப்போது தற்கொலை செய்து கொள்வதென்றால், அது ஒரு கொலையோடு போகாது. இன்னொரு குழந்தையையும் சேர்த்துக் கொல்ல வேண்டியிருக்கும். கணவனிடம் போக முடியாது. ஜெயசந்திரனோடு வாழ்ந்தாலும் பிறக்கப் போகும் குழந்தைக்கு சமூக அந்தஸ்து இருக்காது.

அல்லாடினாள்: ஊசலாடினாள்.

ஆனால் இப்போது அவளிருந்த இடத்தில் பாமா இருந்தாள்.

எது நடந்தாலென்ன வாழ்க்கைதான் முக்கியம் என்பதில், பாமா தான் அதிக அக்கறை காட்டினாள். உலகத்தையும், சமூகத்தையும் எதிர்த்துப் போரிட அவள் தயாராக இருந்தாள்.

ஆனால் கேள்விக்குறி அவளைச் சுற்றி விழவில்லையே?... சரசுவைச் சுற்றியல்லவா விழுந்துவிட்டது.

மயங்கிய நிலையில் கட்டிலில் படுத்திருந்த சரசுவிடம், அவள் தன் துணிச்சலான வாதத்தை ஆரம்பித்தபோது, ''சரி, எல்லாம் நாளைக்குப் பேசிக் கொள்ளலாம்'' என்று சொல்ல மட்டுமே சரசுவால் முடிந்தது.

இந்தப் பிரச்னைகளில் குழம்பிப் போன ஜெயசந்திரன் தன்னுடைய அறைக்குப் போய்விட்டான்.

அன்று இரவு நடுநிசியில், ஏதோ ஒரு கனவு சரசுவை உலுக்கிறது. நடுங்கும் குளிரில் யாருக்கும் தெரியாமல் எழுந்து அவள் வெளியேறினாள்.

மீண்டும் அதே கோவில்.

ஆளரவமற்ற கோடைக்கானல் மலையில் சரசு ஒரு துணிச்சல்காரி போல் சென்று கொண்டிருந்தாள்.

அவள் தானாக நடக்கவில்லை. ஏதோ ஒன்று அவளை நடத்திற்று: தூக்கத்தில் நடப்பதைப் போலத்தான் நடந்து சென்றாள்.

வழக்கம் போலவே அங்கு அகல் விளக்கு மட்டுமே எரிந்து கொண்டிருந்தது. முன்புறத்துப் பளிங்குத் தரையில் பனி படர்ந்திருந்தது. தேவியின் முன்னால் படுத்து சரசு அழுதாள்.

அவளுக்கு ஆறுதல் சொல்ல இப்போது யாருமில்லை. கல்யாணமே செய்துகொள்ள விரும்பாத அவளை இவ்வளவு தூரம் வம்பில் இழுத்துவிட்ட சாரதாம்பாளை யும் காணவில்லை.

பொழுது விடிந்துவிட்டது.

வீட்டிலே பாமா சரசுவுக்குக் காப்பி கொடுப்பதற்காகத் தேடினாள். கட்டிலில் அவளைக் காணாமல் திடுக்கிட்டாள்.

'காவடி காணாமல் போய்விட்டால் குன்றக்குடியில் தேடு' என்பார்கள். சரசு காணாமல் போனால் தேடக் கூடிய இடம் தேவியின் கோவில் ஒன்றுதானே!



ராஜேந்திரனை இழுத்துக் கொண்டு அங்கே ஓடினாள் பாமா.

அங்கே குப்புறப்படுத்து மயங்கிக் கிடந்தாள் சரசு.

''இதோ பார் அக்கா, இன்னும் இந்த தேவியிடம் உனக்கு என்ன நம்பிக்கை? இனி நாம் நம்மைத்தான் நம்ப வேண்டும். அர்த்தராத்திரியில் எப்படித்தான் எழுந்து பயங்கரமான இந்தப் பாதைகளில் நடந்து வந்தாயோ? உன் வாழ்க்கை இப்படியா ஆகவேண்டும்? சரி, வா! எது வந்தாலும் சரி என்று வாழ்ந்து பார்த்துவிடு!'' என்றாள் பாமா.

சிலர் இரும்பாக இருக்கிறார்கள். சிலர் மெழுகாக இருக்கிறார்கள். சில மெழுகுகள் வெய்யிலில் கூட உருகி விடுகின்றன. மற்றவர்களுடைய தைரியத்தைப் பார்த்து அந்த தைரியம் கூட நமக்கில்லையே என்ற ஆதங்கம் அவர்களுக்கு வருகிறது.

பாமா விடவில்லை. மேலும் மேலும் அக்காளை கரைத்தாள். காரணம் அக்காள் நிம்மதியாகச் சிரித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதே!

வழக்கமான பழமொழி ஒன்று உண் டே 'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்' என்று. சரசுவும் ஓரளவு கரைந்து விட்டாள்.

நீதி, நியாயம் பார்த்து நமக்கென்ன நியாயம் கிடைத்து விட்டது? 'போன வழி போவோம். ஆனவழி ஆகட்டும்' என்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பாமா சொன்னபடி தன்னை அலங்கரித்துக் கொண்டாள்.

''இதோ பார், பாமா! கொஞ்ச நாட்களாக நான் சௌந்தரியலஹரியை மறந்துபோய் விட்டேன். இப்போது அதைப் படிக்க வேண்டும் போல் எனக்குத் தோன்றுகிறது. எங்கே அதை எடு!'' என்றாள் சரசு.

பாமா அதைக் கொண்டு வந்து, கொடுத்தாள். அதிலிருந்து சில சுலோகங்களை சரசு பாடினாள்.

அவள் பாடிக் கொண்டிருக்கும் போதே உடனே புறப்பட்டு வரும்படி ஜெயசந்திரனுக்கு டெலிபோன் செய்தாள் பாமா.

ஜெயசந்திரன் காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டு வந்தான். அவன் வரும் வழியில் மூன்று சாலைகள் பிரியும் ஒரு இடம் உண்டு. மூலச் சாலையிலிருந்து பாக்கி இரண்டு சாலைகளும் பள்ளத்தில் இறங்கும் சாலைகள்.

நேரே அவன் வந்து கொண்டிருந்த போது, எதிரே முரட்டு லாரி இரும்புக் கம்பிகளை ஏற்றி வந்தது. ண்டுக்கும் இடைவெளி கொஞ்ச தூரம் இருக்கும் து லாரியின் முன் சக்கரம் வெடித்தது.

லாரி தன்னை நோக்கி வருகிறது என்பதைக் கண்ட யசந்திரன் பளிச் சென்று தன் காரைப் பள்ளத்தில் க்கினான். இறக்கிய வேகத்தில் ஒரு சிறிய மரத்தின் து மோதி அது நின்றது.

மோதிய வேகம் சற்று அதிகமாக இருந்ததால் காரின் முன்பகுதி காருக்குள்ளே நகர்ந்தது. அதனால் ஜெயசந்திரனின் இடது கால் நசுங்கிற்று.

அவன் வலி தாங்காமல் துடித்தான்.

எப்படியோ தன் லாரியை நிறுத்தி விட்ட லாரிக்காரன் ஓடி வந்து காருக்குள் சிக்கிக் கொண்டிருந்த ஜெயசந்திரனை வெளியேற்றினான்.

இடது கால் முன் பகுதியில் ரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. லாரிக்காரன் ஜெயசந்திரனின் விலாசத்தை விசாரித்தான்; பாமாவின் வீட்டு விலாசத்தை அவன் சொன்னான்.



ஆனால், உடனேயே, ''அங்கே போக வேண்டாம்; ஆஸ்பத்திரிக்குப் போ!'' என்றான் அவன்.

வழியில் வந்த கார்களில் ஒன்றை நிறுத்தி ஜெயசந்திரனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனான் லாரிக்காரன்.

ஆஸ்பத்திரியில் இருந்தவர்கள் பாமாவுக்கு டெலிபோன் செய்தார்கள்.

பாமா பதறிப் போய் சரசுவிடம் விஷயத்தைச் சொன்னாள். சரசுவுக்கு விரக்தி கலந்த ஒரு சிரிப்பு வந்தது. சௌந்தரிய லஹரியை அவள் மூடி வைத்தாள்.

பாமா வற்புறுத்த சரசு தானும் ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டாள்.

ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேரும் வரை அவளொரு பைத்தியக்காரியைப் போலவே இருந்தாள்.

இத்தகைய நிகழ்ச்சிகளெல்லாம் ஏன் நடக்கின்றன என்று திட்டவட்டமாக அவளால் முடிவு கட்ட முடியவில்லை.

ஆனால் ஜெயசந்திரனை நேருக்கு நேர் பார்த்ததுமே அவள் அழுதுவிட்டாள். அவன் மயங்கிய நிலையில் இருந்தான்.

அவனிடம் யாரும் பேச்சுக் கொடுக்கக் கூடாது!என்று டாக்டர்கள் கண்டிப்பாகக் கூறி விட்டார்கள்.

ஆஸ்பத்திரியின் தலைமை டாக்டர் ஒரு பெண்மணி என்றும், பெயர் கமலாதேவி என்றும் சரசுவிடம் சொன்னார்கள்.

சரசுவும் பாமாவும் பெரிய டாக்டரைப் பார்ப்பதற்கு அனுமதி கேட்டார்கள். சில நிமிஷங்கள் கழித்து அவர்களுக்கு அனுமதி கிடைத்தது.

ஜெயசந்திரனின் கால் காப்பாற்றப்பட்டதா? என்ற ஆதங்கத்தோடு இருவரும் பெரிய டாக்டரின் அறைக்குள் நுழைந்தார்கள். அங்கே டாக்டராக உட்கார்ந்திருந்தது சாரதாம்பாள் அம்மையாரே!

## 29. மத்யமாவதி

சரசுவுக்கு இப்போது திகைப்பும் வரவில்லை; கோபமும் வரவில்லை. இது அவளுக்கு மிகவும் பழக்கமாகி விட்டது.

முக்கியமான இடங்களிலெல்லாம் ஒரே உருவத்தைச் சந்திப்பது ஒரு வாடிக்கையாகி விட்டது.

பல நேரங்களில் அவள் ஆச்சரியப்பட்டது போலவே இப்போதும் ஆச்சரியம்தான் அடைந்தாள்.

கோவிலுக்குப் போனாலும், மாமியார் வீட்டுக்குப் போனாலும் காணப்படும் உருவம், ஆஸ்பத்திரியிலும் டாக்டராக இருக்குமானால் ஆச்சரியம்தானே பிறக்கும்!

ஆனால் அந்த டாக்டரோ சரசுவைத் தெரிந்தவர் மாதிரி காட்டிக் கொள்ளவில்லை.

கண்களிலே தங்க பிரேம் போட்ட கண்ணாடி. கருப்புக் கரை போட்ட வெள்ளைப்புடவை, வெள்ளை ரவிக்கை, கழுத்திலே ஒரு துளசி மணிமாலை; நெற்றியில் விபூதி குங்குமப் பொட்டு. அந்தக் குங்குமப் பொட்டில் இருந்து அவர் விதவையல்ல என்பதையும், வெள்ளை சேலை டாக்டருக்கான உடை என்பதையும் சரசு தெரிந்து கொண்டாள்.

ஆனால் பாமாவுக்குத்தான் அந்த அம்மையாரைப் பார்ப்பது என்னவோ போல இருந்தது.

'அவர் தங்கள் வாழ்க்கையில் விளையாடும் விதி' என்று பாமா எண்ணினாள்.



மூக்குக்கண்ணாடியை சற்றே மேலே தூக்கியவாறு. ''என்ன வேண்டும்?'' என்று கேட்டார் அந்த அம்மையார்.

''இங்கே காரில் அடிபட்டு ஜெயசந்திரன் என்பவரைக் கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். அவர் என் மைத்துனர். காயம் எப்படி இருக்கிறது என்பதை நீங்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும்'' என்றாள் பாமா.

''அதைக் கவனிப்பதற்கு நல்ல டாக்டர்கள் நிறைய இருக்கிறார்கள். இருந்தாலும் நானும் கவனிக்கிறேன். கொஞ்சம் அங்கே உட்காருங்கள். பத்து நிமிஷத்தில் இந்தப் பைலைப் பார்த்து முடித்துவிடுகிறேன்'' என்றார் அந்த அம்மையார்.

எப்போதுமே ஒருவரின் அவசரம் மற்றவர்களுக்குச் சுலபத்தில் விளங்காது. 'உயிர் போகிறதே' என்று நோயாளி துடிக்கும்போது டாக்டர்கள், ரொம்ப நிதானம் காட்டுவார்கள்.

'என்ன ஆகுமோ' என்று கட்சிக்காரன் உயிரை விட்டுக் கொண்டிருக்கும் போது, வக்கீல் கல்யாணம் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்.

வீட்டுக்குப் போய் உலை வைக்க வேண்டுமே என்று அரிசி வாங்க வரும் பெண்ணிடம், கடைக்காரன் மிகவும் நிதானமாக அரிசி அளப்பான்.

'எருது வலி காக்கைக்குத் தெரியுமா?' என்பார்கள்.

ஆஸ்பத்திரி பெரிய டாக்டரின் நிதானம் அவர்களுக்கு ஆத்திரத்தை மூட்டினாலும், சரசுவும் பாமாவும் பேசாமல் தான் நிற்க வேண்டி இருந்தது.

திடீரென்று அறையின் பாதிக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த பெரிய டாக்டர், சரசுவைப் பார்த்து, ''எஸ். எஸ். கமான்'' என்று சொன்னபடி முன்னால் நடந்தார்.

அங்கே ஜெயசந்திரன் மயங்கிய நிலையில் வலி தாங்காமல் துடித்துக் கொண்டிருந்தான்.

அறுவை சிகிச்சை டாக்டர்கள் சிலர், அப்பொழுது தான் அவன் காலை எக்ஸ்ரே எடுத்து அங்கே கொண்டு வந்து போட்டிருந்தார்கள்.

பெரிய டாக்டரும், அவர்களும் பேசிக்கொண்டதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாக சரசுவுக்குப் புரிந்து விட்டது.

ஜெயசந்திரனின் இடது காலை எடுக்க வேண்டுமாம். காரணம், சேர்த்து ஒட்ட முடியாதபடி எலும்புகள் நொறுங்கிவிட்டனவாம்.

பாமா கலங்கிப் போய்விட்டாள். சரசு அழுது விட்டாள்.

அவள் ஏற்படுத்திக் கொண்டது புதிய பந்தமல்ல. அது அபரஞ்சிக்கும் நவகோடிக்கும் ஏற்பட்ட பந்தமல்லவா?

அவள் ஜெயசந்திரனுக்காக அழவில்லை. தனது முற்பிறப்புக் கணவன், நவகோடிக்காகவே அழுதாள்.

அன்று முழுவதும் அவர்கள் சாப்பிடாமலேயே அங்கே உட்கார்ந்திருந்தார்கள்.

ஜெயசந்திரனின் இடதுகால் துண்டிக்கப்பட்டுவிட்டது. முழுக்கப் பிரக்ஞையற்ற ஜெயசந்திரனைப் பார்ப்பதற்கு ராஜேந்திரன், பாமா, சரசு மூன்று பேரும் அனுமதிக்கப்பட்டார்கள்.

தனக்குப் பிரியமான நாய்க்குட்டி துடிப்பதைக் கூட சில மனிதர்களால் தாங்கமுடியாது. முழங்கால் வரை துண்டிக்கப்பட்ட ஜெயசந்திரனைப் பார்த்ததும் எப்படி அவர்களால் தாங்கிக் கொள்ள முடியும்?



சரசுவுக்கு தெய்வ நம்பிக்கையே குறையத் தொடங்கிற்று. வாழ்க்கை முழுவதிலும் தன்னைத் திசை திருப்பும் தெய்வத்திற்கு ''பூஜை என்ன பூஜை?'' என்று கூட எண்ணினாள்.

அப்பொழுது பெரிய டாக்டர் அவளை மட்டும் அழைப்பதாக நர்ஸ் செய்தி கொண்டு வந்தாள்.

''ஏன் பாமாவும் வந்தாலென்ன?'' என்று கேட்டாள் சரசு.

''அதென்னவோ தெரியவில்லை. உங்களை மட்டும் தான் அழைக்கிறார்கள்'' என்றாள், நர்ஸ்.

''சரி. நீ போய் வா அக்கா!'' என்றாள், பாமா.

சரசு போய்ப் பார்த்தபோது பெரிய டாக்டர் பட்டுச் சேலை கட்டியிருந்தார். அப்போது ஒரு புதிய அனுபவம் சரசுவுக்கு ஏற்பட்டது. முதற்தடவை பார்த்தபோது ஏற்படாத அனுபவம் அப்பொழுது ஏற்படுவது போலத் தோன்றிற்று. ஒரு பயமும் பக்தியும் உருவாயின. கையைக் கட்டிக் கொண்டு அவர் சொல்வதையெல்லாம் கேட்க வேண்டும் போல் தோன்றிற்று.

''கொஞ்சம் உட்காரம்மா?'' என்றார் டாக்டர்.

சரசு உட்கார்ந்தாள்.

''இதோ பார்! என்னை உனக்குத் தெரியாதே தவிர உன்னை எனக்குத் தெரியும். நீ பத்துக்கோடிக்கு ஒருத்தியாக அவதரித்திருப்பவள். அபூர்வமாகச் சில பேருக்கு முன் ஜென்மத்தைப் பற்றிய எண்ணங்கள் தோன்றும். உனக்கு அது தோன்றியதில் வியப்பில்லை. ஆனால் உனக்குத் தோன்றிய நினைவுகள், உனக்கு விதிக்கப்பட்ட சோதனை. அதனால் தான் உனக்குத் திருமணமாகி, சாந்தி முகூர்த்தம் நடக்கும் வரை அந்த ஞாபகம் தோன்றாமல், எல்லாம் ஆன பிறகு தோன்றி இருக்கிறது. மூன்றாவது ஜென்மத்திலும் உன்வாழ்க்கை முழுத்தோல்வி

யடைந்து விட்டது. இரண்டு ஜென்மங்களில் பத்தினிப் பெண்ணாக அவதரித்த நீ மூன்றாவது ஜென்மத்தில் கெட்டுப்போய் விடக் கூடாதே என்பதற்காகத்தான், நீ விரும்பும் ஒருவனது காலை இறைவன் பறித்துக் கொண்டான். ஆனால் இன்னும் கூட உன் வாழ்க்கையில் சில வளைவுகளும் திருப்பங்களும் இருக்கின்றன; அவை என்னவென்று நீயே தெரிந்து கொள்ளும் வரை நான் சொல்லாமல் இருப்பதுதான் நல்லது. ஒன்றே ஒன்றை மட்டும் சொல்கிறேன். குலசேகரப்பட்டணத்தில் ஒரு சாமியார் இருக்கிறார் சாது நித்தியானந்தா என்பது அவரதுபெயர். அவர் இலை போட்டுச் சாப்பிடமாட்டார். கையிலேதான் கவளம் வாங்கிச் சாப்பிடுவார். நீ போய் அவரைப் பார்! ஏதும் வாங்கிக் கொண்டு போகத் தேவையில்லை. உன் துன்பங்களுக்கெல்லாம் மொத்தப் பரிகாரம் அவரிடம் கிடைக்கும்!'' என்றார், அந்த அம்மையார்.

ஏதோ ஒரு குருவிடம் பாடம் கேட்டு விட்டு வெளியே வந்த சிஷ்யனைப் பார்ப்பது போல், அவளைப் பார்த்தாள் பாமா.

''பெரிய டாக்டர் என்ன சொன்னார்கள்?'' என்று கேட்டாள் பாமா.

பெரிய டாக்டர் சொன்னது முழுக்க அவள் நினைவில் இல்லை.குலசேகரப்பட்டணம், சாதுநித்தியானந்தா என்ற இரண்டு வார்த்தைகள்தான் நினைவில் நின்றன. அதைத் தவிர வேறொன்றும் அவர் பேசாதது போலவே அவளுக்குத் தோன்றியது.

''ஏதோ குலசேகரப்பட்டணமாம்! சாது நித்தியானந்தாவாம்!'' என்றாள் சரசு.

பாமாவுக்குக் கெட்ட கோபம் வந்து விட்டது.

''பழையபடியும் சாமியாரா? இந்த நாட்டில் இப்படியொரு கேலிக்கூத்து. நமது மத தர்மமே இது மாதிரி சாது சந்நியாசிகளால் தான் பாழாகி விட்டது. இனி



ஒரு சாமியாரும் வேண்டாம். இறங்கியது இறங்கியாகி விட்டது. வருவதை அனுபவிப்போம். ஒரு கால் போனாலும் சரி, எடுத்துக்கொண்ட வாழ்க்கையை நடத்திவிடு'' என்றாள் பாமா.

இப்போது ராஜேந்திரனுக்கே கோபம் வந்துவிட்டது.

''அக்கா கெட்டுப் போவதற்கு தங்கையா இப்படி வழி சொல்வது? இதில் ஏதோ தெய்வக் குற்றம் இருக்கிறது. கணவனை விட்டு இன்னொருவனோடு உன் அக்காள் வாழப்போவதை, தெய்வம் அங்கீகரிக்கவில்லைபோல் தெரிகிறது. பேசாமல் அவள் தன் புருஷன் வீட்டுக்கு திரும்பிப் போவதுதான் மரியாதை!'' என்றான் ராஜேந்திரன்.

'அது இனி நடக்கக் கூடிய காரியமல்ல' என்று சரசு சொல்வதற்கு முன்னால், பாமாவே சொல்லிவிட்டாள்.

சரசுவின் நெஞ்சுக்குள்ளே குலசேகரப்பட்டணமும் சாது நித்தியானந்தாவுமே உலாவிக் கொண்டிருந்தார்கள்.

அவள் திரும்பத் திரும்ப அதையே சொல்லிக் கொண்டிருந்தாள்.

''யார் இந்த டாக்டர், இந்தப் பைத்தியத்தை உண்டாக்கிவிட்டது? அவரிடமே கேட்டு விடுவோம்!'' என்று பாமா டாக்டரின் அறைக்குள் நுழைந்தாள்.

அப்போது அங்கே வெள்ளைப் புடவை கட்டிய டாக்டர் தான் உட்கார்ந்திருந்தார்.

''டாக்டர்! என் அக்காளிடம் என்ன சொன்னீர்கள்?'' என்று கேட்டாள்.

''உன் அக்காளா...? யாரது...?'' என்று கேட்டார், டாக்டர்.

''கொஞ்ச நேரத்திற்கு முன் இங்கே வந்தார்களே, அவர்கள்தான்'' என்றாள் பாமா.

''இங்கு யாரும் வரவுமில்லை. யாரோடும் நான்பேசவு மில்லை. தயவு செய்து வெளியே போகிறீர்களா...?'' என்றார், டாக்டர்.

பாமா திகைத்தாள்.

## 30. மங்களம்

திரும்பி வந்த பாமா, ''இவன் என்ன டாக்டரா சந்நியாசினியா? இல்லை, பேய் பூதமா?...ஒன்றும் புரிய வில்லை எனக்கு'' என்றாள்.

''சேச்சே! அப்படியெல்லாம் சொல்லாதே! அவர்கள் கட்டியிருக்கிற பட்டும், இட்டிருக்கிற பொட்டும் தெய் வாம்சம் என்பதைக் காட்டுகின்றன'' என்றாள் சரசு.

''பட்டா? உனக்கும் பைத்தியமா? அவர்கள் வெள்ளைப் புடவைதான் கட்டி இருக்கிறார்கள்! சரி, போகட்டும். எந்தப் புடவையாயிருந்தாலென்ன? அதற்காக ஏன் இப்படிச் சீறி விழவேண்டும்? நாம் போகு மிடமெல்லாம் யாராவது மாறுவேஷம் போட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அது என்ன தலையெழுத்தோ தெரியவில்லை?'' என்று அலுப்பாகச் சொன்னாள் பாமா.

ஜெயசந்திரன் அறையிலிருந்து ராஜேந்திரன் ஓடி வந்தான். ''வாருங்கள், வாருங்கள்? ஜெயசந்திரனுக்கு ஏதோ வலிப்புப் போலிருக்கிறது. உடலெங்கும் மழை போல் வியர்வை கொட்டுகிறது'' என்றான்.

இருவரும் பதறிப் போய் உள்ளே ஓடினார்கள்.

அங்கே கண்கள் மேலே செருகிய நிலையில் வியர்வை யில் மிதந்து கிடந்தான் ஜெயசந்திரன் அவன் யாரையும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. உடனடியாக அவசர சிகிச்சையில் டாக்டர்கள் முனைந்தார்கள்.



காணப்பட்ட அறிகுறிகளிலிருந்து அது மாரடைப்பு என்பதை உணர்ந்து கொண்ட டாக்டர்கள் அதற்கான சிகிச்சையில் ஈடுபட்டார்கள்.

நவீன வசதிகள் ஓரளவே இருந்த அந்த மருத்துவமனை யில் டாக்டர்களின் முயற்சி பெரும் முயற்சியாகத்தான் இருந்தது.

சரசு அவசர அவசரமாக பெரிய டாக்டரிடம் ஓடினாள். ஆனால் அங்கே பெரிய டாக்டர் இல்லை.

அவர் அப்பொழுதுதான் புறப்பட்டு வெளியூர் போயி ருப்பதாக மற்றொரு பெண் டாக்டர் கூறினார்.

''எந்த ஊர்?'' என்று கேட்டாள் சரசு.

''குலசேகரப்பட்டணம்'' என்று கூறி விட்டு அந்தப் பெண் டாக்டர் போய்விட்டார்.

சரசு திரும்பி ஜெயசந்திரன் அறைக்கு ஓடிவந்தாள்.

அங்கே டாக்டர்களின் முயற்சி பலிக்கவில்லை என்பதும், இறைவனே ஜெயித்துவிட்டான் என்பதும் பாமாவும், ராஜேந்திரனும் மேலே விழுந்து அழுத திலிருந்து தெரிய வந்தன.

சரசு அழவில்லை. தான்கடலில் விழுந்தும் சாகாது இருப்பது போல் அவளுக்குத் தோன்றிற்று. நீந்தத் தெரிய வில்லை. மூச்சுத் திணறுகிறது. ஆனாலும் சாகவில்லை.

ஒரு கவலை வந்தால் கண்ணீர் வரும்? மறு கவலையும் சேர்ந்து வந்தால் 'ஓ'வென்று அழத் தோன்றும். கவலை மேல் கவலை வந்தால் நாம் மரத்துப் போவோம்.

அவள் ஜெயசந்திரனைத் தொடவில்லை. ஏனோ தொட்டுக் கட்டியழவேண்டும் போல் அவளுக்குத் தோன்ற வில்லை.

உருப்படியாக இருந்த அவனது காலை தொட்டுக் கண் களில் ஒற்றிக் கொண்ட போது சரசுவின் கண்களிலிருந்து

இரண்டு சொட்டுக் கண்ணீர் வந்தது. அது அவள் தனது முற்பிறப்புக்கணவனுக்குச்செலுத்தும் கடைசிக்காணிக்கை.

ஜெயசந்திரன்சடலத்தின் மீது வணிகன் நவகோடியின் படம் ஓடிக்கொண்டிருந்தது. தாசிமகள் அபரஞ்சிதான் அங்கே நின்று கொண்டிருந்தாள்.

ஜெயசந்திரவின் சடலம் கோடைகானலிலேயே எரிக்கப்பட்ட போது பிடிவாதமாக ''நான்தான் கொள்ளி வைப்பேன்'' என்று கூறிவிட்டாள் சரசு.

கணவனுக்கு மனைவி கொள்ளி வைக்கலாமா? இந்து சாஸ்திரங்களில் அதற்கு இடம் உண்டா?

விவாதிக்க யார் இருக்கிறார்கள்?

ஒரு தாய்க்கு ஆண் வாரிசு இல்லையென்றால் அவளது மகளே கூடக் கொள்ளி வைப்பதுண்டு. சாஸ்திரத்தில் இதற்கு இடமில்லாவிட்டாலும் சம்பிரதாயங்கள் இதனை ஏற்றுக்கொண்டிருக்கின்றன.

எரியூட்டப்பட்ட ஜெயசந்திரனின் சடலத்தின் மீது 'அவனது எல்லா ஜென்மங்களும் முடிந்துவிட்டன' என்பது போல் ஒரு பிரமை சரசுவுக்குத் தோன்றிற்று.

பாமா அறவே தெய்வ நம்பிக்கையற்றவளாகி விட்டாள்.

''கண்ணாமூச்சி விளையாடும் சிறு பிள்ளைக்குத் தெய்வம் என்று பேரா?'' என்று பேசத் தலைப்பட்டு விட்டாள்.

ஆனால் சரசு அந்த நிலைக்குப் போய்விடவில்லை. 'எந்தப் பட்டமும் ஒரு நோக்கத்திற்காகவே பறக்கிறது' என்றவள் கருதத் தொடங்கினாள்.

மூன்று நாட்கள் அவர்கள் தங்கி இருந்த வீடு மயானம் போலவே காட்சியளித்தது.

யார் யாரோடு எதைப் பற்றி பேசுவது? அங்கே ஊமைகளே நடமாடிக் கொண்டிருந்தார்கள்.



கடைசியாக சரசு தன் முடிவை பாமாவுக்குச் சொன்னாள்.

''ஏதோ காரணத்திற்காகவே என் வாழ்க்கை இப்படி அலைக்கழிக்கப்படுகிறது ஒவ்வொரு கட்டத்திலும் அந்தச் சாரதாம்மையார் சொன்ன விஷயங்களை நான் கடைப்பிடித்து வந்திருக்கிறேன். இந்தத் தடவையும் கடைசியாக அவர்கள் வாக்கைச் சோதித்துப் பார்த்துவிட நான் விரும்புகிறேன். குலசேகரப்பட்டணத்துக்குச் சென்று சாது நித்தியானந்தாவைச் சந்திக்கும்படி அவர்கள் கூறினார்களே, அதில் என்னதான் ரகசியம் அடங்கி இருக்கிறது? அதையும் பார்த்து விடுகிறேன்'' என்றாள் சரசு.

பாமா சிரித்தாள். வேண்டுமென்றே ஓங்கிச் சிரித்தாள்.

''உன்னுடைய விரக்தி எனக்குப் புரிகிறது பாமா, ஆனால் நான் அவ்வளவு சீக்கிரத்தில் நம்பிக்கை இழந்து விட முடியாது. நான் பாடிக்கொண்டிருந்த சௌந்தர்ய லஹரியில் மயங்கி, அம்பிகையே சில காரணங்களுக்காக என்னை திசை திருப்புகிறாள் என்று கருதுகிறேன். அவரது கட்டளைகளில் இதுவே கடைசிக் கட்டளை என்றெண்ணி குலசேகரப்பட்டணம் போய் வருகிறேன். எனக்கு கார் ஒன்றும் வேண்டாம். பஸ்ஸிலேயே போய்விடுகிறேன்'' என்றாள், சரசு.

'அவளைத் தடுத்து இனிஆகப்போவது என்ன? அவளுக்கென்றே இனி என்னதான் பாக்கி இருக்கிறது? இந்த ஆசைக்கு நாம் ஏன் குறுக்கே நிற்க வேண்டும்?' என்று எண்ணிய பாமா, ''உன் இஷ்டம் அக்கா. உனது பூர்வ ஜென்மக்கதைகளும் அவற்றில் ஏற்பட்ட தோல்விகளும் உண்மையானால் இனி ஜென்மமே எடுக்கக்கூடாது என்று அம்பிகையை வேண்டிக்கொள். ஒரு ஜென்மத்தில் தோல்வியுற்றவர்கள் மறு ஜென்மத்தில் வெற்றி பெறுவார்கள் என்ற இந்து சம்பிரதாயமே தோல்வியுற்று விட்டது போலவே எனக்குத் தோன்றுகிறது. இவற்றுக்கெல்லாம்

ஏதோ ஒரு காரணம் இருப்பதாக நீ கருதுகிறாயே, அதை யும் சோதித்துப்பார்த்து விடு. தனியாகப் போனாலும் நீ தைரியமாகப் போகக் கூடியவள் தான். ஆனாலும் நானும் அவரும் துணைக்கு வருகிறோம்'' என்றாள், பாமா.

''உங்களுக்கு ஏன் வீண் சிரமம்? இதுவரை நான் உங்களுக்கு கொடுத்த தொல்லைகள் போதும். இனிமேலும் மேலும் உங்களை நான் சோதிக்கவேண்டாம். நான் அங்கு சென்று என்ன நடக்கிறது என்பதைத் தெரிவிக்கிறேன். பிறகு வேண்டுமானால் நீங்கள் வாருங்கள்'' என்றாள் சரசு.

''சரி, அவர்களைத் தடுக்காதே'' என்றான் ராஜேந்திரன்.

சரசு தான் மட்டுமே தனியாகவே குலசேகரப் பட்டணத்துக்குப் புறப்பட்டாள்.

பிரக்ஞையற்ற நிலையிலேயே அவள் பஸ்ஸில் போய்க் கொண்டிருந்தாள். குலசேகரப்பட்டணம் போவதற் இரண்டு இடங்களில் பஸ் மாறவேண்டும். அதுகூட ஞாபக மில்லாமல் ஆங்காங்கே உட்கார்ந்திருந்த சரசுவை பஸ் கண்டக்டர்கள்தான் இறக்கிவிட வேண்டியிருந்தது.

குலசேகரப்பட்டணத்தில் சாது நித்தியானந்தாவின் ஆசிரமத்தை விசாரித்தாள் சரசு.

ஆற்றங்கரையின் மீது ஆறு ஏக்கர் நிலப்பரப்பில் அந்த ஆசிரமம் கட்டப்பட்டிருந்தது. பிரம்மாண்டமான கோவில் ஒன்று உள்ளே எழுப்பப்பட்டிருந்தது. சாது நித்தியானந்தா வுக்காக ஒரு சிறிய ஓலைக்குடிசையே போடப்பட்டிருந்தது. பத்துப் பதினைந்து சீடர்கள்மட்டுமே அங்கேஇருந்தார்கள்.

சரசு உள்ளே நுழைந்ததிலிருந்து கோவில் மணி இடை விடாமல் ஒலித்துக் கொண்டிருந்தது.

அவள் போனதும் போகாததுமாக ஒரு சீடன் எதிர்ப் பட்டு, ''சுவாமி உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறார்'' என்றான்.



'நான் வருவதுதான் யாருக்கும் தெரியாதே? எப்படி அவர் நம்மை எதிர்பார்க்க முடியும்?' என்று திகைத்தாள், சரசு.

பதமாகவும், இதமாகவும் சீடர்கள் எல்லாம் கை களைக் கட்டிக்கொண்டு தலைகுனிந்து வணங்கி அவளை வரவேற்றார்கள்.

'ஒருவேளை சாரதாம்மையார் தன் வருகையை தெரி வித்திருக்கக்கூடும்' என்று அவள் கருதினாள்.

சுவாமிஜியின் குடிலுக்குள் அவள் நுழைந்தாள். அங்கே புலித்தோல் ஆசனத்தின் மீது சுவாமிஜி வீற்றிருந் தார். பக்கத்தில் ஒரே ஒரு சீடன் மட்டும் நின்றபடி விசிறி வீசிக்கொண்டிருந்தான்.

''இப்படி உட்காருங்கள்'' என்று கையைக் காட்டி னார் சுவாமி.

சுவாமிகளுக்கு முன்னால் யாரும் உட்காருவது சாதாரணமாக வழக்கமல்ல. தன்னை அவர் உட்காரச் சொன்னதே போதுமானதாக அவளுக்குத் தோன்றிற்று. சரசு உட்கார்ந்தாள். உடனே சுவாமி எழுந்து நின்று கொண்டார்.

'ஏன்?' என்று கேட்க சரசுவுக்குத் தோன்றவில்லை. தன்னைப் பற்றிய ஒரு பெருமிதமான உயர்வும் தனக்குள் எழுவதை அவள் உணர்ந்தாள்.

சாது நித்தியானந்தா தன் கைகளை மடித்துக் கட்டிக் கொண்டார். திடீரென்று சரசுவுக்கு முன்னால் நின்று தரையைத் தொட்டு வணங்கினார். சரசு, விலகிக்கொண் டாள்.

' அபரஞ்சி!'' என்று அழைத்தார், சுவாமி.

சரசு விழித்தாள்.

''என்னைத் தெரியவில்லையா, உனக்கு?'' என்று கேட்டார். சுவாமி.

அவர் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள் சரசு.

''ஏதோ தோன்றுகிறது....முழுக்க விளங்கவில்லை....'' என்றாள்.

''அன்று, காவிரி ஆற்றுப்படுகையில் உன் கற்பைப் பறித்துக்கொண்டானே சோழ இளவரசன், அவன் மீண்டும் இந்த பூமியில் ஜென்மமெடுத்திருக்கிறான். அவனை உனக்கு அடையாளங் காட்டவே, உன்னை இங்கே அழைத்துவர விரும்பினேன். என் அன்னை சாரதா தேவி அதனால்தான் உன்னை வரும்படி பணித்திருக்கிறார்கள்'' என்றார் சுவாமி.

மீண்டும் அந்த இளவரசன் பிறந்திருக்கிறான் என்பதைக் கேட்ட சர்சு அவனைப் பழிவாங்கவேதான் பிறந்திருப்பதாக ஒருகணம் நினைத்தாள்.

அவள் மேலும் சிந்திப்பதற்குள் சுவாமி குறுக்கிட்டார்.

''முற்பிறப்பைப் பற்றிய உணர்வு எல்லோருக்கும் தோன்றி விடுமானால் ஒரு ஜென்மத்துப் பாவிகள் மறு ஜென்மத்தில் நீதிமான்களாகி விடுவார்கள். துரதிருஷ்ட வசமாக அது சிலருக்கே தோன்றுகிறது. அவர்கள் போன ஜென்மத்துப் பாவங்களை இந்த ஜென்மத்தில் தீர்த்துக் கொள்ள விரும்புகிறார்கள். யார் அடிக்கடி பிறக்க வேண்டும் என்று இறைவன் விரும்புகிறானோ, அவர்களுடைய ஆசையை ஒவ்வொரு ஜென்மத்திலும் நிறைவேறாமலேயே செய்து விடுகிறான். நியாயமான வாழ்க்கையை ஒருவன் நடத்தி முடித்துவிட்டால், அந்தப் பிறவியோடு அவன் பிறவி எடுப்பதும் முடிந்துவிடுகிறது. உன்னுடைய ஆசைகள் பூர்த்தியடையவில்லை. உனக்கு இன்னொரு ஜென்மம் இருக்கிறது. ஆனால் சோழ இளவரசனின் ஆசை பூர்த்தியடைந்துவிட்டது. அவனுக்கு இதுதான் கடைசி ஜென்மம்'' என்றார் சுவாமி.

சரசு அவ்வளவையும் மவுனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கிருந்த வஞ்சம் தீர்க்கும் எண்ணமும் போய்விட்டது.



''அந்தச் சோழ இளவரசனிடம் என்னை அழைத்துச் செல்லுங்கள் சுவாமி'' என்றாள் சரசு.

''அழைத்துச் செல்கிறேன். அதற்காகத்தானே அழைத்துவரச் செய்தேன்! அவனைக் கண்டதும் உனக்கு ஆத்திரம் தோன்றும். ஆனால் அவனோ உன்னைக் குருவாக ஏற்றுக்கொண்டு உன் பாதம் பணிவான். அவனைச் சீடனாக ஏற்றுக்கொள்ள வேண்டும்!'' என்றார் சுவாமி.

''தேவிக்கு எது நியாயமோ, அதை நான் செய்வேன்'' என்றாள் சரசு.

சுவாமி ஒரு விபூதி சம்புடத்தை எடுத்து, அவள் கையில் கொடுத்தார்.

காரணம் புரியாமல் அவள் அதை வாங்கிக்கொண்டாள்.

சுவாமி அவள் எதிரே அமர்ந்தார்.

''எனக்கு விபூதி பூசி சீடனாக ஏற்றுக்கொள்ளுங்கள்'' என்றார் சுவாமி.

பளிச்சென்று எழுந்தாள் சரசு. அவள் உடல் வியர்த்தது, ஆனால் தான் ஒரு உச்ச நிலையில் இருப்பது போல அவளுக்குத் தோன்றிற்று. ஒருபிடி விபூதியை அள்ளி சுவாமியின் தலையில் தெளித்துவிட்டு வெறி பிடித்தவள் போல் வெளியில் ஓடினாள்.

கோவிலுக்குள் நுழைந்தாள். அது என்ன கோவில் என்று அப்பொழுதுதான் பார்த்தாள்.

அது சாரதா தேவிக்காக எழுப்பப்பட்ட கோவில். அம்பிகையின் சிலையில் ஓர் அமைதியும், புன்னகையும் தோன்றிற்று.

கோவிலில் மணியடித்துக் கொண்டிருந்தவனைக் கவனித்தாள். மீண்டும் அவள் உடல் வியர்த்தது.

அங்கே மணியடித்துக்கொண்டிருந்தது அவளுடைய கணவன், தணிகைவேலன்.

சாரதா தேவியின் சிலையிலிருந்து ஜோதி கிளம்புவது போல் அவளுக்குத் தோன்றிற்று.

தன்னையறியாமல் அவள் பாடத் தொடங்கினாள். சௌந்தர்யலகரி முழுவதையும் பாடினாள்.

அவள் பாடப் பாட கோவில் மணி ஓங்கி ஒலித்துக் கொண்டே இருந்தது.

என்றைக்கும் இல்லாத கூட்டம் கோவிலில் கூடத் தொடங்கிற்று. வந்தவர்களெல்லாம் சரசுவின் காலைத் தொட்டு வணங்கினார்கள்.

சாரதா தேவியின் சிலையில் தான் சந்தித்த சாரதாம் மையாரே அமர்ந்திருப்பதாக சரசு கருதினாள்.

அவ்வளவு பெரிய கூட்டத்துக்கிடையிலேயே சாது நித்தியானந்தா ஓடி வந்து சரசுவின் காலில் விழுந்து வணங்கினார்.

மறுநாள் காலைப் பத்திரிகையில் 'தெய்வாம்சம் பொருந்திய மங்கை' என்ற தலைப்பில் சரசுவைப் பற்றிய செய்திகள் வெளியாகியிருந்தன.

— புகழ் பெற்ற சுவாமிகள் அவளையே குருவாகக் கொண்டு விட்டதாகச் செய்திகள் குறிப்பிட்டன.

'தன் முற்பிறப்பை உணர்ந்தவர், புனிதர், சரஸ்வதி தேவி' என்று அவை குறிப்பிட்டன.

ஆசிரமத்தில் கூட்டம்வெள்ளம்போல் பெருகலாயிற்று.

அந்தக் கூட்டத்திலிருந்த பாமாவும், ராஜேந்திரனும் தங்களுக்குள் ஒரு சபதம் எடுத்துக்கொண்டார்கள்.

அது... ...தோறும் சௌந்தரியலகரி படிப்பது' என்பது...

முற்றும்

24 JUN 1991
சென்னை

2 SEP 2006
4 DEC 2005

This book should be returned on or befo
date last marked above. An overdue cha
I Rupee will be levied for each week if the
kept beyond that date.

CALL No. A/c No.